மாற்றுவெளி

ஆய்விதழ்



6

மாற்றுப்பாலியல் சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டை ஓவியம்: ஸ்மைல் வித்யா

இவ்விதழின் இணையதளமுகவரி : www.keetru.com

விலை ரூ.100

வெளியீடு
பரிசல் புத்தக நிலையம்
எண் : 96 J பிளாக்
நல்வரவுத் தெரு
அரும்பாக்கம்
சென்னை - 600 106
செல்: 93828 53646

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுவெளி

ஆய்விதழ்

6

PUBLIC LIBRARY
JAFFNA

மாற்றுப் பாலியல் சிறப்பிதழ்

மாற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுவெளி
ஆய்விதழ் : 6
ஜனவரி 2011

சிறப்பாசிரியர்
வீ. அரசு

அழைப்பாசிரியர்கள்
அனிருத்தன் வாசுதேவன், அ.பொன்னி

ஆசிரியர் குழு
அ. சதீஷ், பா. இளமாறன்
கா. அய்யப்பன், தே. சிவகணேஷ், ஜ. சிவகுமார்
மு. நஜ்மா, க. செந்தில்ராஜா, வெ. பிரகாஷ், சு. சுஜா
கன்னியம் அ. சதீஷ், இரா. வெங்கடேசன்
கு. கலைவாணன், அ. கார்வண்ணன், மு. காமாட்சி

வள அறிஞர் குழு
கண்ணன். எம், வ. கீதா, அ. மங்கை
செந்தில் பாபு, எஸ். பாலச்சந்திரன்
சிந்திரலேகா மௌனகுரு, தெ. மதுசூதனன்

வெளியீட்டாளர்
சிவ. செந்தில்நாதன்

அட்டை வடிவமைப்பு
தி. முரளி

இதழ் வடிவமைப்பு
சே. குப்புசாமி

தொடர்பு
பரிசல் புத்தக நிலையம், எண் : 96 J பிளாக்,
நல்வரவுத் தெரு, எம்.எம்.டி.ஏ. காலனி, அரும்பாக்கம்,
சென்னை - 600 106 பேச : 93828 53646
மின்னஞ்சல் : maatruveli@gmail.com

தனி இதழ் ரூ. 100
பத்து இதழ்கள் சந்தா ரூ.1000
மாணவர் சந்தா பத்து இதழ்கள் ரூ. 800

வரைவோலை (D.D.) அல்லது பணவிடை (M.O.)
அனுப்புபவர்கள் ***மாற்றுவெளி*** என்ற பெயருக்கு அனுப்பவும்

ISSN *0976-1667*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியல் என்பது மனித சமூகத்தின் அன்றாட நடைமுறை வாழ்க்கை சார்ந்தது. பாலினங்களின் சமவிழைவில் செயல்பட வேண்டிய சமூகச் செயல்பாடு பாலியல். எதார்த்தத்தில் பெண் பாலினம் ஒடுக்கப்படுகிறது. அதிலும் மாற்றுப் பாலியல் உயிரிகளின் ஒடுக்குதல் மேலும் ஆழமானது. பெண்மை/ஆண்மை மற்றும் கற்பு எனச் சமூகம் கட்டமைத்துள்ள மதிப்பீடுகள் அடிப்படை யற்றவை; தர்க்கத்திற்கு முரணானவை.

இவ்விதழ் மாற்றுப் பாலியல்புள்ளவர், மாற்றுப் பாலினமுள்ளவர், பாலியல் தொழிலாளிகள் ஆகியோரின் அடிப்படை உரிமைகளை முன்னிறுத்தி உரையாடும் வகையில் அமைந்துள்ளது. சமூகத்தின் மிக மோசமான ஒடுக்குதலுக்கு உட்படும் சிறுபான்மையான அவ்வுயி ரினங்களைச் சமூக மதிப்பீட்டுத் தளத்தில் சமமாகக் கருதும் மதிப்பீட்டை இவ்விதழ் கொண்டாடுகிறது.

இவ்விதழ் உருவாகக் காரணமாக அமைந்த அழைப் பாசிரியர்களுக்கு 'மாற்றுவெளி' தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

(சி-ர்)

மாற்றுப் பாலியல் சிறப்பிதழ்

மாற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியல்பின் அரசியல் :
திறந்த உரையாடலை நோக்கி...

'பாலியல்பு' என்கிற சொல்லைக் கேட்டதும் சட்டென்று நமக்கு நினைவிற்கு வருவது, பாலியல் படங்களும் இச்சையைத் தூண்டும் இன்னும் பல பிம்பங்களே. இவ்வகைப் பிம்பங்கள் தவறானவை என்று கூறுவதல்ல நமது நோக்கம். அவை அவதூறாக அமைக்கப் படுவதும் உடல், பாலினம், மற்றும் பாலியல்பு சார்ந்த பல தவறான தகவல்களை நமக்களிப்பதுமே இதிலுள்ள சிக்கல்.

இந்தியச் சுழலில் இப்பொழுது பாலியல்பு பற்றிய கருத்தாக்கங் களில் முக்கியமாக நாம் காண்பது இச்சை, வன்முறை, சட்டத்தால் குற்றமாக்கப்படுவது ஆகியவை. தமிழ்ச்சூழலில் இவ்வரலாறு பல ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கிவிட்டிருக்கிறது என்பதைப் பற்றிய விவரங்கள் பல இவ்விதழில் கொடுக்கப்பட்டுள்ளன.

பாலியல்பு, மாற்றுப்பாலியல் இச்சை ஆகியவை ஏதோ கடந்த பத்து இருபது வருடங்களாகவே பேசப்படுகின்றன என்று பலர் நினைப்பதுண்டு. இத்தகைய நம்பிக்கையைச் சார்ந்த சொல்லாடலி லும் கருத்தாக்கத்தில் ஈடுபடுவதும் எழுதுவதும் வழக்கம். இவ்வகையான தவறான அபிப்பிராயங்களை மாற்றியமைப்பது இச்சிறப்பிதழின் ஒரு நோக்கமாகும். மேலும் தமிழ்ச்சூழலில் இவ்வரலாற்றைப் பெண்ணிய வரலாறு எழுதுதலின் ஒரு அங்கமாகப் பார்க்கும் முயற்சியும் இவ்விதழில் மேற்கொள்ளப்பட் டுள்ளது. உரிமை, உரிமைசார்/ அடையாளம்/ அடையாளக் குழுக்கள் சார் போராட்டங்கள் பற்றிய விவரங்கள் விரிவாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும் அது மட்டுமே இக்கருத்தாக்கம் மற்றும் போராட்டத்தை முழுதாக விளக்கவும் புரிந்துகொள்ளவும் போதுமானதல்ல என்பது இவ்விதழில் விவரிக்கப்பட்டுள்ளது.

இவ்வனைத்தையும் புரிந்துகொள்வதற்கான ஒரு பின்புலமாக உலகளாவிய அளவில் உள்ள கருத்தாக்கங்களை நினைவுகூர்தல் அவசியம். இவ்வரலாற்றைப் பல விதங்களில் எழுதலாம். இங்கு எளிமையான, புரிதலுக்கான, ஒரு சுருக்கமான வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்தாக்கங்களின் அடிப்படையில் முதலில் தெரியவருவது, பாலியல்பு என்பது உடலுறவு அல்லது ஓர்பாலினச் சேர்க்கை பற்றியது மட்டும் அல்ல. பாலியல்பு என்பதன் தாக்கம் நமது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் செல்வாக்குச் செலுத்துகிறது.

கிரேக்க-ரோமானிய கருத்தாடல்களில் பல வகையான உடல் உறவுகளும் பாலின வகைகளும் பட்டியலிடப்பட்டுள்ளன. இவ்வகைகளுக்கு இடையிலான வித்தியாசங்கள் தெளிவுபடுத்தப் படவில்லை. அடையாளம் சார் மொழி எங்கும் காணப்படவில்லை.

இதையடுத்து மனவியல் கருத்தாக்கங்களில் பாலியல் சார்ந்த சர்ச்சைகள் எழுப்பப்பட்டன. இவ்வரிசையில் ஃப்ராயிட் முதல் சிந்தனையாளர் இல்லையெனினும் மிக முக்கியமான சிந்தனையாள ராவார். ஒருவித பகுத்தறிவற்ற, இன்றியமையாச் (essentialist)

இத்தலையங்கப் பகுதியை எழுதியவர்கள், இவ்விதழின் அழைப்பாசிரியர்கள் (Guest Editors).

PUBLIC LIBRARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையான இது, இன்று ஆணாதிக்கச் சிந்தனையின் அங்கமாகவும் கருதப்படுகிறது. பல தலைமுறை பெண்ணிய சிந்தனையின் கோபத்திற்கும் நியாயமாக ஆளாகியுள்ள சிந்தனை ஃப்ராயிடினுடையது. இருந்தாலும் பாலியல்பு சார்ந்த சொல்லாடல்களின் வரலாற்றில், ஒரு முக்கிய புள்ளியாக ப்ராய்டிசம் கருதப்படுகிறது. பாலியல்பை அலசிப்பார்ப்பதற்கான வரைமுறைகளை அமைத்துத் தந்தது. அவ்வரைமுறைகளை நாம் இன்று ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் பாலியல்பு சார்ந்த கருத்தாக்கங்கள் பற்றிய விவாதங்களில் இவை இடம் பெற வேண்டியது அவசியம்.

லக்கான் (Lacan) இன்னொரு முக்கிய சிந்தனையாளரவார். இவர் தமது கருத்தாக்கத்தில், கருவில் 'மனித பாலியல் தற்சார்பு' (sexual subject) பற்றிய சிந்தனையை மேற்கொள்ள முயன்றார். உதாரணமாக 'ஆண்', 'பெண்' ஆகியவை என்ன என்றறிய லக்கான் முயன்றார். இதில் அவர் முழு தெளிவு அடையாவிட்டாலும் இந்தத் தேடலை அவர் தொடங்கி வைத்தார். இந்தத் தேடல் பிந்தைய தலைமுறைகளில், பல்வேறு நிலைகளில், பல பெயர்களால் அழைக்கப்பட்டுத் தொடர்ந்து வருகிறது. லக்கானின் மிக முக்கிய பங்கு ஃப்ராய்டின் இன்றியமையாவாதத்தை உடைத்தெறிய உதவியது.

இவ்வாறு தனக்கு முன் வந்த பல சிந்தனையாளர்களின் தோள்களில் நிற்கிறார் ஃபூகோ என்னும் சிந்தனையாளர். பாலியல் தொடர்பான இவரது சிந்தனைகள் பற்றி ஒரு தனி இதழே வெளியிடலாம். அடிப்படையில் ஃபூகோ 'பாலியல்பின் வரலாறு' என்ற புத்தகத்தில், மூன்று பாகங்களில், அவரது மூல சிந்தனையான 'அதிகாரம்' (power) பற்றிய கருத்தாடலை முன்வைக்கிறார். மனித சமுதாயத்தின் மற்ற அனைத்து அங்கங்கள் போல பாலியல்பிலும் அதிகாரம் சார்ந்த கட்டுப்பாடுகளும் உறவாடல்களுமே மையக் கருவாக இருக்கின்றன என்று வாதாடுகிறார். இவ்வதிகாரத்தை வெவ்வேறு கோணங்களிலிருந்து ஆராய்ந்து விளக்குகிறார். இந்த அதிகாரம் அரசின் அங்கங்களான மருத்துவமனைகளிலோ அல்லது சிறைகளிலோ வெளிப்படலாம், வீட்டை அரசாளும் குடும்ப வரைமுறைகளாகலாம்.

உலகளாவிய அளவிலான பெண்ணிய கருத்தாக்கங்களில், பாலியல்பும் ஒரு பாகமாகும். அவையனைத்தையும் இம்முன்னுரையில் விவரிப்பது சாத்தியமன்று. அதன் ஒரு அடிப்படை சாராம்சம் கீழ்வருமாறு:

காத்தெரின் மெக் கின்னன் என்னும் சிந்தனையாளர் இதைத் தெளிவாக விளக்கியுள்ளார்:

"மார்க்சீயத்துக்கு வர்க்கம் போல பெண்ணியத்திற்கு பாலியல்பு" என்கிறார்.

இப்பெண்ணிய கருத்தாக்கங்கள் ஒரு சில முக்கிய விஷயங்களை பற்றி அமைந்துள்ளன. அவற்றுள் வன்முறை, உடலுறவு இச்சை ஊட்டும் படங்கள் பற்றிய விவாதம், பாலியல் தொழில் பற்றிய விவாதம், உடல்நிலை சார் உரிமைகள், கர்ப்ப ஆட்சி பற்றிய விவாதங்கள் ஆகியவை அடங்கும். இதனுள் தனி நபரின் உரிமை பற்றிப் பேசுபவரும் உண்டு, பெண்களை ஒரு குழுவாகக் கொண்டு பேசுபவரும் உண்டு. அக்குழுவின் இடையிலான பாரபட்சங்களை விவரித்தவருமுண்டு. இவையனைத்தும் 'சுரண்டல்' அல்லது

காத்தெரின் மெக் கின்னன் என்னும் சிந்தனையாளர் இதைத் தெளிவாக விளக்கியுள்ளார்:

" மார்க்சீயத்துக்கு வர்க்கம் போல பெண்ணியத்திற்கு பாலியல்பு" என்கிறார்.

இப்பெண்ணிய கருத்தாக்கங்கள் ஒரு சில முக்கிய விஷயங்களை பற்றி அமைந்துள்ளன. அவற்றுள் வன்முறை, உடலுறவு இச்சை ஊட்டும் படங்கள் பற்றிய விவாதம், பாலியல் தொழில் பற்றிய விவாதம், உடல்நிலை சார் உரிமைகள், கர்ப்ப ஆட்சி பற்றிய விவாதங்கள் ஆகியவை அடங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செயலாளுமை' (agency) ஆகிய வரையறைகளுக்குள் அடங்கு வதுண்டு. கம்யூனிஸ்ட் ரஷியாவில் இதற்குச் சற்று மாறாக அலெசாந்த்ரா கோலாந்தாய் போன்ற விளிம்பு நிலை சிந்தனை யாளர்கள் மற்றும் இன்னும் சிலர் வேலை, பாலினம் மற்றும் பாலியல்பு ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்பும் இவ்வனுபவங்கள், புரட்சிசார் அரசியலில் கொண்டுவரும் தாக்கம் பற்றியும் எழுதினர். இது பின்பு இந்தியா போன்ற நாடுகளில் நாம் விரும்பத்தக்க அளவில் இல்லையெனினும் பெண்ணிய சிந்தனையில் ஓரளவு பயன்படுத்தப்பட்டது.

ஓர்பாலினச்சேர்க்கை சமூகங்கள் மற்றும் சிந்தனையாளர்கள் இவ்வகைக் கருத்தாக்கங்களை முன்னெடுத்தும் சென்றனர்; விமர்சனமும் செய்தனர். பாலியல் அடையாளம் மற்றும் அனுபவம், வேற்றுப்பாலின ஈர்ப்பிற்கு உள்ளே அடக்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டினர். இவ்வடையாளங்களை முன்னிறுத்தி வேற்றுப் பாலியல்புசார் கட்டமைப்புகளைச் சிந்திக்காமல் ஏற்றுக்கொள்ளும் பழக்கத்தை உடைத்தெறிய அறைகூவல் விடுத்தனர். ஒருசிலர் அடையாளத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கட்டமைப்பு சார் விமர்சனங்களை முன்வைத்தனர். இன்னும் சிலர், அடையாளம்சார் உரிமைகளுக்காக மட்டும் வாதாடி, கட்டமைப்புகளை அப்படியே விட்டுவிட்டனர். இவ்வகை கருத்தாக்கத்தில் பாலியல் தொழிலாளர் களின் போராட்டங்களும் அதிலிருந்து எழும்பிய கருத்துக்களும் அடங்கும்.

பெண்ணியத்தில் உடல் மற்றும் பாலினம் என்று புரிந்து கொள்ளப்படுபவை ஆணாதிக்கக் கட்டமைப்பால் உருவாக்கப் படுகிறது என்னும் கருத்தை மாற்றுப்பாலின மக்கள் (transgenders) முன்னெடுத்துச் சென்றனர். இவை கட்டமைப்புகளாக மட்டு மில்லாமல் போராட்டக் களங்களாகவும் விளங்குவதுண்டு என்று எடுத்துக் காட்டியுள்ளனர்.

இவ்வகைக் கருத்தாடல்களின் மூலக்கருவைப் புரிந்துகொள்ள, கெயில் ரூபினின் கருத்துக்கள் உதவும். அவர் பாலியல்பு ஏற்றத்தாழ்வு அல்லது உடலுறவு ஏற்றத்தாழ்வு (sex hierarchy) சமூகத்தில் நிலவி வருகிறது என்று கூறுகிறார். ஒற்றை மணவாழ்வில், வேற்றுப்பாலினத்தவராகவும் பிள்ளை பெற்றவ ராகவும் இருப்பவர், படிக்கட்டு போன்ற இந்தக் கட்டமைப்பில் மேல் தட்டில் அமர்கிறார். அதன் அடித்தட்டில் மணமாகாத, ஓர்பாலின இச்சை கொண்ட, மாற்றுப்பாலின, பிள்ளை பெறாத, வரம்புகளை மீறும் இச்சைகள் கொண்ட நபர்கள் இருப்பர். இவ்வகையான அமைப்பினால் எவ்வகைப் பாலினம், பாலியல், உடலுறவு மற்றும் இச்சை 'இயற்கையானவை', எவை 'இயற்கைக்குப் புறம்பானவை' ஆகிய ஆதாரமற்ற, அடிப்படையற்ற வரைமுறைகள் ஆக்கப்பட்டு நம்மேல் திணிக்கப்படுகின்றன என்பதை விளக்குகிறார். 'இயற்கையின்' வரைமுறைகளும் நம்மால்தான் இயற்றப்பட்டு இயக்கப்படுகின்றன என்பதைத் தெள்ளத் தெளிவாக்குகிறார்.

இவ்வகையான சமத்துவமற்ற அமைப்பின் ஒடுக்குமுறையை உணருவது மட்டுமல்லாமல், பல வகைப் பாலியல்புகள், பாலினங்கள், இச்சைகள் ஆகியவற்றின் இருப்பும் அவற்றின் சமூக நிலையும் வெளிக்கொணரப்படுகின்றன. அதே சமயம் அவை போராட்டக்களங்கள் என்பதும் தெளிவுபடுத்தப்படுகின்றன.

பெண்ணியத்தில் உடல் மற்றும் பாலினம் என்று புரிந்துகொள்ளப்படுபவை ஆணாதிக்கக் கட்டமைப்பால் உருவாக்கப்படுகிறது என்னும் கருத்தை மாற்றுப்பாலின மக்கள் (transgenders) முன்னெடுத்துச் சென்றனர். இவை கட்டமைப்புகளாக மட்டுமில்லாமல் போராட்டக் களங்களாகவும் விளங்குவதுண்டு என்று எடுத்துக் காட்டியுள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெயில் ரூபனின் இவ்வாதத்தைச் சற்று முன்னெடுத்துச்சென்றால் அதில் சாதி, மதம், இனம், வர்க்கம் ஆகியவற்றையும் புகுத்திப் பார்க்கலாம். நமது சூழலில் இத்தகைய அமைப்பின் மேல்தட்டில் ஒற்றைமணவாழ்வு கொண்ட, வேற்றுப்பாலின, பிள்ளைபெற்ற, மேல் வர்க்கத்தைச் சேர்ந்த, மேல் சாதியவராக இருப்பர். அதன் அடித்தட்டில் மணமாகாத, ஓர்பாலின இச்சை கொண்ட, மாற்றுப் பாலின, பிள்ளை பெறாத, வரம்புகளை மீறும் இச்சைகள் கொண்ட, ஒடுக்கப்பட்ட சாதி மற்றும் வர்க்கத்தைச் சேர்ந்தவராக இருப்பர்.

இவ்வகை சொல்லாடல்கள் பலவற்றை நாம் படித்து அறிந்து கொள்வதால், பாலியல்பு தனிப்பட்ட முறையில் மட்டுமல்லாமல் சமூகத்தைப் புரிந்துகொள்வதற்குள்ள பல அலகுகளுள் ஒன்றாக நம்முன் நிற்கும்.

தெற்காசியச் சூழலில் பாலியல்பு பற்றிய சொல்லாடல்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதல் முறையாகப் பெண்கள் குறித்த விவாதங்கள் பொது வெளியில் பேசப்பட்டன. இறந்த கணவனுடன் உடன்கட்டை ஏறும் 'சதி' சம்பிரதாயத்தை எதிர்த்துப் பல போராட்டங்கள் நடந்தன. அதே போல நாடெங்கும் விதவை மறுமணம், பெண்களுக்கான திருமண வயது ஆகியவை பற்றிய விவாதங்களில் பாலியல்பும் ஒரு அங்கமாக இருந்தது. அக்காலத்தில் பாலினமும் பாலியல்பும் இன்றுள்ள மொழியில் பேசப்படாவிட்டாலும் வரலாற்று ரீதியாக இவ்விவாதங் களின் கருத்துக்கள் இன்று நமக்கு முக்கியமானவையாக அமைகின்றன.

காலனித்துவ வரலாற்றை இன்று நன்கறிந்திருக்கும் நாம், அதிலிருந்து எழும் 'இந்தியா' என்னும் பிம்பம் துல்லியமானது அல்ல என்பதை அறிவோம். இன்று இந்தியா என்று நாம் கருதுவதின் பல பகுதிகள் ஆங்கிலேயர் காலத்திலும் அதற்கு முன்பும் ஒரு நாடாக என்றும் இருந்தது கிடையாது. ஒவ்வொரு இடத்திற்கும் பிரதேசத்திற்கும் அதற்கான வரலாறு உண்டு. பாலியல்பு என்பதும் ஒரு சமூகத்தின், அதன் மக்கள் வாழ்க்கையின் மிக முக்கியப் பண்பு என்பதால் இடத்திற்கு இடம் தனித்துவம் மிக்க வரலாறுகளைப் பெறுகிறது. தமிழகத்தின் வரலாறு ஓரளவிற்கு இவ்விதழில் விவாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த இருபது ஆண்டுகளில் பல புதிய போராட்டங்கள் தொடங்கியுள்ளன. பெரும்பாலும் அடையாளம்சார் உரிமைகள் கோரும் இப்போராட்டங்கள், பல கருத்தாக்கப் புதுமைகளையும் உருவாக்கியுள்ளன. உலகளாவிய அளவிலான போராட்டங்கள் போல இந்தியாவிலும் மாற்றுப்பாலியல்புள்ளவர், மாற்றுப்பாலின முள்ளவர், பாலியல் தொழிலாளிகள் ஆகியோர் பாலியல்பு, பாலினம் பற்றிய வரைமுறைகளை கேள்விக்குள்ளாக்கினர்.

இவ்வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சிகளின் பட்டியல் இவ்விதழில் வழங்கப்பட்டுள்ளது. போராட்டக் களத்தில் இன்னும் பலவகைப் பணிகள் செய்யவேண்டியுள்ளன. பலருடைய தினசரி வாழ்க்கையின் அடிப்படைப் புரிதல் கூட நமக்குக் கிடையாது. பிறப்பிலோ, வாழ்வின் ஒரு கட்டத்திலோ, பால் நிர்ணயிக்க முடியாத நிலையில் இருப்போரும் (intersex) இவர்களுள் அடங்குவர். நீதிமன்றம் போன்ற இடங்களில் ஒரு சில வெற்றிகள் பெற்றிருந்தாலும் பலரின் வாழ்வில் அவை எந்த மாற்றத்தையும் கொண்டுவராமல் போகலாம்.

கடந்த இருபது ஆண்டுகளில் பல புதிய போராட்டங்கள் தொடங்கியுள்ளன. பெரும்பாலும் அடையாளம்சார் உரிமைகள் கோரும் இப்போராட்டங்கள், பல கருத்தாக்கப் புதுமைகளையும் உருவாக்கியுள்ளன. உலகளாவிய அளவிலான போராட்டங்கள் போல இந்தியாவிலும் மாற்றுப்பாலியல்புள்ளவர், மாற்றுப்பாலினமுள்ளவர், பாலியல் தொழிலாளிகள் ஆகியோர் பாலியல்பு, பாலினம் பற்றிய வரைமுறைகளை கேள்விக்குள்ளாக்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

கடந்த சில ஆண்டுகளாகப் பாலியல்பு பற்றிய சர்ச்சைகள் பொது வெளியில் ஓரளவு பேசப்பட்டு வருகின்றன. மற்ற போராட்டங்கள் போல இப்போராட்டத்திலும் சமூக ஏற்றத்தாழ்வுகளின் நீட்சியும் பாதிப்பும் காட்சியளிப்பதுண்டு. இவ்வனைத்து சவால்களையும் மேற்கொள்ள, இப்போராட்டத்தின் தினசரி வேலைகளுடன் சேர்த்து விமர்சனப்பூர்வமான கோட்பாடுகளையும் வளர்த்து விவாதிப்பது அவசியம். இப்படியான நிகழ்முறையை முற்றிலும் மேற்கொள்ளாத பல இயக்கங்கள், தம்மைத் தாமே அழித்துக்கொண்டு தம்மை எதிர்க்க முயன்ற கட்டுமானங்களையே உறுதிப்படுத்திய கதைகள் பல.

இப்போராட்டங்களிலிருந்து வெளிவரும் கருத்தாக்கங்களைப் புரிந்துகொள்ள நாம் அவற்றை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று, அடையாளம், அடையாளம் சார்ந்த குழுக்கள், அவர்களுக்கான சம உரிமை சார்ந்த ஒரு கோட்பாடு. இது பல சமயங்களில் சமூகம், குடும்பம், திருமணம் ஆகிய கட்டுமானங்களைக் கேள்விக்குள்ளாக்காமல் அப்படியே விட்டுவிடுவது மட்டுமல்லாமல் அவ்வப்போது இன்னும் வலிமைப்படுத்துபவையாக அமைந்துவிடுவதும் உண்டு. இருந்தாலும் புதியதொரு மொழியின்றி, பிம்பங்களின்றி, முன்னர் இருந்த பிம்பங்களும் அழுத்தமாக அமுக்கப்பட்டிருக்கும் சூழலில், அடையாளங்களின் வலிமையைக் குறைத்து எடைபோட முடியாது. இவ்வடையாளப் பெயர்களும் குழுக்களும் தனிநபர்களுக்குக் கொடுக்கும் சக்தியை நாம் கணக்கில் கொள்ளவேண்டும். அடையாள அரசியல் குறித்த கோட்பாடுகள் ஒருசில போராட்டங்களில் முக்கியக் கருவிகள் என்பதை மறுக்கமுடியாது. அதே சமயம் விமர்சன மனப்பான்மையின்றி இதனை உபயோகிப்பதன் மூலம், காலப்போக்கில் நாம் எந்த கட்டுமானங்களை உடைக்க முயன்றோமோ அவற்றையே மீண்டும் உறுதிப்படுத்துவதில் ஈடுபட்டுவிடுவோம். பாலியல் அடையாளங்களையும் அவற்றின் அரசியலையும் பல ஆண்டுகளாகக் கண்டு வரும் மேற்கத்திய நாடுகளில் இத்தகைய வரலாறு உண்டு. இவ்வரலாற்றின் தொடக்கத்தில் இருக்கும் நாம், இப்பொழுதே இவ்விமர்சனங்களை முன்வைப்பதும் சுயவிமர்சனம் செய்யப் பழகிக்கொள்வதும் அவசியம்.

இது தவிர, பாலியல்பு சார்ந்த அரசியல், அடையாளம் சார்ந்த ஒன்றாக இருக்க வேண்டியதில்லை என்று வாதாடும் பெண்ணியம் சார்ந்த நிலைப்பாடும் உண்டு. இது ஒரு குழுவிற்கான உரிமை பற்றி மட்டுமில்லாமல் சமுதாய வரைமுறைகளை மறுபரிசீலனை செய்யும் ஒரு நிலைப்பாடாகும். இதில் பாலியல்பும் ஒரு அங்கமாகும். சமூகத்திலுள்ள பாலியல்/பாலினம் சார்ந்த அனுபவங்களின் மூலம் 'இயற்கையானது' எனப் பேசப்படும் குடும்பம், மணம், பிள்ளைப் பேறு, இச்சையின்றிப் பிள்ளை பெறுதலுக்கு மட்டுமே என்றாகும் உடலுறவு, ஆண்களுக்கும் பெண்களுக்கும் பாரபட்ச ஒழுக்க நீதி ஆகியவற்றை கேள்விக்குள்ளாக்கும் கருத்தியலாகப் பெண்ணியத்தால் இருக்க முடியும். இக்கோட்பாடு கெயில் ரூபனின் கருத்துபோல சாதி, மதம், இனம், வர்க்கம் ஆகியவை பற்றிய வரைமுறைகளையும் ஒரே சமயத்தில் பிரச்சனைக்குள்ளாக்கும் ஒன்றாக இருக்கும். இவ்வனைத்து உண்மைகளும் தினசரி வாழ்க்கையில் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து இருப்பது தானே உண்மை!

கடந்த சில ஆண்டுகளாகப் பாலியல்பு பற்றிய சர்ச்சைகள் பொதுவெளியில் ஓரளவு பேசப்பட்டு வருகின்றன. மற்ற போராட்டங்கள் போல இப்போராட்டத்திலும் சமூக ஏற்றத்தாழ்வுகளின் நீட்சியும் பாதிப்பும் காட்சியளிப்பதுண்டு. இவ்வனைத்து சவால்களையும் மேற்கொள்ள, இப்போராட்டத்தின் தினசரி வேலைகளுடன் சேர்த்து விமர்சனப்பூர்வமான கோட்பாடுகளையும் வளர்த்து விவாதிப்பது அவசியம். இப்படியான நிகழ்முறையை முற்றிலும் மேற்கொள்ளாத பல இயக்கங்கள், தம்மைத் தாமே அழித்துக்கொண்டு தம்மை எதிர்க்க முயன்ற கட்டுமானங்களையே உறுதிப்படுத்திய கதைகள் பல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியெல்லாம் பலவாண்டுகளாகப் பேசப்பட்டு வரும் பாலியல்பு என்பது என்னவென்று கேட்டால், அதற்கானப் பதிலைச் சுலபமாக அளிக்கமுடியாது. நாம் பிறந்த நிமிடத்திலிருந்து பாலினமும் பாலியல்பும் நம்முடனேயே வருகின்றன. அவை நம் உடல், உணர்வுகள், ஆசை, இச்சை, வலி, வன்முறை, வாழ்க்கையில் மேற்கொள்ளும் முடிவுகள், கனங்கள் ஆகியவற்றில் பொதிந்துள்ளன. அது அரசு, குடும்பம், தேசம், சாதி, மதம், இனம், நிறம் ஆகியவற்றின் வரலாறுகளில் உள்ளது. முற்போக்கு சிந்தனையுள்ள எந்த நபரும் பாலியல் பற்றி கூச்சமோ, பயமோ, பாலியல் சார்ந்த பாகுபாடோ அல்லது ஆர்வமின்மையோ காட்டினால் அது அரசியல் ரீதியாகப் பிற்போக்கானது மட்டுமல்லாமல் அர்த்தமற்ற வெகுளித்தனமாகவும் அமையும். பாலியல் சார்ந்த கோட்பாடுகள் நாம் மேற்கொண்டு வரும் மற்ற பல இயக்கங்களைத் தனது பங்களிப்பு மற்றும் விமர்சனம் மூலம் உறுதிப்படுத்தும். அதே சமயம், பாலியல்பு பற்றிப் பேசிவருபவர் பல முற்போக்கு இயக்கங்களிலிருந்து கற்கவேண்டியவை நிறைய உண்டு. அடையாளம், குழு, உரிமை என்று சமூக மாற்றுச் சிந்தனையை கூறுபோட்டு விற்கும் இக்காலத்தில், இத்தகைய ஒருங்கிணைந்த அரசியல் உரையாடல்களே ஒட்டுமொத்த மாற்றத்தையும் அதற்கான திட்டத்தையும் முன்வைக்க உதவும். மனிதர்களையும் சாதி, மதம், தேசம், என்று கூறுபோடும் இவ்வுலகில், ஒட்டுமொத்த சமூகமாற்றுச் சிந்தனையை நாம் மேற்கொள்ளாவிட்டால், ஆதிக்கச் சக்கரம் நிற்காமல் சுழன்றுகொண்டே இருக்கும்.

தமிழகத்திலும் தேசிய அளவிலும் கடந்த சில ஆண்டுகளாக இது பற்றிய சர்ச்சை மெற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் வரலாறு, கடந்த சில ஆண்டுகளின் முக்கிய நிகழ்வுகள் பற்றிய குறிப்பு, விமர்சனப்பூர்வமான கருத்தாக்கம், இவையனைத்தும் பற்றிப் பல கோணங்களிலிருந்து இவ்விதழில் கொண்டுவர முயற்சி செய்யப்பட்டுள்ளது. இது எந்த வகையிலும் முழுமையான தொகுப்பல்ல. பொதுவெளியில் நடந்துவரும் சர்ச்சையைப் புரிந்துகொள்ளவும் பங்குபெறவும் ஒரு சிறு ஆவணமாக இது பயன்படுத்தப்படலாம்.

தமிழகத்திலும் தேசிய அளவிலும் கடந்த சில ஆண்டுகளாக இது பற்றிய சர்ச்சை மெற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் வரலாறு, கடந்த சில ஆண்டுகளின் முக்கிய நிகழ்வுகள் பற்றிய குறிப்பு, விமர்சனப் பூர்வமான கருத்தாக்கம், இவையனைத்தும் பற்றிப் பல கோணங்களிலிருந்து இவ்விதழில் கொண்டுவர முயற்சி செய்யப்பட்டுள்ளது. இது எந்த வகையிலும் முழுமையான தொகுப்பல்ல. பொதுவெளியில் நடந்துவரும் சர்ச்சையைப் புரிந்துகொள்ளவும் பங்குபெறவும் ஒரு சிறு ஆவணமாக இது பயன்படுத்தப்படலாம். இன்னும் பல இதழ்கள், சர்ச்சைகள், மாற்றங்கள் தமிழ்ச் சூழலில் நிகழும் என்ற நம்பிக்கையுடனும் வரலாறு சார்ந்த அறிதலுடன் இந்த இதழைத் திறந்த பாணியில், நிகழ்முறையின் ஒரு கனமாக உங்கள் முன்வைக்கிறோம்.

சற்று அச்சத்துடனும் புரிதலின்மையுடனும் இன்றும் சிறிதளவே பேசப்படும் பாலியல்பு மற்றும் மாற்றுப்பாலியல்பு பற்றி ஒரு சிறப்பிதழ் வெளியிட வாய்ப்பு கொடுத்து ஊக்குவித்த மாற்றுவெளி இதழாசிரியர் குழுவிற்கு நன்றி கூற விரும்புகிறோம். இவ்விதழின் இன்றைய சூழல் மற்றும் நாளைய வரலாற்றில் இச்சிறப்பிதழும் ஒரு அங்கமாகும். தமிழில் பாலியல்சார் கருத்தாக்க உருவாக்கத்தின் ஒரு செயலாக மட்டுமல்லாமல், மாற்றுவெளி இதழின் காலத்திற்கு உகந்தத் தன்மையை மெருகேற்றுவதில் ஒரு சிறு முயற்சியாக இவ்விதழை வெளியிட்டிருப்பதற்கு, நாங்கள், ஆசிரியர் குழுவையும் வாசகர்களையும் வாழ்த்துகிறோம்.

ஜனவரி 2011

- அ. பொன்னி, அனிருத்தன் வாசுதேவன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை இளைஞர் நூலகம்
... யாழ்ப்பாணம்

11

கட்டுரை
1

பாலியல்பு, திருமணம், குடும்பம் - சில குறிப்புகள்

■ மீனா கோபால்

அறிமுகம்

எனது எண்ண ஓட்டங்களைப் பகிர்ந்து கொள்ளும் இவ் வேளையில் என்னைப் பற்றியும் நான் சார்ந்துள்ள அரசியல், அமைப்புகள் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். 45 வயதைக் கடந்த நான் 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பெண்கள் இயக்கங்களில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறேன். கூடுதலாக, ஒருபால் உறவில் உள்ளவர்கள், மாற்றுப் பாலினத்தவர், அரவானிகள், நடுவண் பாலினத்தவர் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்பவ ரோடும் அவர்கள் சார்ந்து இயங்கும் அமைப்புகளோடும் செயல்பட்டு வருகிறேன். இவ்வனுபவங்களையும் எனது எண்ண ஓட்டத்தையும் இணைத்துச் சில கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இந்தியாவில் பெண்ணிய இயக்கங்கள் கடந்து வந்த பாதைகளில் காலூன்றியும் சகதோழிகளின் அரசியல் முயற்சிகள் சாதித்தவற்றைப் பற்றிக் கொண்டே இவ்விவாதத்தை முன் எடுத்துச் செல்கிறேன்.

பெண்ணிய இயக்கங்களின், பெண்ணியத்தின் தனித்தன்மையை கோடிட்டுக் காட்டியே எனது வாதங்களை முன் வைக்க விரும்பு கிறேன் (பெண்ணியலாளர்கள், இயக்கங்கள் என்று நான் குறிப்பிடும் போது வெவ்வேறு அரசியல் நிலைப்பாடு உடையவர் களை குறிப்பிடுவதாகவே கொள்ள வேண்டும். மார்க்சிய பெண்ணியம், தலித் பெண்ணியம், சோசலிச பெண்ணியம், வெறும் பெண்ணியம் என்று பல்வேறு அரசியல் நிலைகளில் நிற்கும் பெண்களை, இயக்கங்களை இச்சொற்கள் கொண்டு சுட்டுகிறேன்.) பாலினம், சாதி, சமயம், வர்க்கம், இனம் ஆகியன இணைந்தும் ஒன்றை மற்றொன்று சார்ந்தும் ஒன்றோடு ஒன்று முரண்பட்டும் நம்மை, நமது சுயங்களை கட்டியமைகின்றன என்ற போதிலும், இவை அனைத்தும் சந்திக்கும் முரண்படும் புள்ளிகளையும் தருவாய்களையும் இனங்காணவும் ஆராயவும் எல்லா அரசியல், சமுதாய இயக்கங்களும் முன்வருவதில்லை. எடுத்துக் காட்டாக, தொழிலார் இயக்கங்கள், சாதி-எதிர்ப்பு இயக்கங்கள் போன்றவை சமூக இயக்கங்களாக செயல்படுன்றன என்றாலும் அவை தங்களுக்கான குறிப்பிட்ட பிரச்சனைகளாக சிலவற்றை அடையாளபடுத்தி, அவற்றின் ஒரு பகுதியாகவே பெண்கள் பிரச்சனையை அணுகுகின்றன. மாறாகப் பெண்ணிய அரசியலோ, இந்தப் பல்வேறு விதமான அடையாளங்கள் இணையும் மாறுபடும்,

இக்கட்டுரையாளர் மும்பையில் உள்ள Forum Against Oppression of Women என்ற அமைப்பைச் சேர்ந்த பெண்ணியலாளரும், பெண்ணிய ஆய்வாளரும் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்படும் இடங்களையும் தருணங்களையும் புரிந்துணர்ந்து செயல்பட விழைகிறது.

பெண்ணிய இயக்கங்களின் இவ்விழைவு, எல்லா நேரங்களிலும் செயலாக, அரசியல் நிலைப்பாடாக வெளிப்பாடு காண்பதில்லை தான். மேலும், பாலினம், பாலியல்பு தொடர்பான இவ்வியக்கங்களின் நுண்மையான அரசியல், சாதி-எதிர்ப்பு, வர்க்க முரண்பாடுகள் ஆகியனவற்றுக்குப் போதுமான முக்கியத்துவம் அளிப்பதில்லை என்ற விமர்சனமும் உண்டு. இவ்விமர்சனத்தில் நியாயம் இல்லாமல் இல்லை. அதாவது, பாலினம், பாலினப் பாகுபாடு ஆகியவற்றுக்கும் மற்ற சமுதாய அடையாளங்களுக்கும் இடையிலான உறவுகளை ஆராய, அறிய, விமர்சிக்க பெண்ணியலாளர்கள் தயாராகவே உள்ளனர். ஒடுக்கப்பட்டப் பெண்களின் பிரத்யேக பிரச்சனைகளைக் கருத்தில் கொள்ள வேண்டியதன் தேவையை பெண்ணியலாளர்கள் முக்கி முனகி, காலதாமதமாகவேனும் ஏற்றுக் கொண்டு செயல்பட முயற்சித்து வருகின்றனர் என்பதையும் இங்குப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இது போலவே, நிர்பந்திக்கப்பட்ட பாலுறவுகளை கடந்த உறவுகளில் வாழ்பவர்கள், ஆண், பெண் அடையாளங்களை தவிர்த்த வேறு பாலின அடையாளங்களை ஏற்றுள்ளவர்கள் ஆகியோரின் தேர்வுகளில் பொதிந்துள்ள அரசியலின் நியாயத்தைப் பெண்ணியலாளர்கள் படிப்படியாக ஏற்றுக் கொண்டுள்ளனர். இதனால்தான், பெண்ணிய அறிவு மரபுகள், அரசியல் ஆகியன, பாலியல் தொடர்பான அரசியல் செயல்பாடுகளில் இறங்கியுள்ளோருக்கு ஆதர்சமானவையாக உள்ளன என்கிறார் பெண்ணிய சிந்தனையாளர் சயானிகா ஷா.

நிர்பந்திக்கப்பட்ட பாலுறவுகளை கடந்த உறவுகளில் வாழ்பவர்கள், ஆண், பெண் அடையாளங்களை தவிர்த்த வேறு பாலின அடையாளங்களை ஏற்றுள்ளவர்கள் ஆகியோரின் தேர்வுகளில் பொதிந்துள்ள அரசியலின் நியாயத்தைப் பெண்ணியலாளர்கள் படிப்படியாக ஏற்றுக் கொண்டுள்ளனர். இதனால்தான், பெண்ணிய அறிவு மரபுகள், அரசியல் ஆகியன, பாலியல் தொடர்பான அரசியல் செயல்பாடுகளில் இறங்கியுள்ளோருக்கு ஆதர்சமானவையாக உள்ளன என்கிறார் பெண்ணிய சிந்தனையாளர் சயானிகா ஷா.

இன்றைய கலந்துரையாடலுக்கு பாலியல்பை நாம் விவாதப் பொருளாக எடுத்துள்ளோம். நம்முடைய புரிதலில் பாலியல்பு என்பதற்கு விரிந்த பொருள் உண்டு. பாலியல்பு என்பதை, இச்சை (நாம் விரும்பி ஏற்கும் ஒன்று), அந்நியோன்னியம் (நமது அந்தரங்கத்துக்குரியது), கூட்டுணர்வு (கூட்டுவாழ்க்கைக்கு ஆதராமாக இருக்கக்கூடியது)ஆகியவற்றுடன் தொடர்புடையதாக விளங்கிக் கொள்ளலாம். அதே சமயம், பாலியல்பு என்பது அதிகாரம் என்பதுடனும் தொடர்புடையதாகும் - வர்க்கம், ஜாதி, பாலின பாகுபாடு, இனம், குலம், சலுகை ஆகியவற்றைப் பொறுத்தே பாலியல்புக்கான இலக்கணம் கற்பிக்கப்படுகிறது. இங்கு சலுகை என்பதை குறித்து சில விளக்கங்களை முன்வைக்க விரும்புகிறேன். அதிகாரம் தரும் சலுகையைப் பற்றி நாம் அனைவரும் அறிவோம். அதிகாரத்தில் இருப்போரின் எதேச்சதிகாரத்தை நியாயப்படுத்துவதாகவும் அதை இயல்பானதாகக் காட்டவும் அவர்களுக்கு வாய்த்துள்ள சலுகை - அது பிறப்புபாற்பட்டதாக இருக்கலாம், உடைமை தரும் மிடுக்காகவும் இருக்கலாம். பாலியல்பை பொறுத்த வரையில், சலுகை என்பது குறிப்பிட்ட வகையிலான உறவைப் பொறுத்தே அமைகிறது. இவ்வகையில், சமுதாயத்தில் "இயல்பான"தாக அறியப்படும் பாலுறவுகளுக்குக் குறிப்பாக ஆண்-பெண் உறவு, மணஉறவு என்பன போன்ற உறவுகளுக்கு - சில சலுகைகள் உண்டு. இத்தகைய உறவுகள் தான் "முறை"யானவையாக அறியப்படுகின்றன. அவையல்லாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் "முறையற்ற"வையாக ஒதுக்கப்படுகின்றன. "முறை"யான உறவுகளுக்கு எந்தளவு மதிப்பும் மரியாதையும் வழங்கப்படு கின்றதோ அந்தளவுக்கு அந்த இயல்புக்குள் வராத உறவுகள் தூற்றப்படுகின்றன, ஒடுக்கப்படுகின்றன. இது குறித்து நாம் அதிகம் பேசுவது கிடையாது. பெண் மீதான வன்முறை பற்றி பேசியுள்ள அளவுக்கு, ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்களின் கையறு நிலை குறித்து வாதம் புரிந்த அளவுக்கு "இயல்பற்ற"வையாகவும் "முறையற்ற"வையாகவும் அறியப்படும் உறவுகளில் இருப்போரின் நிலைமை குறித்து நாம் பேசுவது கிடையாது. ஆனால் அவ்வாறு பேச வேண்டிய அவசியம் இருக்கிறது.

வட இந்திய கிராம சமுதாயங்களில் வழங்கும் திருமண வாழ்க்கைக் குறித்து ப்ரேம் சௌத்திரி என்பவர் ஆராய்ந்துள்ளார் - குடும்பம், குடும்ப உறவுகள், குறிப்பாக கொள்வினை கொடுப்பினை உறவுகள், சாதி, சமுதாயம் ஆகியவற்றின் பின்னணியில் இவ்வாய்வினை அவர் மேற்கொண்டுள்ளார். திருமண உறவுக்குள்ள வரம்புகள், கட்டுப்பாடுகள், விதிகள், இவை மூலம் நிலைநிறுத்தப்படும் பாலினப் பாகுபாடு, சாதிய ஏற்றத்தாழ்வு, ஆதிக்க சாதிகளின் அதிகாரம் முதலியவற்றை குறித்தும் அவர் விரிவாகவும் விளக்கமாகவும், தக்க ஆதாரங்க ளோடும் எழுதியுள்ளார். அவர் கையாண்டுள்ள முறைமையை பின்பற்றி, சாதி, குடும்பம், சமுதாயம் ஆகியவற்றின் பின்னணியில் பாலியல்பை வைத்து ஆராயும் போது, "முறை"யான உறவுகளை உயர்த்திப் பிடிப்பதன் பெயரில், "முறையற்ற"வையாக கருதப்படும் உறவுகள் எவ்வாறு புறந்தள்ளப்படுகின்றன, இல்லாமல் போய் விடுகின்றன, உரிமைகள் இழந்தவையாக ஆக்கப்படுகின்றன என்பதை எடுத்துக்காட்ட முடியும். மேலும் "முறை"யானவையாகக் கருதப்படும் உறவுகள் எவ்வாறு, எதன் பொருட்டு நிர்பந்திக்கப்படு கின்றன, எவ்வாறு வன்முறையால் நிலைநிறுத்தப்படுகின்றன, அவற்றை பெண்கள் ஏற்று வாழ்வதற்குத் தோதாக எத்தகைய கட்டுக்கதைகள் உருவாக்கப்படுகின்றன, "முறை"யான வாழ்க்கைக்கு ஒப்புதல் தெரிவித்து வாழும் பெண்களின் அவஸ்தைகள் எவ்வாறு அவர்களை தியாகிகளாக, முன்மாதிரிகளாக உருமாற்றுகின்றன என்பதையும் இத்தகைய ஆய்வுகளைக் கொண்டு நிறுவ முடியும்.

இத்தகைய ஆய்வுகளை மேற்கொள்ளும் போது, திருமணம், குடும்பம் ஆகியவற்றுக்கிடையிலான உறவு பற்றி மாறுபட்ட புரிதல்களை நாம் பெறுவோம் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக திருமணம் என்பதன் தவிர்க்க முடியாத நீட்சிதான் குடும்பம், அது திருமணத்திலிருந்து இயற்கையாகவே உருவெடுத்தது என்பன போன்ற கருத்துகளை நாம் கேள்விக்கு உட்படுத்துவோம். அதாவது, குடும்பம் என்பதன் வேறு பரிமாணங்களையும் - சாதி, பாலியல்பு ஆகியவற்றைச் சார்ந்த பரிமாணங்களையும் - இத்தகைய ஆய்வுகள் அம்பலப்படுத்தும்.

இனி இக்கட்டுரையில் நான் மேற்கொண்டு வாதிட விரும்புவதாவது - பெண்களின் வாழ்க்கை, அவர்களுக்கு வாய்க்கும் வேலைகள், தொழில்கள் ஆகியன எவ்வாறு அவர்களது பாலியல்புபாற்பட்டதாகவே அமைகின்றன, பாலியல்பு பற்றிய

ஆய்வுகளை மேற்கொள்ளும் போது, திருமணம், குடும்பம் ஆகியவற்றுக்கிடையிலான உறவு பற்றி மாறுபட்ட புரிதல்களை நாம் பெறுவோம் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக திருமணம் என்பதன் தவிர்க்க முடியாத நீட்சிதான் குடும்பம், அது திருமணத்திலிருந்து இயற்கையாகவே உருவெடுத்தது என்பன போன்ற கருத்துகளை நாம் கேள்விக்கு உட்படுத்துவோம். அதாவது, குடும்பம் என்பதன் வேறு பரிமாணங்களையும் சாதி, பாலியல்பு ஆகியவற்றைச் சார்ந்த பரிமாணங்களையும் இத்தகைய ஆய்வுகள் அம்பலப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுக்கதைகளை, அரசாங்கம், சட்டம், மதம் ஆகியன எவ்வாறு கற்பிக்கின்றன, இவற்றின் கனத்தை பெண்கள் எவ்வாறு சமாளிக்கின்றனர், இவை விதிக்கும் அறக் கோட்பாடுகளை எவ்வாறு எதிர்கொள்கின்றனர், தங்களது வேட்கைகளை, விருப்புவெறுப்புகளை எவ்வாறு வெளிபடுத்துகின்றனர், அந்நியோன்யம், ஆசை, தங்களுக்கான சமுதாயம் என்பனவற்றை எவ்வாறு உருவாக்கிக் கொள்கின்றனர் ஆகியவை குறித்தும் இக்கட்டுரை ஆராய முற்படும்.

பெண் உழைப்பும் பாலியல்பும்

மார்ச் 2005இல் மஹாராஷ்டிர அரசாங்கம், மாநிலம்தோறும் உள்ள மதுபான கூடங்களில் - பார்களில் - பெண்கள் நடனமாடும் பழக்கத்தைத் தடை செய்தது. இத்தடை மும்பை நகரத்திலும் அமுல்படுத்தப்பட்டது. இதற்கான காரணத்தை விளக்கிய உள்துறை அமைச்சர் கூறியதாவது - "இளைஞர்கள் கெட்டுப் போக இந்த நடனங்கள் காரணமாகவுள்ளன. பார்களில் ஆடப்படும் கேளிக்கை நடனங்களால் ஈர்க்கப்பட்டு, இளைஞர்கள், தந்தையர் கடுமையாக உழைத்துச் சம்பாதித்த பணத்தைச் செலவழிப்பதுடன், குற்றங்களில் ஈடுபடவும் துணிகின்றனர்." மாநில அரசாங்கம் அமுல்படுத்திய தடையின் விளைவாக 75 ஆயிரம் முதல் 1 லட்சம் பெண்களின் வாழ்க்கைப் பாதிப்பிற்குள்ளாகியது. பார்களில் நடனமாடும் பெண்கள், அவர்கள் செய்த தொழிலின் மூலம் பெற்ற வருமானத்தைக் கொண்டு தங்களது குடும்பத்தை நடத்தி வந்தனர். குழந்தைகளைப் படிக்க வைத்தனர். வயதான பெற்றோரைப் பராமரித்தனர். குடும்பத்தில் யாரேனும் நோய்வாய்ப்பட்ட போது அவர்களுக்கு மருத்துவம் பார்த்தனர். இந்த அனைத்து நடவடிக்கைகளும் தடை விதிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டன.

இத்தடையைச் சில பெண்ணிய அமைப்புகள் எதிர்த்தனர். "பெண்களின் வாழ்வாதாரத்தைத் திருப்பிக் கொடு, வேலை இல்லாத் திண்டாட்டம் பெருகி வரும் ஒரு காலக்கட்டத்தில் பெண்களின் தொழிலுரிமையில் குறுக்கிடாதே" என்ற ரீதியில் கோரிக்கைகளை முன்வைத்தனர். இவ்வாறு முழக்கமிட்டவர்கள், பார்களில் நடனமாடும் பெண்களின் வாழ்க்கைப் பற்றி அநேக செய்திகள் அறியப்படாததை உணர்ந்து, அவர்களது வாழ்நிலைமைகளைப் பற்றி ஒரு ஆய்வினை மேற்கொண்டனர். பாரில் நடனமாடும் பெண்களுக்கான தொழிற்சங்கம் ஒன்று, சில பெண்ணிய அமைப்புகளை அணுகி, இத்தகைய ஆய்வை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டதன் பெயரில் அவர்கள் இத்தகைய முயற்சியில் இறங்கினர்.

இந்த ஆய்வில் வெளிபட்ட முக்கியமான தகவல்கள் இவைதான். பெரும்பாலான நடனமாடும் பெண்களின் குடும்பங்களில் அவர்கள் மட்டுமே சம்பாதிப்பவர்கள். அவர்களை யாரும் வலுக்கட்டாயமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்த முனையவில்லை. இப்பெண்களில் 40%திற்கும் மேலானவர்கள் ஆடிப்பாடி சம்பாதிக்கும் ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள். தங்களது சாதித்தொழிலின் இழிவிலிருந்தும், அது கோரும் பாலியல் ஒடுக்குமுறையிலிருந்தும் விடுபடுவதற்காகவே தமது ஊர்களை விட்டு மும்பைக்கு வேலை தேடி வந்தவர்கள். தேவைக்கு ஏற்றார் போல, இவர்கள் ஒரு மதுபான

கட்டுக்கதைகளை, அரசாங்கம், சட்டம், மதம் ஆகியன எவ்வாறு கற்பிக்கின்றன, இவற்றின் கனத்தை பெண்கள் எவ்வாறு சமாளிக்கின்றனர், இவை விதிக்கும் அறக் கோட்பாடுகளை எவ்வாறு எதிர்கொள்கின்றனர், தங்களது வேட்கைகளை, விருப்புவெறுப்புகளை எவ்வாறு வெளிபடுத்துகின்றனர், அந்நியோன்யம், ஆசை, தங்களுக்கான சமுதாயம் என்பனவற்றை எவ்வாறு உருவாக்கிக் கொள்கின்றனர் ஆகியவை குறித்தும் இக்கட்டுரை ஆராய முற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[library stamp]

கடையிலிருந்து மற்றொரு மதுபான அரங்கத்திற்குப் பணி மாறிச் செல்வது வழக்கம். அதாவது, அவர்கள் பார்த்த வேலையில் ஏதோவொரு சௌகரியம் அவர்களுக்கு வாய்த்திருந்தது - வேலையை மாற்றி கொள்ள, பிடிக்காத இடத்திலிருந்து நீங்கி வேறொரு இடத்துக்குச் செல்ல .... ஆணை மகிழ்விப்பதற்காக, ஆண் நோக்கின் இச்சைகளுக்கு ஏற்ப இயங்க வேண்டிய சூழலில், அதையே தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு, சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றார் போல, தங்களது மதிப்பைக் கூட்டி சம்பாதிக்கும் ஆற்றல் அவர்களிடம் இருந்ததும் ஆய்வினூடாக வெளிப்பட்டது. மதுபானக் கடைகளில் நடனமாட தடை விதிக்கப்பட்டதால் தமது வாழ்வாதாரத்தை இழக்க நேர்ந்ததை, தாம் நிற்கதிக்குத் தள்ளப்பட்டுள்ளதைப் பல பெண்கள் சுட்டிக்காட்டினர்.

பாரில் நடனமாடுவதற்கு எதிரான தடையைச் சில பெண்ணிய அமைப்புகள் ஆதரிக்கவும் செய்தன. பார் உரிமையாளர்களும் பார் நடனங்களைக் காண வருபவர்களும் நடனமாடும் பெண்களின் உழைப்பைச் சுரண்டுவதாக இவர்கள் குற்றஞ்சாட்டினர். பார்களில் பணி புரிய வரும் பெண்கள் தாங்களாகவேதான் இத்தகைய வேலைத் தேர்வை மேற்கொண்டுள்ளனர் என்பதை இவர்களால் ஏற்று கொள்ள முடியவில்லை. தங்களுக்கு வாய்த்திருந்த சூழ்நிலைமைகளை இந்த பெண்கள் எவ்வாறு திறம்பட எதிர்கொள்கின்றனர், அச்சூழல் விடுக்கும் சவால்களை எவ்வாறு சமாளிக்கின்றனர் என்பன போன்றவற்றைக் குறித்து விவாதிக்க, யோசிக்க இந்த பெண்ணிய அமைப்புகள் தயாராக இல்லை.

மற்றொரு சாரார், வேறு விதமான ஆட்சேபணைகளை தெரிவித்தனர். பார்களில் நடனமாடுவோரின் பிரச்சனை வேலை உரிமை, பாலியல்பு,அப்பாலியல்பை சார்ந்த தொழில் ஆகியனவற்றுடன் மாத்திரம் தொடர்புடையதன்று, அது சாதி பிரச்சனையும் கூட. எனவே, இப்பெண்களின் வேலை உரிமையைப் பாதுகாப்பது என்பது அவர்களை இழிவான சாதித் தொழிலில் நீடிக்கச் செய்வதுக்கு ஒப்பாகும் என்றும் வாதிட்டனர். இவ்வாதங்களும் எதிர்வாதங்களும் சாதி, பாலியல், உழைப்பு ஆகியன ஒன்றை மற்றொன்று பிண்ணிப் பிணைந்திருப்பதை உணர்த்தின.

"பார் நடனப் பெண்கள் பாலியல் தொழிலாளர்கள் அல்லர், விபச்சாரத்தில் ஈடுபடுகிறவர்கள் அல்லர்!" என்று அப்பெண்கள் கோபத்தோடு வாதிட்டாலும் இத்தடை உத்தரவு அவர்களைப் பாலியல் தொழில் செய்ய நிர்பந்திக்கும் என்பதையும் சுட்டிக் காட்டினர். பிரச்சனை என்னவெனில், பாலியல் தொழில் என்பதைப் பெண்களின் மீதான வன்முறை என்கிற ரீதியில் மட்டுமே நாம் புரிந்து வைத்திருப்பதுதான். தமது பாலியல்பை வாழ்வாதாரமாகக் கொண்டு செயல்படுவோரை நாம் விபச்சாரிகள் என்று சொல்வது வழக்கம். தமது உடலை விற்று வயிறு வளர்ப்போர் என்று இவர்களை நாம் சாடுவதும் உண்டு. ஆனால், பாலியல்பைப் பரிமாற்றுப் பண்டமாக பாவித்து அதற்கான பொருளாதார மதிப்பை பெறுவோர், உண்மையில் பலதரப்பட்டவர்கள் - பார் நடனக் கலைஞர்கள், விளம்பர மாடலிங் செய்வோர், சினிமாவில் நடிப்போர் என்று இந்தப் பட்டியல் விரியும்.

பாலியல்பு, அப்பாலியல்பை சார்ந்த தொழில் ஆகியனவற்றுடன் மாத்திரம் தொடர்புடையதன்று, அது சாதி பிரச்சனையும் கூட. எனவே, இப்பெண்களின் வேலை உரிமையைப் பாதுகாப்பது என்பது அவர்களை இழிவான சாதித் தொழிலில் நீடிக்கச் செய்வதுக்கு ஒப்பாகும் என்று இவர்கள் வாதிட்டனர். இவ்வாதங்களும் எதிர்வாதங்களும் சாதி, பாலியல், உழைப்பு ஆகியன ஒன்றை மற்றொன்று பிண்ணிப் பிணைந்திருப்பதை உணர்த்தின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியல் தொழில் குறித்து பெண்ணியவாதிகள் கொண்டுள்ள நிலைப்பாடுகளை இனி ஆராய்வோம். பல சமயங்களில் பாலியல் தொழில் என்பதன் அனைத்து பரிமாணங்களையும் நாம் கருத்தில் கொள்வதில்லை. பாலியல் தொழிலாளிகளின் வாழ்வனுபவங்களையும் அவர்கள், தாங்கள் செய்யும் தொழிலைப் பற்றி கொண்டுள்ள பார்வையையும் இன்னும் நாம் சரிவர புரிந்துணரவில்லை. ராஜேஸ்வரி சுந்தர்ராஜன் என்ற ஆராய்ச்சியாளர், பெண்ணியவாதிகளின் நிலைபாடுகளில் உள்ள சிக்கல்களைப் பின்வருமாறு விளக்குகிறார். பெண்ணியலாளர்கள் தங்களை இரட்சகர்களாகவும் பாலியல் தொழிலாளிகளை தமது கருணையை எதிர்பார்த்து வாழும் பாதிக்கப்பட்டவர்களாகவும் அடையாளப்படுத்துவது பிரச்சனைக் குரியதாகும். இரண்டாவதாக, பாலியல் தொழில்புரிவோரின் மன ஓட்டம், தேர்வு செய்யும் ஆற்றல் என்னவாக உள்ளன, அவர்களால் எந்தளவுக்குச் சுயாதீனமாக செயல்பட முடிகிறது என்பன தொடர்பாகப் பெண்ணியலாளர் எழுப்பும் கேள்விகளுக்கான பதில்களிலும் போதிய தெளிவு இல்லை என்பது மற்றொரு பிரச்சனையாகும். மூன்றாவதாக, பெண் உழைப்பு, பாலியல்பு, இவை இரண்டும் இயங்கும் பொது வெளி ஆகியவற்றுக் கிடையிலான உறவுகள் குறித்து பெண்ணியவாதிகள் இன்னும் ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது. இவ்விஷயங்களிலும் நாம் இன்னும் வேண்டிய கருத்துத் தெளிவு பெறவில்லை என்பதுதான் உண்மை.

பல சமயங்களில் பாலியல் தொழில் என்பதன் அனைத்து பரிமாணங்களையும் நாம் கருத்தில் கொள்வதில்லை. பாலியல் தொழிலாளிகளின் வாழ்வனுபவங்களையும், அவர்கள், தாங்கள் செய்யும் தொழிலைப் பற்றி கொண்டுள்ள பார்வையையும் இன்னும் நாம் சரிவர புரிந்துணரவில்லை. ராஜேஸ்வரி சுந்தர்ராஜன் என்ற ஆராய்ச்சியாளர், பெண்ணியவாதிகளின் நிலைபாடுகளில் உள்ள சிக்கல்களைப் பின்வருமாறு விளக்குகிறார். பெண்ணியலாளர்கள் தங்களை இரட்சகர்களாகவும் பாலியல் தொழிலாளிகளை தமது கருணையை எதிர்பார்த்து வாழும் பாதிக்கப்பட்டவர்களாகவும் அடையாளப்படுத்துவது பிரச்சனைக்குரியதாகும்.

ராஜேஸ்வரி சுந்தர்ராஜன் விபச்சாரம் குறித்து மூன்று வேறுபட்ட பார்வைகள் இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார். முதல்சாரார், விபச்சாரம் முற்றிலுமாக ஒழிக்கப் பட வேண்டும் என்பர். இவர்கள் பாலுறவு பற்றிய விவாதங்களில் பங்கேற்பதில்லை. திருமண உறவைக் கடப்பதன் தேவையையும் கடந்து செல்வதன் நியாயத்தையும் பெண்கள், ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுடன் பாலுறவு கொள்வதும் குறித்தும் இவர்கள் விவாதிப்பதில்லை. இவ்விஷயங்களில் மௌனம் காப்பவர்களாகவே உள்ளனர்.

இரண்டாம்சாரார், பாலியல் தொழில் என்பதை விபச்சாரமாக, குற்றமாகப் பார்ப்பதில்லை. அது தொழிலாக இருப்பது அவர்களுக்கு பிரச்சனையில்லை. பாலியல் தொழிலுக்கும் திருமண உறவுக்குமிடையே அப்படி என்ன பெரிய வேறுபாடு இருக்கிறது. பெரும்பாலான பெண்கள், தமது வயிற்றுப்பாட்டுக்காகவே திருமணஞ் செய்து கொள்கின்றனர். பாலியல் தொழில் புரிவோரும் இதைத்தான் செய்கின்றனர் என்பது இவர்களது தர்க்கம். திருமணம் ஏன் மரியாதைக்குரியதாய் உள்ளது, பாலியல் தொழில் கேடுகெட்டதாய் அறியப்படுகிறது என்பன போன்ற கேள்விகளை இவர்கள் எழுப்புவது வழக்கம்.

மூன்றாம்சாரார், விபச்சாரம் என்பது சாதியை அடிப்படையாகக் கொண்ட சுரண்டல்முறை. பார்ப்பனீய இந்து மதத்தின் மூலம் இது நியாயப்படுத்தப்படுகிறது. தேவதாசி, ஜோகினி, மாத்தம்மா என்ற பெயர்களில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட பெண்கள் பாலியல் அடிமைகளாக ஆக்கப்படுகின்றனர் என்று இவர்கள் வாதிடுகின்றனர். இந்த மூன்றாம் சாரார், விபச்சாரம் ஒழிக்கப்பட வேண்டும் அல்லது தொழிலாகப் பாவிக்கப்பட வேண்டும் என்ற வாதங்களுக்குள் அதிகம் போவதில்லை. மாறாக, பாலியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலுக்குட்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த பெண்களின் கதைகளினூடாகவும் வரலாற்றினூடாகவும் பயணித்து, அவர்களது அனுபவங்களைப் பொதுவில் வைத்து பேச முற்படு பவர்களாக உள்ளனர். முந்தைய இருசாராரது விவாதங்களைப் போல் இவர்களது கருத்துகள் அதிகம் விவாதிக்கப் படுவதில்லை.

பாலியல்பு, பெண்களின் உழைப்பு ஆகியனவற்றுக்கு நாம் தரும் மதிப்பு, சன்மானம், அவற்றை நாம் புரிந்து கொள்ளும் விதம் ஆகியன, சம்பந்தப்பட்டவர்களின் சாதி, வர்க்க நிலைகளால் தீர்மானிக்கப்படுவதைப் பார்களில் நடனமாடும் பெண்களும் சுட்டிக் காட்டியுள்ளனர். ஒரு திரைப்படத்தில் ஐஸ்வர்யா ராய் பாரில் நடனமாடும் பெண்ணாக வருகிறார். அவர் தனது பாலியல்பைப் பயன்படுத்தி சம்பாதிப்பதை அரசால் ஏற்றுக் கொள்ள முடிகிறது. அதை சமுதாயமும் ஆமோதிக்கிறது. ஆனால்,அவளைப் போல, ஆனால் சினிமாவிலல்லாமல், நிஜ வாழ்வில், நாங்கள் ஆடும் போது, அதுவும் வயிற்றுப் பிழைப்புக்காக ஆடும்போது அதை யாராலும் ஏற்றுகொள்ள முடிவதில்லை என்ற கேள்வியைப் பார்களில் ஆடும் பெண்கள் எழுப்பியுள்ளனர். ஆக, பாலியல் சார்ந்த பெண்களின் உடல்கள் பொதுவில் இயங்குவது என்பது பிரச்சனையல்ல. இவ்வாறு பொதுவில் இயங்கும் உடல்களின் சாதி, நிறம், சமுதாய அந்தஸ்து, மணத் தகுதி ஆகியவற்றைக் கொண்டே அவை பிரச்சனைக்குரிய உடல்களா, அல்லது ரசனைக்கும் போற்றுதலுக்கும் உரிய உடல்களா என்பது தீர்மானிக்கப்படு கின்றன.

இங்கு வேறொரு விஷயத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மணவாழ்வில் துலங்கும் பாலியல்பு, பாலுறவு ஆகியனவற்றுக்குள்ள மதிப்பைக் கொண்டுதான் மணவாழ்வுக்குள் வராதவர்களின் பாலியல்புக்கான மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது. பார்களில் நடனமாடும் பெண்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது ஒரு சோசலிச பெண்ணியலாளர் கூறியதாவது - "பார் டான்ஸ் செய்யும் பெண்களின் ஆட்டத்தில் மயங்கி, அதற்காக பணம் செலவழிக்கும் ஆண்கள் தங்கள் மனைவிகளுக்காக எதையும் செய்வதில்லை." அதாவது, குடும்பத்தைப் பேணுதல், மனைவியின் உரிமைகளைப் பாதுகாத்தல் என்பன போன்ற செயல்பாடுகளின் பெயரில், ஆயிரமாயிரம் ஏழைப் பெண்களின் தொழில் உரிமை பறிக்கப்படுவது நியாயமானதே என்று இவர் சொல்லாமல் சொல்கிறார்.

ஆண்களின் நடவடிக்கைகள் அவர்களைச் சார்ந்து வாழும் பெண்களைப் பாதிக்கின்றன என்பது உண்மைதான் என்றாலும் அத்தகைய பாதிப்பு மட்டுமே இங்கு முக்கியமானதாக அடையாளப்படுத்தப்படுகிறது. அதுவும், இல்லற பெண்ணைக் குறித்த கவலையாகவே பரிணமிக்கிறதே அன்றி, ஆண்களைக் கட்டுப்படுத்தும் செயல்பாடாக அல்ல. அரசு, நடுத்தர வர்க்கத்தினர், ஆதிக்க சாதியினர் ஆகியோரின் அக்கறைக்குப் பாத்திரமான இந்த ஆண் மையப்பட்ட இல்லறமானது, இல்லறத்துக்கு உட்படாத வர்களை மனிதர்களாகவே கருதுவதில்லை. மேலும், அவர்களை அடக்கி ஆள, இல்லறம் சார்ந்த சொல்லாடல்கள் பயன்படுத்தப் படுகின்றன. இவ்வாறு வர்க்கமும் சாதியும் அரசும் கை கோர்த்துக் கொண்டு இல்லற வாழ்வு வாழாத பெண்களின் மீது அதிகாரம்

பாலியல்பு, பெண்களின் உழைப்பு ஆகியனவற்றுக்கு நாம் தரும் மதிப்பு, சன்மானம், அவற்றை நாம் புரிந்து கொள்ளும் விதம் ஆகியன, சம்பந்தப்பட்டவர்களின் சாதி, வர்க்க நிலைகளால் தீர்மானிக்கப்படுவதைப் பார்களில் நடனமாடும் பெண்களும் சுட்டிக் காட்டியுள்ளனர். ஒரு திரைப்படத்தில் ஐஸ்வர்யா ராய் பாரில் நடனமாடும் பெண்ணாக வருகிறார். அவர் தனது பாலியல்பைப் பயன்படுத்தி சம்பாதிப்பதை அரசால் ஏற்றுக் கொள்ள முடிகிறது. அதை சமுதாயமும் ஆமோதிக்கிறது.

PUBLIC LIBRARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துகின்றன. கூடவே, எது தொழில், எது தொழில் அல்ல, எது சேவை, எது மரபு, எது கலை, எது ரசனை என்ற ரீதியில் பாலியல்பு, பாலுறவுகள் குறித்த வாதங்களை இவை தரம் பிரிக்கின்றன.

தாம்பத்தியம், காதல், உரிமை, இன்பம்

பாலியல் தொழில் குறித்த பெண்ணிய புரிதல்கள் ஒருபுறமிருக்க, அந்நியோன்யம், பாலியல்பு, வன்முறை ஆகியன ஒன்றோடு மற்றொன்று பின்னிப்பிணைந்துள்ளதன் நுணுக்கங்களும் பெண்ணியவாதிகளின் கவலையார்ந்த கவனத்தை ஈர்த்துள்ளன. குடும்பங்களில் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டுள்ள பெண்களைக் குறித்த தனது கட்டுரையில் வ. கீதா பின்வருமாறு குறிப்பிடுகிறார். நெருக்கமான உறவுகளில் தொழிற்படும் வன்முறை குறித்து கூட்டுக் கலந்தாய்வுகளைப் பெண்ணியவாதிகள் மேற்கொண்டுள்ளனர். வன்முறைக்கு ஆட்படுத்தப்பட்ட, பழகிவிட்ட பெண்கள் வன்முறையார்ந்த உறவுகளிலிருந்து விடுபட, அத்தகைய வன்முறையை எதிர்கொள்ள ஆலோசனைகளை வழங்கியுள்ளனர். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவளித்துள்ளனர். அவர்கள் பொருட்டுக் கூட்டுச் செயல்பாடுகளில் இறங்கியுள்ளனர். என்றாலும், நெருக்கம், காதல், அந்நியோன்யம் ஆகியனவற்றைச் சார்ந்த அனுபவங்களைக் குறித்த தமது புரிதல்களைப் பொதுவில் வைத்துப் பேச அவர்கள் முற்படவில்லை. இன்னும் சொல்லப் போனால், குறிப்பிட்ட பிரச்சனைக்குத் தீர்வு காணுதல், அதை அரசியல்படுத்துதல், இவற்றைச் செய்து முடிக்க சட்டத்தை நாடுதல் என்றரீதியில்தான் பெண்ணியவாதிகள் சிந்தித்துச் செயல்பட்டு வந்துள்ளனர்.

இத்தனைக்கும், பெண்ணிய வட்டாரங்களில் காதல், காமம், நெருக்கம் குறித்து நாம் பேசாமல் இல்லை என்பதையும் கீதா சுட்டிக் காட்டுகிறார். இவ்வாறு நமக்கான இடத்தில், நம்மால் பேசப்பட்டவற்றைப் பொது உரையாடலாக நாம் வளர்த்திருந்தால், நெருக்கம், அந்நியோன்யம், குறிப்பாக பெண்ணியமும் பெண்ணிய செயல்பாடுகளும் சாதித்துள்ள தோழமை, சிநேக இன்பம் ஆகியவற்றைப் பற்றிய பார்வையைப் பொது புத்தியில் பதியச் செய்திருக்கலாம். இத்தகைய விஷயங்களைப் பற்றிய புதிய சொல்லாடல்களை உருவாக்கியிருக்கலாம். நாம் இவ்வாறு செய்யாததால், ஆண்கள், பெண்கள் மீது செலுத்தும் வன்முறையினூடாக வெளிப்படும் காதல், ஆசை, வேட்கை ஆகியனவற்றுக்கு, இல்லாத நியாயங்கள் சொல்லப்படுகின்றன. "அடிக்கிற கைதான் அணைக்கும், அடிச்சாலும் உதைச்சாலும் அவன் புருஷன்தான், வலி இல்லாத காதல் கிடையாது, இன்னிக்கு அடிப்பேன் நாளைக்கு அணைப்பேன், உரிமை இருக்கு அடிக்கிறாரு, அக்கறை உள்ள இடத்துலதான் ஆக்கிரோஷமும்" இருக்கும் என்பன போன்ற வசனங்கள் ஆண்களின் வன்முறையார்ந்த செயல்பாடுகளுக்கு நியாயம் சேர்க்கின்றன. மேலும், பெண்ணிய சமூகவியலாளர் கல்பனா கண்ணபிரான் குறிப்பிடுவது போல, ஆண்களின் இந்த நடத்தைமுறைச் சரியானதே, நியாயமானதே என்பதை அரசு, சமயம், சாதி , பொது அறம் ஆகிய அனைத்துமே தத்தம் அளவில், தமக்கேயுரிய வகையில் பொதுவில் வைத்துத் தொடர்ந்து உறுதி செய்கின்றன.

வன்முறைக்கு ஆட்படுத்தப்பட்ட, பழகிவிட்ட பெண்கள் வன்முறையார்ந்த உறவுகளிலிருந்து விடுபட, அத்தகைய வன்முறையை எதிர்கொள்ள ஆலோசனைகளை வழங்கியுள்ளனர். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவளித்துள்ளனர். அவர்கள் பொருட்டுக் கூட்டுச் செயல்பாடுகளில் இறங்கியுள்ளனர். என்றாலும், நெருக்கம், காதல், அந்நியோன்யம் ஆகியனவற்றைச் சார்ந்த அனுபவங்களைக் குறித்த தமது புரிதல்களைப் பொதுவில் வைத்துப் பேச அவர்கள் முற்படவில்லை. இன்னும் சொல்லப் போனால், குறிப்பிட்ட பிரச்சனைக்குத் தீர்வு காணுதல், அதை அரசியல்படுத்துதல், இவற்றைச் செய்து முடிக்க சட்டத்தை நாடுதல் என்றரீதியில்தான் பெண்ணியவாதிகள் சிந்தித்துச் செயல்பட்டு வந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு இன்னொரு விஷயத்தையும் யோசிக்க வேண்டியுள்ளது. நெருக்கமான குடும்ப உறவுகளில் பெண்கள் வன்முறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதை இன்று வெகுசிலர் மறுப்பர். ஆனால் திருமண உறவு குறித்து வேறு விதமான கேள்விகளையும் நாம் எழுப்ப வேண்டும். ஆணும் பெண்ணும் பாலுறவு கொண்டு வாழும் திருமண வாழ்க்கையில், அவர்களால் சுயேச்சையாக, சுதந்திரமாக தமது பாலியல் விருப்பங்களை, காதலை, தேவையை வெளிபடுத்த முடிகிறதா? திருமணம் என்று வரும் போது, தமது ஆசையை, பாலியல் தேவையை எவ்வாறு, எந்த அளவுக்கு மக்கள் வெளிப்படுத்துகின்றனர்? அவர்களுடைய விருப்பங்கள் குறுகிய, விதிமுறை சார்ந்த வலியுறுத்தல்களுக்குள் முடக்கப்படுகின்றனவா? இக்கேள்விகளில் நாம் இன்னும் தெளிவு பெறவில்லை. இவை குறித்த ஆய்வுகளைப் போதுமான அளவுக்கு மேற்கொள்ளவில்லை.

நம் நாட்டில் இளம் ஆண்களும் பெண்களும் ஓடிப்போய் திருமணஞ் செய்து கொள்ளும் போது கொல்லப்படுகின்றனர். சாதி, மதம் என்பவற்றின் பெருமையைக் காப்பாற்ற அவர்கள் கட்டாயத் திருமணம் செய்து கொள்ள நிர்பந்திக்கபடுகின்றனர். பொருந்தா மணம் செய்து கொண்டதால் மூர்க்கமாக கொலை செய்யப்படுகின்றனர். இத்தகைய கொலைகள் கௌரவக் கொலைகள் என்று அழைக்கப்படுகின்றன. அப்படியானால், இங்கு எதனை முன்னிட்டு, யாருடைய கௌரவம் பங்கப்படுகின்றது, அல்லது காப்பாற்றப்படுகின்றது? கௌரவம் என்பது ஒரு புறமிருக்க, நமது சமுதாயத்தில், இளம் பெண்கள் வலுக்கட்டாயமாக மணஞ்செய்து கொடுக்கப்படுவதைக் குறித்துச் சமுதாயம் சாதிக்கும் நாசகார மௌனத்தை நாம் எப்படிப் புரிந்து கொள்வது? திருமணம் என்பது குறித்து நமக்கு இத்தனைக் கேள்விகள் இருக்க, ஒரு பால் உறவாளர்கள் தாமும் திருமணஞ் செய்து கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் போது அதை நாம் எப்படி புரிந்து கொள்ளப் போகிறோம்? அவர்களுக்கு மறுக்கப்படும் உரிமைக்கான கோரிக்கையாக பார்க்கப் போகிறோமா? அல்லது அவர்களுமே ஏதோ ஒரு முறைமைக்குள் வர விரும்புவதன் அறிகுறியாக இதை கொள்ளப் போகிறோமா?

நமது கேள்விகளும் மௌனங்களும் எப்படியானதாக இருந்தாலும் திருமணம் பற்றி அரசு கொண்டுள்ள கருத்தையும் நாம் அறிய வேண்டியவராகிறோம். 2006இல் வெளியிடப்பட்ட தனது 217 ஆம் அறிக்கையில், இந்திய சட்ட ஆணையம் ஏற்கனவே 1978இல் செய்த பரிந்துரைகளை மீண்டும் வலியுறுத்தியது. பொதுவாக, திருமண முறிவு அல்லது விவாகரத்து என்று வரும்போது, மணமுறிவுக்கு யார் காரணம், அவரது எந்த செய்கை, முறிவுக்கு வழிவகுத்தது என்பதை இனங்கண்ட பிறகே, தீர்ப்பு வழங்கப்படுவது வழக்கம். அதாவது, ஏதோவொரு தவறு நிகழ்ந்து விட்டதால்தான் மணவாழ்க்கை முறிந்து விட்டது என்ற புரிதலின் அடிப்படையில்தான் தீர்ப்பு வழங்கப்படும். ஆனால், 1978இல் செய்யப்பட்ட பரிந்துரையின்படி, மணவாழ்க்கையை இனி எந்த வகையிலும் தொடர முடியாது, முறிந்து போனது முறிந்து போனதுதான், அதை சரி செய்யவே முடியாது என்று சம்பந்தப் பட்டவர்கள் எண்ணினால், அதுவே மணமுறிவுக்கான நியாயமான காரணமாகக் கொள்ளப்படலாம். இந்தக் கருத்தை ஆதரித்து

இளம் பெண்கள் வலுக்கட்டாயமாக மணஞ்செய்து கொடுக்கப்படுவதைக் குறித்துச் சமுதாயம் சாதிக்கும் நாசகார மௌனத்தை நாம் எப்படிப் புரிந்து கொள்வது? திருமணம் என்பது குறித்து நமக்கு இத்தனைக் கேள்விகள் இருக்க, ஒரு பால் உறவாளர்கள் தாமும் திருமணஞ் செய்து கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் போது அதை நாம் எப்படி புரிந்து கொள்ளப் போகிறோம்? அவர்களுக்கு மறுக்கப்படும் உரிமைக்கான கோரிக்கையாக பார்க்கப் போகிறோமா? அல்லது அவர்களுமே ஏதோ ஒரு முறைமைக்குள் வர விரும்புவதன் அறிகுறியாக இதை கொள்ளப் போகிறோமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே பல பெண்கள் குழுக்கள் குரல் கொடுத்துள்ளன. சரி செய்யவே முடியாதபடிக்குத் திருமண வாழ்வில் முறிவு ஏற்பட்டுவிட்டது என்பதன் அடிப்படையில் விவாகரத்துக் கோரலாம்; இத்தகைய காரணத்தின் பெயரில் விவாகரத்து வழங்கப்பட வேண்டும் என்று இக்குழுக்கள் கூறிவருகின்றன. பொருளாதார ரீதியாக கணவனைச் சார்ந்திருப்பதாலும் புகுந்த வீட்டை விட்டால் வேறு புகலிடம் இல்லை என்ற காரணத்தி னாலும், புகுந்த வீட்டில் தொடர்ந்து வாழ தனக்கு உரிமையுள்ளது என்று சிலர் எண்ணுவதாலும் சாரமற்ற, சீர்குலைந்த வாழ்க்கையில் பல பெண்கள் தொடர்கின்றனர். இவர்களுக்கு 1978இல் பரிந்துரைக் கப்பட்ட விஷயம் பயனுள்ளதாக இருக்கும் என்பது கண்கூடு.

ஆனால், சில பெண்கள் குழுக்கள் மணமுறிவு குறித்த இந்த புதிய பார்வைக்கு ஆட்சேபணை தெரிவித்து வருகின்றனர். மனைவி, குழந்தைகள் ஆகியோரின் சொத்துரிமையையும் திருமணத்துக்குப் பிறகு வாழும் வீட்டில் தொடர்ந்து வாழ மனைவிக்குரிய உரிமையை யும் பத்திரப்படுத்திக் கொடுக்கக் கூடிய சட்ட மாற்றங்களைப் புதிய மணமுறிவு சட்ட திருத்தத்துடன் இணைக்க இவர்கள் விரும்பு கின்றனர். மேலும், திருமண வாழ்க்கை, குடும்பம் ஆகியவற்றைக் கட்டிக் காக்க மனைவி செலுத்தும் உழைப்புக்கான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்றும் இவர்கள் வாதிடுகின்றனர். இந்த விவாதங்களில் துலங்கும் உண்மை இதுதான் - பெண்ணைப் பொறுத்த வரை, திருமணம் செய்து கொள்வதன் மூலமே அவள் தனக்கான பொருளாதார பாதுகாப்பைப் பெறுகிறாள். அதாவது, அவளுக்கு மணம் முடித்து வைப்பவர்கள் அவளை "ஒருத்தன் கையில பிடித்துக் கொடுப்பதன்" மூலம் இத்தகைய பாதுகாப்பை ஏற்படுத்தித் தர முடியும் என்று எண்ணுகின்றனர். திருமணம் என்ற பந்தம் அடிப்படையில் அவளைச் சரிநிகர் சமானமாக வாழ அனுமதிப்பதில்லை என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆணைச் சார்ந்து, அவனுடைய பொருளாதார அதிகாரத்தை அண்டி வாழ வேண்டிய சூழலில், பெண்ணுடைய பாலியல்பு எவ்வாறு கட்டமைக்கப்படுகிறது என்ற கேள்வியை நான் எழுப்ப விரும்புகிறேன்.

இன்றைக்குத் திருமணஉறவு என்பது ஆழமான மாற்றத்துக்கு ஆளாகியிருக்கிறது என்பதில் எந்தவித ஐயமும் இருக்க முடியாது. சமுதாயத்தின் ஏனைய பிரிவினரும் தம்மை உயர்த்திக் கொள்ள விழையும் இந்தக் காலகட்டத்தில், அனைவருடைய ஆசை அபிலாஷைகள் கூரையை எட்டும் தருணத்தில், "நுகர்தல்" என்ற செயல்பாடு மட்டுமே அனைவரையும் ஈர்க்கக்கூடியதாக உள்ள உலகில், புதுவிதமான "இலட்சிய" பெண் முன்மாதிரியாக நிறுத்தப் படுகிறாள். அவள் படித்தவள். முற்போக்கு சிந்தனையுடையவள். ஆனால், காதலைப் புறக்கணிக்கக்கூடியவள் அல்ல. இன்னும் சொல்லப் போனாள், காதலையும் இச்சையையும் பகிரங்கமாக வெளிபடுத்தக் கூடியவளாக அவள் இருக்கிறாள். என்றாலும் அவள் அத்து மீறி நடப்பவள் அல்ல. அவள், மணவாழ்க்கையின் வரம்புகளை, நியாயத்தை ஏற்பவள். அதாவது, அவளது காதலானது மணவாழ்க்கைக்கான காதல்தான். ஆணை நோக்கி செலுத்தப்படும் "முறை"யான காதல்தான். அவனை மகிழ்விக்கக்கூடிய, அவனுக்கான கனவுக்காதல்தான். ஏன், தொலைக்காட்சிகளில்

இன்றைக்குத் திருமணஉறவு என்பது ஆழமான மாற்றத்துக்கு ஆளாகியிருக்கிறது என்பதில் எந்தவித ஐயமும் இருக்க முடியாது. சமுதாயத்தின் ஏனைய பிரிவினரும் தம்மை உயர்த்திக் கொள்ள விழையும் இந்தக் காலகட்டத்தில், அனைவருடைய ஆசை அபிலாஷைகள் கூரையை எட்டும் தருணத்தில், 'நுகர்தல்' என்ற செயல்பாடு மட்டுமே அனைவரையும் ஈர்க்கக்கூடியதாக உள்ள உலகில், புதுவிதமான 'இலட்சிய' பெண் முன்மாதிரியாக நிறுத்தப்படுகிறாள். அவள் படித்தவள். முற்போக்கு சிந்தனையுடையவள். ஆனால், காதலைப் புறக்கணிக்கக்கூடியவள் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கேறும் டாக்-ஷோக்கள், ரியாலிட்டி ஷோக்கள் என்பன போன்ற நிகழ்ச்சிகளும் கூட மணவாழ்வில் துலங்கும் காதலையும் தாம்பத்தியத்தையும் கொண்டாடுவதைக் காணலாம்.

பெண்களைக் காதலிகளாகவும் மனைவிகளாகவும் சிலாகித்துக் கொண்டாடும் இந்தப் போக்கானது, அன்றாட வாழ்வு, குடும்பம் ஆகியனவற்றில் தொழிற்படும் அசதியையும் சலிப்பையும் நயமான வகையில் மூடி மறைத்து, மனைமாட்சியை, அது காட்டும் "முறையான" காதலை ரசனைக்குரியவையாக காட்டுகின்றன.

ஆண்-பெண் பாலுறவிற்கான நியாயம் இவ்வாறு கட்டமைக்கப் படும் சூழலில், பெண்களின் ஆசை, விருப்பம் என்பன குறித்து வேறுவகைகளில் பேச முடியாததோடு, அவர்கள் திருமண உறவுக்குள் பாலியல்ரீதியாகவும் பிற வகையிலும் தொடர்ந்து ஒடுக்கப்படும், அவதியுறும் அனுபவங்களைச் சொல்லும் கதைகளி லிருந்து மட்டுமே அவர்களது சொல்லப்படாத வேட்கைகளை நாம் உய்த்துணர வேண்டியுள்ளது.

ஆண்பெண் பாலுறவிற்கான நியாயம் இவ்வாறு கட்டமைக்கப்படும் சூழலில், பெண்களின் ஆசை, விருப்பம் என்பன குறித்து வேறுவகைகளில் பேச முடியாததோடு, அவர்கள் திருமண உறவுக்குள் பாலியல்ரீதியாகவும் பிற வகையிலும் தொடர்ந்து ஒடுக்கப்படும், அவதியுறும் அனுபவங்களைச் சொல்லும் கதைகளிலிருந்து மட்டுமே அவர்களது சொல்லப்படாத வேட்கைகளை நாம் உய்த்துணர வேண்டியள்ளது.

அன்றாட தாம்பத்தியம் ஏற்படுத்தும் சலிப்பு, எரிச்சல் ஆகியவற்றை வித்தியாசமாக எதிர்கொண்டுள்ள இரு முக்கிய நூல்களைக் குறித்து இங்குப் பேசுவது பொருத்தமாக இருக்கும். மலையாளக் கவிஞர் கமலா தாசின் சுயசரிதையையும் கேரளாவைச் சேர்ந்த பாலியல் தொழிலாளியான நளினி ஜமீலாவின் சுயசரிதையை யும் ஒப்பிட்டுப் பெண்ணிய வரலாற்றாசிரியர் ஜே. தேவிகா எழுதியுள்ளதை இங்கு கவனப்படுத்த விரும்புகிறேன். தேவிகா கூறுவதாவது; நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த கமலா தாஸ், உடல்சார் அனுபவங்களை, குறிப்பாக உடலை வாட்டும் ஆசை, வேட்கை, காதல், உடலின் அழகு ஆகியவற்றைக் கவித்துவமான, கற்பனை யார்ந்த வகையில் தனது எழுத்தில் வெளிபடுத்தியுள்ளார். அவ்வாறு செய்ததன் மூலம் அழகியலை முன்நிறுத்தி அழகற்ற, சுவையற்ற தாம்பத்தியத்தைச் சவாலுக்கழைத்துள்ளார், வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளார்.

உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த நளினி ஜமீலாவோ அவர் சார்ந்திருக்கும் பாலியல் தொழிலை "வெறும் வேலை"யாக, பிற தொழில்களைப் போல, அன்றாடம் பார்க்க வேண்டிய தொழில் என்ற ரீதியில் விவரித்துள்ளார். பாலியல் தொழிலின் "அன்றாட"த் தன்மையைச் சர்வ சாதாரணமாக விவரிப்பதன் மூலம், அதைச் சுற்றிப் பின்னப்பட்டுள்ள வக்கிரங்களையும் மாயைகளையும் சாரமற்றவையாக ஆக்கிவிடுகிறார். அதே சமயம் பாலியல் தொழிலுக்கு நேர்எதிரானதாக, அதன் எதிர் நிலையாக நிறுத்தப்படும் இல்லறத்துக்குரிய ஒளிவட்டத்தையும் மங்கச் செய்து விடுகிறார். இல்லத்தரசிக்குரியதாக போற்றப்படும் பெருமிதத்தையும் விபச்சாரிக்கு என்று ஒதுக்கப்படும் வசைகளையும் ஒரு சேர புறந்தள்ளிவிடுகிறார். இல்லறம் உன்னதமானது, விபச்சாரம் பாவப்பட்டது என்ற வாதத்தைத் தவிடுபொடியாக்கி விடுகிறார். மேலும், பாலியல் தொழிலாளி என்ற தனது அடையாளத்தை மீள்வரையறை செய்கிறார். உடல், மன வேதனைகளை ஆற்று படுத்தக்கூடிய தனது ஆற்றலை, திறன்களை முன்நிறுத்துகிறார். பாலியல் தொழில் அனுபவங்களினூடாக தான் பெற்றுள்ள பிரத்யேக அறிவைச் சிலாகிக்கிறார். ஆணாதிக்க, பெண்-விரோத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தியலும் பார்வையும் மேலோங்கியிருக்கும் சமுதாயத்தில், சுயாதீனமான அடையாளம், சுதந்திரமான காதல், ஆசை ஆகியவற்றை நோக்கிய தேடல்களாக இந்த இரு பெண்களின் பதிவுகளையும் கொள்ளலாம்.

தாம்பத்தியக் காதலைக் கொண்டாடும் இன்றைய வரலாற்றுக் சூழலில், மணவுறவை உள்ளடக்கிய ஆதிக்க சமுதாய உறவுகளிலிருந்து பெண்ணின் பாலியல்பை மீட்டெடுத்து, மானுட விடுதலைக்கான ஆற்றலாக அதை மடைமாற்றம் செய்த பெண்ணிய முயற்சிகளை நினைவுகூர்வது அவசியம். ஆரம்பகால சோசலிஸ்டுகள், பெண்ணிய இயக்கங்கள் சாதிக்க நினைத்த இந்த விடுதலைப் பற்றிய கூட்டுநினைவு அற்றுப் போய்விட்ட சூழலில் இதை நாம் செய்ய வேண்டியுள்ளது.

ஆரம்பகால சோசலிச இயக்கங்கள், குறிப்பாக 1820களிலும் அதற்குப் பிறகும் இங்கிலாந்தில் செயல்பட்ட இயக்கங்கள், முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடிய அதே வேளையில், முதலாளித்துவ சமுதாயத்தில் ஆண்-பெண் உறவு எத்தகையதாக உள்ளது, சோசலிச சமுதாயத்தில் அது எவ்வாறு மாறி அமைய வேண்டும் என்பன குறித்தும் பேசின. இவற்றைச் சாதிக்க வல்ல போராட்டங்களைப் பற்றிச் சிந்தித்தன. பெண் விடுதலை, குறிப்பாக பாலுறவில் பெண் பேண வேண்டிய சுயாதீனம், வர்க்கப் போராட்டத்துக்கும் பாலியல் விடுதலைக்கும் இடையிலான தொடர்புகள் என்பன போன்ற விஷயங்களில் ஆழ்ந்த அக்கறை செலுத்தின. 20ஆம் நூற்றாண்டில் சோசலிச கருத்துகளை ஏற்று செயல்பட்ட மார்க்கரெட் சாங்கர், எம்மா கோல்டுமான் ஆகியோர், பெண்கள், தமது கருவுரும் ஆற்றலைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதன் அவசியத்தைக் குறித்துப் பேசினார்கள். கர்ப்ப ஆட்சி என்பதன் நுணுக்கங்களை விளக்கினர், பரப்புரை செய்தனர்.

> தாம்பத்தியக் காதலைக் கொண்டாடும் இன்றைய வரலாற்றுக் சூழலில், மணவுறவை உள்ளடக்கிய ஆதிக்க சமுதாய உறவுகளிலிருந்து பெண்ணின் பாலியல்பை மீட்டெடுத்து, மானுட விடுதலைக்கான ஆற்றலாக அதை மடைமாற்றம் செய்த பெண்ணிய முயற்சிகளை நினைவுகூர்வது அவசியம். ஆரம்பகால சோசலிஸ்டுகள், பெண்ணிய இயக்கங்கள் சாதிக்க நினைத்த இந்த விடுதலைப் பற்றிய கூட்டுநினைவு அற்றுப் போய்விட்ட சூழலில் இதை நாம் செய்ய வேண்டியுள்ளது.

சோசலிச, பெண்ணிய கருத்துகளை முதன்படுத்திய சுய-மரியாதை இயக்கத்தைச் சேர்ந்த பெண்கள், காதல், அழகு, கற்பு, தாய்மை ஆகியவற்றை விமர்சனம் செய்தனர். ஆண்மையைச் சாடினர். தேவதாசி ஒழிப்புச் சட்டம், பெண்களின் மண வயதை உயர்த்திய சட்டம் ஆகியன குறித்து நடந்த விவாதங்களில் முழுமூச்சுடன் பங்கேற்றுப் பெண்களின் காதல் உரிமை, பாலுறவில் அவர்களுக்குரிய இடம், அவ்வுறவில் அவர்கள் பேண விரும்பும் மாண்பு ஆகியன குறித்து விரிவாகப் பேசினர். பெரியாரும் இவை குறித்து நிறைய எழுதினார், பேசினார். காதல், தாம்பத்தியம், மணமுறிவு ஆகியன குறித்து வித்தியாசமான புரட்சிகர கருத்துகளை வெளியிட்டார்.

ஆனால் இத்தகைய மாறுபட்ட, புரட்சிகரமான மரபுகளைத் தாங்கிய வரலாறுகள் நமக்கு வாய்த்திருந்தாலும் பிற்போக்கான, ஆணாதிக்க அரசியலும் அறவியலும்தான் நமக்கு இன்று எஞ்சி இருக்கின்றன. "பையர்" திரைப்படம் வெளிவந்த போது அது "நமது பண்பாட்டு"க்கு பொருந்தாத, இன்னும் சொல்லப் போனால் நமது பண்பாட்டுக்கு இழுக்கைக் கற்பிக்கக்கூடிய, லெஸ்பியன் உறவைப் பிரதானப்படுத்துகிறது என்று இந்துத்துவ ஆதரவாளர்கள் குற்றஞ் சாட்டினர். அந்த படம் திரையிடப்படக்கூடாது என்று கோஷமிட்டு ரகளை செய்தனர். தமிழ்நாட்டில் நடிகை குஷ்பூ தற்கால தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தில், திருமணத்துக்கு முன்னமே பெண்கள் பாலுறவு கொள்கின்றனர் என்று கூறிய போது, அவர் தமிழ்க் கற்பைக் களங்கப்படுத்தி விட்டதாகக் கூறி களம் இறங்கியவர்கள், அவருக்கு எதிராக பல வழக்குகளைத் தொடுத்தனர். இப்படி எத்தனையோ கதைகளைச் சொல்லலாம். அறம், கண்ணியம் ஆகியவற்றைப் பாதுகாக்கிறோம் என்ற பெயரில் நடத்தப்படும் உரிமை மீறல்கள், வலதுசாரி அறங்காவலர்களின் தலைமையின் கீழ்தான் அரங்கேறுகின்றன. கலை, புத்தகங்கள், நடத்தை நெறிகள் ஆகிய அனைத்தையும் தமது கட்டுபாட்டுக்குள் கொண்டு வரவே இவர்கள் விரும்புகின்றனர்.

பாலியல் உரிமைகள், அரசியல் சட்டம், பொது அறம்

இப்பகுதி, நமது விவாதத்தின் கடைசிப் பகுதி. 2009 ஜூலை 2ஆம் தேதி தலைமை நீதிபதிகள் ஏ. பி. ஷா, முரளீதர் ஆகியோர் இ.பி.கோ 377 சட்டப்பிரிவு தொடர்பான வழக்கில் தில்லி உயர் நீதிமன்றத்தில் வழங்கிய தீர்ப்பு முக்கியமானது. இவ்வழக்கு (எண் 7455/ 2001) நாஸ் ஃபௌண்டேஷன் என்ற அமைப்பின் மூலம் அரசின் மீது தொடரப்பட்டதாகும். இ.பி.கோ 377 பிரிவின்படி, ஒருபால் உறவு, குறிப்பாக ஆணும் ஆணும் கொள்ளும் பாலுறவு என்பது தண்டிக்கத்தக்க கிரிமினல் குற்றமாகும். சம்பந்தப்பட்ட நபர்கள் வயது வந்தவர்களாக இருப்பினும் அவர்கள் சுய விருப்பத்தின் பெயரில் இத்தகைய உறவில் ஈடுபட்டாலும் இந்த சட்டப் பிரிவின்படி அது குற்றமாகும். இந்த சட்டப்பிரிவை நீக்கக் கோரி 2001 முதற்கொண்டே பலர் கோரினர். இந்த கோரிக்கை எழும்பியதற்கான உடனடி வரலாறு இதுதான். 2001 இல், உத்தர பிரதேசத்தில் எய்ட்ஸ் கட்டுபாடு பணியில் ஈடுபட்டிருந்த தன்னார்வக் குழுவினர் சிலர், இ.பி.கோ 377இன் கீழ்க் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பொது வெளியில் ஆணுறைகளை விநியோகம் செய்து கொண்டிருந்த போது இது நடந்தது. அவர்களைக் கைது செய்த காவல் துறையினர், அவர்கள் "இயற்கைக்கு மாறான" உறவுகளை ஊக்குவிக்கும்படியான செயல்களில் ஈடுபட்டிருந்ததாக குற்றஞ் சாட்டி கைது செய்தனர். இந்தியாவிலிருந்து ஒருபாலுறவை தாம் ஒழிக்கப் போவதாகவும் அறிவித்தனர். இந்த கைதைத் தொடர்ந்து தான் மேற்கண்ட வழக்கு தொடரப்பட்டது. அது தில்லி உயர் நீதி மன்றத்திலிருந்து உச்ச நீதிமன்றத்துக்குச் சென்றது, மீண்டும் தில்லி உயர் நீதி மன்றத்துக்கே திரும்ப வந்தது.

முடிவில், வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஷாவும் முரளிதரனும் ஒருபாலுறவு கொள்ள விழையும் வயதுக்கு வந்தவர்கள், பரஸ்பர ஒப்புதலுடன் தமக்கான அந்தரங்க வெளியில் அத்தகைய உறவில் ஈடுபட்டால் அது குற்றமாகாது என்று தீர்ப்புரைத்தனர். இந்த தீர்ப்பு இ.பி.கோ 377 பிரிவை நீக்கவில்லை என்றாலும், "இயற்கைக்கு மாறானதாக" அந்த பிரிவு அடையாளப்படுத்திய பாலுறவை குற்றமற்றதாக்கியது. இந்த வழக்கு தொடரப்பட்ட காலக்கட்டத்தில் தான், ஒரு பாலுறவில் உள்ளவர்கள் எப்படி வாழ்கின்றனர், அவர்கள் ஒளிந்தும் மறைந்தும் வாழ்வது ஏன், அவர்களுக்கு எதிராக புரியப்படும் வன்முறைகள் யாவை என்பன போன்ற விஷயங்கள் பொதுவில் வைத்துப் பேசப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதுக்கு வந்தவர்கள் பரஸ்பர ஒப்புதலுடன் மேற்கொள்ளும் பாலுறவை மையமிட்டு அமைந்த இந்த தீர்ப்பு, அனைவரும் சமத்துவமாகவும் மாண்புடனும் சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் வாழ, தமக்கான அந்தரங்க வாழ்க்கையை பின்பற்ற உரிமை உடையவர்கள் என்பதைத் தெளிவுப்படுத்தியது. அதே சமயம் எல்லோருக்கும் பொதுவான, நாம் அனைவரும் பேணத்தக்க பாலியல் அறம் குறித்துப் பேசுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த உள்துறை அமைச்சகம், இத்தகைய பாலியல் அறம் என்ற ஒன்றை முன்நிறுத்தி, அதன் அடிப்படையியே தனது வாதங்களைத் தொடர்ந்தது. ஒருபாலுறவு என்பது இந்திய சமுதாயத்துக்கு ஒத்து வராது, பொருந்தாது, அதை இந்தியர்கள் ஏற்க மாட்டார்கள், ஏன் வெறுக்கவும் செய்வார்கள், பெரும்பான்மை மக்களுக்கு உவப்பற்றதாக உள்ள ஒன்றை அவர்கள் சகித்துக் கொள்ள மாட்டார்கள். எனவே, ஒருபாலுறவினர் தமக்கான உரிமைகளை விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும். அவற்றை உள்ளவாறே கோர முடியாது. பொது நன்மையை முன்னிட்டு இவர்களது உரிமைகள், குறிப்பாக சமத்துவம் கோரும் உரிமை யானது கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பன போன்ற வாதங்களை உள்துறை அமைச்சகம் முன்வைத்தது. தில்லி உயர் நீதி மன்றத் தீர்ப்பு பொது நன்மை, பொது அறம் குறித்த அமைச்சகத்தின் வாதங்களை ஏற்கவில்லை -

"பொதுவான ஒழுக்க நெறி விதிகள் என்பது, அரசியலமைப்புச் சட்ட ஒழுக்க நெறிகளினின்றும் வேறுபட்டது. இந்த நெறிகள், சூழ்நிலைகள் சார்ந்து மாறக்கூடியவை. நாட்டின் நலன் என்பது பற்றி முடிவு செய்ய, ஆய்வுக்குள்ளாகும் ஒழுக்க நெறியானது, அரசியலமைப்புச் சட்டத்தினுடயதாக இருக்க வேண்டுமே தவிர, பொதுமக்கள் மத்தியில் பிரபலமாக இருக்கும் ஒழுக்க நெறி விதிகளாக இருக்க முடியாது."

அரசியல் சட்டம் கோரும் அறத்தைக் குறித்து அம்பேத்கர் மேலும் கூறியதாவது; அரசியல் சட்டத்தின் வடிவத்துக்கு ஏற்றார் போல் நிர்வாகத்தின் வடிவமும் அமைய வேண்டும். இரண்டும் தொடர் புடையனவாய், ஒத்திசைவோடு செயல்பட வேண்டும் என்பதை நாம் மறந்துவிடுகிறோம். நாம் சரிவர நிர்வாகம் செய்யாமல் போனால், நிர்வாக அமைப்புக்குரிய வடிவத்தை நாம் மாற்ற, கெடுக்க எத்தனித்தால், அரசியல் சட்டத்தின் உள்ளுரைக்கு, உள்ளார்ந்த பண்புக்கு எதிரான செயல்பாடுகளை மேற்கொண்டு, அதற்கு ஏற்ப நடக்காமல் அதை சிதைப்பவராகி விடுகிறோம்.

அரசியல் சட்டம் வகுத்துள்ள உன்னத அறங்கள் தாமாகவே என்றுமே மக்களைச் சென்று அடையப் போவதில்லை என்பதையும் நாம் உணர வேண்டும். அவ்வறங்களை மக்கள் தாமாக ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள். அந்த அறங்களை ஏற்க, அவற்றின்படி நடக்க மக்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். இவ்வகையில் அரசியல் சட்டம் கண்டுள்ள அறங்களை நாம் கவனத்துடன் வளர்த்தெடுக்க வேண்டும். காரணம், இந்திய சமுதாயத்தைப் பொறுத்தவரை, சனநாயகமற்ற சமூக வாழ்வை

வயதுக்கு வந்தவர்கள் பரஸ்பர ஒப்புதலுடன் மேற்கொள்ளும் பாலுறவை மையமிட்டு அமைந்த இந்த தீர்ப்பு, அனைவரும் சமத்துவமாகவும் மாண்புடனும் சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் வாழ, தமக்கான அந்தரங்க வாழ்க்கையை பின்பற்ற உரிமை உடையவர்கள் என்பதைத் தெளிவுப்படுத்தியது. அதே சமயம் எல்லோருக்கும் பொதுவான, நாம் அனைவரும் பேணத்தக்க பாலியல் அறம் குறித்துப் பேசுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிக்கும் அரசியல் மேல்பூச்சுதான் சனநாயகமே தவிர, அது நமது சமூக வாழ்வில் ஆழ வேரூன்றிய பண்பல்ல.

தில்லி உயர் நீதிமன்ற தீர்ப்பு நமது அரசியல் சட்டத்தில் உறைந்துள்ள சாத்தியப்பாடுகளை இனங்காட்டுவதாக அமைந் துள்ளது. அரசும் சமுதாயமும் நேரடியாகவோ மறைமுகமாகவோ செலுத்தும் வன்முறை, கட்டுப்பாடு ஆகியவற்றிலிருந்து அனைத்து குடிமக்களையும் மீளச் செய்து, அனைவரும் சரிநிகர் சமானமாக, சமத்துவமாக வாழ நமது அரசியல் சட்டம் வழிவகுத்துள்ளது. விடுதலை என்பது சலுகையுற்ற ஒரு சிலருக்கு மாத்திரம் உரித்தானது என்பது போய் அது அனைவருக்குமானது என்பதை உறுதி செய்துள்ளது. மேலும் நமது அரசியல் சட்டம் வேறுபாடுகளை அங்கீகரிக்கிறது, கொண்டாடுகிறது, மாறுபட்ட கருத்துடையவர் களைப் பாதுகாக்க கூடியதாக உள்ளது. பாலியல் விருப்பம் என்ற ஒரு விஷயத்தின் காரணமாக ஒருபாலுறவாளர்களை அவதூறுக் குள்ளாக்குவது அல்லது குற்றவாளிகளாக ஆக்குவது அரசியல் சட்ட நீதிக்கு, அறத்துக்கு எதிரானதாகும்.

தில்லி உயர் நீதிமன்ற தீர்ப்பின் இந்த வரிகளைக் கொண்டே இந்த கட்டுரையை முடிக்க விரும்புகிறேன் ,

"ஒழுக்கநெறி சார்ந்த மனக்கொதிப்புகள் எவ்வளவுதான் பரவியிருந்தாலும், அவை, தனிப்பட்ட நபர்களின் அடிப்படை உரிமைகளான சுய கௌரவம் மற்றும் தனிச்செயல்பாடுகள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தவோ தடை செய்யவோ போதுமான அடிப்படைக் காரணமாக இருக்க முடியாது. சரியான முறைமை களின் படி அங்கீகரித்து ஏற்றுக்கொண்டதாக இருந்தாலும் அரசிய லமைப்புச் சட்டம் சார்ந்த ஒழுக்க நெறி விதிகள் தாம் கூடுதலாக மதிக்கப்பட வேண்டும். "

நமது போராட்டங்களின் எல்லைகள் விரிவடையட்டும். நாம் தொடர்ந்து போராடுவோம்.

References

Prem Chowdhry, Contentious Marriages, Eloping Couples: Gender, Caste, and Patriarchy in North India, OUP, Delhi: 2007.

J Devika, 'Housewife, Sexworker, Reformer: Controversies over Women Writing their Lives in Kerala,' Economic and Political Weekly, April 29, 2006, pp. 1675-1683.

V Geetha, 'Sexuality and violence: some thoughts on a worrisome subject',Inter-Asia Cultural Studies, vol 3 no 3, 2002, pp. 407-417

Kalpana Kannabiran, 'Gender, Sexual Violence, and the Idea of Intimacy, presentation at the Plenary 1 - Violence in Intimacy, ISA 17th World Congress of Sociology, Goteborg, Sweden, 11-17 July 2010.

Chayanika Shah, 'The Roads that (E)Merged: Feminist Activism and Queer Understanding', in A. Narrain & G. Bhan (eds.) Because I have a Voice: Queer Politics in India, Yoda Press, New Delhi: 2005, pp.143-154.

Rajeswari Sunder Rajan, 'The Prostitution Question(s): Female Agency, Sexuality, and Work' in The Scandal of the State: Women, Law, and Citizenship in Postcolonial India, Permanent Black, Delhi: 2003.

மீனா கோபால் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய இக்கட்டுரையை வ.கீதா மற்றும் சாலை செல்வம் ஆகியோர் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை
2

உடல், பால்மை, பால் ஈர்ப்பு / வேட்கை: அளிக்கைமை சார் குறியீடுகள்

- தமிழக நிகழ்த்து கலைகள் சார்ந்த உரையாடல்

■ அ. மங்கை

உடல் ஒரு உயிரியல் சார் அலகு என்ற வகையில், அதனை அறிவியல் சார்ந்த முன் நிர்ணயிப்புகளோடு புரிந்து கொள்ளுதல் எந்த வித கேள்வியும் இன்றிப் புழக்கத்தில் உள்ளது. அதனை அப்படியே இயங்க வைப்பது தந்தைமை ஆதிக்க/ சாதியப் படிநிலைகளைத் தக்க வைப்பதற்கான அடிப்படையாகிறது. பல கூறுகளில் கரடு தட்டிப்போன இறுக்கத்தோடு உடல் கட்டமைக் கப்படுகிறது. பால்மை குறித்த புரிதலில், பால் - பால்மை (Sex / gender) எதிர்வு உயிரியல் / சமூகவியல் அலகுகளாக விளக்கப்பட்ட போது, பால்மை கட்டமைக்கப்பட்ட ஒன்று என்பது புலனாயிற்று. ஆனால், உடல் கூறுகளால் தீர்மானிக்கப்படும் பால், திரிபற்ற அலகாகத் தொடர்ந்தது. பால் தன்மைகளும் பல்வேறு முனைகளில் கேள்விக்காளாக்கப்படும் சூழலில் சிக்கல் மேலும் ஆழமான தாகிறது. இந்தப் பின்னணியில் பால் எதிர்வுகளால் கட்டமைக்கப் பட்ட உடல்கள் அவற்றை மீறுவது அவசியமானதாகவும் தவிர்க்கமுடியாததாகவும் ஆகிறது.

பால் எதிர்வுகளைத் தீர்மானிப்பதில் அளிக்கைமை (Performativity) வகிக்கும் பங்கு குறித்து பட்லர் விளக்கியுள்ளார். அடிப்படையில், குறியீடுகளே அரங்கேறுகின்றன என்பது அவரது வாதம். அதாவது, ஆண் உயிரியல் கூறுகளோடு பிறந்தோர் ஆண்மைக் குறியீடுகளை அளிக்கைமை செய்கின்றனர்; பெண் உயிரியல் கூறுகளோடு பிறந்தோர் பெண்மைக் குறியீடுகளை அளிக்கைமை செய்கின்றனர். கூடுதலாக, சமூக ரீதியிலான அதிகாரப் படிநிலையும் இதில் தொழிற்படுகின்றன. ஆண்மை/ பெண்மை அளிக்கைமைகள், சாதி, வர்க்க, மதக் குறியீடுகளையும் இணைத்தே வெளிப்படுத்துகின்றன. உடல் நடத்தை, புழங்கு வெளி, அசைவுகள் ஆகிய அனைத்தும் அளிக்கைமை விதிகளுக்கு உட்பட்டே ஒழுங்கமைக்கப்படுகின்றன.

வசதி கருதி, நிகழ்கலைத் துறையில் பால் எதிர்வு சித்திரிக்கப் படும் தன்மையை மட்டும் விவாதிப்பதன் மூலம், பால்மை, பால் ஈர்ப்பு / பால் இயல்பு அரசியலின் முக்கியத்துவத்தை வலியுறுத் துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

உடல் அரசியல் பால்மைக் கூறுகளோடு உடல் மொழியைத் தீர்மானிப்பது நாம் அறிந்ததே. பெண்ணுக்கு விதிக்கப்பட்ட உடல்மொழி பெண்மை பற்றிய பிம்பத்திற்கு ஏற்றதாக அமைக்கப்

இக்கட்டுரையாளர் சென்னை நகரக் கல்லூரி ஒன்றில் ஆங்கில ஆசிரியர். நாடக இயக்குநர், மொழிபெயர்ப்பாளர் எனும் அடையாளங்களுடன் கடந்த இருபது ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. அதன்படி பெண் கைவீசி நடத்தலும் நிமிர்ந்து நிற்றலும் நேராகப் பார்த்தலும் அதிர்ந்து பேசுதலும் உரக்கச் சிரித்தலும் உணர்வுகளை வெளிப்படுத்தலும் அங்கீகரிக்கப்படுவ தில்லை. அதேபோல, ஆண் வாய் விட்டு அழுவதும் தயங்குவதும் மயங்குவதும் அனுமதிக்கப்படுவதில்லை. தந்தைமை ஆதிக்க சமூகத்தை நிலைநிறுத்தத் தேவையான எதிர் பாலின ஈர்ப்பை உறுதி செய்யவும் இந்த எதிர்வு அதீதமாக்கப்படுகிறது. அதாவது, ஆண் ஈர்க்கபடுவது அதீத பெண்மை காட்டும் பெண்ணை; பெண் விழைவது அதீத ஆண்மை கொண்ட ஆணை என்பது எழுதப்படாத விதியாகக் கருதப்படுகிறது. எதிர் பாலின உறவு மறு உற்பத்திக்கு அவசியம் என்பதால், அது இயற்கையானது; இயல்பானது என்றும் புனைவு செய்யப்படுகிறது. நிகழ் கலைகள் இம்மதிப்பீடுகளை ஆணித்தரமாகத் திணிக்கும் துறைகளாக செயல்படுகின்றன.

பெண் உடல் போகத்துக்குரியதாக பின்னப்பட்ட புனைவுகள் செல்வாக்கு செலுத்துவதால், பெண் இருப்பு பொது வெளியில் சிக்கலான உளவியலை வெளிப்படுத்துகிறது. அவையில் பெண் தோன்றுவது, உடலை அசைப்பது ஆகியவை பாலியல் கடந்து இயங்காது என்ற ஊகத்தின் பேரில், பெண் பொது வெளியில் இயங்குவது கட்டுப்படுத்தப்படுகிறது. குறிப்பாக, பார்வையாளரை ஈர்க்கும் நிகழ் கலைகளில், பெண் மறுப்பு மிகச் சாதாரணமாக ஏற்கப் படுகிறது. பெண்கள் வெளிப்பாடு வீடு, குடும்பம் சார்ந்த சடங்கு, திருவிழாக்களில் மட்டுமே அனுமதிக்கப்பட்டது. வளமைச் சடங்குகள், வாழ்வியல் சடங்குகள் ஆகியவற்றில் பெண்கள் பாடி, ஆடிப் பங்கேற்றனர். தமிழில் தாலாட்டு, ஒப்பாரி, குளிர்த்தி, பூப்புச் சடங்கு, வளைகாப்பு போன்றவற்றை இதற்கான எடுத்துக்காட்டு களாகச் சொல்லலாம். இவை பார்வையாளர்களுக்கெனச் செய்யப் படும் நிகழ்கலைகள் அல்ல. எந்த விதமான இலக்கண விதிகளும் இவற்றுக்குக் கிடையாது. வர்த்தகமயமாக்கும் கூறுகளும் இல்லை. நாட்டார் இயல் இவற்றை மனைசார் கலைகள் என வகைப்படுத்து கிறது.

இதற்கு மாறாக, பொது வெளியில் புழங்கும் கலைகள் ஓய்வு நேரத்துக்கான கேளிக்கையை முதன்மைப்படுத்துவன. ஒட்டு மொத்த சமூகத்துக்கான கதையாடல்களைத் தருபவை. காலத்துக் கேற்ப மாற்றங்களை உள்ளடக்கி மாறி வளர்ந்து வந்துள்ளவை. இவற்றுள் பெரும்பாலானவற்றில் பெண்களுக்கு அனுமதி மறுக்கப் பட்டது. தப்பித் தவறி பெண்கள் இடம் பெற்றால், அப்பெண்கள் பிற பெண்களிடம் இருந்து பிரிக்கப்பட்டனர். செவ்வியல் கலைகளில் ஈடுபட்ட தேவதாசிகள் முதல், சிறு தெய்வங்களுக்கு நேர்ந்துவிடப்படும் மாத்தம்மா, எல்லம்மாக்கள் வரை இப் பெண்கள் வழமையான குடும்ப வாழ்க்கையில் இருந்து விலக்கப் பட்டவர்களே. படைப்புலகம் சார்ந்த நிகழ் கலைகளில் பெண் சித்திரிப்பு தேவை என்பதால், ஆண்கள் - குறிப்பாக இளம் ஆண்கள் - பெண் வேடம் இட்டு நடித்தல் கலை உணர்வின் உச்சகட்ட வெளிப்பாடாக உலகெங்கும் மேற்கொள்ளப்பட்டது. கிரேக்க நாடகம் தொட்டு, ஷேக்ஸ்பியர், இன்றைய கூத்து, கதகளி மற்றும் பல்வேறு இனக்குழு வெளிப்பாடுகளில் ஆண்கள் பெண் வேடம் இட்டதை / இடுவதை, கட்டமைக்கப்படும் பால்மைக் கூறுகளைக் காட்டும் குறியீடுகளாகக் கருதலாம்.

பெண் உடல் போகத்துக்குரியதாக பின்னப்பட்ட புனைவுகள் செல்வாக்கு செலுத்துவதால், பெண் இருப்பு பொது வெளியில் சிக்கலான உளவியலை வெளிப்படுத்துகிறது. அவையில் பெண் தோன்றுவது, உடலை அசைப்பது ஆகியவை பாலியல் கடந்து இயங்காது என்ற ஊகத்தின் பேரில், பெண் பொது வெளியில் இயங்குவது கட்டுப்படுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தைமை ஆதிக்க வெளிப்பாடாகப் பெண்ணுக்கு மேடை ஏற அனுமதி மறுத்த மரபு தொடர்ந்தாலும் ஆண்கள் பெண்வேடம் தரிக்கும் முறை, நிலவும் பால்மை அரசியலைக் காட்டும் வெளியாகா தொழிற்படுகிறது. அழகியல் அடிப்படையில், பெண் / ஆண் இலக்கணத்தை வரை செய்கிறது. மெலட்டூர் பாகவதமேளா போன்ற செவ்வியல் வடிவங்கள் முதல், கூத்து போன்ற முழு அரங்க வடிவங்கள் வரை இம்மரபு தொடர்கிறது. தேசிய மட்டத்தில், பால கந்தர்வா, ஜெய்சங்கர் சுந்தரி போன்ற பார்சி நாடக வடிவ பெண் வேடக் கலைஞர்கள் பெரும் தொன்மங்களாக இருபதாம் நூற்றாண்டுக் கற்பனையில் ஆட்சி செலுத்தினர். ஜெய்சங்கரின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாக வைத்து "சுந்தரி: ஒரு நடிகர் தயாராகிறார்" என்ற நாடகத்தை அனுராதா கபூர் தயாரித்துள்ளார். பெண்ணாக வடிவம் கொள்ள மேற்கொள்ளப்படும் முயற்சிகளை அதன் தயாரிப்புக் கட்டத்தில் இருந்து காட்டும் முயற்சியாக இது அமைந்தது.

தந்தைமை ஆதிக்க வெளிப்பாடாகப் பெண்ணுக்கு மேடை ஏற அனுமதி மறுத்த மரபு தொடர்ந்தாலும், ஆண்கள் பெண்வேடம் தரிக்கும் முறை, நிலவும் பால்மை அரசியலைக் காட்டும் வெளியாகாத் தொழிற்படுகிறது. அழகியல் அடிப்படையில், பெண் / ஆண் இலக்கணத்தை வரை செய்கிறது. மெலட்டூர் பாகவதமேளா போன்ற செவ்வியல் வடிவங்கள் முதல், கூத்து போன்ற முழு அரங்க வடிவுகள் வரை இம்மரபு தொடர்கிறது. தேசிய மட்டத்தில், பால கந்தர்வா, ஜெய்சங்கர் சுந்தரி போன்ற பார்சி நாடக வடிவ பெண்வேடக் கலைஞர்கள் பெரும் தொன்மங்களாக இருபதாம் நூற்றாண்டுக் கற்பனையில் ஆட்சி செலுத்தினர்

தமிழகத்தில், பம்மல் சம்பந்த முதலியார் குழுவில் ஸ்திரீ பார்ட் ஏற்ற நடிகர் மீது அவர் கொண்டிருந்த அலாதியான அபிமானம் பிரபலமானது. கே.பி. சுந்தராம்பாள் ஆண் வேடம் ஏற்று, கிட்டப்பா பெண் வேடம் செய்த வள்ளி திருமணம் நாடகம் பிரசித்தி. காஞ்சிபுரம் அடுத்த புஞ்சரசந்தாங்கல் கிராமத்தில் உள்ள கட்டைக் கூத்துப் பள்ளியில் சிறுவர், சிறுமியர் இருபாலரும் கூத்து பயில் கின்றனர். முழுதும் சிறுமியரே பங்கேற்கும் நிகழ்ச்சிகளும் தயாரித்துள்ளனர். 1997இல், பெருங்கட்டூர் இராசகோபால் அவர்கள் முதன் முதலாக பெண்கள் மட்டும் பங்கேற்ற வில் வளைப்புக் கூத்தைத் தயாரித்தார். நாவல்ஸ், இசைநாடக வடிவங்களில் தொழில் முறைக் கலைஞர்களாக பணியாற்றும் பெண்கள் பனிரெண்டு பேர் இதில் பங்கெடுத்தனர். அடுத்த இரு ஆண்டுகள் அவர், பெண் வேடம் / ஆண் வேடம் குறித்த பல சோதனைகளை மேடையில் மேற்கொண்டார். 'மௌனக் குரல்' அப்பெண்களோடு தொடர்ந்து நான்காண்டுகள் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் மேடையேற்றிய பவளக்கொடி அல்லது குடும்ப வழக்கு மேடைக்குப் பின் உள்ள வாழ்வையும் மேடை வாழ்வையும் அடுத்தடுத்துக் காட்டியது. அர்ஜுனனின் ஆறு மனைவியர் ஒருவருக் கொருவர் அவனை சொந்தம் கொண்டாடி, தமக்குள் போட்டி போட்டுக் கொள்ளும் காட்சி கூச்சநாச்சம் இன்றி மேடையேறிய சக்களத்தி சண்டைக் காட்சியாயிற்று. அவர்கள் மணிமேகலையை மேடையேற்றியபோது உதயகுமாரன் பாத்திரம் மட்டுமே ஆண் பாத்திரமாக அமைந்தது. அதில் கட்டியக்காரன் வேடம் ஏற்ற செண்பகவள்ளி வழக்கமான கட்டியத்தை ஆண்வேடத்தில் செய்தபோது கிடைத்த எள்ளல் வித்தியாசமான அனுபவம். புதுக்கோட்டையைச் சேர்ந்த ஜெயலதா தன்னோடு ராஜபார்ட் போட நடிகர்கள் தயங்கத்தொடங்கியதும் ஆண் வேடங்களைத் தானே செய்யத் தொடங்கி புது வரலாறு தொடங்கினார்.

மேற்கூறிய முயற்சிகளின் பலனாக, உஷாராணியை நடிகராகக் கொண்டு 'பனித் தீ' நாடகத்தை 2003இல் தயாரிக்க முடிந்தது. மகாபாரதக் கதையில் வரும் அம்பை - சிகண்டி கதையைக் கொண்டு பெண்மை - ஆண்மை குறித்த விவாதத்தைக் கிளப்பிய நாடகமாக இது அமைந்தது. பெண், ஆண் வேடம் ஏற்றல், தெருக்கூத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் நடித்தல் ஆகிய வடிவம் சார்ந்த மீறல்கள் மட்டுமின்றி, 'பனித் தீ' ஆண்மை - பெண்மை எதிர்வுகள் கட்டமைக்கப்படும் தன்மைகளை விவரித்தது. சிகண்டி துருபதன் மகளாகப் பிறந்ததும் மகன் என்று அறிவிக்கப்படுகிறான். இக்குழந்தை பின்னர் ஆணாக மாறும் எனக் கூறப்பட்ட வரத்தை நம்பி துருபதன் மனைவி செய்த முடிவு அது. ஆணாக வளர்க்கப்படும்போது உணரும் சிரமங்களையும் ஆண் உடல் கிடைத்ததும் போர் வீரனாக மாற எடுத்த முயற்சிகளையும் சிகண்டி போர்க் களத்தில் நினைவு கூர்கிறான்.

"பெண்ணாய் பிறந்தும் ஆணாய் மாற - நான்
பெற்ற பயிற்சிகள் கற்ற வித்தைகள்
ஈரேழு உலகத்திலும் - எவருக்கும் சாத்தியமில்லை"!

என்கிறான். பனுவல் களத்தில் மகாபாரதம் மூலப் பனுவல் அம்பை - சிகண்டிக்கு சுயக் கூற்று எதையும் வழங்காதது இப்பிரதியின் தொடக்கப் புள்ளியாயிற்று. அளிக்கை முறையில், பெண் கூத்து வேடம் கட்டுவதோடு நிற்காமல், மேடையிலேயே, தனது ஒப்பனையை மாற்றுவது விதிகளை மீறுவதாயிற்று. அதிலும் அம்பை போன்ற பாத்திரம் ஆகப் பெரிய பிதாமகனை அடா, போடா என்று மரியாதை இன்றி விளிப்பது பண்பாட்டில் ஏற்கப்படாததாகும். புரிசை கிராமத்தில் திரௌபதி கோவில் முன் இந்நாடகம் நிகழ்த்தப் பட்டபோது, உஷாராணி உணர்ந்த அச்சம் பண்பாட்டுக் கனத்தைக் காட்டுவதாக அமைந்தது. சமகால பாலியல்பு குறித்த விவாதத்தில் ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறும் அரவானிகள் குறித்த உரையாடல் மேலெழும்பிய அளவு பெண்ணாகப் பிறந்து ஆணாக மாறும்/உணரும் மாந்தர் பற்றிய உரையாடல் நிகழ்த்தப்படுவதில்லை என்பதை கணக்கில் கொண்டால், இந்நாடகம் மேலும் முக்கியத்துவம் பெறுகிறது.

திட்டமிடப்படாத வகையில், 'பனித் தீ' அரவானிகளுடன் மேற்கொண்ட அரங்க முயற்சிகளுக்கு கட்டியமாக அமைந்தது. கடந்த பத்தாண்டுகளாகத் தமிழகத்தில் பெரும் இயக்கமாக வளர்ந்து வரும் அரவானிகள் - மாற்றுப் பாலினர் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் அரங்கம், இலக்கியம் ஆகியவை கணிசமான பங்கு வகித்துள்ளன. 'சுடர்' அமைப்பின் சார்பாகக் 'கண்ணாடி கலைக் குழு' உருவாக்கப்பட்டு அதன் மூலம் 'மனசின் அழைப்பு', 'உறையாத நினைவுகள்' ஆகிய நாடகங்கள் உருவாகின. மனசின் அழைப்பு குடிமக்கள் என்ற உரிமையைப் பெறுவதற்கான குரலைப் பதிவு செய்தது. ஆண் பெயரில் பிறப்புச் சான்றிதழ் இருக்க, பெண்ணாக மாறிய பின், இருப்புக்கான எந்த அத்தாட்சியும் இன்றி ஏதிலிகளாய் அலையும் வாழ்வைப் பேசியது. வேறெந்தப் பணியும் செய்வதற்கான தேர்ச்சியின்றி, பாதுகாப்பான சுழலுக்காகவும், உறவுகளுக்காகவும் ஜமாத்தில் உறுப்பினராகும் அரவானிகள் பிச்சை, நடனம் அல்லது பாலியல் தொழில் செய்வதற்குத் தள்ளப்படும் நிலைமையைக் காட்டியது. குடியிருக்க வீடு தர அரவானிகளுக்கென உருவாக்கப்படும் தனி விதிகளைச் சொல்லியது. இறுதியாக, ஆண் - பெண் எதிர்வுகளுக்குப் பழகிப் போன சமூகம் பொது வெளியில் அரவானிகளை அவமானப் படுத்தித் தனது கட்டமைப்பை உறுதி செய்வதைக் காட்டியது. இன்குலாபின் வரிகள்,

கடந்த பத்தாண்டுகளாகத் தமிழகத்தில் பெரும் இயக்கமாக வளர்ந்து வரும் அரவானிகள் மாற்றுப் பாலினர் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் அரங்கம், இலக்கியம் ஆகியவை கணிசமான பங்கு வகித்துள்ளன. 'சுடர்' அமைப்பின் சார்பாகக் 'கண்ணாடி கலைக் குழு' உருவாக்கப்பட்டு அதன் மூலம் 'மனசின் அழைப்பு', 'உறையாத நினைவுகள்' ஆகிய நாடகங்கள் உருவாகின. மனசின் அழைப்பு குடிமக்கள் என்ற உரிமையைப் பெறுவதற்கான குரலைப் பதிவு செய்தது. ஆண் பெயரில் பிறப்புச் சான்றிதழ் இருக்க, பெண்ணாக மாறிய பின், இருப்புக்கான எந்த அத்தாட்சியும் இன்றி ஏதிலிகளாய் அலையும் வாழ்வைப் பேசியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உறுப்பால் வளர்ந்ததே உங்கள் பண்பாடெனில் / நிர்வாணமாய் அதன் நெஞ்சில் நடக்கிறோம்" என்று அரவானிகள் குரலைப் பதிவு செய்தது.

"உறையாத நினைவுகள்" குடும்ப அமைப்பு சாதகமாக அமைந்தால் அரவானிகளின் நிலை சற்றே எளிமையாக அமையலாம் என்ற அவர்களின் ஆதங்கத்தைப் பேசியது. அந்த நப்பாசை ஒரு ஓரமாக இருந்தாலும், குடும்பம் என்ற கட்டமைப்பின் இறுக்கமும், வன்முறையும் இத்தகைய மீறல்களை ஏற்பது சிரமம் என்பதை ஒவ்வொருவரும் அனுபவரீதியாக உணர்ந்திருந்தனர். என்னை நானாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்ற கோரிக்கையோடு நாடகம் நிறைவுற்றது. குடும்பச் சட்டகத்தின் இறுகிய தன்மை புகைப்படச் சட்டம் மூலம் காட்டப்பட்டது.

இந்நாடகத்தில் சொல்லப்படும் கதைகள் அனைத்தும் பங்கேற்ற வர்களின் வாழ்வனுபவங்கள். இரணமாகக் கசியும் அனுபவங் களைப் பகிர்வதில் உள்ள சிரமம் காரணமாகக் கதைகளைப் பிறர் நடித்துக் காட்டினர். ஆனால், குழுவில் இருந்த ஒரே ஒரு ஆணாக உணரும் பெண்ணின் கதையை வேறு எவரும் சொல்ல முடியாத லால், அவரே செய்ய வேண்டியதாயிற்று. ஆண்டுகள் பல கடந்தும், இன்றும் அவரால் அதனை நாடகமாக நிகழ்த்துவது எளிதாக இல்லை. அக்குழு தொடர்ந்து இயங்குவதில் பல நடை முறைச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. நாடகம் மூலம் தம்மை வெளிப் படுத்துவது குறித்த அக்கறையின் வீச்சு மாறியுள்ளது. இருப்பினும், இந்நாடகத் தயாரிப்புகள் ஆத்மார்த்தமான நெருக்கத் தைச் சாத்தியமாக்கின. தமது பால் அடையாளம் காரணமாக அனுபவித்த கொடுமைகள், நம் நாகரீக முகத்தில் கீறல்களாகக் கசிகின்றன.

அரவானிகள் போல் பால் அடையாளத்தை உடலால் சுமக்காமல், ஆனால் அதே போன்ற கனத்தைச் சுமந்து திரியும் வாழ்வே ஓரினப் புணர்ச்சியாளர் அனுபவமாக உள்ளது. ஆங்கிலத்தில், இவர்களைக் கேலி பேசப் பயன்படுத்தப்படும், கோணலானவர் என்ற தொடர் உண்மையில் எதிர்ப்பின் குறியீடாகிறது. நெடும் மரமாய் விறைத்து நிற்கும் தந்தைமை அமைப்பை வளைக்கும் / முறிக்கும் வேகம் இதில் தொழிற்படுகின்றது. ஓரினப் புணர்ச்சி அல்லது ஈர்ப்பாளர்கள் மத்தியிலும் ஓரினப் பெண் புணர்ச்சியாளர்கள் குறித்த அழுத்தம் குறைவாகவே உள்ளதைக் காணமுடிகிறது. எல்லா துறைகளிலும் உள்ள ஆண் மையச் சிந்தனை இங்கும் துரத்துகிறது. நாள்தோறும் செய்தித்தாள்கள் பட்டியலிடும் இளம் பெண்கள் தற்கொலைகள் இத்தன்மைகளுக்கானச் சான்றாகத் தொடர்ந்து நிகழ்கின்றன.

ஆண்மை, கற்பாபிமானம், குடும்பம் போன்ற கருத்தாக்கங்களை அழித்தொழிக்காமல் சுய மரியாதை சாத்தியமில்லை. பெண் விடுதலை நிச்சயம் சாத்தியமில்லை. பெண்ணுக்கென ஒரு மனம் உண்டு, அதில் விருப்பு- வெறுப்பு உண்டு என்பதைக் கணக்கில் கொள்ளாத அமைப்பில் மட்டுமே பெண்ணைக் காலம் காலமாகச் சார்பாளராக வைக்க முடியும். பெண்ணுக்கான விருப்பத்தை ஏற்றால்தான், பெண்ணுக்கான வேட்கையை அங்கீகரிக்கமுடியும். இல்லையென்றால், அவள் முனியாகவும், காட்டேரியாகவும், மோகினியாகவும், சூலியாகவும் மிரட்டத்தான் செய்வாள். ஆண் உரிமை என்ற கோட்டை கட்டப்பட்டிருப்பது, பெண் அச்சத்தின் மேல்தான்!

அரவானிகள் போல் பால் அடையாளத்தை உடலால் சுமக்காமல், ஆனால் அதே போன்ற கனத்தைச் சுமந்து திரியும் வாழ்வே ஓரினப் புணர்ச்சியாளர் அனுபவமாக உள்ளது. ஆங்கிலத்தில், இவர்களைக் கேலி பேசப் பயன்படுத்தப்படும் கோணலானவர் என்ற தொடர் உண்மையில் எதிர்ப்பின் குறியீடாகிறது. நெடும் மரமாய் விறைத்து நிற்கும் தந்தைமை அமைப்பை வளைக்கும் / முறிக்கும் வேகம் இதில் தொழிற்படுகின்றது. ஓரினப் புணர்ச்சி அல்லது ஈர்ப்பாளர்கள் மத்தியிலும் ஓரினப் பெண் புணர்ச்சியாளர்கள் குறித்த அழுத்தம் குறைவாகவே உள்ளதைக் காணமுடிகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை
3

உடல், வன்முறை, உரிமை: இந்திய குற்றவியல் சட்டம் (திருத்தியமைப்பு) மசோதா 2010

■ **அனிருத்தன் வாசுதேவன்**

பாலியல் என்பது எப்பொழுதும் முரண்பாடான சூழல்களில் இயங்கும் ஒன்றாக இருக்கிறது. ஒருபுறம் நமது பாலியலை, அதனை உண்டாக்கும் ஆசை, விழைவு, காதல், காமம் ஆகியவற்றை நமது தனிப்பட்ட வெளி சார்ந்தவையாக, நம் அகவெளி சார்ந்தவையாகக் கருதுகிறோம். எனினும் பாலியல் குறித்த கண்காணிப்பும் ஒரு collective, ஒட்டுமொத்த இனம் புரியாத பீதியும் எப்பொழுதும் நிலவுகிறது. மற்றவர்களின் பாலியலைக் கண்காணித்துக் கட்டுப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. அரசும் சட்டமும் கூட பாலியல் குறித்து அதிக கவனம் செலுத்துகின்றன. திருமணமான கணவன் மனைவிக்குள் ஒரு குறிப்பிட்ட விதத்தில் ஏற்படும் பாலியல் வெளிப்பாடு தவிர வேறொன்றும் நிகழ்ந்துவிடக் கூடாது என்று பயப்படுகிறோம். இவை தவிர பல விதங்களில் நமது பாலியல்கள் வெளிப்படுவது உண்மை எனினும் அவற்றைச் சுற்றி அமைதி நிலவச் செய்கிறோம். பாலியல் வன்முறை என்பது நம்மை ஏனோ மற்ற வன்முறைகளைக் காட்டிலும் அதிகமாகக் கொதித்தெழச் செய்கிறது. அதுவும் பெண்ணுடல், அதன் ஒழுக்கம், விதிமீறல்கள், அதன் மீதான வன்முறை ஆகியவை ஒரு சமூகத்தின் அடையாளத்திற்கும் மதிப்பிற்கும் ஏனோ அடிப்படையாக்கப் பட்டிருக்கின்றன. பெண்ணுடலில் பொதிந்திருப்பதாகக் கருதப் படும் "கற்பும்" அதன் வீரியமும் அவை குறித்த புதினங்களும் தமிழ்ச் சமூகம் போன்ற பல சமூகங்களுக்கு அடையாள மொழி என்றும் ஆகிவிட்டிருக்கிறது. எனவே பாலியல் என்பது தனிமனித செயல்பாடு என்று மட்டும் நாம் எண்ணுவோமேயானால் அது தவறு. சமூகம், அரசு, நிறுவனங்கள், மதங்கள், கதைகள், நீதித் துறை மற்றும் சட்டம் போன்றவற்றின் சொல்லாடல்கள், சினிமா ஆகிய அனைத்திற்கும் நம் பாலியலுக்கும் நெருக்கமான தொடர்புண்டு.

2010 ஆம் ஆண்டு ஐபிசி 377 தவிர இந்தியாவில் பாலியல் குறித்த மற்றொரு சட்டம் பற்றிய விவாதங்கள் நாடெங்கிலும் நடைபெற்றன. இந்திய அரசின் உள்துறை அமைச்சகம் இந்திய குற்றவியல் சட்டத்தின் சில பகுதிகளைத் திருத்தி அமைப்பதற்கான மசோதா ஒன்றைக் கொண்டுவர முடிவு செய்து அதற்கான படிவம் ஒன்றை மக்களமைப்புகளின் பார்வை மற்றும் விமர்சனத்திற்கென வெளியிட்டது. Criminal Law (Amendment) Draft Bill 2010

அனிருத்தன் வாசுதேவன் சென்னையிலுள்ள The Shakti Resource Center என்ற அமைப்பு மூலம் பாலினம், பாலியல், மனித உரிமை குறித்த பணியில் ஈடுபட்டு வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றழைக்கப்பட்ட இது குறிப்பாகப் பாலியல் வன்முறை குறித்த சட்டங்களில் முக்கிய மாற்றங்களைக் கொண்டுவர முனைந்தது. இச்சட்டங்களில் பல பத்தாண்டுகளாகப் பெண்ணிய இயக்கங்களும் பெண்கள் அமைப்புகளும் மற்ற மனித உரிமை அமைப்புகளும் மாற்றங்களைக் கோரி வருகின்றன.

பெண்ணியப் பார்வையில் சட்டம், தண்டனை இவை குறித்து மட்டுமல்லாமல் சட்டத்தின் மொழியிலும் சொல்லாடலிலும் மாற்றம் தேவை என்பது வலியுறுத்தப்பட்டு வருகிறது. உதாரணமாக, "பலாத்காரம்" அல்லது "கற்பழிப்பு" என்ற சொல்லாடல் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது. 'கற்பு' என்பது பெண்ணுடலில் (மட்டும்) பொதிந்திருக்கும் ஏதோ என்றும் அது ஆணின் ஒருவித செயல்பாட்டினால் "அழிக்கப்"பட்டு அதன்பின் பெண் அதனை நிரந்தரமாய் இழக்கிறாள் என்பது போன்ற பிற்போக்கான கருத்தாக்கங்களை இத்தகைய சொல்லாடல் உண்டாக்கி அவற்றை என்றும் உயிர்ப்புடன் வைத்து வருகிறது. இது மட்டுமல்லாமல் பெண்ணுடலின் பாதுகாப்பிற்கும் "கற்பின்" இருத்தல்-இல்லாமைக்கும் ஆண்மைக்கும் நேரடித் தொடர்பும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பெண்ணுடலின் கற்பைப் பாதுகாப்பதே ஆணின் தலையாய கடமை என்றும் ஒரு சமூகத்தையோ குடும்பத்தையோ அல்லது ஒரு தனி ஆணையோ இழிவு செய்யவேண்டுமெனில் அந்தச் சமூகத்தின் குடும்பத்தின் ஆணிற்குச் "சொந்தமான" பெண்களைக் "கற்பழிப்பது" என்பது வரலாற்றில் அடிக்கடி தென்படும் செயல்பாடு. இந்தக் கற்பழிப்புப் பரிமாற்றத்தை நிகழ்த்துவதில் வீரியமும் ரோஷமும் கொண்ட ஆண்மை ஏதோ ஒருவகையில் நிறைவடைவதாக நம் திரைப்படங்களும் தொடர்ந்து காண்பித்து வருகின்றன. மேலும் "கற்பழிக்கப்படுவதிலிருந்து" பெண்களைக் காப்பது கதாநாயகர்களின் கடமை என்றும் ஆகிவிட்டிருக்கிறது.

இத்தகைய பண்பாட்டுச் சூழலில் பாலியல் குறித்த இத்தகைய எண்ணங்கள் நிலவுகையில் பாலியல் வன்முறை என்பதும் இவற்றையொட்டியே புரிந்துகொள்ளப்படுகின்றன. பெண்கள் மற்றும் குழந்தைகளின் உடல்கள் மீதான வன்முறையே பாலியல் வன்முறை என்று வரையறுக்கப்பட்டு விடுகின்றது. இதிலும் ஒரு சிலரால் ஒரு சில விதங்களில் நிகழும் பாலியல் வன்முறையே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் நிலையும் உண்டு

இத்தகைய பண்பாட்டுச் சூழலில் பாலியல் குறித்த இத்தகைய எண்ணங்கள் நிலவுகையில் பாலியல் வன்முறை என்பதும் இவற்றையொட்டியே புரிந்துகொள்ளப்படுகின்றன. பெண்கள் மற்றும் குழந்தைகளின் உடல்கள் மீதான வன்முறையே பாலியல் வன்முறை என்று வரையறுக்கப்பட்டு விடுகின்றது. இதிலும் ஒரு சிலரால் ஒரு சில விதங்களில் நிகழும் பாலியல் வன்முறையே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் நிலையும் உண்டு. உதாரணத்திற்கு, ஒரு திருமணத்திற்குள், கணவன் தன் மனைவியைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்க இயலும் என்ற சாத்தியத்தையே எண்ணிப்பார்க்கக் கூடிய பக்குவம் நம் சட்டத்திற்கு இல்லை. 2010இல் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் மாற்றங்கள் கூட Marital Rape என்பதைக் குற்றமென்று கருதக்கூடிய புரிதலைக் கொண்டிருக்கவில்லை என்பது வருத்தத்திற்குரியது. ஒரு பெண் பாலியல் உறவுக்கு ஒப்புதல் அளிக்கக் கூடிய வயதைத் (age of consent) தாண்டியவளாக இருப்பினும் குற்றம் சாட்டப்பட்டிருப்பது அவளது கணவனாக இருப்பின் அது பாலியல் குற்றமாகக் கருதப்பட மாட்டாது என்ற "விலக்கை" புதிய மசோதாவின் பிரிவு 375 கூறுகிறது. (Reference: Criminal Law (Amendment) Draft Bill 2010, Sec. 375, "Exception"). இது மனைவி கணவனுக்குச் சொந்தம் அவனது சொத்து என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[library stamp]

பண்பாட்டுக் கருத்தியலின் பிரதிபலிப்பே அன்றி வேறெதுவு மில்லை. குடும்பத்தில் பெண்கள் சந்திக்கும் வன்முறையை தண்டனைக்குள்ளாக்குவதிலும் இத்தகைய எண்ணமே தடையாக இருந்து வருகிறது. குடும்பம், திருமணம் ஆகியவற்றை விமர்சனத் திற்கும் வன்முறைக்கும் அப்பாற்பட்ட புனித அமைப்புகளாக முதலில் கட்டமைத்துவிட்டதால், இந்த அமைப்புகள் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு உகந்தவை என்று சித்திரித்து விட்டதால், அவற்றில் பெண்கள் மீதும் குழந்தைகள் மீதும் வன்முறை நிகழும்பொழுது அவற்றைக் கவனித்து குற்றமாகக் கருதி ஆராயும் பக்குவம் நம் சட்டத்திற்கும் அதன் காவலர்களுக்கும் இல்லை. குறிப்பாக, குழந்தைகள் மற்றும் சிறார் மீதான பாலியல் வன்முறை பெரும்பாலும் குடும்பங்களுக்குள்ளும் குடும்பங்களுக்கு மிக நெருக்கமானவர்களாலும் ஏற்படுகிறது என்று பல ஆய்வுகள் காண்பிக்கும் பொழுது, அதனை முழுதுமாக உள்வாங்கிக் கொண்டு நம் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டியது அவசியம். 2010இல் சட்ட அமைச்சகத்தின் முயற்சியாகக் குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை குறித்த தனி சட்டப்பிரிவு ஏற்படுவதற்கான முயற்சியும் தொடங்கப்பட்டிருக்கிறது).

குற்றவியல் சட்டம் (திருத்தியமைப்பு) மசோதா 2010 குறித்த விவாதங்கள் பெண்கள் மற்றும் சிறார் என்ற இரு பிரிவினர் குறித்து மட்டும் இருக்கவில்லை. ஏனெனில் கடந்த பல ஆண்டுகளில்; பால், பாலியல் குறித்த நமது புரிதலும், உடல்கள் மற்றும் வன்முறை குறித்த நமது புரிதலும் விரிவடைந்திருக்கின்றன. உதாரணத்திற்கு, ஆண் பாலடையாளத்திலிருந்து பெண் பாலடையாளத்திற்கு மாறும் அரவானிகள் திருநங்கைகள் பற்றிய நமது அறிவு விரிவடைந் திருப்பதுடன் இவர்கள் மாநில அரசுகளின் நலத்திட்டங்களின் பார்வைக்குள் வந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழக அரசு அரவானிகள் நலவாரியம் அமைத்துத் திட்டங்கள் பலவற்றை அறிவித்துச் சிலவற்றைச் செயல்படுத்தியும் வருகிறது. உதாரணமாக, கல்லூரிகளில் இட ஒதுக்கீடும் இலவச பால் மாற்று அறுவை சிகிச்சையும் நடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டன. இத்தகைய நிகழ்வுகள் குறைந்தபட்சமாக ஒரு அரசு, ஒரு சமூகத்தின் இருப்பை அங்கீகரிப்பதைக் காட்டுகிறது. இந்நிலையில் மாற்றுப் பால்/ பாலின அடையாளம் ஏற்கும் இச்சமூகத்தினர் மீதான பாலியல் வன்முறையையும் அங்கீகரிப்பது அவசியம். ஆனால் ஆண்-பெண் என்ற பாலின ஈரிணை (binary opposites) கட்டமைப்பில் செயல்படும் சட்டத்திற்கும் அதன் சொல்லாடலுக்கும் இது எளிதான காரியம் அல்ல. அரவானி/ திருநங்கை/ ஹிஜ்ரா மக்களைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாகுபவர்களாகக் கருத அவர்களைப் "பெண்கள்" என்ற பிரிவின் கீழ் கருதுவதா அல்லது பல நிலைகளில் (குடும்ப அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை உட்பட) மூன்றாம் பாலினமாகக் கருதப்பட்டுவரும் இவர்களைச் சட்டத்தில் தனி பிரிவாகக் கருதுவதா என்ற கேள்வி முக்கியமான ஒன்று. ஏனெனில், இது ஒரு தனி பிரிவினரைச் சட்டத்தில் இணைத்துவிடும் செயல்பாடல்ல. ஆண்-பெண் என்ற பாலின ஈரிணை நம் பொதுப்புத்தியிலும் அரசின் கண்ணோட்டத்திலும் சட்டத்தின்

குடும்பம், திருமணம் ஆகியவற்றை விமர்சனத்திற்கும் வன்முறைக்கும் அப்பாற்பட்ட புனித அமைப்புகளாக முதலில் கட்டமைத்துவிட்டதால், இந்த அமைப்புகள் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு உகந்தவை என்று சித்திரித்துவிட்டதால், அவற்றில் பெண்கள் மீதும் குழந்தைகள் மீதும் வன்முறை நிகழும்பொழுது, அவற்றைக் கவனித்து குற்றமாகக் கருதி ஆராயும் பக்குவம் நம் சட்டத்திற்கும் அதன் காவலர்களுக்கும் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாடலுக்கும் அடிப்படையாக அமைவது. படிவங்கள் நிரப்புவது, கழிவறை பகுப்பு, திருமணம், உடைகள் என்று எல்லா நிலையிலும் இரு பாலினங்களே இருப்பதாக எண்ணிச் செயல்பட்டு வருகிறோம். இந்த நிலையில் மற்றொரு பாலின அடையாளத்தின் இருப்பைச் சட்டம் போன்ற அதிகார மொழியில் இணைப்பது அவசியம். இச்சமூகத்தினர் மீது தொடர்ந்து நிகழ்த்தப்படும் வன்முறையைச் சட்டம் அங்கீகரிப்பது அவசியம்.

பாலியல் வன்முறை குறித்த இன்றைய விவாதங்களுக்கு மற்றொரு கூறும் உண்டு: இத்தகைய வன்முறைக்கு ஆண்கள் அப்பாற்பட்டவர்கள் என்றும் பாலியல் வன்முறையைப் பெண்கள் மீதும் சிறார் மீதும் அரவானிகள் மீதும் நிகழும் ஒன்றாக மட்டுமே, அதாவது perpetrators ஆக மட்டுமே, ஆண்களுக்கும் இதற்கும் தொடர்புண்டு என்று சிந்திப்பதும் ஆணாதிக்கச் சிந்தனையின் வெளிப்பாடே. ஆண்கள் பலர் பாலியல் வன்முறைக்கு உள்ளாகும் யதார்த்தத்தை இது முழுவதுமாக நிராகரிக்கிறது. இது தவிர ஆண்களை விரும்பும் ஆண்கள், பெண்ணியல்பாக இருக்கும் ஆண்கள் ஆகியோர் மீது பெருமளவில் ஏற்படும் வன்முறை சட்டத்தின் கண்களுக்குத் தெரியவில்லை. இதனைத் தண்டனைச் சட்டப் பிரிவு 377 குறித்த விவாதங்களுடன் இணைத்துப் பார்ப்பது அவசியம். இரு ஆண்களுக்கு இடையிலான பாலியல் உறவை அவர்கள் 18 வயதிற்கு மேலானவர்களாகவும் மனமொத்து அத்தகைய உறவில் ஈடுபடுபவர்களாக இருப்பினும் குற்றம் என்று கூறும் ஐ.பி.சி 377 அமலில் இருக்கும் பொழுதும் ஒருபாலீர்ப்பு, உறவு மற்றும் புணர்ச்சி குறித்த பிற்போக்கான கருத்துக்கள் சமூகத்தில் நிலவும் பொழுதும் தன் மேல் ஒரு ஆணால் பாலியல் வன்முறை ஏற்பட்டிருப்பதை மற்றொரு ஆண் வெளிப்படுத்துவது கூட அசாத்தியமாகிறது. மேலும், இன்றைய நிலையில் இந்தியச் சட்டம் வயது வந்த ஆண்கள், பாலியல் வன்முறைக்கு இலக்காகும் சாத்தியத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. 18 வயதிற்கு மேலான பரஸ்பர ஒப்புதலுடன் செயல்படும் இருவருக்கு இடையிலான பாலியல் உறவு -- அவர்கள் ஒரு பாலினத்தவராக இருப்பினும் - தண்டனைக்கு உரியதல்ல என்று ஐபிசி 377ஐ மறுவாசிப்புச் செய்யும்படி 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2ஆம் நாள் தில்லி உயர் நீதிமன்றம் வெளியிட்டிருக்கும் தீர்ப்பு தெரிவிக்கிறது. நீதிபதிகள் ஏ.பி. ஷா மற்றும் முரளீதர் அவர்களின் இந்தத் தீர்ப்பை நாடளவில் செயல்படுத்தும் பொழுது மாற்றுப் பாலியல் குறித்த முற்போக்கான விவாதங்களை மேற்கொள்ள முடியும். மேலும், ஒப்புதல் அல்லாத நிலையில் ஆண்கள் மீது ஏற்படும் பாலியல் வன்முறையையும் சட்டத்தின்கீழ் கவனிக்க வழிசெய்ய இயலும்.

மற்றொரு நிலையில் சட்டம் பெண்களை மட்டுமே பாலியல் வன்முறைக்கு உள்ளாபவர்களாகக் கருதுகிறது. சிறார் மீதான சூழல்களைத் தவிர்த்து மற்ற சூழல்களில் பெண்கள் மற்ற பெண்கள் மீதோ அல்லது ஆண்கள் மீதோ பாலியல் வன்முறையைச் செயல் படுத்த இயலும் என்கிற சாத்தியம் சட்டத்திற்கு மட்டுமன்றி பல பெண்கள் அமைப்புகளுக்கு ஏற்றுக்கொள்ள இயலாததாய் இருக்கிறது. இத்தகைய புரிதல் பெண்கள் மீது தவறாகப்

> இரு ஆண்களுக்கு இடையிலான பாலியல் உறவை அவர்கள் 18 வயதிற்கு மேலானவர்களாகவும் மனமொத்து அத்தகைய உறவில் ஈடுபடுபவர்களாக இருப்பினும் குற்றம் என்று கூறும் ஐ.பி.சி 377 அமலில் இருக்கும் பொழுதும் ஒருபாலீர்ப்பு, உறவு மற்றும் புணர்ச்சி குறித்த பிற்போக்கான கருத்துக்கள் சமூகத்தில் நிலவும் பொழுதும் தன் மேல் ஒரு ஆணால் பாலியல் வன்முறை ஏற்பட்டிருப்பதை மற்றொரு ஆண் வெளிப்படுத்துவது கூட அசாத்தியமாகிறது. மேலும், இன்றைய நிலையில் இந்தியச் சட்டம் வயது வந்த ஆண்கள் பாலியல் வன்முறைக்கு இலக்காகும் சாத்தியத்தை ஏற்றுக்கொள்ளவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்படும் என்றும் பொய் வழக்குகள் தொடருவதற்கான சாத்தியங்கள் ஏற்படும் என்பவை நியாயமான விவாதங்களே. குடும்பங்களில் மட்டுமன்றி பொதுச் சூழலில், பணியிடங்களில் ஆண்-பெண் அதிகாரச் சமன்பாடு கொஞ்சமும் இல்லாத நிலையில் பாலியல் வன்முறையைச் செயல்படுத்துவதில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களைக் கருதுவது அபாயகரமானது என்பதும் ஒரு விவாதம். பல சூழல்களில் பெண்கள் போராடிப் பெற்றிருக்கும் உரிமைகள் மற்றும் பாதுகாப்புக் கட்டமைப்புகளைத் தகர்ப்பதாக இது அமையும் என்ற அச்சம் உண்மையானது.

இவை மற்றும் வேறு பல காரணங்களினாலும் Criminal Law (Amendment) Draft Bill 2010 குறித்த விவாதங்களில் பல்வேறு நிலைப்பாடுகள் வெளிப்பட்டன. பொதுவாகப் பாலியல் வன்முறை குறித்ததாக இருக்கும் பிரிவு 375 பெண்கள் மீதான வன்முறை மட்டுமல்லாமல் ஆண்கள் மீதான வன்முறையையும் தண்டனை குரியதாகக் கருத வேண்டும் என்று சில குழுக்கள் வலியுறுத்தின. குறிப்பாக, அதிக அளவில் பாலியல் வன்முறையைச் சந்திக்கும் மாற்றுப் பாலியல் கொண்ட ஆண்கள், ஆண்களை விழையும் ஆண்கள், பெண்ணியல்பாக இருக்கும் ஆண்கள் ஆகியோரது குழுக்களும் பிரதிநிதிகளும் இதனை வலியுறுத்தினர். பாலினம் (gender) குறித்த நமது புரிதலில் இன்று பெருமளவில் மாற்றம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது. பால்= பாலினம் (sex=gender) என்ற மிக எளிமையான கட்டமைப்பைத் தாண்டி நெடுந்தொலைவு வந்திருக் கிறோம். பால் என்பது உடற்கூற்றைக் குறிக்கிறது என்றும் அதற்கும் பாலின வெளிப்பாட்டிற்கும் நேரடித் தொடர்பு இருக்க வேண்டும் என்பதில்லை என்பதைப் பெண்ணியக்- hypher - க்வீயர் (queer) கருத்தாக்கங்கள் நமக்குக் காண்பித்திருக்கின்றன. அதாவது, உங்கள் பிறப்புறுப்பைப் பொறுத்து உங்களது பாலினச் (gender) செயல்பாடு இவ்விதங்களில் இருக்க வேண்டும் என்பது சமூகக் கட்டமைப்பே என்றும் அவற்றில் எவ்வித உள்ளுண்மையும் பொதிந்திருக்க வேண்டியுதில்லை என்ற விவாதங்களும் நம் பால்-பாலின சிந்தனை உலகைப் பெருமளவில் மாற்றியமைத்திருக்கின்றன.

பல ஆண்டுகளுக்குப் பின் ஒரு சட்டப்பிரிவு திருத்தியமைக் கப்படும் பொழுது, பாலியல் வன்முறை போன்ற உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டிய நெருக்கடிச் சூழல்களைப் பற்றி விவாதிக்கையில் பல கூறுகளை ஒரே சமயத்தில் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது: வன்முறை, பாலியல், பால், பாலினம், வன்முறைக்கு உள்ளாகும் உடல்கள், வன்முறையைச் செயல் படுத்தும் உடல்கள், பாலியல் உறவுக்கு வழங்கப்படும் ஒப்புதல் என்றால் என்ன, அதை வழங்கும் நிலையில் இருப்பவர்கள் யார், எத்தகைய சூழலில் வழங்கப்படும் ஒப்புதல் ஒப்புதலாகக் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படலாம், எவை ஒப்புதல்கள் அல்ல, திருமணத்திற்கும் வன்முறைக்கும் உள்ள தொடர்பு என்ன, ஆணுடலும் பாலியல் வன்முறையும், 'கற்பு', அதன் 'அழிப்பு', போன்ற எண்ணற்ற கூறுகளை மனதில் கொள்ள வேண்டியுள்ளது.

பாலியல் எத்தகையதாக இருப்பினும் ஒன்று நிச்சயம்: அது எளிதானதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை
4

விடுதலைப் பாதை

■ கௌதம் பான்
தமிழாக்கம்: டி. ஜி. ரவீந்த்ரன்

கௌதம்பான் தில்லியில் நகர்ப்புற திட்டமிடுநராகப் பணியாற்றி வருகிறார். பாலியல் புகார் சமூக இயக்கங்களில் கடந்த பத்தாண்டுகளாக இவருடைய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

இந்தக் கட்டுரை முதலில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் ஜூலை 3, 2009 அன்று ஆங்கிலத்தில் வெளியானது. இதன் தமிழாக்கம் 'உடல்கள் உணர்வுகள் உரிமைகள்' என்ற நூலில் வெளியானது.

ஜூலை 2, 2009, வியாழனன்று சட்டப் பிரிவு 377இன் சில பகுதிகள் குறித்த தில்லி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியானது. இது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. இந்தத் தீர்ப்பின் மொழி மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றது. 1946ஆம் ஆண்டில் நடந்த அரசியலமைப்புச் சட்ட விவாதங்கள் இந்த முடிவை எட்டு வதற்குக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அந்த வாதங்கள் நாம் இன்று அறிந்திருப்பதைவிட மற்றொரு விதமான இந்தியாவை நமக்கு நினைவுபடுத்துகின்றன. விடுதலையை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்த இந்தியாவின் கனவுகள் அவற்றில் வெளிப்பட்டிருந்தன. நமது அரசியலமைப்புச் சட்டத்தை அதன் ஆத்மார்த்த உணர்வுகளின் வழியே பார்க்க வேண்டுமே தவிர, குறுகிய சட்ட மொழியின் வார்த்தைகளாகப் பார்க்கக் கூடாது என்று நேரு இந்த விவாதங்களின் பொழுது தனது உரையின் மூலம் வலியுறுத்தினார்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கருத்தியலை எடுத்துக் காட்டும் ஒரு இணைப்புக் கோடு இருக்கிறது என்று சொல்ல இயலுமானால் அது, அதில் பொதிந்திருக்கும் "ஒன்றிணைந்து செல்லும் பண்பு" (inclusiveness) என்பதே. இந்தியச் சமூகத்தில் ஆழமாக, பரம்பரைப் பரம்பரையாக உட்பொதிந்துள்ள நன்னெறி எல்லா மக்களின் நலனையும் அரவணைத்துச் செல்லும் இந்தப் பண்புதான் என்பதை இந்த நீதிமன்றம் நம்புகிறது என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இது மட்டுமின்றி மாற்றுப் பாலியல் கொண்டோர் (LGBT persons) உரிமை என்ற விஷயத்தில் பொது ஜனத்தின் தவறான புரிதல்களின் பிடியில் குற்றவியல் சட்டம் இருப்பதை இந்திய அரசியலமைப்புச் சட்டம் அனுமதிக்கவில்லை என்று தீர்ப்பின் வாதமுறை எடுத்துச் சொல்கிறது. பாரபட்சம் காட்டுதல் என்பது அனைவரும் சமம் என்ற அடிப்படைக் கருத்தியலுக்கு நேரெதிரான விஷயம் என்பதை மறுக்க முடியாது. அது மட்டுமின்றி சம உரிமையின் அவசியத்தை அடையாளம் கண்டு அங்கீகரிப்பதன் மூலம்தான் ஒவ்வொரு தனி நபரின் சுயகௌரவத்தைப் பாதுகாக்க முடியும் என்பதும் நினைவில் கொள்ள வேண்டிய விஷயம்.

ஜூலை 2 ஆம் நாள் காலை 10.30க்குத் தீர்ப்பு என்று தில்லி உயர் நீதிமன்றத்தின் முதலாவது நீதிமன்ற அரங்கின் அன்றைய பணி பட்டியலில் முதலாவது விஷயமாக அறிவிக்கப்பட்டிருந்தது. நீதிமன்ற அனுமதிச் சீட்டைப் பெற்றுக்கொண்டு பத்துக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்ட ஆர்வலர்கள் உள்ளே நுழைந்தார்கள். சட்டப் பிரிவு 377க்கு எதிராக ஒரு தலைமுறை கால போராட்டங்களின் தருணங்கள் அவர்களது நினைவில் அலைமோதுகின்றன. தீர்ப்பு வாசிக்கப்பட்ட போது அந்த அறையில் பொங்கி எழுந்த உணர்வுகளை நம்மால் உணர முடிந்தது. எங்களது கண்களில் கண்ணீர் பெருகியது. இந்தக் கண்ணீர் 'வெற்றி' பெற்றுவிட்டோம் என்பதால் அல்ல, எங்களைச் சுதந்திர மனிதர்களாய் ஆக்கியிருக்கிறது இந்தத் தீர்ப்பு. இது சுயகௌரவம் பற்றியது. நேரு கற்பனை செய்த இந்தியாவை வெளிப்படுத்துகிறது இந்தத் தீர்ப்பு. அதாவது தனது எல்லைக்குள் வாழும் அத்தனை விதமான மனிதர்களையும் அரவணைக்கத் தயாராக இருக்கும் இந்தியாவைத் தான் அவர் கற்பனை செய்தார். இந்தியாவில் வாழும் லட்சக்கணக்கான 'உயிர்களின் வாழ்க்கையில்' சமத்துவம், சுய கவுரவம், உரிமைகள் போன்ற வார்த்தைகள் அர்த்த பாவத்துடன் வேர் கொள்ளப் போகும் தருணம் இது. இவர்கள் அனைவரும் இப்பொது தான் தங்களது கால்களைத் தங்களது நாட்டில் பயமின்றிப் பதியவைத்து, இனிமேல் தான் பயணத்தைத் தொடர்வார்கள்.

நம்மை அம்பேத்கர் காலத்திற்கு இட்டுச் செல்கிறது இந்தத் தீர்ப்பு. தனது வளமான சிந்தனைக்கு இணையான அரசியலமைப்புச் சட்டம் உருவாகப் போராடிய அம்பேத்கரை இந்த நீதிபதிகள் நினைவூட்டுகிறார்கள். அம்பேத்கர் இந்தியாவைப் பற்றி மிகுந்த மன எழுச்சியுடன் குறிப்பிட்டிருக்கிறார். இந்திய நீதிமன்றங்கள் அரசியலமைப்புச் சட்ட ஒழுக்க நெறிகளின்படி இயங்க வேண்டுமே தவிர பொதுஜன ஒழுக்க நெறிகளின்படி அல்ல. நலன் என்பது பொதுஜன ஒழுக்க நெறிகளின்படி முடிவு செய்யப்படக் கூடாது. இதன் அடிப்படை அரசியலமைப்புச் சட்டத்தின் ஆன்ம சக்தியாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார். வரும் நாட்களில் ஒழுக்க நெறிகள் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் ஊடகங்களில் பல்வேறு விதங்களில் வெளிப்படும். அந்தச் சமயங்களில் ஒழுக்க நெறியின் மற்றொரு பக்கத்தையும் சமமான அளவில் நாம் கணக்கில் கொள்ள வேண்டும். அதாவது குடிமக்கள் என்ற வகையில் நாம் பகிர்ந்துகொள்ளும் ஒழுக்க நெறிகளை மனதில் கொள்ள வேண்டுமே தவிர தனிப்பட்ட கருத்துப் பதிவுகளை அல்ல.

இந்தத் தீர்ப்பு சமத்துவம் பற்றியது. நமது அரசியலமைப்புச் சட்டத்தின் 15ஆவது பிரிவைச் சுட்டிக்காட்டிய நீதிபதிகள், பாரபட்சம் பற்றிய ஷரத்துக்களில் பொதுவான முறையில் பயன்படும் "பால்" என்ற சொல்லுடன் "பாலுறவுத் தேர்வுணர்வு" (sexual orientation) என்பதையும் சேர்க்க வேண்டும் என்று கூறியிருக்கின்றனர். பாரபட்சம் கூடாது என்பதற்கான சட்டங்கள் பாலினம், பாலுறவு ஆகியவற்றின் அடிப்படையில் உள்ளன. இதனுடன் இனிமேல் "பாலுறவுத் தேர்வுணர்வு" என்ற அம்சத்தையும் இணைத்து அர்த்தப்படுத்திக்கொள்ள வேண்டும். ஓரினப் புணர்ப்பாளர்களைக் குற்றவாளிகளாக்குவது செல்லாது என்று அறிவித்ததன் மூலம், அவர்களை மருத்துவமனைகள், இல்லங்கள் மற்றும் பொது இடங்கள் போன்றவற்றில் சரிசமமான மரியாதையுடன் நடத்த வேண்டும் என்பதையும் நீதிபதிகள் அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

தனது வளமான சிந்தனைக்கு இணையான அரசியலமைப்புச் சட்டம் உருவாகப் போராடிய அம்பேத்கரை இந்த நீதிபதிகள் நினைவூட்டுகிறார்கள். அம்பேத்கர் இந்தியாவைப் பற்றி மிகுந்த மன எழுச்சியுடன் குறிப்பிட்டிருக்கிறார். இந்திய நீதிமன்றங்கள் அரசியலமைப்புச் சட்ட ஒழுக்க நெறிகளின்படி இயங்க வேண்டுமே தவிர பொதுஜன ஒழுக்க நெறிகளின்படி அல்ல. நலன் என்பது பொதுஜன ஒழுக்க நெறிகளின்படி முடிவு செய்யப்படக் கூடாது. இதன் அடிப்படை அரசியலமைப்புச் சட்டத்தின் ஆன்ம சக்தியாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தீர்ப்பை நாம் ஓரினப் புணார்ப்பாளர்கள் என்ற நிலையில் மட்டும் புரிந்துகொள்ளாமல், பொதுவாக இந்தியர்கள் என்ற நிலையில் நமது பாலினத் தேர்வு, பாலினம், மதம், சாதி, மொழி அல்லது பிராந்தியம் ஆகியன எதுவாக இருந்தாலும் அனைவருக்கும் முக்கியமான தீர்ப்பு என்ற கண்ணோட்டத்தில் புரிந்துகொள்ள வேண்டும். தங்களது பல்வேறு உரிமைகளுக்கான ஏராளமான இயக்கங்கள், இந்த நாட்டில், கடந்த காலங்களிலும் இப்போதும் தொடர்ந்து போராடி வருகின்றன. பலர் மாற்றம் என்பது இந்தியாவில், அதுவும் நவீன இந்தியாவில், சாத்தியமே இல்லை என்று வாதிட்டுக் கொண்டிருக்கின்றனர். நான் உட்பட பலரும் இன்றைய ஆட்சிமுறை மற்றும் அதனைச் செயல்படுத்தும் கட்டமைப்புகளின் மீதான நம்பிக்கையை இழந்திருக்கிறோம். இந்த நிலையில் இந்த நீதிமன்றத் தீர்ப்பு நம்மிடையே ஒரு புதிய நம்பிக்கையைத் துளிர்க்க வைத்திருக்கிறது. அரசியலமைப்புச் சட்டம் இன்னமும் உயிர்ப்புடன்தான் இருக்கிறது என்பதை நினைவுறுத்துவதோடு மட்டுமன்றி இயக்கங்கள், போராட்டங்கள் ஆகியன சில சமயங்களில் வெற்றிகளையும் அடையக்கூடும் என்பதையும் காண்பிக்கிறது. இந்தத் தீர்ப்பு ஓரினப்புணர்ச்சியாளர்களின் உரிமைகளை மட்டும் நிலைநாட்டியதாக எண்ணாமல் அனைத்து இந்தியர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்ற உண்மையைப் புரிந்துகொண்டு எல்லா இந்தியர்களும் இந்தத் தீர்ப்பைக் கொண்டாட வேண்டும்.

இன்றைய ஆட்சிமுறை மற்றும் அதனைச் செயல்படுத்தும் கட்டமைப்புகளின் மீதான நம்பிக்கையை இழந்திருக்கிறோம். இந்த நிலையில் இந்த நீதிமன்றத் தீர்ப்பு நம்மிடையே ஒரு புதிய நம்பிக்கையைத் துளிர்க்க வைத்திருக்கிறது. அரசியலமைப்புச் சட்டம் இன்னமும் உயிர்ப்புடன்தான் இருக்கிறது என்பதை நினைவுறுத்துவதோடு மட்டுமன்றி இயக்கங்கள், போராட்டங்கள் ஆகியன சில சமயங்களில் வெற்றிகளையும் அடையக்கூடும் என்பதையும் காண்பிக்கிறது

அதே சமயம், வருங்காலம் குறித்து மிகக் கவனமாய் இருக்க வேண்டும். 'க்வியர்' மக்களின் சுயகௌரவத்தை மீட்டெடுக்கும் போராட்டம் நீதிமன்ற வெற்றிகளுடன் நின்றுவிட முடியாது என்று வெகுகாலமாகவே எங்களது அமைப்புகள் கூறிவருகின்றன. "ஹோமோஃபோபியா" என்று சொல்லக்கூடிய ஓரினப்புணர்ச்சி குறித்த பயமும் வெறுப்பும் குடும்பங்களில், மருத்துவமனைகளில், காவல் நிலையங்களில், அலுவலகங்களில், ஏன் தெருக்களில் கூட மிகுந்த எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. இவை குறித்துத்தான் நமது உண்மையான போராட்டம் இருக்க வேண்டும். இது போன்ற பிரச்சனையைச் சட்டத்தினால் ஒரு நாளில் மாற்றிவிட முடியாது. நமது போராட்டங்கள் மூலம் கடந்து செல்ல வேண்டிய பாதை வெகுதூரம் இருக்கிறது. ஆனாலும் கூட இந்தத் தீர்ப்பு நமது கைகளை இணைத்திருக்கிறது. பொது மக்களின் கருத்தை மாற்றுவதற்கான நமது வாதங்களை நம்மால் இனிமேல் சமமான களத்தில் வைக்க முடியும். இப்போது இந்தத் தீர்ப்பின் வார்த்தைகள் நமக்குத் தெம்பூட்டுபவையாகவும் பிறரிடம் எடுத்துக்கூறவேண்டிய உயிர்த்துடிப்புள்ள கருத்துக்களாகவும் அமைந்துவிட்டன.

இந்தத் தீர்ப்பால் மிகப்பெரிய மாற்றம் விளையக்கூடிய இடம் 'க்வியர்' மக்களின் இதயங்களே. நம்மை நாமே ஏற்றுக்கொள்ளும் வழிமுறைகள், நாம் நாமாக இருப்பதைப் பற்றி வெட்கப்படாமல், நமக்கான உரிமைகளைப் பெறுவது, அவை முக்கியமானவை என்று நம்புவது ஆகியவை நமக்குள் மனப்போராட்டங்களாகவே இருந்து வந்திருக்கின்றன. எந்த ஒரு 'க்வியர்' இளம் பெண்ணும் இனி தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடியில் காணக்கூடிய பிம்பத்தைச் சீரானதாக ஆக்கக் கூடியதாக இந்தத் தீர்ப்பு இருக்கிறது. இதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்த வார்த்தைகளே இல்லை.

377ஆவது சட்டப் பிரிவைப் பற்றி சமீபத்தில் இந்திய அரசாங்கமும் அதன் அமைச்சர்களும் பல கருத்துக்களைக் கூறினார்கள். அவர்கள் இந்தத் தீர்ப்பை மிகக் கவனமாகப் படித்துத் தங்களது மனசாட்சிப்படி ஒருமித்த கருத்தை எட்ட வேண்டும். இந்தத் தீர்ப்பின் எந்தெந்த அம்சங்களைப் பரிசீலிக்க அல்லது மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதைப் பற்றி அவர்கள் தங்களையே கேட்டுக்கொள்ள வேண்டும். சட்டமியற்றும் மன்றங்களில் அரசியல் மற்றும் அரசு அறிவு மிக்கவர்கள் உறுப்பினராவார்கள் என்றொரு கனவு அம்பேத்கர் அவர்களுக்கும் நேரு அவர்களுக்கும் இருந்தது. இதனை இன்றைய சட்ட மாமன்றங்களின் உறுப்பினர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

சேர்ந்திணைந்து செல்லும் உணர்வு, சகிப்புத் தன்மை, அரசியலமைப்பு சட்டம் சார்ந்த ஒழுக்க நெறி, சமத்துவம் போன்ற வார்த்தைகள் நமது முன்னோர்கள் கற்பனை செய்த இந்தியாவில் எல்லா மக்களுக்குமானவை. இன்று அவை 'க்வியர்' மக்களுக்கும் பொருந்தும். இந்த வார்த்தைகள் மீண்டும் இந்தியத் தன்மையை குறிக்கும் வார்த்தைகளாக மாற முதல் அடி எடுத்து வைத்திருக்கின்றன. இந்தப் பண்புகள் நமது இந்தியப் பண்பாட்டு நெறிகளில் இரண்டற கலந்திருக்கின்றன என்பதை இந்த நீதிபதிகள் நமக்கு நினைவூட்டியுள்ளனர். இதனாலேயே பலர் இன்று இவற்றைக் "காப்பாற்ற" பெரு முயற்சி செய்கிறார்கள் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். நாம் யாராக இருந்தாலும் சரி, நமது பாலியலும் அதனைப் பற்றிய சிந்தனையும் எதுவாக இருப்பினும், இந்தத் தீர்ப்பைப் பொறுத்தவரை இது மதச்சார்பற்ற, ஜனநாயக, அரசியலமைப்புச் சட்டத்தின்படி இயங்கும் சுதந்திர இந்தியாவிற்குக் கிடைத்த வெற்றி என்று கருத வேண்டும். நாம் அனைவரும் இதில் பெருமை கொள்ளலாம். இன்றைக்குத்தான் 'க்வியர்' மக்கள் பெருமித உணர்வுடன், மகிழ்ச்சியுடன் மற்ற இந்தியர்களைப் போல சுதந்திரமாகவும் சமமாகவும் உணர்கிறார்கள். வெகு காலம் கழித்து இன்று தான் தங்களது பாதங்கள் பூமியில் அழுத்தமாய்ப் பதிந்தது போல் உணர்கிறார்கள்.

சேர்ந்திணைந்து செல்லும் உணர்வு, சகிப்புத் தன்மை, அரசியலமைப்பு சட்டம் சார்ந்த ஒழுக்க நெறி, சமத்துவம் போன்ற வார்த்தைகள் நமது முன்னோர்கள் கற்பனை செய்த இந்தியாவில் எல்லா மக்களுக்குமானவை. இன்று அவை 'க்வியர்' மக்களுக்கும் பொருந்தும். இந்த வார்த்தைகள் மீண்டும் இந்தியத் தன்மையை குறிக்கும் வார்த்தைகளாக மாற முதல் அடி எடுத்து வைத்திருக்கின்றன. இந்தப் பண்புகள் நமது இந்தியப் பண்பாட்டு நெறிகளில் இரண்டற கலந்திருக்கின்றன என்பதை இந்த நீதிபதிகள் நமக்கு நினைவூட்டியுள்ளனர்

மாற்றுவெளி இதழ் 7 "தமிழ்ச் சமூக வரலாறு : புதிய பார்வைகளும் அணுகுமுறைகளும்" எனும் பொருளில் சிறப்பிதழாக வெளிவரவுள்ளது. இதன் அழைப்பாசிரியர் திரு. த. செந்தில்பாபு அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை
5

"க்வியர்" பெண்களும் இந்தியச் சட்டமும்

■ பிரியா தங்கராஜா, அ. பொன்னி

இக்கட்டுரை இரண்டு காரணங்களுக்காக எழுதப்பட்டுள்ளது. முதலாவதாக, இன்று இந்தியாவில் வாழ்ந்து வரும் ஒரு குறிப்பிட்ட அடையாளக் குழுவின் வரலாற்றைப் பதிவு செய்யும் நோக்கம். இவ்வடையாளக்குழு எளிதாய் வர்ணிக்கக் கூடியதல்ல. இக்கட்டுரையின் தேவைக்கான வர்ணனை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது இவ்வரலாற்றின் மூலம் அடையாளம்சார் சமூக இயக்கங்கள் மற்றும் சட்ட மாற்றத்திற்கான போராட்டங்கள் பற்றிய ஒரு விமர்சனப்பூர்வமான கருத்து முன்வைக்கப்படும்.

இந்தியச் சூழலில் மாற்றுப் பாலினம் பற்றிப் பேசுகையில் முதலில் நினைவிற்கு வருவது இந்தியக் குற்றவியல் சட்டத்தின் 377 ஆகும். ஆனால் இக்குழுவினரின் வாழ்வில் சட்டரீதியான விளைவுகள் 377 ஐ தாண்டியும் உள்ளன.

'க்வியர்' பெண்கள் என்று நாம் குறிப்பிடுபவர் யார் என இக்கட்டுரையின் தொடக்கத்தில் தெளிவுபடுத்துதல் அவசியம். இயக்கசார் அரசியலில் "க்வியர்" என்னும் சொல் பல தோழர்களால் "பால் மற்றும் பாலியல் சார்ந்த நெறிமுறைகளைக் கேள்வி கேட்கும் எந்த நபரும் க்வியர் ஆவர்" என பொருள் கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய பரந்த பொருளின் நற்பயன்களைக் கணக்கில் கொண்டாலும் குறிப்பிட்ட அடையாளப் பெயர்களின் சக்தியை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. அதுவும் இக்கட்டுரையின் தேவைக்கு இக்குறிப்பிட்ட அடையாள முறையைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது. ஆகையால் "க்வியர்" பெண்கள் என்பவருள் சமூகத்தால் பெண்ணாகக் காணப்படும் யோனியுடன் பிறந்தோருள் மற்ற யோனியுடன் பிறந்து 'பெண்' எனக் காணப்படுபவரின் மேல் இச்சை கொள்பவர் அடங்குவர். சமூக நெறிமுறைகளை மீறி இவர் தம்மைத் தாமே கூப்பிட்டுக்கொள்ளும் பெயர்கள் பலவாகவுள்ளன. அதே சமயம் சட்டரீதியாக முன்பு குறிப்பிட்ட பரந்த அர்த்தத்துடனான "க்வியர்க்கும்" ஒரு தேவையுள்ளது. அதிகபட்சம் சட்டம் மற்றும் சமுதாயத்தில் ஓர்பாலினச் சேர்க்கைக்காகச் செயல்களைவிட அச்செயல்களைச் சார்ந்த அடையாளக் குறிப்புகளே சமூக நெறிகளை உடைத்தெறிபவையாகக் காணப்படுகின்றன. ஓர்பாலின உடலுறவு அமைதியாக, மறைத்து மறைத்துச் செய்யப்பட்டால் அது சகித்துக் கொள்ளப்படும். அதுவும் சமூகக் கோட்பாடுகளை மீறாமல் திருமணம், குழந்தைபெறல் ஆகிய அமைப்புகள் உடைபடாமல் அதனிடையில் செய்யப்படும் ஓர்பாலின உடலுறவு ஏற்றுக்

ப்ரியா தங்கராஜா, இலங்கையில் பிறந்து வளர்ந்த இவர் இந்தியாவில், பெங்களூரில் உள்ள தேசிய சட்டக் கல்லூரியில் படித்து மீண்டும் இலங்கை திரும்பியுள்ளார். அவர் இந்தியாவில் இருந்த பல வருடங்களில் பாலியல்பு பற்றிய ஆராய்ச்சியும், மற்ற [illegible]ழ்சு, [illegible]ரும், ஆராய்ச்சியாளருமான இவர், தில்லி, பெங்களூரு, சென்னை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பல்வகை சமூக மாற்ற இயக்கங்களுடன் பணிபுரிந்துள்ளார். நிரந்தரமாகத் தமிழகத்தில் வாழ்வும் பணியும் அமைக்கும் கனவை நினைவாக்க முனைகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்படும். ஆனால் பொதுவெளியில் அரசியலாகக் கூறப்படும் இவ்வடையாளக்குறிகள், அதுவும் பெண்களால் கூறப்படுபவை சமூக நெறிமுறையை எதிர்த்துத் திடமாய் நிற்பவையாய் அமைந் துள்ளன. அதே சமயம் உடலுறவு மட்டுமே குறிப்பிடும் அடையாளப் பெயர்கள் அப்பெண்களின் பற்பல அனுபவங்களைச் சுட்டிக்காட்டுபவையாய் அமைவது கடினம். இவ்வனைத்துக் காரணங்களால் யோனியுடன் பிறந்து பற்பல பாலினம் (gender) மற்றும் பாலியல் (sexuality) கொண்டவர், ஓர்பாலின ஈர்ப்புள்ளவர் ஆகியோரைச் சேர்ந்து இக்கட்டுரையில் க்வியர் என்று அழைக்கப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமல்லாமல் இப்பெண்கள் க்வியர் மட்டுமல்லாமல் குறிப்பிட்ட இடம், மதம், சாதி, வர்க்கம் ஆகியவற்றை சார்ந்தவர். அவரது வாழ்க்கைப் போராட்டத்தில் இவ்வடையாளங்களும் முக்கிய பங்கு வகிப்பவையாகும். இவ்வனைத்து அடையாளங் களும் ஒன்றியே ஒரு மனிதரின் வாழ்க்கை மற்றும் வாழ்வுரிமைக் கான போராட்டத்தை வடிவமைக்கின்றன.

இப்பெண்கள் க்வியர் மட்டுமல்லாமல் குறிப்பிட்ட இடம், மதம், சாதி, வர்க்கம் ஆகியவற்றை சார்ந்தவர். அவரது வாழ்க்கைப் போராட்டத்தில் இவ்வடையாளங்களும் முக்கிய பங்கு வகிப்பவையாகும். இவ்வனைத்து அடையாளங்களும் ஒன்றியே ஒரு மனிதரின் வாழ்க்கை மற்றும் வாழ்வுரிமைக்கான போராட்டத்தை வடிவமைக்கின்றன.

சமூகத்தில் ஆணாகக் காணப்படும் க்வியர் நபர்களின் அனுபவம் மிகவும் வேறுபட்டதாகும். ஆண்கள் என்ற காரணத்தால் சமூகத்தி லுள்ள உரிமை மற்றும் ஆதிக்கம் க்வியர் ஆண்களுக்கும் உண்டு. பொதுவெளியில் சுதந்திரமாக நடமாடும் உரிமை மற்றும் வேலை பார்க்கும் உரிமை ஆகியவை எளிதாக உள்ளவை. இதனால் வரும் சுதந்திரம் அவ்வாண்களுக்கு ஒருசில கணங்களில், நேரங்களில் இடம் கொடுக்கிறது. இந்தச் சுதந்திரம் ஒருசில நேரம் அழுத்த மாகவும் மாறலாம். அதே சமயம் க்வியர் ஆண்களின் அனுபவங் களை ஒரே நேர்கோடாக இடமுடியாது. இதிலும் சாதி, மதம், இடம், வர்க்கம், உடல்நலம் ஆகியவை சார்ந்தவையாக பெண்கள் மத்தியில் உடல்சார்ந்த அறிதல், மற்றும் இச்சை மற்றும் வலி பற்றிய அறிதல் ஆகியவை மிகக்குறைவு. இவ்வகை அறிதல் அனுமதிக்கப்படு வதில்லை. ஆண்கள் மத்தியில் உடல் மற்றும் உடலுறவு சார்ந்த அறிதல் தவறானதாகவும் தூய்மைக் கேடு புரிவதாகக் கருதப்பட்டா லும் ஓரளவு அனுமதிக்கப்பட்டுள்ளது. பெண்கள் தன் சொந்த உடலையே அறிய அனுமதியில்லாமல் இன்னொரு பெண்ணின் உடலை அறிதல் கண்டிப்பாக அனுமதிக்கப்படுவதில்லை. இத்தகைய காரணங்களால் பெண்கள் மத்தியிலான ஓர்பாலின உடலுறவு சமூக நெறிகளுக்கு முழுதும் புறம்பானதாய்க் கருதப்பட்டுக் கண்டிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பின்புலத்தில் ஓர்பாலினச் சேர்க்கை பெண்களின் வாழ்க்கை சமூக நெறிமுறை மீறி வாழும் பல பெண்களின் வாழ்விலிருந்து அவ்வளவு மாறுபட்டதல்ல. இதையும் தாண்டி க்வியர் பெண்களின் அனுபவம் மாறுபட்டதாகும். இதற்கான காரணங்கள் கீழ்வருமாறு. முதலில் வேற்றுப் பாலியலின் நெறிமுறையான ஆணுக்கான தேவை ஆணின் மேல் கட்டாய சார்பு ஆகியவை க்வியர் பெண்களினால் தகர்த்தெறியப்படுகிறது. இரண்டாவதாக 'குடும்பம்' என்பதற்கான நெறிமுறைகள் உடைக்கப்படுகின்றன. குழந்தைபெறல் இல்லாததால் குடும்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைமுறை தகர்க்கப்படுகிறது. மூன்றாவதாக இப்பெண்கள் இச்சையுடன் இன்பம் அளிக்கும் உடலுறவில் ஈடுபட்டுப் பெண்களுக்கு அனுமதிக்கப்படாத இன்பம் சார்ந்து வாழ்வதால் அவர் பல நெறிமுறைகளை உடைத்தெறிகின்றார்.

சட்டம்சார் அனுபவங்கள்

சட்டப்படி ஒருபெண் பிறந்த வீட்டிற்கு வெளியே இன்னொரு ஆணின் கீழ் வாழாதது ஒரு பெரிய நெறிமுறை மீறல் ஆகும். அதற்குமேல் இன்னொரு பெண்ணுடன் வாழ முனைவது எரியும் விளக்கில் எண்ணை ஊற்றுவதாக அமைகிறது.

சட்டரீதியாக க்வியர் ஆண்கள் மற்றும் பெண்களின் அனுபவங் களில் ஒருசில பொதுவானதாகவும், ஒருசில வேறுபட்டனவையாக வும் உள்ளன. ஐ.பி.சி. பிரிவு *377* க்வியர் ஆண்கள், பெண்கள் இருவரையும் பாதிக்கிறது. காவல்துறையினர் கைது செய்யவில்லை என்றாலும் அடிக்கடி அச்சுறுத்தல் செய்வது வழக்கம். அதிலும் பொது இடங்களில் அடிக்கடி காணப்படும் க்வியர் ஆண்கள் குறிப்பிட்ட வகையில் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாண்கள் பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினராக உள்ளனர். வாழ்விடம், வேலையிடம், பள்ளிக்கூடம் ஆகிய இடங்களில் சட்டப்படி குற்றம் என்பது தொடர்ந்து பயமுறுத்துவதாக உள்ளது. பிரிவு 377 இல்லாமல் இன்னும் பல சட்டங்கள் இப்பெண்களின் மீது தாக்கமுள்ளவையாக அமைந்துள்ளன.

2006இல் தில்லி நீதிமன்றத்தில் ஓர் அபூர்வமான வழக்கு தொடரப்பட்டது. ஓர் ஓர்பாலினச் சேர்க்கை பெண், தன் காதலியுடன் இருக்க அனுமதிக்கப்படாததால் வீட்டைவிட்டு ஓடிவந்துவிட்டார். அவரது பெற்றோர் அவர் காதலிக்கு எதிராக ஆள்கடத்தல் வழக்கைப் பதிவு செய்தனர். வீட்டைவிட்டு வந்த பெண் நீதிமன்றத்தில் தாம் கடத்தப்படவில்லை தன்னிச்சையாகவே வெளியேறினேன் என வாக்குமூலம் அளித்ததுடன் வழக்கு நிறைவு பெற்றது. இது இயக்கத்தவர் மத்தியில் ஒரு வெற்றியாகக் கொண்டாடப்பட்டது

மற்ற சட்டப்பிரிவுகள்

பிரிவு *377* இல்லாமல் இன்றும் பல ஐ.பி.சி பிரிவுகள் க்வியர் பெண்கள் மீது தாக்கமுள்ளவையாக அமைந்துள்ளன. அவை கீழ்வருமாறு: பிரிவு *340* முறையின்றி சிறைப்படுத்துதல், பிரிவு *361* ஆள்கடத்தல், பிரிவு *362* கடத்தல், பிரிவு *366* கட்டாய கல்யாணம் செய்யவைத்தல், பிரிவு *368* ஆள்கடத்தப்பட்டவரைச் சிறையி லடைத்தல் மற்றும் ஆட்கொணர்வு ஆணை (habeas corpas writ) ஆகியவை அடங்கும்.

*2006*இல் தில்லி நீதிமன்றத்தில் ஓர் அபூர்வமான வழக்கு தொடரப்பட்டது. ஓர் ஓர்பாலினச் சேர்க்கை பெண், தன் காதலியுடன் இருக்க அனுமதிக்கப்படாததால் வீட்டைவிட்டு ஓடிவந்துவிட்டார். அவரது பெற்றோர் அவர் காதலிக்கு எதிராக ஆள்கடத்தல் வழக்கைப் பதிவு செய்தனர். வீட்டைவிட்டு வந்த பெண் நீதிமன்றத்தில் தாம் கடத்தப்படவில்லை தன்னிச்சையாகவே வெளியேறினேன் என வாக்குமூலம் அளித்ததுடன் வழக்கு நிறைவு பெற்றது. இது இயக்கத்தவர் மத்தியில் ஒரு வெற்றியாகக் கொண்டாடப்பட்டது. ஆனால் இந்த வழக்கில் இரண்டு பெண்களுக்கிடையிலான உறவை நாங்கள் நீதிமன்றத்தில் மறைத்தோம். அவர் சட்டப்படி வயது வந்தவர் என்ற கூற்றை மட்டுமே அழுத்தமாகக் கூறினோம். இயக்கத்தின் மூலம் நாங்கள் எழுத விழையும் வரலாறு மறைக்கப்படுவது தெளிவாகத் தெரிகிறது. இந்நிலைமையில் நொடி ஈடுபாடு உள்ள வழக்குகள் மற்றும் இயக்க நண்பர்கள் அறிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகள் மட்டுமே பதிவு செய்யப்படுபவை. இதனிடையில் பல கதைகள் நிகழ்ந்ததறியாமல் தொலைந்து போய்விடுகின்றன.

கேரளத்தில் நடந்த ஒரு வழக்கில் ஒரு பெண்ணின் பெற்றோர் இன்னொரு பெண்ணுக்கு எதிராகக் கடத்தல் வழக்குத் தொடர்ந்தனர். அதே சமயம் காவல் நிலையத்தில் காணாமற்போனவர் வழக்கும் பதிவு செய்தனர். இவ்வழக்கில் நீதிமன்றம் சட்டப்படி 18 வயதிற்கு மேலான இவ்விரு பெண்களை அவர் இஷ்டத்திற்கு மாறாக அவரவர் பெற்றோருடன் அனுப்பிவைத்தது. இவ்விரு பெண்களுக்கும் மிக்க வன்முறையுடனான மருத்துவ சிகிச்சை கொடுக்கப்பட்டது. அதே சமயம் கேரளத்தில் இன்னொரு வழக்கில் ஒரு பெண்ணின் காதலியைக் கண்டுபிடிக்க ஆட்கொணர்வு ஆணை கோரி வழக்குத் தொடர்ந்தது. தம் பெற்றோரால் அடைத்து வைக்கப்பட்டிருந்த அந்தப் பெண் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டார். நீதிமன்றம் அவ்விரு பெண்கள் எங்கு வேண்டுமானாலும் சேர்ந்தோ தனியாகவோ வாழலாம் எனத் தீர்ப்பளித்தது. இதனால் 18 வயதிற்கு மேற்பட்டவர் எனும் வாதம் எல்லா நேரமும் இப்பெண்களுக்குச் சாதகமாக அமைவதில்லை.

வழக்கமாக ஆட்கொணர்வு ஆணை சட்டத்தை மீறி சிறைப் படுத்தப்பட்டவரைக் கண்டறிய பயன்படுத்தப்படும் சட்டமாகும். இது அரசு நிறுவனங்களான காவல்துறை மற்றும் சிறையில் உள்ளவருக்காகப் பெரும்பாலும் சிறைப்படுத்தப்பட்டவரையும் இச்சட்டத்தின்படி கண்டறிய வழக்குகள் தொடரப்படலாம். சிறையில் அமைக்கப்பட்டுள்ள ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஆண்களைக் கண்டுபிடிக்க பயன்படுத்தப்படும் இச்சட்டம், உரிமைசார் கோட்பாடுகளுக்குச் சாதகமாக அமைகிறது. ஆனால் சமுதாய வரைமுறையை மீறிவாழும் பெண்கள், அவர் வேற்றுச் சாதிய ஆணைக் காதலிப்பவரோ அல்லது இன்னொரு பெண்ணைக் காதலிப்பவரோ எங்குள்ளவர் என்று கண்டறிய பெற்றோரால் பயன்படுத்தப்படும் போது அதே உரிமைசார் கோட்பாட்டிற்கு எதிராக அமைகிறது. பல நேரங்களில் இச்சட்டம் 18வயதிற்கு மேலான பெண்ணை அவரது விருப்பத்திற்கு மாறாகப் பெற்றோருடன் அனுப்புவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. மற்ற நேரங்களில் நீதிமன்றமே அவரைப் பாதுகாப்பிடங்களுக்கு அனுப்புகின்றன. இதிலும் வரைமுறையைத் தாண்டினாலும் வேற்றுப்பாலின தம்பதியினரின் இச்சட்டத்தைத் தமக்கு சாதகமாக அவ்வப்போது பயன்படுத்த முடிகிறது. சமூகத்தினால் அங்கீகரிக்கப்படாததால் இச்சட்டத்தையோ, வேறு எந்த சட்டத்தையோ தமக்குச் சாதகமாய் பயன்படுத்தல் முடியாது.

கேரளத்தில் இன்றும் இரண்டு பெண்களுக்குச் சாதகமான தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியது. ஆனால் அதனை அவரது பெற்றோர் முன்னிலையில் செயல்படுத்துமாறு கூறியது. பெற்றோர் தீர்ப்பிற்கு முரணாக அவர்களைப் பிரித்து உடல் மற்றும் மனரீதியாக அவர்களை அச்சுறுத்தினர். தம்மிடமிருந்து பிரிக்கப்பட்டுப் பெற்றோரால் சிறைவைக்கப்பட்டுள்ள காதலியைக் காப்பாற்ற ஒருவர் ஆட்கொணர்வு ஆணை கோரி வழக்குத் தொடர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வழக்கு இரு பெண்களுக்கிடையில் எந்த 'தொடர்பு' அதாவது குடும்பம் அல்லது விவாகம் சார்ந்த தொடர்பில்லாததால் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படவில்லை. எந்தவித சட்டரீதியான தெளிவான காரணம் இல்லாவிடினும் 'தொடர்பு' என்பதற்கான அர்த்தத்தைச் சுருங்கிப் புரிந்துகொண்டு நீதிமன்றம் இவ்வழக்கை ரத்து செய்தது. சட்டம் மற்றும் நீதிமன்றத்தில பெண்கள் தனியாகவோ அல்லது காதலிகளாகவோ வந்து சாதகமான சேவைகள் பெற இயலாது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

அதே கேரளத்தில் இன்னொரு வழக்கில் இரு பெண்கள் திறந்த வெளியில் தம்மிடையே உள்ள காதல் உறவை வெளிப்படுத்தினர். இதில் ஒரு பெண்ணின் உருவத்தைச் சார்ந்து அவர் ஆணா, பெண்ணா எனும் கேள்வி எழுப்பப்பட்டது. எவ்வாறிருந்தாலும், இவர் இருவரும் 18வயதிற்கு மேலானோர் என்ற காரணத்தால் அவர் இஷ்டப்படி வாழ உரிமையுள்ளவர் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதே மாதிரியான ஒரு வழக்கில் பாகிஸ்தானில் ஷகீனா மற்றும் ஷமாயில் ஈடுபட்டிருந்தனர். பெண்ணாய் பிறந்து ஆணாய் வாழும் ஷமாயில் நீதிமன்றத்தில் தாம் ஆண் என கூறியது பொய் எனக் கொண்டு நீதிமன்றம் அவருக்கு மூன்று வருட சிறைத் தண்டனை அளித்தது. இவரிருவரும் ஒன்றாய் வாழ அதே நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனால் இரு பெண்களும் சுதந்திரமாய் வாழ வழிவகுத்தது. ஆனால் இதில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது. கீழ்வருமாறு: ஆணாக வாழும் ஷமாயில் அறுவை சிகிச்சை மருந்துகள் மூலம் ஆணாக மாறிக் கொண்டிருந்தாலும் அதனை நீதிமன்றம் அங்கீகரிக்க மறுத்தது. வழக்கு அவரது தொடர்பு குறித்ததே ஒழிய அவரது பாலினம் பற்றித் தொடுக்க படவில்லை யென்றாலும் நீதிமன்றம் தன்னிச்சையாக அவரது பாலினம் பற்றித் தீர்ப்பளித்தது அவசியம் என்று கருதியது. ஒரு பெண், ஆணாக வாழ்ந்தாலும் அவர் மீதுள்ள அழுத்தத்தை நாம் இங்கு காணலாம்.

நீதிமன்றங்களின் ஓரினச்சேர்க்கை பெண்கள் பற்றியான பெரும் குழப்பம் இவ்வனைத்து வழக்குகளில் தெளிவாக தெரிகிறது.இப்படிப்பட்ட மனிதர்கள் உள்ளனர் என்பதே பலரால் யோசிக்கமுடியாத விஷயம். அதிலும் அவர் தம் காதல், இச்சை மற்றும் வாழ்க்கைக்காகச் சமூகத்தை எதிர்த்து போராடுகின்றனர் என்பது நீதிமன்றத்திலும் பிற இடங்களிலும் அதிர்ச்சியுடன் கண்டு, வேறு வழியில்லாமல் போனதாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

நீதிமன்றங்களின் ஓரினச்சேர்க்கை பெண்கள் பற்றியான பெரும் குழப்பம், இவ்வனைத்து வழக்குகளில் தெளிவாக தெரிகிறது. இப்படிப்பட்ட மனிதர்கள் உள்ளனர் என்பதே பலரால் யோசிக்க முடியாத விஷயம். அதிலும் அவர் தம் காதல், இச்சை மற்றும் வாழ்க்கைக்காகச் சமூகத்தை எதிர்த்து போராடுகின்றனர் என்பது நீதிமன்றத்திலும் பிற இடங்களிலும் அதிர்ச்சியுடன் கண்டு, வேறு வழியில்லாமல் போனதாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இத்தகையான பெரும் குழப்பத்திற்கான ஒரு நல்ல உதாரணம் கீழ்வருமாறு:

மும்பையில் உள்ள ஜல்காவ் என்ற இடத்தில் இரு பெண்கள் பல்லாண்டுகளாகக் காதலர்களாக இருந்துவந்தனர். இவர்களது வீடுகள் அருகருகில் இருந்தன. கல்யாணம் செய்து குழந்தை பெற்ற இப்பெண்கள் தம் கணவருடன் வாழ்ந்து வந்தனர். ஒருநாள் இவ்விரு பெண்களும் ஏதோ சினிமாவில் நடப்பதுபோல் நடக்கும் என எண்ணி அருகில் இருந்த காவல் நிலையத்திற்குச் சென்று அவரிருவர் இடையில் மணமுடித்து வைக்குமாறு கூறினர். காவல்துறையினர் அவரை விசாரணை செய்து இருவரையும் சிறையிலடைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் ஒருவரைத் தேடிவந்த அவர் கணவரையும் சிறையிலடைத்தனர். இதுமட்டுமல்லாமல் இவ்விரு பெண்களும் ஒருவருடன் ஒருவர் உடலுறவு வைத்துள்ளனரா என காண அவர் யோனியில் இரண்டு விரல்கள் நுழைத்துச் 'சோதனை' செய்யப்பட்டது. இது மிகப்பெரிய சட்டம் மற்றும் உரிமை மீறலாகும். இவ்விரு பெண்கள் பல நேரங்களில் காவல்நிலையங்களில் சாதி விட்டு, மதம் விட்டு மணம்புரியும் வேற்றுப் பாலின தம்பதியருக்குள்ள உரிமை, தம் காதலின் பெயரால் தமக்கும் உண்டு என தவறாக நம்பினர். இக்காதலை கண்டு திக்கு முக்காடிப்போன காவல்துறையினர் தமக்குத் தெரிந்த கொடும் விசாரணையும் சோதனையும் சட்டத்தை மீறி மனசாட்சியின்றி மேற்கொண்டனர்.

பெண்கள் ஒரு தனிமனிதர் என்பதை அங்கீகரிப்பதே சட்டத்தில் குழப்பம் உண்டாக்கும். அதிலும் அவர் தாய், மனைவி அல்லது மகளாக வராமல் இன்னொரு பெண்ணின் காதலியாக வந்து நிற்கும்பொழுது அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி நீதிமன்றத்திலோ காவல்துறையிலோ கிடையாது.

இறுதிச் சுருக்கம்

இந்தியச் சூழலில் பாலியல்புகள் கேள்விகளை எழுப்பவும் அதைப் பற்றிப் பொது வெளியில் பெரும் பிரிவு 377ஐ மாற்ற மேற்கொள்ளப்பட்ட இயக்கம் மிகவும் முக்கியமானது. தனிநபரின் தினசரி வாழ்க்கையில் இவ்வியக்கத்தின் தாக்கம் சிக்கலானது. சட்டத்திலான மாற்றங்களும் அதன் தாக்கமும் எல்லோர் மீதும் ஒன்றுபோல இருப்பதல்ல. ஆக்கப்பூர்வமாக உரிமை அளிக்கும் சட்ட மாற்றங்கள் பெண்களுக்கு வன்முறையை எதிர்க்கவும் கல்யாணம், வேலையிடம் போன்ற சூழல்களில் உதவியாய் அமைகின்றன. பாகுபாடுகளை அகற்றும் சட்ட மாற்றங்கள் பெண்களுக்கு அதே வகையில் பயன்படுவதில்லை. பிரிவு 377 இன் மாற்றம் இரண்டாம் வகையாகும். அது மட்டுமல்லாமல் பிரிவு 377இன் வரலாறு என்றும் ஆண்களுடன் சேர்ந்தே காணப்பட்டுள்ளது. இதில் பெண்களின் இடம் தெளிவானதல்ல. அதேபோல இப்பிரிவிற்கெதிரான போராட்டத்திலும் பெண்களின் இடத்தை உன்னிப்பாக கவனிக்க வேண்டிய தேவை உள்ளது. இவ்வகையான பகுப்பாய்வின் மூலம் சமூக போராட்டங்களில் சட்டமாற்றத் திற்கான போராட்டங்கள் பற்றியும் நாம் கூர்ந்து யோசிக்க முடிகிறது. இதனைப் பலவகையில் மேற்கொள்ளலாம். முதலாவதாக சமூகமாற்ற இயக்கங்களில் சட்டமாற்றத்திற்கு அளிக்கப்படும் முக்கிய இடம் குறித்து யோசித்தல் அவசியம். இரண்டாவதாக இத்தகைய சிறப்பிடத்தால் இந்த சட்டமாற்றத்துள் சரிவர அடங்கா பல அடையாளக்குழுக்கள் விடுபடுகின்றனர் என்பதையும் அங்கீகரித்தல் அவசியம். பொதுவெளியில் புழங்கும் சட்டமானது சமூக இயக்கங்களின் ஒரு அங்கமாக மட்டுமில்லாமல் அவைகளை வரையறை செய்வதில் முக்கிய பங்குவகிக்கின்றது. உதாரணமாக இயக்கங்களில் உள்ள சொல்லாடல் மற்றும் அடையாளம் சார்ந்து உரிமை கோரல் ஆகியவைச் சட்டத்திலிருந்து வரும் கோட்பாடுகளே ஆகும். இக்காரணங்களால் 377ஐ மாற்றுவதை மையமாக கொண்ட சமூக இயக்கத்தில் ஆண்களே முக்கிய அடையாள குழுவாகி

இந்தியச் சூழலில் பாலியல்புகள் கேள்விகளை எழுப்பவும் அதைப் பற்றிப் பொது வெளியில் பெரும் பிரிவு 377ஐ மாற்ற மேற்கொள்ளப்பட்ட இயக்கம் மிகவும் முக்கியமானது. தனிநபரின் தினசரி வாழ்க்கையில் இவ்வியக்கத்தின் தாக்கம் சிக்கலானது. சட்டத்திலான மாற்றங்களும் அதன் தாக்கமும் எல்லோர் மீதும் ஒன்றுபோல இருப்பதல்ல. ஆக்கப்பூர்வமாக உரிமை அளிக்கும் சட்ட மாற்றங்கள் பெண்களுக்கு வன்முறையை எதிர்க்கவும் கல்யாணம், வேலையிடம் போன்ற சூழல்களில் உதவியாய் அமைகின்றன. பாகுபாடுகளை அகற்றும் சட்ட மாற்றங்கள் பெண்களுக்கு அதே வகையில் பயன்படுவதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளனர். க்வியர் சமூகங்களிலுள்ள பெண்கள் இக்காரணத்தாலும் ஆணாதிக்க அழுத்தங்களாலும் அவ்வளவாக பொதுவெளியில் தென்படுவதில்லை. ஆனால் இவ்வாதம், பெண்களை அப்படியே சேர்த்துக்கொண்டு, அடையாளக்குழுவை விரிவுபடுத்தும் நோக்கத் துடன் முன்வைக்கப்படுவதல்ல. நமது சமூக இயக்கங்கள் பல சமயம் தாம் எதிர்க்கும் நிறுவனங்களின் உட்படுத்தல்கள், தவிர்ப்புகளைத் தமது மொழியிலும், போராட்ட வரையறையிலும் பயன்படுத்துவது சகஜம். இதனை குறித்து ஒரு விமர்சன கோணம் அவசியம் என்று கூறுவதே இவ்வாதத்தின் நோக்கம்.

மேலும் பலவகையான க்வியர் இயக்கங்கள் இந்தியச் சூழலில் உள்ளன. இதனுள் பல பெண்களுடன் பணிபுரிபவை. இவ் விமர்சனம் க்வியர் இயக்கத்தை முழுதாக அல்ல மாறாக அவ்வியக்கம் பொதுவெளியில் காணப்படும் முறை பற்றியதாகும். மேலும் சமூக மாற்றச் செயல்களில் சட்டமாற்றம் ஒரு சிறு துளியே ஆகும் என்பதை என்றும் நினைவு கூறல் அவசியம்.

இந்தியச் சூழலில் மட்டுமல்லாமல் தெற்காசியச் சூழலில் பலவகையான க்வியர் போராட்டங்கள் இருப்பதை நாம் என்றும் கொண்டாடுதல் அவசியம். சில இயக்கங்கள் ஒன்று சேர்ந்தும் மற்றவை தனித்தனியாகவும் அமைந்துள்ளன. ஒவ்வொரு தனிப்பட்ட அடையாளக்குழு, ஓரினச்சேர்க்கை ஆண்கள், அரவாணிகள், ஓரினச்சேர்க்கை பெண்கள், பெண்ணாய்ப் பிறந்து ஆணாய் வாழ்பவள் ஆகியோருக்கு அவரவருக்கான தனிப்பட்ட சந்திப்புக்குழுக்கள் அவசியம். இங்கு அவர்கள் மனம் திறந்து பேச முடியும். ஆனால் இத்தகைய குழுக்களையும் விமர்சன மனப்பான்மையுடன் காணுதல் அவசியம். அவ்வப்போது இணைந்து மேற்கொள்ளும் போராட்டங்கள் ஒரு யுக்தியாக அமையலாம். இன்றும் சில நேரங்களில் இவ்விணைப்புகள் ஒரு பகிர்ந்த அரசியல் புரிதலின் காரணத்தால் அமையலாம். இவ் வரசியல் புரிதல் ஒரு பரந்த அளவிலான 'க்வியரை' மேற்கொண்டு செல்வதாகும். இவ்வர்த்தகத்தில் அனைவரும் பாலினம் மற்றும் பாலியல்பு பற்றிய வரைமுறைகளை கேள்வி கேட்கும் உரிமை யுள்ளவராய் அமைவர். மேலும் தம் வாழ்வில் தமது இச்சைக்கேற்ப, மற்றொருவரைத் துன்புறுத்தாது வாழும் உரிமையுள்ளவராயிருப்பர். இவ்வரசியலில் அடையாளக் கூறுகள் குறிப்பிட்ட நேரங்கள் குறிப்பிட்ட காரணங்களுக்காகப் பயன்படும். அடையாளக் குழுக்களும் அவர்களுக்கான குறிப்பிட்ட உரிமைகளுக்கான போராட்டங்களை மீறி இது அனைவரும் சுயமரியாதை, சுதந்திரம் மற்றும் ஒருவரையொருவர் மதிக்கும் ஒரு வேறு உலகம் உருவாக்கும் இயக்க அரசியலாகும். ஒரு சிலரின் ஒரு சில உரிமைகள் வழங்கப்படுவதால் உலகம் மாறுவதில்லை என்பதை நினைவில் கொள்ளல் அவசியம். தில்லி உயர்நீதிமன்றத்தில் 2009, ஜூலை 2ஆம் தேதி அன்று கொடுக்கப்பட்ட தீர்ப்பினால் பல மாற்றங்கள் உருவாகியுள்ளன. இது க்வியர் இயக்கங்களில் மாற்றம் கொணர்ந்துள்ளன. கூடிய சீக்கிரம் ஒரு சட்டம், அதை மாற்றுதல், அதற்காக அடையாளக்குழு அமைத்தல் ஆகியவற்றை மீறி உலகம் பரந்த அரசியலும் அதைத் தழுவிய சமூக இயக்கமும் தொடரும் என்றும் நம்பிக்கை எமக்குள்ளது.

ஒவ்வொரு தனிப்பட்ட அடையாளக்குழு, ஓரினச்சேர்க்கை ஆண்கள் அரவாணிகள், ஓரினச்சேர்க்கை பெண்கள், பெண்ணாய்ப் பிறந்து ஆணாய் வாழ்பவள் ஆகியோருக்கு அவரவருக்கான தனிப்பட்ட சந்திப்புக்குழுக்கள் அவசியம். இங்கு அவர்கள் மனம் திறந்து பேச முடியும். ஆனால் இத்தகைய குழுக்களையும் விமர்சன மனப்பான்மையுடன் காணுதல் அவசியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்.

கட்டுரை
6

அரவாணி/ திருநங்கை சமூகத்தினரின் அரசியலும் தமிழக அரசின் திட்டங்களும் :

புரிதலுக்கானச் சில குறிப்புகள்

■ அனிருத்தன் வாசுதேவன்

1990 களில் பன்னாட்டுத் தொண்டு மற்றும் நிதி நிறுவனங்களான உலக சுகாதார மையம் (WHO) மற்றும் UNAIDS போன்றவை சில சமூகத்தினரை எச். ஐ. வி மற்றும் இதர பால்வினை நோய் தொற்றுக்கு அதிகம் ஆளாகக் கூடியவர்கள் என்று அறிவித்தன. இவர்களுள் ஹிஜ்ரா, அரவாணி/ திருநங்கை சமூகத்தினரும் அடங்குவர். பிறப்பால், உடல்-உயிரியல் அளவில் ஆண்களாகப் பிறந்து பின் பெண் பாலின அடையாளம் ஏற்கும் அரவானிகள் சமூகத்தில் பல்வேறு ஒதுக்குதல்களையும் புறக்கணிப்புகளையும் வன்முறைகளையும் சந்திக்க நேரிடுவது இன்று நாம் பொதுவாக அறிந்திருக்கும் ஒன்று. எனினும், பலருக்கு அரவானிகள்/ திருநங்கைகளுடைய பால்/ பாலின அடையாளங்கள் குறித்த தெளிவின்மை தொடர்கிறது. ஆண், பெண் பாலுறுப்புகளில் குழப்பம் காரணமாக சிலர் அரவானிகளாகப் பிறக்கிறார்கள் என்ற தவறான புரிதல் பலருக்கு இன்னமும் உண்டு. பிறப்பால் பாலுறுப்பு தொடர்பான தெளிவின்மை கொண்ட நிலை ஆங்கிலத்தில் Intersex என்றும் தமிழில் "நடுவின்பால்" என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நிலையில் உள்ள நபர்கள் தங்களை Intersex persons என்று அடையாளப்படுத்திக் கொள்கின்றனர்.

அரவானிகள் என்போர் பிறப்பால், உடல்-உயிரியல் ரீதியாகத் தெளிவாக ஆணாகப் பிறப்பவர்கள். உளவியல் ரீதியாகத் தங்களை ஆணுடலில் சிக்கியிருக்கும் பெண்களாகக் கருதுபவர்கள். இந்த உட்போர் அல்லது முரண்பாடு காரணமாக, குறிப்பாகப் பாலுறுப்புகள் மற்றும் அவை சார்ந்த உணர்வுகள் அதிகம் செயல்படத் தொடங்கும் வயதில், பெண்களின் புற அடையாளங் களை, நடை, உடை போன்ற செயல்பாடுகளை ஏற்கத் தொடங்கு கின்றனர். இதனுடன் பெண்களுடைய தொழில்/ செயல்/ கடமை களாகக் கருதப்படுவனவற்றைச் செய்யும் ஆர்வமும் இவ்வயதில் அதிகம் தென்படுகிறது. இந்த வயதுகளில் தான், இவர்களது பாலின அடையாளங்களும் பாலியல் வெளிப்பாடுகளும் வீடுகளிலும் சமூகத்திலும் பிரச்சனைக்குள்ளாகின்றன. ஆண் பெண் என்ற இரு பாலினத்தவரும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்த சமூக எதிர்ப்பார்ப்புகளுக்கு எதிரானவையாக (ஆண், பெண், ஆண்மை, பெண்மை குறித்த பெரியார் அவர்களின் கருத்துக்கள், வ. கீதா அவர்களுடனான உரையாடல் கட்டுரையில் விவரிக்கப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளன) இருப்பதால் இவை தினசரி பிரச்சனைகளுக்கும் கிண்டல் கேலி எனத் தொடங்கி பாலியல் வன்முறை வரையிலான துன்பங்களை அனுபவிக்க நேரிடுகிறது.

உளவியல் ரீதியான ஆய்வுகள் மற்றும் உளவியல் நிபுணர்களின் கருத்துக்களின்படி மாற்றுப் பாலியல் அல்லது பாலின அடையாளம், உணர்வுகள், விழைவுகள் ஆகியவை தன்னியல்பில் மன உலைச்சல்களையும் மனநலப் பிறழ்வுகளையும் ஏற்படுத்துவ தில்லை. இந்தப் பாலியல் மற்றும் பாலின வெளிப்பாடுகள் வெகுசன சமூகத்தின் பாலியல் சார்ந்த வரையறைகளையும் எதிர்பார்ப்புகளையும் தகர்க்கும் விதத்தில் அமைவதாலும் அதன் காரணமாக மாற்றுப் பாலின, பாலியலாளர்கள் மீது, பொதுவெளி சமூகம் நிகழ்த்தும் பல விதமான எதிர்ப்புகளின் காரணமாகவே மன நலம் குறித்த பிரச்சனைகள் எழுகின்றன; எனினும் பல காரணங் களுக்காக பாலின அடையாளம் குறித்த இந்த நிலையை ஒரு குறைபாடாகவே, Gender Identity Disorder என்ற நிலையிலேயே, அரசும் மருத்துவ சமூகங்களும் பார்க்கின்றன. பாலின அடையாளம் குறித்த இந்த நிலை மருத்துவ சிகிச்சை மற்றும் பராமரிப்புடன் சம்பந்தப்பட்டிருப்பது இதற்கு முதன்மைக் காரணம். இந்த சிகிச்சைகள் வெறும் உடல் அளவிலான Cosmetic முறைகள் அல்ல என்பதையும் இந்த சிகிச்சைகள் சாத்தியப்படுத்தும் மாற்றங்கள் ஒருவருடைய சுய அடையாளத்தை நிரந்தரமாக மாற்றியமைக்கும் வகையிலானவை என்பதையும் அந்த நபருடைய உடல் மற்றும் மன நலமும் சமூகத்தில் அவரது செயல்பாடும் இந்த சிகிச்சையினால் கணிசமான முறையில் மாற்றப்படுகின்றன என்பதை Harry Benjamin Standards of Care for Gender Identity Disorders (பாலின அடையாள குறைபாடுகள் குறித்த சிகிச்சைக்கான ஹாரி பெஞ்சமின் அளவுகோல்கள்) போன்ற சர்வதேச அளவுகோல்கள் தெரிவிக் கின்றன. எனினும் இவை அனைத்தும் தனது பாலின அடையாளம் குறித்த குழப்ப நிலையில் உள்ள, தன் உடல் நிர்ணயிக்கும் பாலின வரையறைகளுக்கும் உளவியல் ரீதியாக உள்ள பாலின சுய வெளிப்பாட்டிற்கும் பிளவு இருப்பதாக உணரக்கூடிய நிலையைப் பற்றிய விவாதங்கள் மற்றும் பாலின அடையாள மாற்றம் குறித்த முறையான முயற்சிகளும் சிகிச்சைகளும் பெருமளவிற்கு இந்த நிலைமையை மாற்றுகின்றன. ஒருவர் முழுமையான பால் மாற்றத்திற்குத் தயாராக இருக்கிறாரா என்பதை நிர்ணயிக்கவும் அந்த மாற்றத்திற்கானச் சிகிச்சையில் எந்தெந்த உடல் நல மற்றும் மன நல மருத்துவ முறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதற்கான சர்வதேச அளவுகோல்கள் உள்ளன.

தன் உடல் நிர்ணயிக்கும் பாலின வரையறைகளுக்கும் உளவியல் ரீதியாக உள்ள பாலின சுய வெளிப்பாட்டிற்கும் பிளவு இருப்பதாக உணரக்கூடிய நிலையைப் பற்றிய விவாதங்கள் மற்றும் பாலின அடையாள மாற்றம் குறித்த முறையான முயற்சிகளும் சிகிச்சைகளும் பெருமளவிற்கு இந்த நிலைமையை மாற்றுகின்றன. ஒருவர் முழுமையான பால் மாற்றத்திற்குத் தயாராக இருக்கிறாரா என்பதை நிர்ணயிக்கவும் அந்த மாற்றத்திற்கானச் சிகிச்சையில் எந்தெந்த உடல் நல மற்றும் மன நல மருத்துவ முறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதற்கானச் சர்வதேச அளவுகோல்கள் உள்ளன.

அரவானிகள் சமூக நலவாழ்வு குறித்த தமிழக அரசின் ஆணைகளி லும் "குறைபாடு" (disorder) என்கிற சொல்லாடல் இருப்பதைப் பார்க்க முடிகிறது. சில சிறுவர்கள் தங்களை மனதளவில் பெண்கள் என்று கருதுவது "behavioural disorder," ஒரு செயல்பாட்டுக் குறைபாட்டினை ஏற்படுத்துவதாக 2006இல் வெளிவந்த தமிழக அரசு ஆணை ஒன்று கூறுகிறது. அரசுதவி தேவைப்படுகிற சமூகம் என்கிற வரையறைக்குள் இத்தகைய சொல்லாடல்கள் அரவானி சமூகத்தை நிலைநிறுத்துகிறது. அமெரிக்கா போன்ற நாடுகளிலும் Transgender/ Transsexual சமூகங்கள் தங்களது அரசுகளின் இத்தகைய சொல்லாடலுடனேயே இயங்குகின்றன. தங்களது பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்று சிகிச்சைக்கான மருத்துவக் காப்பீடுகள், அரசு வழங்கும் மருத்துவ உதவிகள் மற்றும் சலுகைகள் போன்றவையும் இத்தகைய சொல்லாடலைத் தேவையாக்குகின்றன.

தமிழக அரசும் அரவானி சமூகமும்

அரசுடனான தங்கள் சமூகத்தின் வெற்றிகரமான முதல் போராட்டம் என்று அரவானி சமூகத்தினர் கருதுவது 2004 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ரிட் மனு. இது அரவானிகளுக்குக் குடும்ப அட்டை வழங்கப்பட வேண்டும் கோரி தொடரப்பட்டது. வங்கிக் கணக்குத் திறப்பது, வங்கிக் கடன் பெறுவது, தொலைபேசி இணைப்புக்கு விண்ணப்பிப்பது போன்றவற்றிக்குத் தகுதியானவராகக் கருதப்பட ஒருவருக்கு அடையாள அட்டை வேண்டியிருக்கிறது. மேலும் மாற்றுப் பாலின அடையாளம் ஏற்பதால் அரவானிகளுக்குத் தங்களது பழைய அடையாளத்தைக் குறிக்கும் அட்டைகள் பயன்படுவதில்லை. இக்காரணங்களினால் இந்த மனு தொடரப்பட்டது. மதுரை தலித் தோழமை மையத்தைச் சேர்ந்த ரஜனி அவர்களும் இந்த வழக்கை தொடர முன்வந்த 'தேனி ஆரோக்கிய அகம்' அமைப்பில் பணிபுரிந்து வந்த பிரியா பாபு அவர்களும் அரவானி சமூகத்தினருக்குத் துணை நின்றார்கள். ஜூலை 2004இல் சென்னை உயர் நீதிமன்றம் வெளியிட்ட அறிவிப்பில் அரவானிகள் அரசு அடையாள அட்டைகளுக்கும் ஆவணங்களுக்கும் விண்ணப்பிக்கும் பொழுது ஆண் அல்லது பெண் இரண்டில் தங்களுக்கு விருப்பமானதைத் தேர்வு செய்துகொள்ளலாம் என்று கூறியது. இது அரவானி சமூகத்தினருக்குத் திருப்தியளிப்பதாக இல்லை எனினும் அப்பொழுதிற்கென இதனை ஏற்றுக்கொண்டனர். ஆனால் இச்சமூகத்தினரின் போராட்டங்கள் காரணமாக சில நல்ல மாற்றங்கள் நிகழத் தொடங்கின. உதாரணமாக, காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சியாளர்கள் இந்திரா ஆவாஸ் திட்டத்தின் கீழ் அரவானிகளுக்கு வீடுகள் வழங்கப்படும் என்று அறிவித்தனர்.

சமூக மாற்றத்திற்கான அரவானிகளின் பணிகள் தொடர்ந்தன. எச்.ஐ.வி விழிப்புணர்வு மற்றும் தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அரசு சார் நிறுவனங்கள், மற்ற தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் மூலமாக சமூகத்தில் தங்களது இருப்பையும் வழங்கப்பட வேண்டிய உரிமைகளையும் குறித்து அரவானிகள் தொடர்ந்து பேசி வந்துள்ளனர்

இதன் பிறகு சமூக மாற்றத்திற்கான அரவானிகளின் பணிகள் தொடர்ந்தன. எச்.ஐ.வி விழிப்புணர்வு மற்றும் தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அரசு சார் நிறுவனங்கள், மற்ற தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் மூலமாக சமூகத்தில் தங்களது இருப்பையும் வழங்கப்பட வேண்டிய உரிமைகளையும் குறித்து அரவானிகள் தொடர்ந்து பேசி வந்துள்ளனர். Center for Social Initiative and Management போன்ற கல்வி நிறுவனங்கள் அரவானிகளுக்குச் சமூகப் பணி, கணினி போன்ற துறைகளில் பயிற்சியளிக்க முன்வந்தது. "கண்ணாடிக் கலைக் குழு" என்ற நாடகக் கலைக் குழு மூலம், அரவானிகளின் பாலியல்பு, பாலினம், அடையாள அரசியல் போன்றவை குறித்த நாடகங்களைத் தயாரித்து நிகழ்த்தினர்.

எனினும் அரசுடனான உரையாடல்களில், அரசுத் திட்டங்களில் முக்கிய மாற்றங்கள் நிகழத் தொடங்கியிருப்பது 2006ஆம் ஆண்டிலிருந்து தான். பெரிய மாற்றங்களை நிகழ்த்த அரசின் பார்வை அரவானி சமூகத்தின் மீது பட மிகப் பெரிய ஊர்வலம் ஒன்றை நடத்த முடிவு செய்தனர். தமிழ்நாடு அரவானிகள் குழுமத்தைச் சேர்ந்த ஆஷா பாரதி அவர்கள் தலைமையில் நடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஊர்வலத்திற்குப் பிறகு சமூக நலத்துறை அமைச்சர் பூங்கோதை அவர்களிம் மனு வழங்கப்பட்டது. இந்த மனுவில் வாக்காளர் அடையாள அட்டைகள், வீட்டு வசதி ஆகியவை உட்பட பல்வேறு கோரிக்கைகள் குறிப்பிடப்பட்டிருந்தன.

திசம்பர் 2006இல், அரவானிகள் வாழும் சூழ்நிலைகளில் முன்னேற்றம் கொண்டு வரவேண்டும் என்று அரவானிகள் நலவாழ்வுக்கான துணைக்குழு பரிந்துரைத்தது. இது குறித்துப் பின்னர் அரசு தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது[1]

துணைக்குழுவின் பரிந்துரைகளில் பல விஷயங்கள் குறிப்பிடப் பட்டிருந்தன: பள்ளிப் பருவத்தில் நடத்தை மாற்றம் காணப்படும் சிறுவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் மன நல ஆலோசனை, 'ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்களை' பால் மாற்றம் செய்வதிலிருந்து தடுப்பது போன்றவை குறிப்பிடப் பட்டிருந்தது. இதனையொட்டி வெளிவந்த அரசு ஆணை பல முக்கிய விஷயங்களைப் பட்டியலிட்டிருந்தது: அரவானிகளுக்கு அனுமதி வழங்காத பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் மீது நடவடிக்கைகள், அரவானிகள் சுய உதவிக் குழுக்களுக்கு சிறு நிதியுதவிகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள், பால் மாற்று அறுவை சிகிச்சை வேண்டி அரவானிகள் அணுகும் மருத்துவமனைகளுக்குத் தேவையான அறிவுப் பூர்வமான தகவல்கள், மன நல ஆலோசனை வழங்குவதற்கானப் பயிற்சி, காலாண்டிற்கு ஒரு முறை மாவட்ட ஆட்சியாளரைச் சந்தித்து அடையாள அட்டைகள் குறித்த புகார்களைத் தெரிவிப்பது போன்றவை செயல்படுத்தப்பட வேண்டும் என்று இந்த அரசு ஆணை தெரிவித்தது. இவைத் தவிர அரவானிகளின் வாழ்வியல் குறித்த விரிவான ஆய்வும் தமிழகத்தில் நடத்தப்பட வேண்டும் என்று இந்த ஆணை வலியுறுத்தியது.

மே 2008இல் சமூக நலவாழ்வுத் துறையின் கீழ் அரவானி நல வாரியம் அமைக்கப்பட்டது. அதே மாதம் நிறைவேற்றப்பட்ட ஒரு ஆணை தமிழகக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் அரவானிகளுக்கு இட ஒதுக்கீடு வழங்கியது[2].

மார்ச் 2009இல் அரவானிகள் நல வாரியத்தின் பரிந்துரைக்குப் பின்னர் சென்னை அரசு பொது மருத்துவ நிலையத்தில் அரவானி களுக்கு இலவச பால் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது. இது அரவானி சமூகத்தினருக்கு வரவேற்கத் தக்க மாற்றமாக இருந்தது. தங்கள் பால் மாற்று சிகிச்சைக்கு முறையான மருத்துவ வசதி இல்லாததால் பல காலங்களாக அரவானிகள் அபாயகரமான சிகிச்சை முறைகளை நாடிச் செல்ல வேண்டியிருந்துள்ளது. மேலும், முறையான மன நல ஆலோசனை மூலம் இந்த தீவிரமான சிகிச்சைக்கு ஒருவர் தயாராக இருக்கிறார் என்பதை உறுதிசெய்த பின்னரே ஹார்மோன் சிகிச்சையும் அறுவை சிகிச்சையும் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் இதன் பின் எழுந்தன.

தங்கள் பால் மாற்று சிகிச்சைக்கு முறையான மருத்துவ வசதி இல்லாததால் பல காலங்களாக அரவானிகள் அபாயகரமான சிகிச்சை முறைகளை நாடிச் செல்ல வேண்டியிருந்துள்ளது. மேலும், முறையான மன நல ஆலோசனை மூலம் இந்த தீவிரமான சிகிச்சைக்கு ஒருவர் தயாராக இருக்கிறார் என்பதை உறுதிசெய்த பின்னரே ஹார்மோன் சிகிச்சையும் அறுவை சிகிச்சையும் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் இதன் பின் எழுந்தன.

அரசின் கவனம் விளிம்புநிலைச் சமூகம் ஒன்றின் மீது விழுந்திருப்பதும் அச்சமூகம் குறித்த பல நலவாழ்வுத் திட்டங்களை அந்த அரசு மேற்கொள்வதும் வரவேற்கத் தகுந்தவை. எனினும் அரசு நிறுவனங்கள் இவை குறித்த தங்களது பணிகளைச் செம்மையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றுவதை உறுதிசெய்ய அரவானி சமூகத்தினரும் தங்களை ஒன்றுபட்ட குழுவாக அமைத்துக் கொண்டுள்ளனர். Federation of Indian Transgenders என்ற பெயரின் கீழ் "சிதா ஃபௌண்டேஷன்," "சகோதரி ஃபௌண்டேஷன்," "அரவானிகள் உரிமை சங்கம்," "தென்னிந்திய பாசிடிவ் அரவானிகள் ஃபௌண்டேஷன்," "அன்பு அறக்கட்டளை," "சுடர் ஃபௌண்டேஷன்," "ஈரோடு அரவானிகள் சங்கம்," "திருச்சி அரவானிகள் சங்கம்" ஆகிய அமைப்புகள் 2008ஆம் ஆண்டில் ஒன்றிணைந்துள்ளன.

பால், பாலியல்பு, பாலியல், பாலினம் ஆகியவை குறித்து சொல்லப்பட்ட மற்றும் சொல்லப்படாத விதிமுறைகள் நம் குடும்ப, சமூக, நிறுவன, அரசு அமைப்புகளில் வேரூன்றி இருக்கின்றன. பால்கள் இரண்டு என்பதும் அதனைத் தொடர்ந்து பாலினங்கள் இரண்டு என்பதும் இவ்விருவரின் பாலியல்புகள் இங்ஙனம் இருக்க வேண்டும் என்பதும் இந்த பாலினத்தவர் இந்த செயல்பாடுகளில் ஈடுபடலாம் என்பதும் இந்த பாலினத்தவர் இந்த பாலினத்தவருடன் உறவு கொள்ளலாம் என்பதும் நியதிகள் என்றும் அவையே இயற்கையானவை என்றும் நம் பொதுப்புத்திகள் நம்புகின்றன. இவற்றை அசைக்கும் எந்த ஒன்றும் சமூக அமைப்பின் அடித்தளத்தை அசைப்பதாகவும் உணர்கிறோம். இந்த நிலையில் அரவானி சமூகம் தனது இடையறாத போராட்டத்தின் மூலம் அரசின் கவனத்தை ஈர்த்துத் தனது உரிமைகளைக் கேட்டுப் பெறும் இன்றைய நிலை வரவேற்கத்தக்கது; எனினும் இந்தப் பால்-பாலின-பாலியல்பு ஆகியவற்றில் ஆண்-பெண், ஆண்மை-பெண்மை, ஆண்-பெண் உறவு ஆகிய ஈரிணைகளை , binary opposites, கேள்விக்குள்ளாக்கும் எதனையும் - அது பாலின அடையாளமாக இருந்தாலும் சரி, மாற்றுப் பாலியலாக இருந்தாலும் சரி - "குறைபாடு" என்ற நிலையில் அமர்த்தும் அரசு மற்றும் இதர அதிகார நிறுவனங்களின் வழக்கத்தை நாம் கவனமாகப் பார்க்க வேண்டும்.

பல நேரங்களில் நாம் எந்தெந்த அதிகாரக் கட்டமைப்புகளை, ஒடுக்குமுறையை செயல்படுத்தும் அமைப்புகளை உள்ளிருந்து தகர்க்க முயல்கிறோமோ, அந்த அமைப்புகள் - அரசு உட்பட பல நல்லெண்ணம் கொண்ட செயல்பாடுகள் மூலம் நமது முயற்சிகளின் கூர்மையை மழுங்கடித்துவிடுவது வரலாற்றின் பல தருணங்களில் சிறுபான்மை சமூகங்களுக்கு நிகழ்ந்துள்ளது. ஒடுக்கப்பட்ட, விளிம்புநிலை சமூக மக்கள் தங்களது உடனடித் தேவைகள், உரிமை மீறல்கள், தங்கள் மீதான வன்முறை, தினசரித் துன்பங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அரசுடனான இந்த உரையாடலில் ஈடுபட வேண்டியிருக்கிறது.

குறிப்புகள்:

1 Government of Tamil Nadu, Social Welfare and Nutritious Meal Program Department. (2006). Social welfare--rehabilitation of aravanis (eunuchs) (G.O. (MS) No. 199). Chennai: Government of Tamil Nadu Printing Office.

2 Government of Tamil Nadu, Higher Education Department. (2008). Collegiate Education-revised guidelines for admission of students in government/aided/unaided arts and sciences colleges from 2008-2009 (G.O. (1D) No. 75). Chennai: Government of Tamil Nadu Printing Office.

பால், பாலியல்பு, பாலியல், பாலினம் ஆகியவை குறித்து சொல்லப்பட்ட மற்றும் சொல்லப்படாத விதிமுறைகள் நம் குடும்ப, சமூக, நிறுவன, அரசு அமைப்புகளில் வேரூன்றி இருக்கின்றன. பால்கள் இரண்டு என்பதும் அதனைத் தொடர்ந்து பாலினங்கள் இரண்டு என்பதும், இவ்விருவரின் பாலியல்புகள் இங்ஙனம் இருக்க வேண்டும் என்பதும், இந்த பாலினத்தவர் இந்த செயல்பாடுகளில் ஈடுபடலாம் என்பதும், இந்த பாலினத்தவர் இந்த பாலினத்தவருடன் உறவு கொள்ளலாம் என்பதும் நியதிகள் என்றும், அவையே இயற்கையானவை என்றும் நம் பொதுப்புத்திகள் நம்புகின்றன

PUBLIC LIBRARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் ஓரினச் சேர்க்கைப் பெண்கள்

■ அ. பொன்னி

"பெற்றோருடன் வாழ மறுக்கும் பெண்"

"தோழியர் இருவர் தற்கொலை"

"பெண்கள் இருவரின் சடலம் கண்டுபிடிப்பு"

"துன்புறுத்தப்பட்ட ஓர் பாலினச் சேர்க்கை பெண் ஜோடி உயிரை மாய்த்துக் கொண்டனர்"

"கட்டிப்பிடித்த நிலையில் எரிந்து கிடந்த இரண்டு உற்ற தோழிகள்"

"கல்லூரி பெண் தற்கொலை"

"தோழியை எரித்த பெண்"

இது போன்ற வரிகளின் மூலம் தான், தமிழ்நாட்டில் ஓர் பாலினச் சேர்க்கைப் பெண்களைப் பற்றிய செய்திகள் வெளிப்படையாக வெளிவராத போது, செய்திக் கட்டுரைகளின் மொழிநடையை வைத்தே, அச்செய்தி ஓர் பாலினச் சேர்க்கை பெண்களைப் பற்றியது என அறிய முடிகிறது. சில முக்கியமான விதிவிலக்குகளைத் தவிர, ஆங்கில மற்றும் தமிழ் ஊடகங்களுக்கு இந்நடைமுறை பொருந்தும்.

தமிழ்நாட்டில் பிரபல அச்சு ஊடகங்களில் "Lesbian" என்கிற வார்த்தை மெதுவாக நுழைந்துக் கொண்டிருக்கிறது. இதன் விளைவுகளைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் ஓர் பாலினச் சேர்க்கைப் பெண்களின் வாழ்க்கைப் போக்கு ஒன்று போல்தான் இருக்கிறது. இரு பெண்கள் தங்கள் வீட்டை (கணவன் அல்லது பெற்றோர்) வீட்டை விட்டு வெளியேற முடிவு செய்கிறார்கள். அவர்கள் குடும்பம் வசிக்கும் மாநிலத்தின் பிற பகுதியிலோ, அல்லது வேற்று மாநிலத்திலோ அமைதியாக வாழ்க்கை நடத்த முடியும் என்ற நம்பிக்கையில் குடியேறுகின்றனர். ஒரு சில சமயம் தங்களுக்கான சட்டப்பேறு கிடைக்கும் என்ற உணர்வின் காரணமாக தேவாலயத்திலோ, கோவிலிலோ, மசூதியிலோ, திருமணச் சடங்கை நிறைவேற்றுகின்றனர். பெரும்பான்மையான நேரங்களில், இரு பெண்களுள் ஒருவரது பெற்றோர் அல்லது கணவர் அல்லது இருவரின் பெற்றோர் அல்லது கணவர் "காணாமல் போனதாக" கொடுத்த புகாரின் அடிப்படையில் இவர்களைத் துரத்துகிறது காவல்துறை. இது போன்ற புகார்களின் பேரில், வெளி மாநிலத்திற்குத் தப்பியோடிய பெண்கள் தம் பகுதி மேஜிஸ்டிரேட் நீதிமன்றங்களுக்குக் கொண்டு வரப்படும் போது, தாங்கள் வயது வந்தவர்கள் என்றும் சொந்த வீடுகளுக்கு திரும்பிச் செல்வதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுக்கு விருப்பமில்லையென்றும் தங்களின் " தோழியுடனோ", தனியாகவோ வாழ்வதற்கே விரும்புவதாகவும் வாதிட்ட போதிலும் இப்பெண்கள் அவர்களின் பெற்றொரிடமோ, கணவனிடமோ திருப்பி அனுப்பப்படுவது, எந்தச் சட்டத்தாலும் நியாயப் படுத்தப்பட முடியாத செயல் ஆகும்.

ஓர் பாலினச் சேர்க்கைப் பெண்கள் அல்லது " நெருங்கிய தோழிகள்" தங்களின் உயிரை மாய்த்துக் கொள்வது என்பது மற்றொரு கோணம். உயிரை மாய்த்துக் கொள்ளும் விதங்கள் வேறுபட்டாலும் பிரச்சனையில் இருக்கும் இரு பெண்களும் இணைந்து ஒருவரது வீட்டிலோ அல்லது ஒரே நேரத்தில் அவரவர் வீட்டிலோ அல்லது சிறிது தொலைவில் இருக்கும் ஹோட்டலிலோ தற்கொலை செய்துக் கொள்வது என்பதே அவர்களின் திட்டங்களாக இருக்கிறது. ஒரு சில சந்தர்ப்பத்தில், தற்கொலை முயற்சி செய்த இருவரில் ஒருவர் மட்டும் உயிர் பிழைக்க நேர்ந்தால், சமூகத்தின் வெறுப்பை எதிர் கொள்வதோடு, கொலை செய்தது அல்லது தற்கொலைக்கு துணை போனது ஆகிய தவறான சட்டக் குற்றச்சாட்டுகளையும் சந்திக்க நேரிடுகிறது.

ஒரு சில சமயம் தங்களுக்கான சட்டப்பேறு கிடைக்கும் என்ற உணர்வின் காரணமாக தேவாலயத்திலோ, கோவிலிலோ, மசூதியிலோ, திருமணச் சடங்கை நிறைவேற்றுகின்றனர். பெரும்பான்மையான நேரங்களில், இரு பெண்களுள் ஒருவரது பெற்றோர் அல்லது கணவர், அல்லது இருவரின் பெற்றோர் அல்லது கணவர் 'காணாமல் போனதாக' கொடுத்த புகாரின் அடிப்படையில் இவர்களைத் துரத்துகிறது காவல்துறை

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இவ்விஷயங்கள், தமிழ்நாட்டுக்கு மட்டும் பொருந்துபவையல்ல. தமிழ்நாட்டில் இப்பிரச்சனைகளால் பாதிக்கப்படும் பெண்களுக்கு மாநிலத்திற்குள் உதவிகள் கிட்டுவது கடினமாக இருப்பதே அவர்களைப் பிற மாநிலப் பெண்களிடமிருந்து வேறுபடுத்துகிறது. தமிழ்நாட்டில், பாலியல் பிரச்சனைகள் சம்பந்தப்பட்ட வேலைகள் என்பவை எச். ஐ.வி.யால் பாதிக்கப் பட்டோர், 'ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்கள்', கோத்திகள், அரவானிகள் ஆகிய குழுக்களுக்கான உரிமைகளுக்காக நடைபெறும் வேலைகள் தான் பாலியல் சார்ந்த வேலைகளாக வகைப்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டின் அரவானி சமூகத்தினரது இயக்கம், இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அரவானிகளுக்கான நல வாரியம் அமைத்தது, வாக்காளர் அடையாள அட்டை வழங்கியது ஆகியவை தமிழ்நாட்டின் சிறப்பாகும்.

பெண் உரிமை மற்றும் விடுதலையைப் பற்றி பொது வெளிகளில் நடந்துள்ள விவாதங்கள் அடங்கிய சிறப்பான வரலாற்றைக் கொண்டது தமிழகம். மாநிலத்தில் முற்போக்குச் சிந்தனைகளுக்கு வித்திட்ட சுயமரியாதை இயக்கம் தொடங்கி, இன்று தமிழ்நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் பெண்களுக்கான பிரச்சனைகளைக் கையிலெடுத்துக் கொண்டிருக்கும் சிறிய ஆனால் முக்கியமான குழுக்கள் வரையிலான இவ்வரலாறு, பல்வேறு விஷயங்களை உள்ளடக்கியதாகவும் நீண்ட காலமாக தொடர்வதாகவும் இருக்கிறது. சாதியக் கோட்பாடுகளை கேள்வி கேட்பது, தமிழ்நாட்டு அரசியலில் எவ்வளவு இயல்பான விஷயமோ; பால், பாலினம், திருமணம் பற்றியக் கோட்பாடுகளை கேள்வி கேட்பதும் அவ்வளவு இயல்பானதாகவே இருக்கிறது. அடக்குமுறையின் அடிப்படைகளைக் கேள்விக் கேட்காத, அடக்குமுறையின் ஒரு சில வெளிப்பாடுகளை மட்டுமே எதிர்க்கக்கூடிய, வலிமையுள்ள ஒரு சிலரால் இவ்வரலாறும் பொதுவெளி விவாதங்களும் கட்டுப் படுத்தப்படுகின்றன. எனினும் வரலாற்றில் பொறிக்கப்பட்டுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விமர்சனங்கள், மனித வாழ்வின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய புரட்சிகர முற்போக்குச் சிந்தனையுடையவர்கள் தொடர்ந்து இயங்கக் காரணமாக இருந்து வருகிறது. பால் மற்றும் பிற சமூக நீதி பிரச்சனைகளுக்கு எதிராக போராடுவோர் இச்சிந்தனையாளர் வட்டத்திற்குள் அடங்குவர்.

இது போன்ற முற்போக்கு வரலாற்றைக் கொண்ட மாநிலத்தில், ஓர்பாலினச் சேர்க்கை பெண்களின் நிலையை வெவ்வேறு முறைகளில் மாற்றியமைக்க வேண்டும். முதலில், தமிழ்நாட்டில் பாலினம் மற்றும் ஒருபால் ஈர்ப்பைப் பற்றி பேசுவதற்கான ஒரு மொழியை உருவாக்க வேண்டும். இம்மொழி சம்மந்தப்பட்ட வர்களுக்கு பிரச்சனைகள் வராத வண்ணமும், பெண்களின் பிரச்சனைகளை முன்னெடுக்கக் கூடியதாகவும், புரிந்துக் கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இரண்டாவதாக, ஓர்பாலினச் சேர்க்கை பற்றிய விவாதங்கள் தமிழ்நாட்டின் முற்போக்கு சிந்தனையோட்டத்தில் வகிக்கும் முக்கிய பங்கையும் ஓர் பாலினச் சேர்க்கையாளர்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களை மனித உரிமை மீறல் என்ற கட்டமைப்புக்குள் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தையும் பற்றி முற்போக்குச் சிந்தனையாளர்களுடனும் குழுக்களுடனும் விவாதங்கள் தொடங்கப்பட வேண்டும். மூன்றாவதாக, பிரச்சனைகளுக்கு ஆளாகும் பெண்கள் தங்கள் உடல், விருப்பங்கள், உறவுகள் பற்றிய கேள்விகளுக்கான விடையைத் தெரிந்துக் கொள்ளத் தேவைப்படும் தகவல்களையும் தமிழகத்தில் இப்பெண்களுக்கான பாதுகாப்பான தங்கும் இடங்களையும் உதவி எண்களையும் வழங்க வேண்டும்.

மேல் குறிப்பிடப்பட்டுள்ள முறைகளின் சரியான பயன்பாட்டால் தான், இந்த மரணங்களையும் வன்முறைகளையும், தடுக்க முடியும். நம் நாட்டில் உயிர் இழப்பதற்கு பல்வேறு வழிகள் உண்டு. பசியால்,வாழ இடமில்லாததால், ஒருவர் இறக்கலாம். மதம், சாதி, வர்க்கம், பால் அல்லது பகுதி ஆகியவற்றின் அடிப்படையில் கொலை செய்யவும் படலாம். ஆசையும், அன்பும் மட்டுமே ஒரு சில வெளிகளை சுதந்திரமானதாகவும் சுகமானதாக வும் வைக்க போராடி வருகின்றன. நம்முடைய சிறிய மகிழ்ச்சி களுக்கும் தற்காலிக சுதந்திரத்திற்கும் காரணமாக இருக்கும் அன்பு மற்றும் ஆசை இவற்றின் பெயரால் மனித உயிர்களை எடுக்கக் கூடாது என்று கேட்பது நியாயமற்றதா?

குறிப்பு :

குறிப்பிட்ட துறை சார்ந்த வல்லுநர்கள் மாற்றுவெளியின் அழைப்பாசிரியராக செயல்பட வேண்டுகோள் விடுக்கிறோம். விருப்பமுள்ளவர்கள் தாங்கள் தேர்வு செய்யும் பொருண்மை குறித்து மாற்று வெளிக்கு எழுதுமாறு கேட்டுக் கொள் கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை
8

On The Figure of the Prostitute in the works of G. Nagarajan and Dandapani Jeyakantan.

■ **Kiran Keshavamurthy**

In this essay I look at the contradictory impulses generated by a certain idea of prostitution in the fictional writings of G. Nagarajan and Dandapani Jeyakantan: desire and its inevitable disappointment; the intimate contact of bodies and its demystification by monetary exchange, the ideal aspiration of love and the void enclosing each human being in his/her loneliness. Representations of prostitution, I argue, have fantasmatic origins in that they privilege the image over the real, the word over its referent, the symbol over the event. Prostitution has to be understood in terms of the liquidity of personal properties including gender identities. The understanding of prostitutional desire is focused not on the possession of any one object but on the process whereby objects acquire value as representations. What makes the prostitute desirable is her capacity to deny nature and function as a medium for representational practices. Further, I am interested in looking at where Nagarajan and Jeyakantan diverge in their representations of the prostitute s sexual agency. Jeyakantan s fiction represents the figure of the reformed prostitute whose sense of self-alienation, an effect of commodification, is redeemed through love. Nagarajan on the other hand empowers the prostitute with greater sexual agency precisely through the simulation of conjugality that only resists her sexual reformation through marriage.

Kiran Keshavamurthy is a P.hd Research Scholar is the South and South East Asian Studies Programme at the University of California, Berhelay.

G. Nagarajan s novella *Kuratti Mudukku* (1979) is preoccupied with male fascination for the prostitute s made up beauty whose seductive appeal lies precisely in its synthetic nature. Through her theatrical performance of desire and pleasure the prostitute alternatively evokes and disappoints desire. The client s interpretation of the prostitute s desire is ambiguous for the prostitute is an embodied simulation of desire that veils an absent „truth or „subject of desire. In

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

other words, the prostitute s simulation of desire and pleasure cannot be reduced to an original truth or subject, only an infinite oscillation between the „real and its representation. The novella is mostly narrated by the male protagonist of the story who despite himself falls in love with a prostitute called Thangam. Before he meets Thangam he had assumed love and marriage were convenient arrangements for rearing children. But in his encounters with Thangam, the narrator is conflicted by his paradoxical interpretations of Thangam s desire and acts of intimacy that are at once „authentic and disillusioned by the commercial nature of prostitution.

The narrator wishes every prostitute was as professional and particular as Thangam. From her tireless engagements with her profession, he wonders if Thangam has greater sexual desire than the other prostitutes (117). While on the one hand, he is certain that Thangam desires him as much as she does her other clients, on the other he wants to believe that she has a special affection for him. He clearly fetishizes her desire for him; his desire for her oscillates between his faith in her apparently spontaneous and exclusive love for him and the disillusioning recognition of the commodified nature of prostitutional desire. (119). Even as he identifies with her seemingly spontaneous desire for him he constantly reminds himself that his relationship with her is merely commercial (118). He wants "to free himself from the happiness she gives him while establishing and guaranteeing it", he "wants to sustain his fantasy of having an exclusive relationship with her" even as he is aware of the potential disappointment of his desire (118). He buys her things, refurbishes the interiors of her room and tries hard to prove that she is only in love with his money and not with him.

Even as he identifies with her seemingly spontaneous desire for him he constantly reminds himself that his relationship with her is merely commercial (118). He wants "to free himself from the happiness she gives him while establishing and guaranteeing it", he "wants to sustain his fantasy of having an exclusive relationship with her" even as he is aware of the potential disappointment of his desire (118).

When the narrator asks Thangam to temporarily stay with him in his new house she grows wary of his possessive affection for her. When she claims she already has a husband he is incredulous and ridicules her apparent faithfulness. She sarcastically replies "I don t have to be a widow to be in the business." When he suspects her of being involved with a richer man she hugs him and starts weeping (128). Thangam s assertion of her sexual freedom and self-ownership preempts the possibility of having an exclusive relationship with the narrator; of being exclusively owned by a man that would result in the potential loss of her liquidity; her mobility. She cannot be exclusively owned or possessed by any man without being excluded from the circulation and exchange of sexual identities

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and desires. Conversely, for the narrator the possibility of possessing Thangam is to be dispossessed; to lose his individuality; to become a substitutable object of her desire.

The narrator discovers Thangam has again been wrongly accused and arrested for soliciting a customer and has been asked to pay a fine in court. This time she decides to file a case with her pimp s help. She is certain the client, the police and the law are complicit in her ruin. When the narrator offers his help, Thangam asks him to lie to the court that he has been financially supporting her. For the first time, he feels nothing but empathy and compassion for her. He recognizes in her his own status as a social outcaste; as orphans who have marginalized themselves from society (136-7). He promises to help her if she agrees to renounce prostitution and live with him. She agrees but when she wins the case and the narrator reminds her of her promise to marry him, she laughs incredulously and denies any such promise. He feels betrayed and realizes that like most people he had misperceived marriage as the ultimate expression and guarantee of love when there can be no love without jealousy. There is merely he says "an irrational faith in marriage", "a social guarantee of faithfulness that has been handed down..." (138).

The narrator is determined never to see Thangam again. Some months later he learns from her pimp that she has disappeared from the brothel with her husband Nataraj. The narrator later discovers her when he goes to Trivandrum on work. She confesses she is Nataraj s mistress and not his wife. She laments that he has been imprisoned for committing a serious crime. She recounts her violent encounter with his wife who burnt her when Nataraj decided to take her under his care. She tells him she always considered him her husband although he is a married man with children. She is grateful to him for taking care of her needs and privileging her over his wife. Now she feels responsible for ruining his family. Thangam s guilt and helplessness love for her „husband and his imprisonment reduces her to a sorry state of helplessness and despair.

Although Thangam s relationship with Nataraj becomes a social impossibility (of not conforming to the straightjacket of marriage), I would like to draw attention to the self-divided identity of the prostitute that empowers her to assume other identities and make sexual/ romantic choices that give her security and ultimately question and redefine the social

The narrator is determined never to see Thangam again. Some months later he learns from her pimp that she has disappeared from the brothel with her husband Nataraj. The narrator later discovers her when he goes to Trivandrum on work. She confesses she is Nataraj s mistress and not his wife. She laments that he has been imprisoned for committing a serious crime. She recounts her violent encounter with his wife who burnt her when Nataraj decided to take her under his care.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

understanding of marriage. Although Thangam occupies the position of mistress she can identify herself as the wife of a married man whose „free and in some sense „real love for her unhindered by the domestic and financial responsibilities that accompany marriage, overrides his consideration for his family.

Jeyakantan s *Orru Manidanum Sila Erumaimadugalum (A Man and A Few Buffaloes)* (1985) is about a prostitute who is purified and reintegrated into society by a man s love for her.

Sabapaty works in his father-in-law's lucrative liquor business. He is a private taxi driver who secretly smuggles liquor from Pondicherry to Madras. On one of his smuggling trips back to Madras he is tracked down by the police after a long chase and shot as he tries to escape. Sabapaty's friend and assistant Kanniappan who runs an illegal brewery manages to escape with the owner of the smuggled alcohol and informs Sabapaty's wife Unnamalai of her husband's plight.

At the hospital, Sabapaty is sorry to see his wife cry helplessly. He thinks of the fights they have had in the past over his alcoholism and his affair with a prostitute named Leela. While he sympathizes with Unnamalai's jealousy and her determination to raise their children independently, he perceives Unnamalai as an unrefined and illiterate country bumpkin who will never understand the true significance of his relationship with Leela.

As Sabapaty is convalescing in the hospital, his friend Kanniappan secretly gives him a letter from Leela that expresses her gratitude and humility to "his flawless and unselfish love". "Her guilty conscience" makes her ask if "she is worthy of such love". (900). She promises not to have any sexual relationships with her "boyfriends" or her uncle's (pimp's) friends until he recovers. She decides to change into a new person when he comes to see her. The sound of his "unrefined Madras dialect" reassures her with a feeling of self respect. She is determined to relinquish prostitution and only belong to him. (901)

It is clear from her letter that Sabapaty s selfless love and concern for Leela initiates a process of sexual reformation that compels her to aspire for the loyalty and domestic comforts of wifehood. But her supposedly irredeemable immorality and sexual indulgence preempts the possibility of ever being worthy of Sabapaty s love. His love makes Leela realize that she is enslaved by the consciousness of her sin (i.e. prostitution). She realizes she was earlier able to simulate

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

desire and even in her outer debasement she was convinced her human essence was her true essence. Now her degradation touches her innermost being. Her sexual continence and self-denigration become redemptive symptoms of her („failed) attempts to be worthy of Sabapaty.

What follows this part of the novella is a long flashback that is triggered by Leela s letter. The flashback begins with Sabapaty s childhood memories of Leela as a young girl and ends with his unsuccessful attempts to convince Unnamalai of the innocence of his friendship with Leela. Sabapaty remembers accompanying his poor mother to Leela's house to deliver milk. He remembers looking at Leela s "golden form [with] his mouth agape" (901). Leela is disgusted at the sight of a "smelly, dark boy" staring at her. The narrator says, "Sabapaty at that age, never thought of bathing, combing his coarse hair and wearing a clean shirt" when he came to see her. Sabapaty remembers running errands for Leela at her slightest command. But once Leela matures into a pubescent girl she is forbidden from stepping out and spends most of her time indoors. Sabapaty, now older, is "ashamed to be spotted by Leela standing like a servant before her wealthy and reputed family." (904).

What follows this part of the novella is a long flashback that is triggered by Leela s letter. The flashback begins with Sabapaty s childhood memories of Leela as a young girl and ends with his unsuccessful attempts to convince Unnamalai of the innocence of his friendship with Leela. Sabapaty remembers accompanying his poor mother to Leela's house to deliver milk.

Sabapaty tries to explain "the true significance" of his relationship with Leela to Unnamalai when she accuses him of having an affair with a whore (916). (what is interesting to note here is that Unnamalai is more concerned that her husband is having an affair with a prostitute rather than his sexual infidelity. He angrily refutes her accusation that seemingly "insults his masculinity". He asks her "to you think I go for leftovers?" that suggests the male anxiety around potentially emasculating threat of female sexuality. He tries to convince her that Leela "was not always a prostitute" (917). He recounts his childhood memories of Leela and expresses his

gratitude to her father for his financial support. He meets Leela years later in a room in a hotel as he is delivering alcohol to her uncle/pimp. (919) Leela emerges from the room looking like a glamorous 'high class' prostitute expecting to see her uncle. She is surprised to see Sabapaty but does not immediately recognize him. There is an elderly client with her who requests him to drop her at her uncle's place as he inserts some money in her hand bag before leaving. Sabapaty instantly recognizes Leela and is shocked and sad to see Leela s refined and suave beauty that he once exalted now reduced to a state of debauchery. He asks himself, "Why do good family

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

women; educated and beautiful women all end up like this? Won't some men marry them and take care of them? Are there no men left to do this? When aggressive, unrefined buffaloes like Unnamalai have someone like me, why don't women like her who has everything find someone? Have they not found someone? They are the ones who don't want any of this and go wandering in search of random men in their desire...no expenses, the insolence of earning- is that why they yearn for attention?" (921)

Sabapaty makes a social distinction between sexually promiscuous prostitutes and chaste and loyal wives. He assumes the power of financial independence makes prostitutes like Leela impudent and indifferent to their social reputation that he feels can only be achieved and maintained through marriage and domestic wifehood.

Leela asks him to take her to a hotel. Sabapaty is not certain if she wants to go to a hotel (restaurant) to eat or to a hotel to have sex. He is pained to hear her speak to him like she would to a client. In the hotel room, Sabapaty remembers how amazed he was by Leela's beauty as a child but now he is unable to be happy with the thought of "having Leela's beauty and body all to himself like an object to be bought". (927) He is disgusted at the thought of Leela's glorious body being purchased by men for their pleasure and rendered impure by their touch. (927) He suspects her family estranged her when her uncle prostituted her. He experiences an overwhelming sense of concern and is determined to rescue her from her uncle. When she shyly expresses her desire to have sex with him her sexual modesty partially redeems Sabapaty's contempt for her (943). But he silently refuses to have sex with a promiscuous and unchaste prostitute (941).

Sabapaty makes a social distinction between sexually promiscuous prostitutes and chaste and loyal wives. He assumes the power of financial independence makes prostitutes like Leela impudent and indifferent to their social reputation that he feels can only be achieved and maintained through marriage and domestic wifehood.

For Sabapaty, gratifying Leela s desire for him is a collapse of social differences. Like the narrator of *Kuratti Mudakku*, Sabapaty s desire for an unchaste and promiscuous prostitute threatens his own individuality by becoming a substitutable object of her desire. When Leela later confides her sexual past, Sabapaty appreciates her trust in him but is furious by her "shameless confessions" that seemingly emasculate him (938). The very fact of her sexual frankness and immodesty is perceived as a threat to his masculinity that can only averted by resisting his desire for her. For Sabapaty, Leela s chastity is an alienable „commodity or property that essentially constituted her femininity and whose irredeemable loss now forever signifies her diminutive and „public womanhood. The suppression of his desire for her

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and his concern, I would argue, de-eroticizes her and consequently their relationship by robbing her of her ability to stage her seduction, neutralizing the threat of self-alienation and emasculation embodied in her prostitution.

Through Leela s confessions of her sexual past we see her negotiating various shifting and intertwined constructions of her identity as a prostitute that entail self-division for personal advantage, security, social mobility and survival, sexual indulgence and even a helpless victim who lacks enjoyment and appeals to others sympathy. Prostitution for Leela offers the power,

security and comforts "that a helpless woman like her needed". (938) Leela feels empowered by her uncle's patronage and his influential and wealthy businessmen friends whose connections with the police protect her. She expresses her gratitude to her uncle for his support and protection when she was faced by the possibility of being disinherited by her family for eloping with a married man who tried to prostitute her (936). Her uncle and his "educated, respectable businessmen friends" convince her that prostitution is a normal profession and that "many people have been happy in this profession." In her travels, "[she] has seen many reputed people in the profession...[she] has met many new people, learnt many things, experienced everything that rich people experience and feels at par with them...everyone is very affectionate to [her]" (937). The world of elite prostitution with its nexus of rich clients, pimps, patrons and prostitutes offers Leela upward mobility and impunity against the law and social stigma.

Through Leela s confessions of her sexual past we see her negotiating various shifting and intertwined constructions of her identity as a prostitute that entail self-division for personal advantage, security, social mobility and survival, sexual indulgence and even a helpless victim who lacks enjoyment and appeals to others sympathy. Prostitution for Leela offers the power

Sabapati refuses to believe that Leela chose to be a prostitute. He is incredulous when she expresses her „love for her clients. When Leela expresses her financial motives for becoming a prostitute Sabapati is shocked that she would sell her honor for money. (939) He suspects "poverty, deception, hunger, money" are just excuses for the lack of a justifiable reason to resort to prostitution. Leela tries to convince Sabapati that she has never been and can never truly be in love with her clients. She can "only simulate pleasure and desire because she can never have true feelings for a client who doesn't love [her]" (940). She sometimes wishes she could pay men to have sex with her.

Leela realizes she has never been honest to anyone about her past. She feels she can trust Sabapaty. When Sabapaty

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

recounts his fond memories of her as a child and praises her father's altruism, she begins to feel that his love for her "is not the same that anyone else has felt for [her]". She sees the innocent child that she was in his eyes as he constantly regrets her debased state. His concern makes her feel for the first time that there is something wrong in being a prostitute. She remembers her father and imagines him asking her the very question that Sabapaty asks her, "Do you call prostituting yourself a profession?" (932).

Sabapaty s almost filial concern for Leela s welfare makes her question her own duplicitous identity and marks for her the beginning of a process of reformation that is characterized by a sense of guilt, worthlessness and sexual abstinence. Leela realizes that the performative sense of self-alienation that once empowered her now divides her very being depriving her of a sense of self. Prostitution then can be understood to be both empowering and an extreme form of alienation; of commodification that fails to distinguish between a person and a thing; between the producer and her commodity or the prostitute and her body.

Sabapati sympathizes with Leela and offers her his friendship. He realizes that Leela is a disgraced and orphaned victim of economic need for whom prostitution is the only available means of survival. He promises to lend her money every month to help her give up prostitution and offers to make reservations in a hotel if she wants to have sex with someone. (944) Although Leela is put off by his sexual indifference she is so moved by his respect that she expresses her exclusive love for him.

Sabapati sympathizes with Leela and offers her his friendship. He realizes that Leela is a disgraced and orphaned victim of economic need for whom prostitution is the only available means of survival. He promises to lend her money every month to help her give up prostitution and offers to make reservations in a hotel if she wants to have sex with someone.

Although Sabapaty is unable to have an exclusive sexual/ romantic relationship with a fallen woman without losing his sense of self-ownership, his suppressed desire for her and his sense of responsibility prevents him from abandoning her. While he sympathizes with Leela s

victimhood, he perceives her sexual indulgence as constitutive of her identity. Thus even if Leela no longer sells herself or her body, the historical formation of female sexuality as the sum of female identity constructs prostitution as a figure for the disturbing permeability of public/private boundaries. Leela s sexual deviance is tolerable only as long as it does not visibly undermine the paternal Law or provoke disciplinary regulation. The subversive force of the woman s/prostitute's erotic body can be safely evoked only in a disguised or

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

displaced manner by controlling the signs of her sexual visibility and accessibility.

When Leela learns that Sabapaty has been shot by Ollikaruppan she decides to sever her friendship with the police officer, who was a client of hers, for betraying her and "her man". When she curses and scolds the policeman Leela resorts to a rhetoric of conjugal ownership to define her relationship with Sabapaty. She later wonders if she is making an irrational decision to lead a celibate life "all by herself" by refusing to meet any of her male friends. But she feels only Sabapaty can give her the respectable status of a wife (954). She realizes Sabapaty through his kindness and generosity has been responsible for changing her opinion of men and the poor. (959) She hopes their friendship lasts forever.

When the court mercifully condones his crime because of his handicapped condition, Sabapaty returns to his overjoyed wife and children. When Unnamalai discovers he is still having an „affair with Leela, she has a violent fight with him that turns into a crisis that ends with Unnamalai leaving him with her three children. The eldest son refuses to leave his father. Sabapaty silently wonders if he has committed a mistake but he realizes that no one in the world can understand his intimacy with Leela that in some sense escapes social and ideological definition.

When the court mercifully condones his crime because of his handicapped condition, Sabapaty returns to his overjoyed wife and children. When Unnamalai discovers he is still having an „affair with Leela, she has a violent fight with him that turns into a crisis that ends with Unnamalai leaving him with her three children. The eldest son refuses to leave his father.

Leela and Sabapaty realize that they their secret meetings at the hotel suggest their own unconscious guilt and disapproval of their relationship. They decide to live together like a married couple that they feel would redeem Leela s disrepute. The novella ends with the image of an alternative family that is not structured by conjugal or even entirely filial relations. Thus the social assumptions that undergird the inviolable sanctity of marriage and family is re-formed as it were in the novella. Sabapaty is also reformed of his alcoholism as he retires from his job as they settle into a life of bucolic domesticity.

To conclude, while Nagarajan explores the subversive power of the representational nature of the prostitute s desire in challenging the straightjacket of marriage, Jeyakantan suggests the sexual and social reformation of the prostitute through love and social reintegration. What we see though in both their writings are new forms of intimacy between men and women that are premised on mutual concern and compassion that rework the patriarchal terms of conjugality.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடல்
1

கதை சொல்லல் எனும் உறவாடல் :
சமூக ஆர்வலரும் எழுத்தாளருமான மாயா சர்மா அவர்களுடன் நிகழ்த்திய உரையாடல்

மாயா சர்மா அவர்களுக்குக் கதைகள் மிகப் பிடித்தமானவை. எந்த அளவிற்குக் கதை சொல்லப்பிடிக்குமோ அந்த அளவிற்குக் கதை கேட்பதற்கும் பிடிக்கும். 'என் இளம் பருவம் கதைகளால் நிரம்பியிருந்தது. என்னுடைய பாட்டி, எங்கள் வீட்டில் பணிபுரிந்த வர்கள் அனைவரும் எப்போதும் ஏதாவது கதைகளைச் சொல்லிக் கொண்டே இருந்தார்கள்,' என்று சொல்கிறார் அவர்.

2006 ஆம் ஆண்டு இவர் எழுதிய Loving Women - Being Lesbian in Unprivileged India என்ற நூல் ஒன்றை யோடா பதிப்பகம் வெளியிட்டது. இந்த நூலில் மாய சர்மா வட இந்தியாவின் கிராமப் புறங்களில் வசிக்கும் லெஸ்பியன் தம்பதிகளின் வாழ்க்கைகளைப் பதிவு செய்துள்ளார். நகர்ப்புறங்களே முற்போக்கு வாழ்க்கைக்கு ஏதுவான இடங்கள் என்ற நமது பொதுவான கருத்துக்களுக்கு மத்தியில், இந்திய கிராமங்களில் இரு பெண்களுக்கு இடையிலான உறவுகள் எப்படிச் செயல்படுகின்றன என்பதை இப்பெண்களின் வாய்மொழியாகவே மாயா சர்மா இந்த நூலில் பதிவு செய்திருக் கிறார். கதை சொல்லுதல் என்பது ஒருவழிச் செயல்பாடல்ல என்று மாயா சர்மா கூறுகிறார். தொலைபேசியில் நடந்த இந்த நேர்காணலின் பொழுது நான் இடையிடையே "ஹ்ம்ம்..ஹ்ம்ம்" என்று சொல்வதைச் சுட்டிக்காட்டி, 'இதை ராஜஸ்தானி மொழியில் ஹுங்காரம் என்று சொல்கிறோம். நீங்கள் சொல்லும் வெறும் ஹ்ம் என்ற பதிலின் காரணமாக எனக்குள் இருக்கும் கதை வெளியே புறண்டோடிவருகிறது. நான் சொல்லும் கதையின் மறுமுனையை நீங்கள் பிடித்திருக்கிறீர்கள்' என்று கூறுகிறார்.

தன்னுடைய வாழ்க்கை மற்றும் உறவுகள் குறித்தத் தெளிவான புரிதல் வேண்டியே மற்ற பெண்களின் கதைகளைக் கேட்கத் தொடங்கியதாகவும் மாயா சர்மா சொல்கிறார். "நான் அப்பொழுது ஒரு பெண்ணுடனான உறவில் இருந்தேன். எனவே இது அப்போது பொதுவாகக் கருதப்பட்டது போல நகர்ப்புறப் பெண்களின் புது நாகரிக வெளிப்பாடு அல்ல என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் என்னைப் போலுள்ள மற்ற பெண்களைச் சந்திக்க வேண்டும், பெண்களை நேசிக்கும் பெண்களின் கதைகளைக் கேட்க வேண்டும் என்ற தேவையும் எனக்குள் இருந்தது. கிராமப் புறத்திலுள்ள மற்றும் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களும் தங்கள் வாழ்க்கையை

உரையாடியவர்:
அனிருத்தன் வாசுதேவன்

இந்த உரையாடலின் ஆங்கிலப் பிரதி 2010இல் 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் வெளியானது.

ஜனவரி 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைத்து வாழவில்லை. என்னிடம் திறந்த மனத்துடன் பேசினார்கள். 'ஆமாம், நாங்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறோம்,' என்றார்கள். என்னிடம் அன்றிருந்த பல குழப்பங்களும் பயங்களும் என்னுடையவை மட்டுமே என்று தோன்றியது.

உழைப்பாளர் சங்கங்களுடன் இணைந்து பல ஆண்டுகள் பணியாற்றியிருந்ததால் மாயாவால் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த பல பெண்களை சந்திக்க முடிந்தது. எனவே இவர்களுள் சிலரது கதைகளைப் பதிவு செய்யும் பணி தொடங்கியபொழுது முன்பின் அறியாத மற்றவர்களது வாழ்க்கையில் தலையிடுகிறோம் என்ற எண்ணமிருக்கவில்லை. அதிகார சமன்பாடின்மை குறித்து நான் என்றும் கவனமாக இருக்க முயல்கிறேன். வேறு ஒரு வர்க்கத்தைச் சேர்ந்த, வேறு மாதிரியான கல்வித் தகுதி பெற்ற பெண்ணாக நான் இப்பணியில் ஈடுபடுவதை நான் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். வர்க்க வேற்றுமை என்றும் முக்கியமானது, அது உண்டாக்கும் பிளவுகளை கவனித்து அங்கீகரிக்க வேண்டும். வேறு வர்க்கத்தைச் சேர்ந்த பெண் ஒருவருடன் உறவிலிருந்த பொழுது கூட அதில் பல சிக்கல்கள் இருந்தன. வித்தியாசங்களை மறுக்க இயலாது. ஆனால் அதற்கிடையிலும் நம் கதைகளை நாம் பரிமாறிக் கொள்ளலாம். எந்தப் புள்ளிகளில் நம்மால் இணைய முடியும் என்று பார்க்கலாம்" என்கிறார் மாய சர்மா. குஜராத் மாநிலத்தில் பரோடா நகரில் உள்ள 'விகல்ப் பெண்கள் குழு'வில் மாயா பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். கதைகளின் பரிமாற்றம், நம்மைப் பிளவுபடுத்துவதையும் மீறி ஏதோ சில புள்ளிகளில் இணைய முடியும் என்ற நம்பிக்கையே இந்தப் பணியில் இவருக்குத் துணை நிற்பதாகக் கூறுகிறார். இந்த அமைப்பின் உதவியின்றி இந்த நூல் சாத்தியப்பட்டிருக்காது என்கிறார்.

சிலவற்றை வலியுறுத்திச் சொல்வதும் சிலவற்றை மறைப்பதும் சற்று மாற்றங்களை நுழைப்பதும் கதை சொல்லலில் சகஜம். கதைகளில் உள்ள உண்மைகள் எவ்வளவு முக்கியமோ, அதே அளவிற்கு அவற்றின் பொய்களும் முக்கியம். ஒவ்வொரு கதையும் ஒரு முழுமையான நீர்த்துளி போல. அதனை அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்

எனவே, இந்தக் கதைகளைக் கேட்கும் வேளையில் மாயா, தனது கதையையும் இப்பெண்களுடன் பகிர்ந்து கொண்டார். அமைதி நிலவுமிடங்களை வெளிச்சமிட்டுக் காட்டும் திறன், கதை சொல்லல் என்னும் செயல்பாட்டிற்கு உண்டு என்பது மாயாவின் நம்பிக்கை. "சொல்லப்படுவது சொல்லக்கூடாதது என்பவற்றிற்கு இடையே அமைதிகள் பல நிலவுகின்றன" என்று தனது நூலில் குறிப்பிடுகிறார்.

நம்முடைய கதையை நாம் சொல்லும் பொழுது நமக்கு நம்மைப் பிடித்திருக்கிறது; அந்தக் கதை சொல்லலியே நாம் நம்மை மறு உருவாக்கம் செய்துகொள்ள முடியும். "சிலவற்றை வலியுறுத்திச் சொல்வதும் சிலவற்றை மறைப்பதும் சற்று மாற்றங்களை நுழைப்பதும் கதை சொல்லலில் சகஜம். கதைகளில் உள்ள உண்மைகள் எவ்வளவு முக்கியமோ, அதே அளவிற்கு அவற்றில் பொய்களும் முக்கியம். ஒவ்வொரு கதையும் ஒரு முழுமையான நீர்த்துளி போல. அதனை அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்கிறார்.

பெயர்கள் அடையாளங்கள் மற்றும் அவற்றின் அரசியல்கள் சில நேரங்களில் தனிமனித வாழ்வின் குறிப்பிட்ட அம்சங்களையும் தனித்தன்மையையும் மறைத்துவிடுகின்றன. நிஜ வாழ்வுகளின் பன்முக அம்சங்கள் அடையாளங்களின் குறுகிய வரையறைக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்குவதில்லை. நம் வாழ்வனுபவங்கள் நமது அடையாளக் குறியீடுகளை விரிவடையச் செய்கின்றன. அடையாளம் அரசியலாக இருப்பதுடன் அதில் ஒரு விளையாட்டுத் தன்மையும் இருப்பதாக நினைக்கிறேன். நம் அடையாளங்களுடன் நாம் உறவாடவும் விளையாடவும் செய்கிறோம்," என்று மாயா கூறுகிறார். இதற்கு உதாரணமாகத் தான் "லெஸ்பியன்" என்ற சொல்லை முதன் முதலில் எதிர்கொண்ட அனுபவத்தை நினைவுகூர்கிறார். "பெண்கள் மீதான என்னுடைய பாலியல் ஈர்ப்பை நான் எனக்குத் தெளிவுபடுத்திக் கொண்டிருந்த அந்த சமயத்தில் எனக்கு "லெஸ்பியன்" என்ற ஒரு சொல் இருப்பது கூடத் தெரியாது. அதைக் கேள்விப்பட்ட பின்னும் அந்தச் சொல்லை எப்படி உச்சரிக்க வேண்டும் என்று தெரியவில்லை! இந்தச் சொல் எங்களது நாவில் புரண்டோடிய விதம் எனக்கும் என் இளம் தோழி ஒருத்திக்கும் கிளர்ச்சியூட்டியது நினைவிலிருக்கிறது. நாங்கள் எப்படி உணர்கிறோம் என்பதற்கும் அந்த உணர்வு எங்களுக்குத் தந்த அடையாளத்தையும் குறிக்க ஒரு சொல் இருப்பது ஒரு அற்புதமான நிகழ்வாக எனக்குப் பட்டது. அது வரை அணிந்திராத ஒரு புது ஆடையை அணிந்து கொண்டு அங்குமிங்கும் நடந்து பார்ப்பது போன்ற ஒரு உணர்வாக அது இருந்தது."

அதே நேரத்தில் மொழியின் அரசியல் குறித்தும் மாயா கவனமாக இருக்கிறார். "மொழி எப்பொழுதும் எங்கிருந்தோ வருகிறது. அது யாராலோ எதற்காகவோ உருவாக்கப்பட்டது. நாம் பயன்படுத்தும் மொழி யாரிடமிருந்து வருகிறது என்பதைக் கவனிக்க வேண்டியுள்ளது. ஆனால் அது நிச்சயமாக மாற்றங்களை எதிர்கொள்கிறது. மொழியை நாம் நமதாக்கிக் கொள்கிறோம், நம் தேவைக்கேற்ப அதை மாற்றியமைக்கவும் செய்கிறோம்."

மொழி எப்பொழுதும் எங்கிருந்தோ வருகிறது. அது யாராலோ எதற்காகவோ உருவாக்கப்பட்டது. நாம் பயன்படுத்தும் மொழி யாரிடமிருந்து வருகிறது என்பதை கவனிக்க வேண்டியுள்ளது. ஆனால் அது நிச்சயமாக மாற்றங்களை எதிர்கொள்கிறது. மொழியை நாம் நமதாக்கிக் கொள்கிறோம், நம் தேவைக்கேற்ப அதை மாற்றியமைக்கவும் செய்கிறோம்

வரலாற்று ரீதியாகப் பார்க்கும் பொழுது, *1996* ஆம் ஆண்டு தீபா மெஹ்தா என்ற இயக்குநரின் "ஃபயர்" என்ற திரைப்படம் வெளிவந்த பிறகே இந்தியாவில் பொதுவெளியில் லெஸ்பியன் என்ற சொல் பிரபலமானது. சிவ சேனை, பஜ்ரங்க் தளம் போன்ற அடிப்படைவாத அமைப்புகள் இத்திரைப்படம் இரு பெண்களுக் கிடையிலான பாலியல் உறவைச் சித்திரித்ததை எதிர்த்து செய்த வன்முறையான போராட்டங்கள் பலரால் கண்டனம் செய்யப் பட்டன. இந்து மத, பண்பாட்டு அடிப்படைவாதத்தை எதிர்த்து வந்த குரல்கள் இரண்டு நிலைகளில் இருந்தன. ஒன்று; பேச்சு மற்றும் கலைக்கான சுதந்திரம் மறுக்கப்படக் கூடாது என்ற நிலைப்பாட்டி லிருந்து எழுந்த குரல்கள்; மற்றொன்று CALERI (Campaign for Lesbian Rights) போன்ற அமைப்புகள் எழுப்பிய குரல்கள். இந்த இரண்டாவது வகையான குரல்கள் "லெஸ்பியன்" என்ற சொல்லாடலையும் அது குறிக்கும் அடையாளத்தையும் சுயபிரக்ஞையுடன் ஏற்றுக்கொண்டன. அதே நிலைப்பாட்டிலிருந்து அந்தச் சொல்லைப் பயன்படுத்துவது எனது தீர்மானமாகவும் இருந்தது.

கதைகளைப் பற்றி மீண்டும் பேசத்தொடங்கிய மாயா பல நேரங்களில் நாம் கேட்கும் கதைகளுக்குள் ஒளிந்திருக்கும் கதைகளைப் பற்றிக் குறிப்பிட்டார். பல நேரங்களில் நமது கதையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமே புரிந்துகொள்வதற்கு நமக்கு மற்றவர்களின் கதைகள் தேவையாக இருக்கின்றன. அவருடைய நூலில் உள்ள ஒரு குறிப்பிட்ட கதையில், ராஜஸ்தான் பகுதியில் பிரபலமாக வழங்கும் ராம்தேவ்ரா என்ற கடவுளைப் பற்றிய ஒரு சிறிய கதை முக்கிய இடம் வகிக்கிறது. களவு போன தனது மாடுகளை மீட்டெடுக்க ராம்தேவ்ரா சென்று கொண்டிருக்கிறார். வழியில் தீ ஒன்றில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் பாம்பு ஒன்றினைக் காப்பாற்றுகிறார். தான் முக்தி அடையும் வாய்ப்பிலிருந்து தன்னை விலக்கி விட்டதாக அவர் மீது கோபம் கொண்டு அந்த பாம்பு அவரைக் கொல்ல முடிவு செய்கிறது. தான் செய்ய வேண்டிய பணியை நிறைவேற்றிவிட்டுத் திரும்பும் வழியில் தானே தன்னைப் அந்த பாம்பிற்கு அர்ப்பணிப்பதாக உறுதி கூறிவிட்டு ராம்தேவ்ரா செல்கிறார். ஆனால் வாக்களித்தது போல ராம்தேவ்ரா திரும்பி வரும்பொழுது, அவர் உடல் முழுவதும் போர்க்காயங்களினால் நிரம்பியிருக்கின்றது. அப்பாம்பு தன் விஷத்தை செலுத்த ராம்தேவ்ராவின் நாக்கு ஒன்று மட்டுமே ஏற்ற இடமாக இருந்தது. இதுவே கதை.

இது போன்ற கதைகளில் உள்ள சொல்லப்படாத விஷயங்களும் அது உண்டாக்கும் அமைதியும் மாயாவைக் கவர்கின்றன. மேலும், நமது கதைகளில் உள்ள இடைவெளிகளை, நாம் வெளிப்படையாக சொல்ல விரும்பாதவை சொல்ல முடியாதவை; ஆகியவை உண்டாக்கும் வெளிகளை நிரப்ப நாம் இது போன்ற கதைகளைப் பயன்படுத்துகிறோம் என்று மாயா கூறுகிறார். அவருடைய நூலில் அவர் எழுதியிருப்பது போல் "அமைதி உடைக்கப்பட முடியாத தாகவோ உடைக்கப்படக் கூடாததாகவோ இருக்கும் பொழுது, அந்த அமைதி அங்கு இருப்பதை அங்கீகரிக்கவாவது செய்ய வேண்டும். அதன் வீரியத்தை, முரண்பாடுகளை, தவிர்க்க முடியாத அதன் விளைவுகளைக் குறைந்தபட்சம் அங்கீகரிக்கவாவது செய்யலாம்."

"...the [Women's] movement has adopted a policy of distancing itself from issues related to homosexual women.It must be said though that while it has not extended public/political support, it has indeed extended valuable support privattely, taking up individual cases, advocating, intervening, resolving. This support is appreciated by its direct beneficiaries as well as activist groups, yet because it is privately extended it remains unknown to the general public and inaccessible to those who are most urgently in need of it. This mode of support, that simultaneously involves mechanisms of denial, operating under the larger umbrella of cultural silence around issues of alternative sexuality, continues to enmesh homoerotic desire and its practices in phobia and prejudice." (Loving Women.P. 2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடல்
2

மொழி, பாலினம் மற்றும் பாலியல்பு :
ஒரு பெண்ணிய வரலாறு
வ. கீதாவுடன் உரையாடல்

பெண்ணிய அரசியலுக்கும் மொழிக்கும் நெருக்கமான தொடர்பிருப்பதாக நான் நினைக்கிறேன். பொதுவாகவே அரசியலுக்கும் மொழிக்கும் நெருக்கமான தொடர்பிருப்பதை பல வரலாற்றுச் சூழ்நிலைகளில் நாம் பார்க்கிறோம். 19ஆம் நூற்றாண்டில் ஓட்டுரிமை கேட்டுப் போராடிய "சாசன" இயக்கத்தினர் (Chartists) தங்களுடைய மனுவை இங்கிலாந்தின் நாடளுமன்றத்திற்கு அனுப்பிய பொழுது அதிலிருந்த இலக்கணப் பிழையை சுட்டிக்காட்டி "உங்களுக்கெல்லாம் ஓட்டுரிமையா?" என்ற கேள்வி எழுப்பப்பட்டது. எனவே மொழி, இலக்கணம், சமூகத் தகுதி இவை அனைத்திற்கும் நேரடித் தொடர்பிருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரைக்கும், தமிழ் அரசியலைப் பொறுத்த வரைக்கும் மொழி ஒரு முக்கியமான கூறாக 19ஆம் நூற்றாண்டின் நடு ஆண்டுகளிலிருந்தே இருந்து வந்திருக் கிறது. ஆனால் பெண்ணிய நோக்கிலிருந்து இந்த அரசியலை நாம் அணுகும் பொழுது நிறைய விஷயங்கள் வேடிக்கையாகவும் வினோதமாகவும் இருப்பதை நாம் பார்க்கிறோம். ஒன்று, பெண்ணுரிமை பேசப்பட்ட எல்லா காலங்களிலும் அந்த மொழியை ஆண்கள் எப்படி எதிர்கொண்டிருக்கிறார்கள், பெண்கள் அதனை எவ்வாறு உள்வாங்கியிருகிறார்கள், இலக்கிய வட்டாரம் மற்றும் பொதுஜன வெளி இவை இம்மொழியினை எப்படி உள்வாங்கி யிருக்கின்றன - இப்படிப் பிரித்துப் பார்த்தோமானால் ..

பொன்னி: மொழி என்பது உருவாக்கப்படுவது என்று நினைக்கிறீர்களா?

கீதா: மொழி என்பதை நாம் பேசக்கூடைய விஷயம் என்று மட்டுமோ, இயல்பாக நமக்குள் இருக்கக் கூடிய ஒன்றாகவோ மட்டும் பார்க்க முடியாது. மொழி என்பது ஒரு சமூகத்தின் கூட்டு நினைவுகளை வெளிப்படுத்துவதாகவும் இருக்கிறது. நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் யாராலோ எதற்காகவோ உருவாக்கப்பட் டிருக்கிறது. மொழி என்பது பல நேரங்களில் போரட்டங்களின் களனாகவும் இருந்திருக்கிறது. குறிப்பிட்ட மொழியின் அல்லது சொல்லின் வரையறையை நிலைநிறுத்த நாம் போராட வேண்டி யிருக்கிறது. இதற்கொரு எளிமையான உதாரணம்: "கற்பழிப்பு" என்ற சொல்லை மறுத்து "பாலியல் பலாத்காரம்" அல்லது "பெண் களுக்கு எதிரான பாலியல் வன்முறை" என்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துவதற்கு நாம் இன்னமும் போராடிக் கொண்டிருக் கிறோம். பலர் இன்று இவற்றை ஏற்றுக்கொண்டாலுமே கூட

உரையாடியவர்கள் :
அ. பொன்னி,
அனிருத்தன் வாசுதேவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக எல்லோரும் பயன்படுத்தும் சொல் "கற்பழிப்பு" என்பதாகத் தான் இருக்கிறது. போராட்டம் என்பது மொழிக்குள்ளும் மொழியின் மீது தாக்கம் செலுத்தக்கூடிய வேறு நிறுவனங்களிலும் தொடர்கிறது. இவற்றை பற்றிப் பேசும் பொழுதே நாம் ஒரு விஷயத்தை மனதில் வைத்துக்கொள்ள வேண்டியுள்ளது: மொழிக்கு அப்பாற்பட்டு ஏதாவது இருக்கிறதா? எந்த ஒரு நிறுவனமோ போராட்டமோ மொழியைக் கையாளாமல் தங்களுடைய நிலைப்பாட்டை அல்லது அரசியலை வெளிப்படுத்த முடிவ தில்லை. மொழியை மாற்றியமைக்காமல் தனக்கான இடத்தை அவற்றால் உறுதிசெய்ய முடியாது.

கேள்வி : பெண்ணிய மொழி என்ற ஒன்றை குறித்துப் பேசுவதற்கு முன், பெண்ணியத்தின் சூழல், பின்னணி குறித்து...

கீதா : பெண்ணியத்தை பொறுத்தவரையில், பெண்ணியம் தொடர்பான சொற்கள், நாம் இன்று பெண்ணியம் என்று பார்க்கக் கூடிய விஷயங்கள் அவை ஒரு நவீனகால நிகழ்வுப் போக்கு தான். முந்தைய காலங்களில் பெண்கள் பேசியும் பாடியும் இருக்கிறார்கள், தங்களுடைய ஆளுமையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை யெல்லாம் நாம் இன்றைய நிலைநோக்கிலிருந்து தான் சொல்கிறோம். அந்த வரலாறுகளை நாம் மீள்வாசிப்பு செய்கிறோம், முக்கியமானவர்கள் என்று கருதி அவர்களுடைய படைப்புக்களைப் பதிப்பிக்க முயற்சி செய்கிறோம். ஏதாவது ஒரு பனுவலில் அல்லது பாட்டில் அவர்களுடைய குரலைக் கண்டெடுத்து அதனை நமக்குரியதாக ஆக்கிக் கொள்கிறோம்.

ஆனால் நாம் இன்று பேசக்கூடிய பெண்ணியம் என்பது நவீன காலத்தைச் சேர்ந்தது என்பதை மறந்துவிடக் கூடாது. It is a modern phenomenon. அப்படிச் சொல்லும் பொழுது அதனை ஜனநாயகம், சமூக நீதி, சுதந்திரம், சமத்துவம். சகோதரத்துவம் -- இந்த சொற் களுடன் தொடர்புடைய ஒரு அரசியல் போக்காக நான் பார்க்கிறேன். அதனால் பெண்ணியம் என்பது ஔவையார் காலத்திலிருந்து இருந்தது என்றெல்லாம் நான் சொல்ல விரும்பவில்லை. ஔவையார் காலத்தில் பெண்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பது பற்றிய வித்தியாசமான பார்வையைப் பெண்ணியத்தால் இயற்றி அளிக்க முடியுமே தவிர அவர் பெண்ணியவாதி என்று சொல்வது பெண்ணியத்தின் நோக்கமல்ல. இதை நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால் நவீன காலத்தைப் பொறுத்த வரையில் நமக்குத் தெரியும் ஆங்கிலேய ருடைய ஆட்சிக் காலத்தில் உலகம் முழுவதுமே ஒருவிதமான ஜனநாயகப் புரட்சி ஏற்படக்கூடிய சூழல் 19ஆம் நூற்றாண்டி லிருந்தே, ஃப்ரென்சுப் புரட்சி ஏற்பட்ட பிறகே ஏற்பட்டதை நாம் வரலாற்றில் பார்க்கிறோம். நாம் பாரிஸ் நகரில் நடைபெற்ற புரட்சி பற்றி பேசுகிறோம். ஆனால் ஹைதியில் (Haiti) நடந்த காலனித்து வத்திற்கு எதிரான புரட்சியைப் பற்றி நாம் அதிகம் பேசுவதில்லை. துஸாண்ட் லா ஓவர்தருடைய புரட்சி பற்றி பேசுவதில்லை. இதனை நான் சொல்வதற்குக் காரணம் புரட்சிக் காலம் என்பது அதன் தொடக்கக் காலத்திலிருந்தே உலகளாவிய ஒன்றாகத் தான் இருந்து வந்திருக்கிறது.

இந்தியாவைப் பொறுத்த வரையில் குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்த வரையில் இந்த காலக்கட்டத்தைப் 18ஆம்

பெண்ணியம் என்பது ஔவையார் காலத்திலிருந்து இருந்தது என்றெல்லாம் நான் சொல்ல விரும்பவில்லை. ஔவையார் காலத்தில் பெண்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பது பற்றிய வித்தியாசமான பார்வையைப் பெண்ணியத்தால் இயற்றி அளிக்க முடியுமே தவிர அவர் பெண்ணியவாதி என்று சொல்வது பெண்ணியத்தின் நோக்கமல்ல. இதை நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரமாக சிந்திப்பது Free Thought என்பதும் கிருத்துவ மதம் என்பதும் இணைந்தே தான் இந்தியாவிற்கும் நுழைந்தன. இங்கு வரக்கூடிய சுதந்திரமான சிந்தித்தல் அது நாத்திகத்துடன் தொடர்புடையது, அறிவியல் சார்ந்த பார்வையுடன் சம்பந்தப் பட்டது, இது தமிழ் நாட்டில் 1850 60 களிலிருந்தே இருந்து வந்துள்ளதற்குச் சான்றுகள் இருக்கின்றன. இப்படியே படிப்படி யாகத் தொடர்ந்து, அறிவொளிக் காலத் தத்துவம், ஃப்ரென்சுப் புரட்சி சாதித்த மாற்றங்களின் தத்துவமாக இருக்கக்கூடிய 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற சொல்லாடல்கள் தமிழுக்குள் எளிமையாக நுழைந்து புழங்கக்கூடிய ஒரு காலகட்டத்தை நாம் பார்க்கிறோம்.

நூற்றாண்டிற்கே நாம் கொண்டு செல்லலாம். "அறிவொளிக் காலம்" என்று சொல்லக்கூடிய Enlighenment Period வரலாற்றுடன் தொடர்புடைய காலம் தான் நம்முடைய புரட்சிக் காலம். அதனுடைய முழு தாக்கத்தையும் நாம் 19 ஆம் நூற்றாண்டில் தான் உணர்கிறோம். அறிவொளிக் காலத்துச் சொல்லாடல்கள் -- சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் - இவை படிப்படியாக 19 ஆம் நூற்றாண்டில் நடந்த பல்வேறு விதமான நிகழ்வுப் போக்குகளி னூடாக நம்மை வந்தடைகின்றன. இந்த நிகழ்வுப் போக்குகளைப் பட்டியலிட்டோமானால் ஒன்று மேற்கத்திய கல்வி மற்றொன்று கிருத்துவ மதம்............

சுதந்திரமாக சிந்திப்பது - Free Thought - என்பதும் கிருத்துவ மதம் என்பதும் இணைந்தே தான் இந்தியாவிற்கும் நுழைந்தன. இங்கு வரக்கூடிய சுதந்திரமான சிந்தித்தல் - அது நாத்திகத்துடன் தொடர்புடையது, அறிவியல் சார்ந்த பார்வையுடன் சம்பந்தப் பட்டது, இது தமிழ் நாட்டில் 1850-60 களிலிருந்தே இருந்து வந்துள்ளதற்குச் சான்றுகள் இருக்கின்றன. இப்படியே படிப்படி யாகத் தொடர்ந்து, அறிவொளிக் காலத் தத்துவம், ஃப்ரென்சுப் புரட்சி சாதித்த மாற்றங்களின் தத்துவமாக இருக்கக்கூடிய "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற சொல்லாடல்கள் தமிழுக்குள் எளிமையாக நுழைந்து புழங்கக்கூடிய ஒரு காலகட்டத்தை நாம் பார்க்கிறோம். இந்த சொல்லாடல்களை உருவாக்குவதில் பெண்கள், பெண்களின் சுதந்திரம், பெண் சமத்துவம் ஆகியவற் றிற்கு மிக முக்கியப் பங்கு இருக்கிறது. அதாவது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய சொற்களுக்கு நாம் தரக்கூடிய பொருள் என்பதே பெண்ணுடைய சமூகத் தகுதி, பெண்ணுடைய சமூகப் பாத்திரம், பெண் விடுதலை ஆகியவை தொடர்பான சொல்லாடல்களின் ஊடாக உண்டாக்கப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு சாதி எதிர்ப்புச் சொல்லாடல்களுடன் இந்த சொற்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றனவோ அந்த அளவுக்குப் பெண்ணிய சொல்லாடல்களுடனும் சம்பந்தப்பட்டிருப்பதையும் நம்மால் பார்க்க முடிகிறது.

இதற்கு மிக நல்ல உதாரணம் பாரதி தான். பாரதியுடைய எல்லா கவிதைகளிலும் வருவது "சமத்துவம்" என்பது. இதனைப் பிரித்துக் கூறும் பொழுது equity and equality என்று சொல்கிறோம். ஒன்று, ஒரு நிலையில் வைத்துப் பார்ப்பது, பாரதி இதனை 'ஒரு நிறை' என்ற சொல்லால் குறிப்பிடுவார். மற்றொன்று substantial equality எல்லா நிலைகளிலும் சமத்துவம் என்று சொல்கிறோம். இந்த மாதிரியான கருத்தைத் தெளிவுபடுத்த வேண்டும் என்ற அக்கறையும் ஒரு விதமான கவலையும் பாரதியிடம் இருப்பதை நாம் பார்க்கிறோம். "சரி நிகர் சமானமாக" என்ற சொற்றொடர் நம் அனைவருக்கும் தெரியும். ஆனால் அவர் "ஒருநிகர்," "முழுநிகர்" என்று பல்வேறு சொற்களையும் பயன்படுத்துகிறார். தொடர்ந்து சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் பற்றிய கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.

பொன்னி: இந்த வரலாறுகளில் ஒருபுறம் பெண்ணிய வரலாற்றுடன் தொடர்புகொண்டு உண்டாகக் கூடிய மொழி என்று சொல்கிறோம். மற்றொரு புறம் மொழி என்பதே ஆணாதிக்க வரலாறு கொண்டது என்ற புரிதலும் இருக்கும் பொழுது இந்த வரலாறுகள் எப்படி இணைகின்றன...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் ... ஆவணகம்

கீதா: சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய சொற்களுக்கு பாரதி தரக்கூடிய பொருள் வரையறை, அவர் எந்த சூழலில் இந்தச் சொற்களைப் பயன்படுத்துகிறார், எந்த சொற்களுடன் அவர் அவற்றை இணைத்துப் பார்க்கிறார் என்பதை பொறுத்தே அமைகின்றன. பெண் விடுதலைக்கான பொருளைத் தேடும் பொழுது அவருக்கு இந்த வார்த்தைகளுக்கான புதுப்புது அர்த்தங்கள் கிடைக்கின்றன. "காதல்" என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். பாரதி இதனை இரண்டு விதங்களில் பார்க்கிறார்: "விடுதலைக் காதல்" என்று ஒன்று - Free Love என்று அன்று பேசப்பட்டது; மற்றொன்று "உயிர்க் காதல்" - இலக்கியத்திலும் நம்முடைய மரபுகளிலும் சொல்லப்பட்டிருக்கிற மேற்கத்திய Romantic மரபுகளில் இருக்கக் கூடிய காதல் இது; கிரேக்க மொழியில் agape என்று சொல்வார்கள்; இது Eros என்பதிலிருந்து வேறுபட்டது. இந்த விதமான பார்வையும் பாரதியிடம் இருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது. அவர் ஏன் இந்தச் சொற்களைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்துகிறார்? (காதல், சமத்துவம் ஆகியவற்றை குறிக்க அவர் கையாளும் சொற்களை கவனப்படுத்த விரும்புகிறேன்). சரி, இதைச் சொல்லி முடித்துவிட்டோம் என்று அவர் நிற்பதில்லை. அவர் மீண்டும் மீண்டும் இந்த சொற்களை மறுவாசிப்பு செய்கிறார். குறிப்பாகப் பெண் விடுதலை தொடர்பான சொற்களை உரைநடையில் ஒரு விதமாகவும் கவிதைகளில் ஒரு விதமாகவும் மீண்டும் மீண்டும் பயன்படுத்துகிறார். அப்படிச் செய்யும் பொழுது ஏதோ புதிதான ஒன்று நிகழ்கிறது; புதிதான ஒன்று நம் கண் முன் விரிகிறது என்று தோன்றுகிறது. இன்று "புதுமைப் பெண்" என்ற சொற்றொடரை சர்வ சாதாரணமாகப் பயன்படுத்துகிறோம். அது "The New Woman" என்பதன் மொழிபெயர்ப்பு. இந்த சொல்லினுடைய மேற்கத்திய பின்புலத்தையோ அல்லது ரஷ்யப் பின்புலத்தையோ நாம் யோசித்துப் பார்த்தோமானால் அந்தப் "புதுமைப் பெண்" என்பவள் கல்விக்காகவும் தனது குடியுரிமைக் காகவும் மட்டும் போராடுபவள் அல்ல; அவள் வர்க்கப் போராட்டம் செய்யக் கூடியவள், பாலியல் வாழ்க்கையை மாற்றியமைக்க வேண்டும் என்று யோசிப்பவள்; ஒருதார மணம், திருமணம், குடும்பம் என்பவற்றுடன் நின்றுவிடக் கூடாது என்று சிந்திப்பவள். பெண்ணாக இருந்தாலும் ஆணுடை அணிந்து என்னால் இருக்க முடியும் என்பது போன்ற நிலைப்பாட்டை எடுப்பவளாகவும் இருக்கிறாள். ஆண்-பெண் என்ற இரு நிலைகளுக்கு நடுவே மயங்கிய ஒரு நிலை இருக்கிறது என்று சொல்லக்கூடியவள். மேற்கத்திய வரலாற்றில் "புதுமை பெண்" என்ற பிம்பம் இப்படித் தான் கட்டமைக்கப்படுகிறது. பின்னர் அந்தப் பிம்பம் domesticate செய்யப்படுகிறது. அந்த வரலாற்றுக்குள் நாம் இப்பொழுது போக வேண்டாம்.

'புதுமைப் பெண்' என்பவள் கல்விக்காகவும் தனது குடியுரிமைக் காகவும் மட்டும் போராடுபவள் அல்ல; அவள் வர்க்கப் போராட்டம் செய்யக் கூடியவள், பாலியல் வாழ்க்கையை மாற்றியமைக்க வேண்டும் என்று யோசிப்பவள்; ஒருதார மணம், திருமணம், குடும்பம் என்பவற்றுடன் நின்றுவிடக் கூடாது என்று சிந்திப்பவள். பெண்ணாக இருந்தாலும் ஆணுடை அணிந்து என்னால் இருக்க முடியும் என்பது போன்ற நிலைப்பாட்டை எடுப்பவளாகவும் இருக்கிறாள். ஆண் பெண் என்ற இரு நிலைகளுக்கு நடுவே மயங்கிய ஒரு நிலை இருக்கிறது என்று சொல்லக்கூடியவள்.

பாரதியை பொறுத்த வரையில் இந்த செய்திகள் அனைத்தும் அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பு இருந்திருக்கிறது. அந்த வரலாற்றை உள்வாங்கி, இவர் வாழக்கூடிய சூழலுக்கு ஏற்றாற் போல எப்படிக் கொண்டு போகிறார் என்பது தான் நமக்கு முக்கியம். எனவே, "புதுமைப் பெண்" என்ற பிம்பத்திற்கு அர்த்தம் கொடுக்க வேண்டியதற்காக மொழிக்குள் ஒரு சிறு பயணத்தை அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்கிறார். ஒரு போராட்டத்தை நிகழ்த்துகிறார். இங்கு தான் நாம் மொழி பற்றி நிறைய யோசிக்க வேண்டியுள்ளது. இப்படி ஒரு போராட்டக் களனாக மொழியை பார்த்தோமேயானால், பொதுவாகப் பெண்ணியலாளர்களாகிய நாம் அனைவரும் முதலில் சொல்வது இது ஆண்மயப்பட்ட மொழி, ஆண்களால் உருவாக்கப் பட்டு ஆண்களுடைய உலகப் பார்வையைத் தாங்கி இயங்கக் கூடிய மொழி என்பது. இது ஒரு புறம். மற்றொரு புறம், மொழி என்பதற்குப் பல்வேறு விதமான கூறுகள் இருக்கின்றன. எந்த ஒரு சொல்லையும் அது பொதுவாக இயங்கக் கூடிய பொருளில் நாம் கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது. அந்த பொருளுக்குள் பொதிந்துள்ள, அதற்குள் subjugate ஆகியிருக்கக் கூடிய அர்த்தங் களும் நிறைய இருக்கின்றன. ஒரு சொல் போராட்டதிற்கான களம் என்ற நிலை இருந்தால், அந்த போராட்டத்தின் அறிகுறிகள் சமூகத்தில் இருந்துகொண்டு தானே இருக்கும். அப்படி அறிகுறிகள் இருப்பதை உணர்ந்து கவிஞர்களோ இலக்கியவாதிகளோ சிந்தனை யாளார்களோ செயல்படும் பொழுது, ஆண்மயப்பட்ட மொழியாக இருந்தாலுமே அந்த மொழியை எதிர்க்கக்கூடிய, கேள்விகள் கேட்கக்கூடிய நிலை சமுதாயத்தில் உருவாகிறது.

பாரதியும் ஓரளவிற்கு இதனைச் செய்கிறார். "விடுதலைக் காதல்" பற்றிய கவிதையில் ஆண்-பெண், ஒருவனுக்கு ஒருத்தி என்ற மரபு கலைந்துவிட்டால் குடும்பங்கள் என்னாவது, பிள்ளைகள் என்னாவது என்று கேட்கிறார். ஆனால் உரைநடையில் எழுதும் பொழுது இது அத்தனை புதிதா என்று கேட்கிறார். இஸ்லாமியர்கள் மத்தியில் இது ஏற்கனவே உள்ளதே என்கிறார். இருந்தாலும் நாம் பிள்ளைகளின் நலனைக் கருதி வேறு விதத்தில் யோசிக்க வேண்டியுள்ளது என்றும் கூறுகிறார். எனவே அவர் புதுமை நோக்கிச் செல்கிறார். அதே நேரத்தில் இங்கு மரபாகச் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்களால் தடுக்கப்படுகிறார். இவை இரண்டிற்கும் இடையிலான அவரது பயணம் மொழியின் ஊடான பயணம். ஆண்வயப்பட்ட, பொதுவாக இங்கு குடும்பம் ஒருதாரமணம் இவற்றைச் சார்ந்துள்ள (ஒருதாரமணம் என்பது புதிய அமைப்பு என்பதை நாம் இங்கு மறந்துவிடக் கூடாது. பலதாரமணம் பேசப் பட்ட காலத்திலிருந்து 20ஆம் நூற்றாண்டில் ஒருதாரமணத்திற்கு வந்திருக்கிறோம்). சொல்லாடல்களுடன் அவர் நிகழ்த்தும் அந்தக் குட்டி மொழிப்போரில் நாம் என்ன பார்க்கிறோமென்றால் ஆண்வயப்பட்ட ஒரு மொழியிலிருந்து விடுபட்டு புதிய விஷயங் களை உள்வாங்கக் கூடிய மொழியை உருவாக்கும் பொழுது எப்படிப்பட்ட மனச் சலனங்களுக்கு நாம் ஆட்படுகிறோம், எங்கு நம்மை நிலைநிறுத்திக் கொள்ள முடிகிறது, எங்கு முடிவதில்லை என்பதைத்தான் ஒரு உதாரணத்திற்காக நான் பாரதியைக் கூறுகிறேன். அவர் மொழியில் ஒரு வல்லுநர் என்பதால் நாம் அவரைப் பற்றி பேச வேண்டியிருக்கிறது. இன்னமும் சொல்லப் போனால், புரட்சி, சமூக மாற்றம் விடுதலை - எந்த சொல்லை எடுத்துக் கொண்டாலும் நாம் மீண்டும் மீண்டும் பாரதியிடம் செல்கிறோம். இங்குமே நான் மிக எளிமையான உதாரணத்தை மட்டுமே சுட்டிக்காட்டியுள்ளேன். பாரதியின் மொழியில் பயணங்கள் குறித்துப் பேச நிறைய இருக்கு.

'விடுதலைக் காதல்' பற்றிய கவிதையில் ஆண்பெண், ஒருவனுக்கு ஒருத்தி என்ற மரபு கலைந்துவிட்டால் குடும்பங்கள் என்னாவது, பிள்ளைகள் என்னாவது என்று கேட்கிறார். ஆனால் உரைநடையில் எழுதும் பொழுது இது அத்தனை புதிதா என்று கேட்கிறார். இஸ்லாமியர்கள் மத்தியில் இது ஏற்கனவே உள்ளதே என்கிறார். இருந்தாலும் நாம் பிள்ளைகளின் நலனைக் கருதி வேறு விதத்தில் யோசிக்க வேண்டியுள்ளது என்றும் கூறுகிறார். எனவே அவர் புதுமை நோக்கிச் செல்கிறார். அதே நேரத்தில் இங்கு மரபாகச் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்களால் தடுக்கப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பாரதி உருவாக்கிய சொற்களஞ்சியத்தை சுவீகரிக்கும் பொழுதுதான், அவர்களுடைய கையாளுதலில் தான் இந்த ஆணாதிக்க மொழியை எதிர்ப்பதற்கு என்ன தேவை என்பது நமக்குப் புரிய வருகிறது.

பொன்னி: இந்த மொழி தொடர்பான போராட்டத்தில் ஒரு புறம் நாம் புதிய சொற்களை உருவாக்குகிறோம். மற்றொரு புறம் ஏற்கனவே உள்ள மொழியை மீட்டெடுத்துப் புதிய முறையில் பயன்படுத்துவது என்ற செயல்பாடு உள்ளது.

கீதா: பழைய செயல்களுக்குப் புது வடிவம் கொடுப்பது எல்லா கிளர்ச்சிக் காலங்களிலும் நடப்பது தான். நாம் அந்த வார்த்தை களைப் புதுப்பித்துக் கொண்டே இருக்கிறோம்.

பொன்னி: உதாரணத்திற்கு, "க்வியர்" Queer என்கிற ஆங்கிலச் சொல்லை எடுத்துக்கொள்ளலாம். அது அவதூறுச் சொல்லாக் முதலில் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது மாற்றுப் பாலியலாளர் போராட்ட ரீதியாக அது மீட்டெடுக்கப்பட்டு வேறு விதமான அரசியலுடன் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கீதா: இந்த செயல்பாட்டைப் பொதுவாக பாரதியிடம் பார்க்கலாம். பாலியல் தொடர்பான சொல் என்று வேண்டுமானால் "அலி" என்ற சொல்லை எடுத்துக்கொள்ளலாம். பாரதியுடைய பிரயோகத்தில் எல்லாமே ஒன்று - இது அத்வைத தத்துவம் தான் - பிரம்மனில் எல்லாமே இணைகின்றது என்று சொல்லும் தருணத்தில் தேர்ந்தெடுத்து "அலி" என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். காக்கை, மல்லிப்பூ, நாவிதர், வண்ணான் இவர்களுடன் அலியையும் சேர்த்துச் சொல்கிறார். அதாவது ஏதோ ஒரு வகையில் நாம் புறந்தள்ளக் கூடிய அடையாளங்களை எல்லாம் ஒன்று தான் என்ற நிலையில் சொல்கிறார். பொதுவாகவே நமது மரபுகளில் மெய்யியல் தளத்தில் (metaphysical) இது செயல்படுவதைப் பார்க்கலாம். இதனை நம்மால் secularize செய்ய, மதசார்பற்றதாக்க இயலுமா? இது போன்ற கையாளுதலை மதம் என்ற களத்தில் இருந்து எடுத்து வேறொரு களத்தில், நம்முடைய களமாக இன்று நாம் உணரக்கூடிய பகுத்தறிவு சார்ந்த குடிமைச் சமுதாய வாழ்வுக்குத் தேவையான மொழி அல்லது சொல்லாடலுக்குள் கொண்டு வர முடியுமா என்பதே கேள்வி. பாரதி இம்மாதிரியான பிரச்சனைக்குள் போவ தில்லை. அவருடைய கற்பனை secular என்பதைக் காட்டிலும் meta-physical என்பதைச் சார்ந்து தான் இயங்குகிறது. புரட்சிகரமான உலகத்தை அவர் ஏற்றுக்கொண்டாலுமே கூட, அவருடைய கற்பனையை அது எட்டும் பொழுது அதனை அவர் உடனடியாக கலையார்ந்த ஒரு மொழியாக மாற்றுகிறார். "யுகப் புரட்சி" என்று பேசுகிறார்; மிகப் பிரமாதமான சொல் பயன்பாடு அது. அதே நேரத்தில், பராசக்தியுடைய கடைக்கண் பார்வை பெற்று தான் ரஷ்யா அப்படிச் செய்தது என்கிறார். பல நேரங்களில் பெண் விடுதலை பற்றிப் பேசும் பொழுது, நிறைய கதைகளில், அசாதாரணமான பெண்களை முன்னிறுத்துகிறார். மிளகாய்ப் பழச்சாமியார் என்ற கதையில் ஒரு பெண் சாமியார் அவருக்குப் பாரதியார் தந்திருக்கும் பண்புகள் மிக வித்தியாசமானவை: பார்ப்பனர் அல்லாத வகுப்பைச் சேர்ந்தப் பெண், நெசவாளர் இனத்தைச் சேர்ந்த பெண், விதவை, அவள் வேலை வைத்து

பொதுவாகவே நமது மரபுகளில் மெய்யியல் தளத்தில் (metaphysical) இது செயல்படுவதைப் பார்க்கலாம். இதனை நம்மால் secularize செய்ய, மதசார்பற்றதாக்க இயலுமா? இது போன்ற கையாளுதலை மதம் என்ற களத்தில் இருந்து எடுத்து வேறொரு களத்தில், நம்முடைய களமாக இன்று நாம் உணரக்கூடிய பகுத்தறிவு சார்ந்த குடிமைச் சமுதாய வாழ்வுக்குத் தேவையான மொழி அல்லது சொல்லாடலுக்குள் கொண்டு வர முடியுமா என்பதே கேள்வி. பாரதி இம்மாதிரியான பிரச்சனைக்குள் போவ தில்லை. அவருடைய கற்பனை secular என்பதைக் காட்டிலும் meta-physical என்பதைச் சார்ந்து தான் இயங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்குபவள் - அவள் தான் பாரதிக்குப் பெண் விடுதலை உபதேசம் செய்கிறாள். ஆகவே, பாரதிக்கு ஏதோ ஒரு வகையில் பெண் விடுதலை என்பதின் secular புரிகிறது. அது இந்த உலகத்தைச் சார்ந்தது, இங்கு தான் அந்த விடுதலையை நாம் சாதிக்க வேண்டும் என்று தெரிகிறது, அதே நேரத்தில், அதை எப்படி ஒரு பொது மொழிக்குள், ஒரு civil மொழிக்குள் கொண்டுபோவது என்ற போராட்டத்தை அவர் நிகழ்த்துகிறார். ஆனால் அவரை அந்த civil, பொது மொழி ஈர்க்கவில்லை. அவருடைய கற்பனை அந்த பொது மொழியை சுவாரஸ்யமானதாகக் கருதவில்லை. எனவே அவர் உடனே ஏற்கனவே உள்ள ஒரு ஆன்மீக, மெய்யியல் மொழிக்குள் சென்றுவிட்டு மீண்டும் திரும்பி வருகிறார். அவருடைய பல கதைகளில் நாம் இதைப் பார்க்கலாம். நான் Secular என்ற சொல்லையே பயன்படுத்துகிறேன். ஏனெனில் "மதசார்பற்ற" என்ற பொருளில் மட்டும் நான் அதைப் பயன்படுத்தவில்லை.

பாரதிக்கு ஏதோ ஒரு வகையில் பெண் விடுதலை என்பதின் secular புரிகிறது. அது இந்த உலகத்தைச் சார்ந்தது, இங்கு தான் அந்த விடுதலையை நாம் சாதிக்க வேண்டும் என்று தெரிகிறது, அதே நேரத்தில், அதை எப்படி ஒரு பொது மொழிக்குள், ஒரு civil மொழிக்குள் கொண்டுபோவது என்ற போராட்டத்தை அவர் நிகழ்த்துகிறார். ஆனால் அவரை அந்த civil, பொது மொழி ஈர்க்கவில்லை. அவருடைய கற்பனை அந்த பொது மொழியை சுவாரஸ்யமானதாகக் கருதவில்லை. எனவே அவர் உடனே ஏற்கனவே உள்ள ஒரு ஆன்மீக, மெய்யியல் மொழிக்குள் சென்றுவிட்டு மீண்டும் திரும்பி வருகிறார்.

அனிருத்தன்: "மனதில் உறுதி வேண்டும்.." பாடலில் கூட "பெண் விடுதலை வேண்டும், பெரிய கடவுள் காக்க வேண்டும்" என்று சொல்கிறார்.

கீதா: ஆமாம். அது எப்பொழுதும் கூடவே வருகிறது. ஆனால் அவருடைய genius என்னவென்றால் அவர் ஒரு இடத்தை வந்தடைந்துவிட்டோம் என்று திருப்திகொள்வதில்லை. மீண்டும் மீண்டும் அதைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும் அவருக்கு.

பாரதி 1921இல் காலமாகிறார். வரலாற்று ரீதியாகப் பார்க்கும் பொழுது இது ஒருபுறம் நடந்துகொண்டிருக்க, இன்னொரு புறம் இதே மாதிரியான விஷயங்கள் பொதுக்களத்தில், popular media என்று சொல்லக்கூடிய தளத்திலும் நிகழ்ந்துகொண்டிருந்தன. இவை ஜனரஞ்சகமாகவும் புழக்கத்திற்கு வருகின்றன. கிராமஃபோன் தட்டுக்கள் வெளிவந்த காலம் அது. நாடகங்கள் புதிதாக உருவாகத் தொடங்கின காலம். பத்திரிக்கைகள் பல வெளிவந்து கொண்டிருந்தன. எப்பொழுதும் இலக்கிய வட்டாரத்திலும் அரசியல் வட்டாரத்திலும் மட்டுமே இந்த சொற்கள் இருப்பது கிடையாது. பாரதி ஒரு புறமும், பெரியார் ஒரு புறமும் பேசலாம். ஆனால் இதே சொற்களை வேறு விதமாக இந்த களங்களும் பயன்படுத்துவதை நாம் பார்க்கிறோம். அவை கொச்சைப்படுத்தப்படுவதையும் சிறுமைபடுத்தப்படுவதையும் அவற்றை மிகக் குறுகிய வட்டத்திற்குள் வைத்து அவற்றிற்குப் பொருள் வழங்குவதைப் பார்க்கலாம். ஒரு domestication முயற்சியும் அதே காலத்தில் இருந்திருப்பதையும் பார்க்கிறோம்.

அடுத்த பெரிய மாற்றம் என்று பார்ப்பது ஒரு தீர்மானகரமான மாற்றம் என்பதைப் பார்ப்பது சுயமரியாதை இயக்கத்தில் தான். சுயமரியாதை இயக்கத்துடைய காலகட்டம் பாரதியின் காலகட்டத்தின் நீட்சியாக ஒரு புறம் பார்க்கலாம். ஆனால் அதில் முக்கிய வித்தியாசமாக இருப்பது சுயமரியாதை இயக்கம் சாதி ஒழிப்பின் மீதும் தீண்டாமை எதிர்ப்பின் மீதும் கொண்டிருந்த அக்கறை. சாதி வேறுபாடுகள், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான உறவுகள் - இவற்றைத் தொடர்புபடுத்தக் கூடிய ஒரு தத்துவம், ஒரு அரசியல் பெரியார் இயக்கத்தில் ஒரு பத்தாண்டுகளாக உருவாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுவதை நாம் அப்பொழுது பார்க்கிறோம். நாம் முக்கியமாகப் பார்க்க வேண்டியது என்னவெனில் இவர்களும் மீண்டும் மீண்டும் இதே சொற்களைக் கையாளுவதும் அது தொடர்பாக வேறு சொற்களை உருவாக்குவதும். "புதுமைப் பெண்" என்கிற விஷயத்தை சுயமரியாதை இயக்கத்தினரும் கையிலெடுக்கிறார்கள். "சரி நிகர் சமானம்" என்ற சொற்றொடரைப் பெண் விடுதலை தொடர்பாக அவர்களும் எல்லா இடங்களிலும் பயன்படுத்துகின்றனர். பாரதியுடைய "பதிவிரதை"கட்டுரையில் அவர் கற்பு என்பது தான் அடிப்படையான மதிப்பீடு என்று இருக்க வேண்டிய அவசியமில்லை என்றும் பல மதிப்பீடுகளில் அதுவும் ஒன்று என்றும் கூறுகிறார். பெரியார் 1926இல் பேசும்பொழுது கற்பு என்பதை மறுதலிப்பதையும் நாம் பார்க்கிறோம். எனவே, சுயமரியாதை இயக்கத்தினரின் இந்த சொல்லாடல்கள் உணர்வுப் பூர்வமாக பாரதியிடமிருந்து சுவீகரிக்கப்படுகின்றனவா அல்லது வரலாற்றில் சுயபிரக்ஞையுடன் அவர்கள் வேறொரு நிலையிலிருந்து அரசியலையும் வாழ்க்கையையும் பார்க்கும் பொழுது, ஏற்கனவே உள்ள சொற்கள் அவர்களுடைய உலகப் பார்வைக்குள் வரும் பொழுது ஏதோவொரு மாற்றம் ஏற்படுகிறதா - இவற்றையெல்லாம் நாம் கேள்விகளாகத் தான் கேட்க முடியும். இப்படித் தான் நடந்தது என்று நாம் அறுதியிட்டுச் சொல்ல இயலாது.

வரலாற்று மாற்றங்களின் நுணுக்கங்களை நாம் அவ்வளவு தெளிவாகப் புரிந்துகொள்ள முடிவதில்லை. ஆனால் 1927,28 29 ஆகிய ஆண்டுகளில் தமிழகத்தில், பெண் விடுதலை, பெண்ணியம் பற்றிய ஒரு புது மொழிக்கான அறிகுறி தென்படுவதை நம்மால் தெளிவாகப் பார்க்க முடிகிறது. எல்லோரும் மாறி விட்டார்கள் என்று நான் சொல்ல வரவில்லை. நான் ஏற்கனவே குறிப்பிட்ட ஜனரஞ்சக தளம் அதன் போக்கில் சென்று கொண்டிருந்தது. ஆனால் அதே சமயம் அரசியலையும் தத்துவத்தையும் பண்பாட்டையும் பற்றிக் கவனமாக சிந்திக்கக் கூடிய ஒரு தளத்தில் புது சொற்களும் புது விதமான புரிதலும் இருந்ததற்கான அறிகுறிகளை நம்மால் பார்க்க முடிகிறது. சுயமரியாதை இயக்கம் பழைய சொற்களுக்குத் தந்த புது விளக்கங்கள், புழக்கத்திலிருந்த சொற்களை அவர்கள் அரசியல் படுத்தியது, "ஆண்," "பெண்" போன்ற சாதாரண வார்த்தைகள்ள அவர்கள் அரசியல்படுத்திய விதம், சமுதாய மாற்றங்கள் வேண்டும் என்ற காரணத்திற்காக அவர்கள் மாற்றியமைத்தச் சொற்கள், குறிப்பாகத் திருமணம் மற்றும் விவாகரத்துத் தொடர்பாக அவர்கள் பேசிய விஷயங்கள், ஆசை, தாபம், வேட்கை இவை குறித்து அவர்கள் சொல்லியிருப்பவை; நாம் இன்று உப்புச்சப்பில்லாமல் "குடும்பக் கட்டுப்பாடு" என்று சொல்கிறோமே அதையொட்டி அவர்கள் பேசிய விஷயங்கள் இவற்றை எல்லாம் நாம் பார்க்கிறோம். இவற்றுள் சில விஷயங்களை மட்டும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆண், பெண் என்ற சொற்களை எடுத்துக்கொள்வோம். பெரியாருடைய எழுத்துக்களிலும் சுயமரியாதை இயக்கத்தில் வந்த மற்றவர்களாகிய குருசாமி, குஞ்சிதம், ராமாமிர்தத்தம்மாள் ஆகியோர் எழுத்துக்களிலும் ஆண், பெண் என்பவை சாதாரண சொற்களாகவே இருக்காது. ஆண் என்று சொல்லும் பொழுதே

வரலாற்று மாற்றங்களின் நுணுக்கங்களை நாம் அவ்வளவு தெளிவாகப் புரிந்துகொள்ள முடிவதில்லை. ஆனால் 1927,28 29 ஆகிய ஆண்டுகளில் தமிழகத்தில், பெண் விடுதலை, பெண்ணியம் பற்றிய ஒரு புது மொழிக்கான அறிகுறி தென்படுவதை நம்மால் தெளிவாகப் பார்க்க முடிகிறது. எல்லோரும் மாறி விட்டார்கள் என்று நான் சொல்ல வரவில்லை. நான் ஏற்கனவே குறிப்பிட்ட ஜனரஞ்சக தளம் அதன் போக்கில் சென்று கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் கல்வியில் அக்கறை இருந்தது. பெண்களுக்கு வலுக்கட்டாயமாகத் திருமணம் செய்து வைக்கக் கூடாது என்ற எண்ணமிருந்தது. விதவை மறுமணத்தில் அக்கறை இருந்தது. ஆனால் கற்பு, பெண் சுதந்திரம், அல்லது பெண்கள் திருமணம் செய்துகொள்ளாமலேயே இருப்பது ஆகியற்றை எதிர்கொள்ள விரும்பாது ஒதுங்கக்கூடிய தன்மை பலருக்கு இருந்தது. ஆனால் அதே நேரத்தில் இவர்கள் பெண் விடுதலையைப் பற்றி பேசவும் விரும்பினார்கள். நாங்கள் பெண் கல்விக்கு ஆதரவாகப் பேச விரும்புகிறோம், பெண்கள் அவர்கள் மனதிற்குப் பிடித்தவர்களைத் தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் இவற்றை ஏற்றுக்கொள்கிறார்கள்.

அதிகாரம் பற்றியும் திருமணத்தில் யாருடைய கை ஓங்கியிருக்கிறது என்பது பற்றியும் பேசுவது தெளிவாக்கப்படும். பார்ப்பனனுக்கும் சூத்திரனுக்கும் இடையில் உள்ள முரண்பாட்டைக் காட்டிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலுள்ள முரண்பாடு மிகக் கூர்மையானது என்று பெரியார் மிக இயல்பாகக் கூறுகிறார். முதலிருவர் நேருக்கு நேர் சந்திக்கும் பொழுது தான் பிரச்சனை வருகிறது, ஆனால் ஆணும் பெண்ணும் உறவில் இருப்பதி னாலேயே பிரச்சனை வருகிறது என்று சொல்கிறார். மிகவும் இயல்பானது என்று நாம் ஏற்றுக்கொள்ளக் கூடிய உறவு, காலம் காலமாக இப்படித் தான் இருந்து வந்திருக்கிறது என்று நாம் எண்ணியிருந்தவற்றை இவர் முழுவதுமாகப் புரட்டிப் போடு கிறார்கள். ஆண்மை/பெண்மை என்பவற்றையும் பெரியார் தெளிவுபடுத்துகிறார். இவை உருவாக்கப்பட்ட விஷயங்கள் என்பதைத் தெளிவாக்குகிறார்: ஆணோடு பிறந்ததல்ல ஆண்மை, பெண்ணோடு பிறந்ததல்ல பெண்மை.அவர் ஏன் இதை வலியுறுத்திச் சொல்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். பெண் விடுதலை பேசப்பட்ட இந்தக் காலத்தில் எல்லோருமே, அதாவது அறிவுசார் உலகத்தில் இயங்கிய எல்லோருமே இவற்றை ஒரே மாதிரியாகப் புரிந்துகொள்ளவில்லை. பெண் கல்வியில் அக்கறை இருந்தது. பெண்களுக்கு வலுக்கட்டாயமாகத் திருமணம் செய்து வைக்கக் கூடாது என்ற எண்ணமிருந்தது. விதவை மறுமணத்தில் அக்கறை இருந்தது. ஆனால் கற்பு, பெண் சுதந்திரம், அல்லது பெண்கள் திருமணம் செய்துகொள்ளாமலேயே இருப்பது ஆகியற்றை எதிர்கொள்ள விரும்பாது ஒதுங்கக்கூடிய தன்மை பலருக்கு இருந்தது. ஆனால் அதே நேரத்தில் இவர்கள் பெண் விடுதலையைப் பற்றி பேசவும் விரும்பினார்கள். நாங்கள் பெண் கல்விக்கு ஆதரவாகப் பேச விரும்புகிறோம், பெண்கள் அவர்கள் மனதிற்குப் பிடித்தவர்களைத் தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் - இவற்றை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் பெண்மை என்று ஒன்றிருக்கிறதே, அதைக் கடந்து எவ்வாறு அவர்களால் எப்படி வாழ முடியும் என்று திரு.வி.க, மறைமலையடிகள் ஆகியோர் சொல்கின்றனர். அது பெரியாருக்கு எரிச்சலூட்டுகிறது. ஆண்மை, பெண்மை இரண்டுமே கட்டமைக்கப்பட்ட விஷயங்கள் தாம் என்கிறார்.

பெண்மை என்பதன் நீட்சியாக பெரியார் இன்னொரு சொல்லையும் பயன்படுத்துகிறார் - "பெண் தன்மை." பெண்மை என்ற சொல்கூட பழக்கப்பட்ட பொருளிலேயே புரிந்துகொள்ளப் படலாம். பெண் தன்மை என்று சொல்லும் பொழுது, it is attributed, அது வழங்கப்படும், கட்டமைக்கப்படும் ஒன்று என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. பெண் தன்மை என்று சொல்லும் பொழுது பெண்களுடன் தொடர்புபடுத்தப்படும் உணர்ச்சிகளைச் சொல்கிறார். அப்படிச் சொல்வதன் மூலம் இந்த உணர்ச்சிகள் எதுவுமே இயற்கையானவை அல்ல - கோழைத்தனம், வெட்கம், கவலை - இவை எதுவுமே இயல்பு அல்ல. They are not innate to you. இவை நம்முடைய உள்ளார்ந்த பண்புகள் அல்ல. இது தவிர வேறு சில சொற்களை பயன்படுத்துகிறார்: "அடிமைபுத்தி;" அதற்குள் "உள்ளமடிமை," "காலடிமை," "கண்ணடிமை" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்துச் சொல்கிறார். இப்படிக் கட்டமைக்கப்பட்டிருக்கும் விஷயங்களைச் சுட்டிக் காண்பிக்கிறார்.

ஆண்மையைப் பொறுத்த வரையில், பெரியாரை படித்துள்ள எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஷயம் பெண் விடுதலைக்கு எதிரானது ஆண்மை என்பது. அது அதிகாரத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதையும் குரூரத்துடனும் வன்முறையுடனும் இணைக்கப்பட்டிருப்பதையும் சொல்கிறார். ஆண்கள் "மிருக சிகாமணிகள்" என்று சொல்கிறார். பெரியார் மட்டுமன்றி பல பெண்களும் இந்த சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். ஆண்களுடைய பண்புகளை அவர் சொல்லும் பொழுது அகங்காரம், ஆணவம், சுயநலம், நயவஞ்சகம் போன்றவற்றைக் குறிப்பிடுகிறார். "மோசம் செய்பவர்கள்" என்றும் கூறுகிறார். இவற்றைக் கவனிக்கும் பொழுது நாம் மற்றொரு முக்கியமான விஷயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்? எந்த ஒரு சொல்லும் எந்த வாக்கியத்தில் இடம் பெறுகிறதோ அதிலிருந்து மட்டும் பொருள் பெறுவதில்லை. அந்த சொல்லுக்கு வேறொரு சூழ்நிலையில் வேறொரு association இருக்கும். உதாரணத்திற்கு சுயநலம் என்ற சொல்லை எடுத்துக் கொள்ளலாம்.

ஆண்மையைப் பொறுத்த வரையில், பெரியாரை படித்துள்ள எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஷயம் பெண் விடுதலைக்கு எதிரானது ஆண்மை என்பது. அது அதிகாரத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதையும் குரூரத்துடனும் வன்முறையுடனும் இணைக்கப்பட்டிருப்பதையும் சொல்கிறார். ஆண்கள் 'மிருக சிகாமணிகள்' என்று சொல்கிறார். பெரியார் மட்டுமன்றி பல பெண்களும் இந்த சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். ஆண்களுடைய பண்புகளை அவர் சொல்லும் பொழுது அகங்காரம், ஆணவம், சுயநலம், நயவஞ்சகம் போன்றவற்றைக் குறிப்பிடுகிறார்.

பெரியாருடைய அகராதியில் சுயநலம் என்பது மிக முக்கியமான வார்த்தை: பார்ப்பனர்கள் சுய நலவாதிகள், பணக்காரர்கள் சுய நலவாதிகள், ஆண்கள் சுய நலவாதிகள். எனவே சுயநலம் என்பது ஏதோ ஒருவகையில் ஒடுக்குதல், exploitation, சுரண்டுதல் என்பவற்றோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. மனைவியை "நீ காபி போட்டுக் கொண்டு வா" என்ற அந்த சுய நலம் மட்டுமல்ல. அதனுடன் வேறு ஒரு பொருளும் சேர்ந்தே செயல்படுவதை நம்மால் பார்க்க முடிகிறது. எல்லா சொற்களுக்கும் வேறு வேறு களங்களில் அவர் வழங்கக் கூடிய பொருள்களையும் இதனுடன் இணைத்தே நாம் பார்க்க வேண்டும். உதாரணத்திற்கு, "மிருக சிகாமணிகள்," "மிருகம்" என்று அவர் சொல்லும் பொழுது, அதை நாம் இவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும்: பெரியாருடைய சிந்தனை அறிவொளிக் கால மரபில் வருகிறது. நாம் மிருகத்தன்மையிலிருந்து மனிதத் தன்மைக்குப் படிப்படியாக நம் பகுத்தறிவின் மூலம் செல்கிறோம் என்பது அந்த சிந்தனை மரபின் நம்பிக்கை. அவர் அதனை அப்படியே ஏற்றுக்கொள்கிறார். இன்று நாம் அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம். ஆனால் அந்த மரபை ஏற்றுக்கொண்ட பின்னும் அதில் தனக்கே உரிய ஜாலத்தை நிகழ்த்துகிறார். "நீ உன்னைப் படித்தவன் என்றும் நாகரிகமானவன் என்றும் பண்பாட்டின் உச்சியை அடைந்துவிட்டதாகவும் சொல்கிறாய். கடைசியில் நீ ஒரு மிருகம் தானே" என்ற எதிர்வினையாக அவர் அதைப் பயன்படுத்துகிறார்.

இன்னொன்று "மோசம் செய்வது" என்ற சொற்பிரயோகம். நம்பியவரை ஏமாற்றுவது என்ற பொருளில் இதை பயன்படுத்து கிறார்; குறிப்பாகப் பார்ப்பனர்களை அவ்வாறு கூறுகிறார். அவர்கள் யாருக்கும் புரியாததைச் சொல்லி ஏமாற்றுபவர்கள் என்ற பொருளில் அவர் கூறுவதைக் காணமுடிகிறது. எனவே காதல் மொழி மற்றும் பார்ப்பனிய சாத்திர மொழி இவற்றிற்கும் ஒரு இணைப்பை "மோசம் செய்பவைகள்" என்ற தளத்தில் ஒரு homology வழங்குவதை அவருடைய எழுத்துக்களிலிருந்து நம்மால் நிர்ணயிக்க முடிகிறது.

PUBLIC LIBRARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தாக, அன்றைய சூழ்நிலையில் அதிகம் பேசப்பட்ட ஒரு வார்த்தை "இச்சை" என்பது. "காமம்" என்கிற வார்த்தை வெகுஜன வழக்கில் இருந்து வந்துள்ளது. இச்சை என்பதை desire, want என்று பல பொருள்களில் பயன்படுத்தியிருக்கிறார்கள். இச்சை என்பதை ஆனந்த விகடன் போன்ற பிரபலமான ஊடகங்களும் மறைமலை யடிகள், திரு.வி.க., காந்தி ஆகியோரும் நமக்குள் இருக்கும் ஒன்றாகவும், நம்மால் கட்டுப்படுத்த முடியாத ஒன்றாகவும் கூறுகிறார்கள். இச்சையைக் கட்டுப்படுத்துவது என்பதைப் பற்றி எல்லோரும் பல நிலைகளில் பேசுகிறார்கள். காந்தி அதைப் பற்றி பேசியிருப்பதை நாம் இன்று அறிந்திருக்கிறோம். ஆனால் விதவைகளுடைய மறுவாழ்வைப் பற்றிப் பேசும் பொழுது தான் அது பெண் விடுதலைதளத்தில் இயங்கத் தொடங்குகிறது. பார்ப்பனர்கள் உள்ளிட்ட ஆதிக்க சாதிகளில் பெண்களுக்குச் சிறு வயதிலேயே திருமணம் செய்விக்கும் வழக்கம் உள்ள சூழ்நிலையில், சிறு வயதிலேயே கணவனை இழக்கும் ஒரு பெண் தன் வாழ்க்கையை எப்படித் தொடர்வது என்பது குறித்த விவாதங்கள் நிகழ்ந்தன. இது குறித்த இலக்கியங்கள் பலவற்றை வாசித்திருக்கிறோம். இந்தப் பெண்களும் மனிதர்கள் தானே, இவர்களுக்கும் ஆசை இருக்காதா, இச்சை இருக்காதா - என்ற நிலையில் இச்சை என்பது பேசப்பட்டது.

இன்னொரு புறம் இந்த இச்சை என்பது "தவறான" பாதைகளில் சென்றுவிடக்கூடாதே என்ற ஒருவிதமான கவலையும் இருந்துள்ளது. இளம் விதவைகளைப் பலர் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள நேரிடலாம் என்ற உண்மையான கவலையும் இந்தப் பெண்கள் தங்களுடைய கட்டுப்பட்டிற்குள் இல்லாமல் வேறு ஏதேனும் செய்துவிடுவார்களோ என்ற ஆணாதிக்கக் கவலையும் சேர்ந்தே இதில் இருப்பதை நாம் பார்க்கலாம். முதலாவதான உண்மையான கவலைக்குப் பல காரணங்கள் இருந்தன. விதவைகள் கருத்தரிக்க நேரிடும் பொழுது அது குறித்து என்ன செய்வது? குழந்தைகளைத் தெருவில் விடுவது, அல்லது வேறெங்கும் கொண்டு விட்டுவிடுவது - இவையெல்லாம் சமூகத்தில் நிகழ்ந்துள்ளன. இத்தகைய பின்னணிகளில் தான் "இச்சை" என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

விதவை மறுமணம் பற்றிப் பேசும் பொழுது பெரியார் இச்சை குறித்துப் பேசுகிறார். அப்படி அவர் பேசும் பொழுது சுவாரஸ்யமான வாசகம் ஒன்றைப் பயன்படுத்துகிறார்: "அவள் என்ன வெறும் கல்லா?" என்கிறார். ஒரு சாதாரண மிருகம் கூடத் தன்னுடைய இச்சையை தணித்துக்கொள்ள ஒரு கல்லின் மீது உராய்ந்து கொள்கிறது. ஒரு பெண்ணுக்கு மட்டும் உணர்ச்சிகள் இருக்கக் கூடாது என்று நினைப்பது எப்படி நியாயம் என்று கேள்வி எழுப்புகிறார். எனவே "இச்சை" என்ற சொல் வழங்கி வந்த பொருள் சூழலில் மாற்றத்தைக் கொண்டு வருகிறார்: "இவள் இச்சையே இல்லாத ஜன்மம் என்று நீங்கள் எப்படி முடிவு செய்கிறீர்கள்?" என்று கேட்கிறார்.

இன்னொரு தளத்தில் பிடிக்காத, விருப்பமற்ற திருமணங்கள் குறித்த விவாதங்களில் இச்சை குறித்து பேசப்பட்டது. மனதிற்குப் பிடிக்காத ஒருவன் எப்படி வாழ்வது? விவாகரத்து குறித்த

இச்சை என்பதை ஆனந்த விகடன் போன்ற பிரபலமான ஊடகங்களும் மறைமலை யடிகள், திரு.வி.க., காந்தி ஆகியோரும் நமக்குள் இருக்கும் ஒன்றாகவும், நம்மால் கட்டுப்படுத்த முடியாத ஒன்றாகவும் கூறுகிறார்கள். இச்சையைக் கட்டுப்படுத்துவது என்பதைப் பற்றி எல்லோரும் பல நிலைகளில் பேசுகிறார்கள். காந்தி அதைப் பற்றி பேசியிருப்பதை நாம் இன்று அறிந்திருக்கிறோம். ஆனால் விதவைகளுடைய மறுவாழ்வைப் பற்றிப் பேசும் பொழுது தான் அது பெண் விடுதலைதளத்தில் இயங்கத் தொடங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாதத்தின் பொழுது இதுபற்றிப் பேசுகிறார். இச்சை, ஆசை, வேட்கை போன்ற சொற்களை நாம் இன்றும் பயன்படுத்துகிறோம். பெரியார் இவற்றைப் பற்றிப் பேசும் பொழுது நாம் இப்படி வாழ்வதற்குக் காரணம் என்ன என்ற கேள்வியை எழுப்பிக் "கற்பு" பற்றிப் பேசுகிறார். கற்புக்காகத் தானே இவை அனைத்தையும் செய்கிறீர்கள்? கற்புக்காகத் தானே பிடிக்காதவனோடு கூட வாழ்கிறாய் - என்று கேட்கிறார். இந்த தருணத்தில் தான் அவர் ஆறு விதமான கற்பு பற்றி பேசுகிறார்:

"இயற்கை கற்பு" - இது சுவாரஸ்யமான சொற்சேர்க்கை. இதை பாரதியிடமும் பார்க்க முடிகிறது. கற்பு என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொது என்று ஒரு ethical imperativeஆக பாரதியின் எழுத்துக்களில் பார்க்க முடிகிறது. "கும்மியடி பெண்ணே கும்மியடி" என்ற தன்னுடைய கவிதையை அவரே ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பொழுது கற்பு என்பதை "wedded faith" என்று தான் மொழிபெயர்க்கிறார். அதாவது திருமணத்திற்குள் ஒருவருக்கு ஒருவர் நேர்மையாக நியாயமாக இருப்பது. அவர் அதற்கு ஒரு absolute value வழங்குவதில்லை, நீ ஒருத்தனுக்காக அப்படியே வாழ் நாள் முழுவதும் இருக்க வேண்டும் என்று அவர் சொல்லவில்லை. "Wedded faith" என்பது மிக சுவாரஸ்யமான மொழிபெயர்ப்பு. இதே போன்ற அர்த்தத்தில் தான் பெரியார் "இயற்கை கற்பு" என்கிறார். நானே விரும்பி இந்த நபருடன் உறவில் இருக்கிறேன். இதைத் தாண்டி நான் போக விரும்பவில்லை - இதனை இயற்கை கற்பு என்கிறார்.

அப்புறம் "அடிமைக் கற்பு": எந்த கேள்விகளும் கேட்காமால் ஏற்றுக்கொள்ளப்படும் நிலை; "நிர்ப்பந்தக் கற்பு": எத்தனை அதிருப்திகள் இருந்தும் வேறு வழயின்றி ஏற்றுக்கொள்ளும் நிலை; அதன் பின் "சுயேச்சை கற்பு": தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் மேற்கொள்ளபடும் முடிவு. இதுவும் "இயற்கை கற்பும்" ஏதோ ஒரு விதத்தில் ஒன்றோடொன்று தொடர்புடையவையாகத் தெரிகின்றன. அதன் பின், "உண்மைக் கற்பு," பின் இவை எல்லாவற்றையும் கடந்து "உறுதிப்பாடு" : உறுதியாக ஒரு உறவில் இவ்வாறு இருப்பது என்று ஒருவர் மேற்கொள்ளும் தீர்மானம்.

பாரதி எப்படி "சரி நிகர்," "ஒரு நிகர்," "முழு நிகர்" என்று விடாமல் ஒரு பொருளை குறிக்க பல சொற்களை மீண்டும் மீண்டும் தோண்டித் தோண்டி ஆராய்கிறாரோ, அதே போல் பெரியாருக்குப் பெண்ணுடைய பாலியல் குறித்த விவாதங்களில் இறுதிப் புள்ளியிட்டு நாம் சொல்லிவிட்டோம் என்கிற திருப்தி எங்கும் இல்லை. இதனால் தான் பாலியல் தொடர்பான அவருடைய சொல்லாடல்களை நம்முடைய இன்றைய சூழ்நிலைக்கும் நம்மால் புதுப்பித்துக் கொண்டே போக முடியும். அதற்கு ஒரு finality, முற்றுபெற்ற நிலையை அவர் தரவில்லை. தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்திருக்கிறார். "கற்பாபிமானம்" குறித்து அவர் தொடர்ந்து பேசியது நமக்குத் தெரியும். இந்தக் கற்பு என்பதை ஏன் கட்டிக்கொண்டு அழுகிறாய் என்று கேட்கிறார்! அது என்ன அவ்வளவு பெரிய விஷயமா? அதன் மீது ஏன் உனக்கு தேசபக்தி போன்ற ஒரு வெறித்தனமான காதல்? என்று அவர் கேட்டிருக்கிறார். அவருடைய கட்டுரைகளை ஒவ்வொன்றாக எடுத்து நாம் பார்க்கும்

இச்சை, ஆசை, வேட்கை போன்ற சொற்களை நாம் இன்றும் பயன்படுத்துகிறோம். பெரியார் இவற்றைப் பற்றிப் பேசும் பொழுது நாம் இப்படி வாழ்வதற்குக் காரணம் என்ன என்ற கேள்வியை எழுப்பிக் 'கற்பு' பற்றிப் பேசுகிறார். கற்புக்காகத் தானே இவை அனைத்தையும் செய்கிறீர்கள்? கற்புக்காகத் தானே பிடிக்காதவனோடு கூட வாழ்கிறாய் என்று கேட்கிறார். இந்த தருணத்தில் தான் அவர் ஆறு விதமான கற்பு பற்றி பேசுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது அவர் சொற்களை எப்படிப் பயன்படுத்துகிறார், எந்த சூழ் நிலைகளில் அவை எத்தகைய பொருள் பெறுகின்றன என்று பரந்த semantic field ற்கான ஒரு வரைபடத்தை நாம் செய்துவிட்டால், எல்லோரும் இந்த சொற்களை எப்படிப் பயன்படுத்திக் கொண்டிருந் தார்கள், அவர் சொல்வதன் தனித்தன்மை என்ன என்பது நமக்குப் புலப்படும். அந்த அளவிற்கு அவருடைய சொல்லாடல் disjunctive ஆக இருக்கிறது.

அடுத்து விபச்சாரம் தொடர்பான சிந்தனைகள். இது சற்று சிக்கலான விஷயம். இந்தச் சிக்கல்கள் இன்று வரை பெண்ணியத் திற்குள்ளும் இருக்கின்றன. அது பெண்கள் மீது சுமத்தப்பட்ட ஒரு தொழிலா? அல்லது வெறும் தொழிலா? என்பது போன்ற தெளிவின்மை அன்றும் இருந்திருப்பதை நாம் பார்க்கலாம். ஒரு புறம், இதை தேவதாசி முறையுடன் தொடர்புபடுத்திப் பார்க்கக் கூடிய நிலை. அந்த நிலையில் இது ஒரு சாதித் தொழில், எனவே இதை எதிர்க்க வேண்டும். இன்னொரு நிலையில் இது ஒரு "இழி தொழில்" என்ற பார்வையும் பெரியாரிடம் இருக்கிறது. ஆனால் விபச்சாரத்தில் ஆண்களுடைய பங்கு குறித்து அவர் பேசியிருப்பதே அவரை மற்றவர்களுடைய சிந்தனையிலிருந்து வித்தியாசப்படுத்து கிறது. இந்த ஆண்களுக்கு "விபச்சாரன்" என்ற சொல்லை நாம் ஏன் பயன்படுத்தக் கூடாது என்று கேட்கிறார். என்றாலும் பெரியாருடைய எழுத்துக்களில் "விபச்சாரி," "குச்சுக்காரி" போன்ற சொற்களை அந்த காலத்தில் அது கருதப்பட்ட இழிநிலையைக் கேள்விக்குள்ளாக்காமல் பயன்படுத்துவதையும் நாம் பார்க்கிறோம்.

விபச்சாரம் தொடர்பான சிந்தனைகள். இது சற்று சிக்கலான விஷயம். இந்தச் சிக்கல்கள் இன்று வரை பெண்ணியத் திற்குள்ளும் இருக்கின்றன. அது பெண்கள் மீது சுமத்தப்பட்ட ஒரு தொழிலா? அல்லது வெறும் தொழிலா? என்பது போன்ற தெளிவின்மை அன்றும் இருந்திருப்பதை நாம் பார்க்கலாம். ஒரு புறம், இதை தேவதாசி முறையுடன் தொடர்புபடுத்திப் பார்க்கக் கூடிய நிலை. அந்த நிலையில் இது ஒரு சாதித் தொழில், எனவே இதை எதிர்க்க வேண்டும். இன்னொரு நிலையில் இது ஒரு 'இழி தொழில்' என்ற பார்வையும் பெரியாரிடம் இருக்கிறது.

ஆனால் கற்பு மற்றும் விபச்சாரம் இவை குறிக்கும் எதிர் நிலைகள் இரண்டிலும் சிக்கிக் கொள்ளாமல் ஒரு பெண்ணால் வாழ முடியும் என்பதில் அவர் தெளிவாக இருக்கிறார். இங்கு தான் திருமணம் குறித்த அவரது பார்வை பதிவாகிறது. திருமணம் என்பது கடவுளின் முன்னால் எக்காலத்துக்குமான பந்தம் என்ற சிந்தனையை அவர் உடைக்கிறார். அது பார்ப்பனர்களால் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பதையும் உடைக்கிறார். ஆங்கிலத்தில் தெளிவாக சொல்வதுண்டு - from sacrament to contract என்று. அந்த சிந்தனை இயல்பாக பெரியாரிடம் இருப்பதை நாம் பார்க்கலாம். "துணைநல ஒப்பந்தம்," "வாழ்க்கை ஒப்பந்தம்," வாழ்க்கை ஏற்பாடு" - என்று மீண்டும் மீண்டும் அது ஒரு contract, ஒரு ஒப்பந்தம் என்பதை வலியுறுத்துகிறார். அதே நேரத்தில் இது வெறும் உடன்படிக்கையாக மட்டும் இருக்க முடியாது, அதனுடைய சாரம் அல்லது core வேறெதுவோ இருக்க வேண்டும் என்கிறார். உணர்வுப்பூர்வமான affective aspect ஆன ஒன்றாக அது இருக்க வேண்டும் என்கிறார். முழு சுயமரியாதை மணம் என்கிறார். இருவரும் முழு சுயமரியாதையுடன் ஒருவரை ஒருவர் மதித்தும் மேற்கொள்ளும் "பொருந்திய மணம்," "பொறுப்புள்ள மணம்," "சுதந்திரக் காதல் மணம்." ஆகியவற்றை அவர் குறிப்பிடுகிறார்.

அதைத் தொடர்ந்து சமூகத்தில் திருமணம் செய்துகொள்வதற் கான உரிமை இருக்க வேண்டும் என்கிறார். அதன் கீழ் தான் விதவை மணம், கலப்பு மணம், புதிய முறை கல்யாணம், சீர்திருத்த மணம் இவையெல்லாம் விவாதிக்கப்பட்டன. பொதுவாக இதில் மூன்று நிலைகள் இருப்பதை நாம் பார்க்கலாம். ஒன்று, திருமணத்தை ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[library stamp]

ஒப்பந்தமாக, உடன்படிக்கையாகப் பார்ப்பது, இதற்குரிய உளவியல் பண்பு எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியும் பேசப்படுகிறது. இதில் ஒரு பரிமாற்றம் இருக்க வேண்டும், காதல் இருக்க வேண்டும். இவற்றையும் மீறி ஒரு துணை, ஒரு companionship. இதையும் கடந்த ஒரு மொழியை பெரியார் பயன்படுத்துகிறார். "சினேக இன்பம்" என்கிறார். சேர்ந்து இருப்பதில் வரக்கூடிய இன்பம். இப்படித் திருமணம் என்பதற்கு வேறு ஒரு இலக்கணம் இருக்க வேண்டும் என்கிறார். இப்படிச் சொல்லி வந்தவர், சில காலங்களுக்குப் பிறகு, திராவிடக் கழகம் தொடங்கியதற்குப் பின்னர், எதற்குத் திருமணம் என்று கேட்கிறார்! திராவிட நாட்டை உருவாக்குவதற்கு எல்லோரும் பணி செய்யலாமே, திருமணம் என்ற ஒன்று எதற்கு என்கிறார்! திருமணம் செய்துகொண்டால் நிறைய பிரச்சனைகள் வரும், உங்களால் வாழ்க்கையில் எதையுமே சாதிக்க முடியாது என்கிறார்! அப்படியே திருமணம் செய்து கொண்டாலும் பிள்ளைப் பெற்றுக் கொள்ளாதீர்கள். 1930களிலிருந்தே இதைச் சொல்லி வருகிறார். "பிள்ளை பெறும் தொல்லை" என்று அதைக் கூறுகிறார். பிள்ளை பெற்றுக் கொள்ளுதல் என்பது அவ்வளவு சிலாகித்துப் பேசப்படக் கூடிய பண்பாடு நம்முடையது. அதற்கான சடங்குகள் ஆயிரம் இருக்கின்றன. இது பற்றிய இலக்கியங்கள் எத்தனையோ. இவை அனைத்தையும் ஒரே ஒரு சொற்றொடரால் தூக்கி எறிந்துவிடுகிறார்: "பிள்ளை பெறும் தொல்லை." "தொல்லை" என்ற சொல் மிக சுவாரஸ்யமானது. இது ஒரு பெரிய துன்பம் கிடையாது, ஆனால் அது எரிச்சலூட்டக்கூடிய, சௌகரியமான ஒன்று என்கிறார்!

இதனுடன் இணைந்தது தான் 1930களிலிருந்தே பேசப்படும் "கர்ப்ப ஆட்சி" என்பது. இதனைப் பெரியார் தான் முதன் முதலில் பயன்படுத்தினாரா என்பது உறுதியாகத் தெரியவில்லை. சமீபத்திய என் ஆய்வின் பொழுது வெகுஜன ஊடகங்களில் "கர்ப்ப ஆட்சி" அல்லது "சுயாதீன கர்ப்பம்" என்பதற்கான விளம்பரங்களை என்னால் பார்க்க முடிந்தது. இவை 1926-27இல் வெளி வந்தவை. ரப்பர் கருவிகளுக்கான விளம்பரங்கள் கூட வெளிவந்திருக்கின்றன. ஆனால் பெரியார் இந்த "கர்ப்ப ஆட்சி" என்ற சொல்லாடலுக்குள் புதிதாக ஒரு கருத்தை அறிமுகம் செய்கிறார். "பிள்ளை பெறும் தொல்லையைத்" தவிர்ப்பதற்கான வழி என்பதோடு அவர் நிற்பதில்லை. பிள்ளை பெறுவதைக் கட்டுப்படுத்துவது என்பது குறித்த ஒரு மால்தூசியன் புரிதலும் அந்த காலத்தில் நாம் மறந்துவிடக் கூடாது. அதாவது, ஏழைகளெல்லாம் பிள்ளை பெற்றுக் கொண்டால் நாடு என்ன ஆவது என்ற Eugenics என்பதும் இதில் கலந்துள்ளது. உழைக்கும் வர்க்கம் இத்தனைப் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டால் சுதந்திர இந்தியாவால் தாங்க முடியுமா போன்ற புரிதல்கள். இக்கருத்தை விளக்கும் அக்காலத்திய விளம்பரப் படங்கள் பார்க்க வேடிக்கையாக இருக்கின்றன. ஒரு ஆண், ஒரு பெண், அவர்களைச் சுற்றிலும் குழந்தைகள்! இத்தகைய தேசியவாதப் பின்னணியிலிருந்து குடும்பக் கட்டுப்பாடு பற்றிப் பேசக்கூடியவர்கள் இருந்தார்கள். காந்தி "இயற்கை முறை" என்பது பற்றி பேசுகிறார். மனதைக் கட்டுப்படுத்துவது என்ற நிலையில் பலர் பேசுகிறார்கள்.

இதனுடன் இணைந்தது தான் 1930களிலிருந்தே பேசப்படும் 'கர்ப்ப ஆட்சி' என்பது. இதனைப் பெரியார் தான் முதன் முதலில் பயன்படுத்தினாரா என்பது உறுதியாகத் தெரியவில்லை. சமீபத்திய என் ஆய்வின் பொழுது வெகுஜன ஊடகங்களில் 'கர்ப்ப ஆட்சி' அல்லது 'சுயாதீன கர்ப்பம்' என்பதற்கான விளம்பரங்களை என்னால் பார்க்க முடிந்தது. இவை 192627இல் வெளி வந்தவை. ரப்பர் கருவிகளுக்கான விளம்பரங்கள் கூட வெளிவந்திருக்கின்றன. ஆனால் பெரியார் இந்த 'கர்ப்ப ஆட்சி' என்ற சொல்லாடலுக்குள் புதிதாக ஒரு கருத்தை அறிமுகம் செய்கிறார். 'பிள்ளை பெறும் தொல்லையைத்' தவிர்ப்பதற்கான வழி என்பதோடு அவர் நிற்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியார் இது குறித்துப் பேசுவது வேறு நிலையில் இருக்கிறது. சமுதாய நலன், நாளைய நிலைமை என்பதைத் தாண்டி பெரியார் இந்தக் கட்டுபாடு என்பது சுயாதீனமாக இருக்க வேண்டும். ஒருவர் அதை விரும்பி முடிவெடுத்து அதனைச் செய்ய வேண்டும். இது நம்முடைய உரிமை சம்பந்தப்பட்ட விஷயம் என்பதை மிகத் தெளிவாக சொல்கிறார். "கர்ப்ப ஆட்சி" என்ற சொல்லைப் புழக்கத்திலிருந்து எடுத்து அவர் கையாண்டிருக்கலாம், அல்லது அவர் சொல்லி மற்றவர்கள் அதைப் பயன்படுத்தியிருக்கலாம். இது நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் அதற்கு அவர் கொடுத்த பொருள் மிகவும் வித்தியாசமானது. இதை நாம் தெளிவாகப் பார்க்க முடிகிறது. அவர் மிகத் தெளிவாகச் சொல்கிறார்: "இதற்காகப் பிள்ளை பெற்றுக் கொள்ளாதீர்கள் அதற்காகப் பிள்ளை பெற்றுக் கொள்ளாதீர்கள் என்று சொல்கிறார்கள். நான் தெளிவாகச் சொல்கிறேன், இது உன்னுடைய உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சனை. இது உன்னுடைய உடம்பு. உன்னுடைய ரத்தம் தான் பாலாக வருகிறது. உனக்கு இது தேவையா இல்லையா என்பதை நீ தான் முடிவு செய்ய வேண்டும்."

பெரியாருடைய சொல் பயன்பாடு என்று பார்க்கும் பொழுது இவை அனைத்தையும் மிக முக்கியமான interventions ஆக, முக்கியமான தலையீடுகளாக நான் பார்க்கிறேன். இதில் ஒரு மிக சுவாரஸ்யமான விஷயம் என்னவெனில், இது இயக்கத்தோடு வருகிறது; பெரியார் இவற்றைப் பற்றி எழுதுகிறார்; இது மேடைகளில் பேசப்படுகிறது; திரும்பவும் பத்திரிக்கைகளில் பிரசுரிக்கப்படுகிறது; ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கிறார்கள். இதனால் இதனுடைய புழங்குகளம் விரிவடைகிறது. இந்த விஷயங்கள் எவ்வளவு தூரம் circulate ஆகியிருக்கின்றன என்பதும் முக்கியமான விஷயம். இப்படி இவ்வளவு பேர் பேசிய விஷயம் எப்படிப் பொது நினைவிலிருந்து காணாமல் போனது என்பதையும் நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். 1940-50களின் இது நடப்பதை நாம் பார்க்கிறோம்.

பெரியாருடைய சொல் பயன்பாடு என்று பார்க்கும் பொழுது இவை அனைத்தையும் மிக முக்கியமான interventions ஆக, முக்கியமான தலையீடுகளாக நான் பார்க்கிறேன். இதில் ஒரு மிக சுவாரஸ்யமான விஷயம் என்னவெனில், இது இயக்கத்தோடு வருகிறது; பெரியார் இவற்றைப் பற்றி எழுதுகிறார்; இது மேடைகளில் பேசப்படுகிறது; திரும்பவும் பத்திரிக்கைகளில் பிரசுரிக்கப்படுகிறது; ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கிறார்கள். இதனால் இதனுடைய புழங்குகளம் விரிவடைகிறது.

வேறு சில வித்தியாசமான சொல்லாடல்கள் இருந்திருப்பதை 1930களிலேயே பார்க்க முடிகிறது. பெண் விடுதலை பற்றிய தீவிரமான சொல்லாடல்கள் வந்துகொண்டிருந்த இதே நேரத்தில், வேறு ஒரு விதமான மொழியும் இருந்திருக்கிறது. நான் popular cultureக்குள்ளேயே போகவில்லை.அதிலே நிறைய விஷயங்கள் நடந்தன, அவை பற்றி யோசிக்க நிறைய இருக்கிறது. ஒரு சொல்லை அறிமுகப்படுத்தும் பொழுது, ஒரு புதிய கருத்தாக்கத்தை உபயோக்கிக்கும் பொழுது அதன் மீது முழு உரிமையெல்லாம் கொண்டாட முடியாது. எந்தவொரு சொல்லும் எப்படியும் பயன்படுத்தப்படலாம். நான் கூறுவது பெண்ணுரிமை குறித்து தமிழ் அறிவாளர்கள் பேசியவற்றைத் தான் பெரியார் இயக்கச் சொல் பயன்பாட்டை மறுத்து ஆன்மீக பண்பாட்டுரீதியான வரையறை களை முன்வைத்தனர்.

மறுபடியும் பெரியாருக்கே வருவோம். பெரியார் ஆண்களிடம் கூறுவது, நீ ஆண்மை ஆண்மை என்று கொண்டாடாதே என்கிறார். பகுத்தறிவுடன் இரு என்கிறார். Masculinity என்பதற்கு எதிர் நிலையாக Rationality-ஐ முன்வைக்கிறார். பெண் பிள்ளையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையாகக் கொஞ்சிக் கொஞ்சி வளர்க்கும் நீ பின்னர் ஏன் அவளைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுகிறாய் என்று கேட்கிறார். பெற்றோர் களைப் பொதுவாகக் கேட்டாலும் பெண் குழந்தையின் தந்தையைத் தான் குறிப்பிட்டுக் கேட்கிறார்.அது தவிர, சுய மரியாதைத் திருமணம் பற்றிப் பேசும் பொழுது ஆண்களை நோக்கி பல விஷயங்களைச் சொல்கிறார். திருமண உறுதிமொழியில் கவனம் செலுத்தி, அதில் பெண்களை மதிப்பது, பெண்களைத் தங்களுக்கு நிகராகக் கருதுவது - இவை குறித்து மிகத் தெளிவாகச் சொல்கிறார். "இச்சை" என்பதைக் குறித்து காந்தி பேசிய அளவிற்குப் பெரியார் பேசியிருப்பதாகத் தெரியவில்லை. பெண்கள் மீதான வன்முறை யைக் கூட ஆண்களுடைய இச்சையின் நீட்சியாகப் பார்க்கிறார் காந்தி. பெரியார் இதை இவ்வளவு பிரித்து சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. இச்சை குறித்து அவர் ஆரியக் கடவுள்களின் லீலைகள் பற்றிப் பேசும் பொழுது கூறியிருக்கிறார். பெண்மைக் குரியதாகச் சொல்லப்படும் யோனி, முலைகள்... இவற்றிற்குத் தமிழ் இலக்கிய மரபில் ஒரு நீண்ட வரலாறு இருக்கிறது. ஒரு பெண்ணுடைய உருவத்தை வர்ணிக்கும் பொழுது இவற்றைச் சொல்லித் தான் வர்ணிப்பார்கள்; நேரடியாகச் சொல்வார்கள், மறைமுகமாகச் சொல்வார்கள். 20ஆம் நூற்றாண்டில் கூட இந்த மரபு தனித் தமிழ் இயக்கத்தில் தொடர்கிறது. இலக்கியத்தை யாரெல்லாம் கையிலெடுக்கிறார்களோ அவர்க ளெல்லாம் தொடர்ந்து இந்த மரபினைத் தக்கவைத்துக் கொள்கிறார்கள். அதைக் கடந்து பெண்மையைப் பற்றி அவர்களால் யோசிக்க முடியவில்லை. பாரதிதாசன் பெண்கல்வி வேண்டும், விவாகரத்து செய்ய உரிமை வேண்டும் என்றெல்லாம் கூறுகிறார். ஆனால் பெண் பற்றிய அவருடைய வர்ணனைப் படித்தால் அது இது தான். எனவே அது பெரிதாக உடைபடவில்லை.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி தன் முலையைக் கிள்ளி எறிந்து மதுரையை எரித்ததாக வருகிறது. பெரியார் இதை நம்புபவர்களைக் கிண்டல் செய்ததாக பலர் சொல்லிக் கேட்டிருக்கிறேன். பெண்மை பற்றி எழுதக்கூடிய இந்த மரபு இலக்கியவாதிகள் மத்தியில் தொடர்கிறது. குறிப்பாக, மொழி இனம் பண்பாடு குறித்த போராட் டங்களில் இது தெளிவாகத் தெரிகிறது. 1937, 38இல் முதல் இந்தி எதிர்ப்புப் போரட்டத்தின் பொழுது இதை நாம் பார்க்கிறோம். இந்தி எதிர்ப்புப் போராட்டங்களின் பொழுது தான் முதன் முதலில் பெண்ணை நாட்டுக்கு உருவகமாகக் காட்டக்கூடிய வழக்கத்தை நாம் பார்க்கிறோம். தமிழ்நாடு எனும் பொழுது அதற்கான உருவகம் பெண். மொழி, இனம், பண்பாடு என்ற சூழ்நிலைகளில் தான் இது நிகழ்கிறது. குடியரசு இதழில் கி.ஆ.பெ. விசுவநாதன் வரைந்த கார்ட்டூன் ஒன்று வெளிவந்தது. தமிழ் என்பது துரௌபதி, தமிழைத் துகிலுரியக்கூடியவர்கள் காங்கிரஸ் அமைச்சகம்; சி.ராஜகோபாலாச்சாரி தலைமையிலான காங்கிரஸ் கட்சி. 1937ல் பதவிக்கு வந்த அரசு. "தமிழ் தான் சொந்தத் தாய், இந்தி மாற்றாந் தாய்" போன்ற சொல் பயன்பாடுகள் அப்பொழுது இருந்தன.

பாரதியிடம் இது அவ்வளவாக நிகழ்வதில்லை. அவரிடம் பங்கிம் சந்திர சட்டோபாத்யாய மரபு தொடர்வதை நாம் பார்க்கிறோம். மற்றொரு நிலையில் அவர் தேவியை பூஜித்து

> **பெரியார் ஆண்களிடம் கூறுவது, நீ ஆண்மை ஆண்மை என்று கொண்டாடாதே என்கிறார். பகுத்தறிவுடன் இரு என்கிறார். Masculinity என்பதற்கு எதிர் நிலையாக Rationality-ஐ முன்வைக்கிறார். பெண் பிள்ளையை ஆசையாகக் கொஞ்சிக் கொஞ்சி வளர்க்கும் நீ பின்னர் ஏன் அவளைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுகிறாய் என்று கேட்கிறார். பெற்றோர் களைப் பொதுவாகக் கேட்டாலும் பெண் குழந்தையின் தந்தையைத் தான் குறிப்பிட்டுக் கேட்கிறார்.அது தவிர, சுய மரியாதைத் திருமணம் பற்றிப் பேசும் பொழுது ஆண்களை நோக்கி பல விஷயங்களைச் சொல்கிறார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர் என்பதை நாம் கவனிக்க வேண்டும். அவர் திடீரென்று "சுதந்திர தேவி" என்பார். ஆனால் இங்கு நாம் பார்ப்பது தமிழ்நாடு, தமிழ்ப் பண்பாடு, தமிழுக்கான இயல்பாக பெண் உருவமும் அது பின் திமுக காலத்தில் கன்னித் தமிழாக உருவெடுப்பதையும் நாம் பார்க்கிறோம். பேராசிரியர் சுந்தரம்பிள்ளையுடைய பாட்டிலும் நாம் பார்க்கிறோம். மிக உருக்கமான பாடல். ஆனால் அதிலும் "மடந்தை," "அணங்கு" என்ற சொற்கள் தொடர்கின்றன. ஒருவிதத்தில் இவை postiive ஆன பெண் உருவகங்கள் என்று நாம் வாதிடலாம். ஆனால் அடிப்படையில் இவை பெண் உருவகங்கள் தாம் என்பதே நாம் இங்கு பேசிக்கொண்டிருப்பது. பெண் எப்படி நாட்டுக்கான, பண்பாட்டுக்கான உருவகமாக மாற்றப்படுகிறாள், அந்தப் பின்னணியில் பண்பாடும் இலக்கியமும் ஏற்படுத்தக் கூடிய பெருமிதம், இவை ஏற்படுத்தக் கூடிய ஒருவிதமான மயக்கம், மோகம் - இவற்றிற்கு நடுவில் பகுத்தறிவு சார்ந்த சொல்லாடல்கள் காணாமல் போவதை நாம் பார்க்கிறோம்.

கலை மற்றும் இலக்கியம் ஏற்படுத்தக்கூடிய உணர்வுபூர்வமான தாக்கத்திற்கும், Secular அரசியலுக்குள்ள உணர்வுபூர்வமான தாக்கத்திற்கும் உள்ள வேறுபாட்டை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். Secular politics என்பது கவர்ச்சிகரமாக இல்லை! அதற்கான உணர்வுபூர்வமான ஒரு தளத்தை நம்மால் உருவாக்க முடிந்திருக்கவில்லை. இலக்கிய சொல்லாடல்களின் கற்பனைத் திறன் பொதுப்புத்தியை அதிகம் கவர்கின்றன. அது தவிர இதற்கு ஒரு நீண்ட மொழியியல் வரலாறும் இருக்கிறது.

கலை மற்றும் இலக்கியம் ஏற்படுத்தக்கூடிய உணர்வுபூர்வமான தாக்கத்திற்கும், Secular அரசியலுக்குள்ள உணர்வுபூர்வமான தாக்கத்திற்கும் உள்ள வேறுபாட்டை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். Secular politics என்பது கவர்ச்சிகரமாக இல்லை! அதற்கான உணர்வுபூர்வமான ஒரு தளத்தை நம்மால் உருவாக்க முடிந்திருக்கவில்லை. இலக்கிய சொல்லாடல்களின் கற்பனைத் திறன் பொதுப்புத்தியை அதிகம் கவர்கின்றன. அது தவிர இதற்கு ஒரு நீண்ட மொழியியல் வரலாறும் இருக்கிறது. நம் அன்றாட மொழிக்குள் இது வருகிறது. நம் வாழ்க்கையின் பல முக்கியமான தருணங்களோடு தொடர்புடையதாக இருக்கிறது. நாம் சுவாசிக்கும் பண்பாட்டுக் காற்றிலும் கலந்திருக்கிறது. இதிலிருந்து முழுவதுமாக விடுவித்துக் கொண்டு வெளியே நின்று பார்க்க வேண்டுமானால் நாம் பெரியாரைப் போன்ற உறுதிப்பாடு உடையவராக இருக்க வேண்டும். அல்லது அதற்குள்ளேயே இருந்து பாரதி போல் கஷ்டப்பட வேண்டும்!

இன்று பெண்ணியலாளர்களுக்கு இருக்கும் மிகப்பெரிய சவால் இது தானே. அந்த மரபை, அதன் கவர்ச்சிகரமான சொல்லாடலை என்ன செய்யப்போகிறோம். அதை முற்றிலும் நம்மால் தூக்கி எறிய முடியுமா முடியாதா. இந்த ஒரு சவால் இருந்து கொண்டே இருக்கிறது. நாம் பண்பாட்டின் அழகிய, இன்பம் தரக்கூடிய விஷயங்களாய் கருதக்கூடியவை பல இந்த இலக்கியசிரத்தையுடன் இருக்கின்றன. அவற்றை முழுவதுமாக நிராகரிக்கவும் இயலாது. ஆனால் அதுவே அரசிலயாக்கப்படும் பொழுது, ஒரு கருத்தியலாகத் திணிக்கும்பொழுது, ஏற்படுகிற நாசகார விளைவுகளை நாம் கவனிக்கத்தான் வேண்டியிருக்கிறது. பெண் என்ற உருவகத்தை வைத்துக்கொண்டு தமிழ் விடுதலை அரசியலைப் பேசும்பொழுது பெண்ணுக்கு நிகழக் கூடிய அவமானமோ, பங்கமோ, அவளுக்கு நிகழக் கூடிய கொடுமையோ ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் பண்பாட்டிற்கும் நிகழக்கூடிய கொடுமையாகப் பார்க்கப்படும் நிலை இருக்கிறது. அது மட்டுமே கொடுமையாகப் பார்க்கப் படுகிறது. எல்லா வகையான வன்முறைக்குமான குறியீடாகப் பெண்கள் மீதான வன்முறையைப் பார்க்கக்கூடிய நிலை இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக் காலத்தில் ஈழப்போராட்டம் தொடர்பாக இந்த இத்தகைய சொல்லாடல்கள் வழங்கி வந்துள்ளதை நாம் பார்க்கிறோம். திரும்பத் திரும்ப கொடூரங்களுக்கு எடுத்துக்காட்டாக எதைக் கூறுகிறோம்: பெண்கள் மீது திணிக்கப்படும் வன்முறையை. அது கொடூரம் தான், அதை யாரும் மறுக்கப்போவது கிடையாது. ஆனால் ஏன் இது மட்டுமே ஒரு மக்களுக்கு நிகழ்ந்த துயரத்தின் சோகத்தின் ஒட்டுமொத்தக் குறியீடாக நிற்கிறது. அதற்குக் காரணம், நம்முடைய ஆண்மையை நம்முடைய வீரத்தை வெளிக்காட்டிக் கொள்ள நமக்கு ஏதோ தேவைப்படுகிறது. நம்முடைய ஆண்மை யின் வெளிப்பாடாக நமக்கு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு பெண் தேவைப்படுகிறாள்.

இத்தகைய வன்முறை சூழல்களில் பெண்கள் எப்படி வாழ்கிறார்கள், எப்படித் தொடர்ந்து தங்களது வாழ்க்கைச் சூழல்களை மாற்றியமைத்துக் கொள்கிறார்கள், எப்படித் தொடர்ந்து மனுஷிகளாக இருக்கிறார்கள், மீட்புப் பணிகளைச் செய்கிறார்கள், பிள்ளைகளை வளர்க்கிறார்கள், மீண்டும் துணிந்து காதலிக்கிறார்கள் - இவற்றையெல்லாம் பெரிய சாதனைகளாக நாம் பார்ப்பதில்லை. இதற்கு முக்கிய காரணம் பெண் உடல் என்பது, ஒரு பண்பாட்டுச் சின்னமாக உருமாற்றப்படும் அரசியல் வரலாறு. இவற்றைப் பற்றியெல்லாம் நாம் போதுமான அளவிற்கு யோசிக்கவில்லை, போதுமான விமர்சனங்களை முன்வைக்கவில்லை.

பொன்னி : அடையாளம் சார்ந்த/ உரிமை சார்ந்த அரசியல் பற்றி...

இப்பொழுது நாம் பார்த்த அனைத்துமே வரலாறாகத் தான் இருக்கிறது. வரலாற்றிற்கு எப்பொழுதுமே இரண்டு முகங்கள் இருக்கின்றன. ஒன்று, வரலாறாக அது வாழும் வாழ்க்கை. மற்றொன்று, நம்முடைய வாழ்க்கையில் எச்சமாகத் தொடரும் பண்பு. மேற்கண்ட சுயமரியாதை இயக்க வரலாறு நம்முடைய வாழ்க்கையில் எச்சமாகத் தொடராததுதான் நம்முடைய துயரம். அப்படிப்பட்ட பின்னணியில் சுயமரியாதை இயக்கம் தந்த இந்த வார்த்தைகளை வலுக்கட்டாயமாக நமது சூழலுக்குள் கொண்டு வந்து நம்மால் திணிக்க முடியாது. அதே சமயம் வெறும் வரலாற்றுடன் மட்டுமே இவற்றை இணைத்துப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஒரு போராட்டத்தின் ஊடாகப் பல்வேறு மக்களை நோக்கி உரையாடும் பொழுது உருவாகக் கூடிய சொற்களுக்கு இருக்கும் கனம், வலுக்கட்டாயமாகப் புகுத்தப்படும் சொற்களுக்கு இருப்பது கிடையாது. ஆனாலும் இந்த சொற்களைப் புழக்கத்துக்குள் வருவது குறித்து நாம் யோசிக்க வேண்டும். இதற்கு நமக்குத் தடையாக இருப்பது நமது வரலாற்று நினைவில் ஏற்பட்டிருக்கும் அந்த மிகப்பெரிய முறிவு. இது வெறும் நினைவு முறிவாக மட்டும் இல்லை. இந்த முறிவு ஏற்படுத்திய வெளியில் மற்ற சொற்கள் வந்து அமர்ந்து கொண்டுவிட்டன. அந்த மற்ற சொற்கள் பற்றியும் நாம் சிறிது பேச வேண்டும். நாம் இப்பொழுது பேசிக் கொண்டிருக்கும் உரிமைசார் அரசியல், அடையாளம்சார் அரசியலின் வரலாறுகளுடன் தொடர்புடையவை தான் அவை.

பெரியாருடைய அந்த வளமான அரசியல், குறிப்பாகப் பெண்ணிய அரசியல் ஏன் வரலாற்று நினைவாகவே தங்கிவிட்டது

வன்முறை சூழல்களில் பெண்கள் எப்படி வாழ்கிறார்கள், எப்படித் தொடர்ந்து தங்களது வாழ்க்கைச் சூழல்களை மாற்றியமைத்துக் கொள்கிறார்கள், எப்படித் தொடர்ந்து மனுஷிகளாக இருக்கிறார்கள், மீட்புப் பணிகளைச் செய்கிறார்கள், பிள்ளைகளை வளர்க்கிறார்கள், மீண்டும் துணிந்து காதலிக்கிறார்கள் இவற்றையெல்லாம் பெரிய சாதனைகளாக நாம் பார்ப்பதில்லை. இதற்கு முக்கிய காரணம் பெண் உடல் என்பது, ஒரு பண்பாட்டுச் சின்னமாக உருமாற்றப்படும் அரசியல் வரலாறு. இவற்றைப் பற்றியெல்லாம் நாம் போதுமான அளவிற்கு யோசிக்கவில்லை, போதுமான விமர்சனங்களை முன்வைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஆய்வுக்குள் நான் போகவில்லை. ஆனால் திரும்பவும் 1970களிலும் 1980களிலும் பெண்ணிய இயக்கம் மீண்டும் உருவாகிறது. அகில இந்திய அளவில் இருந்த பல மக்கள் இயக்கங்களின் நீட்சியாகவோ, அல்லது அந்த இயக்கங்களில் கிடைத்த படிப்பினைகளை உள்வாங்கிக் கொண்டு அதற்கு ஒரு பெண்ணிய அர்த்தம் கொடுத்தோ, எப்படியோ புது விதமான ஒரு பெண்ணியம் 1970-80களில் உருவாகிறது. அந்தப் பெண்ணிய சூழலில் மீண்டும் நிறைய சொற்கள் உருவாக்கப்படுகின்றன. இன்று நாம் சர்வ சாதாரணமாகப் பயன்படுத்தக்கூடிய "பெண்கள் மீதான வன்முறை" போன்ற சொற்றொடர்கள் அப்பொழுது எழுந்தவை தாம். 1970-80களில் தோன்றிய இயக்கங்களுக்கும் சொற்களுக்கும் பெரியார் இயக்கத்திற்கும் சொற்களுக்குமே தொடர்பில்லாமல் போவதை நாம் பார்க்க முடிகிறது. 1980களில் பெண்ணியம் தொடர்பான சில சொற்களை நாம் மார்க்ஸீயத்திலிருந்து கடன் வாங்கியிருக்கிறோம், சிலவற்றை சாதி எதிர்ப்பு இயக்கங்களிலிருந்து கடன் வாங்கியிருக்கிறோம். ஆனாலும் தெளிவான பெண்ணிய அடையாளம் அந்தச் சொற்களுக்கு இருப்பதை நாம் பார்க்கிறோம். பெண்ணிய அரசியல் ஒரு இயக்கமாக இருந்து இந்த சொற்களைப் பயன்படுத்திய பொழுது அவற்றிற்கு இருந்த கனமும் பின்னர் இந்த சொற்களுக்கு வரையறைகளை வழங்கி இவற்றுக்கு இதுதான் பொருள் என்று நாம் சொன்ன பொழுது ஏற்பட்ட கனமின்மையை யும் நாம் பார்க்கிறோம். நாம் எப்பொழுது அப்படிப்பட்ட வரையறைகளை ஏற்படுத்துகிறோம்? நாம் ஒரு இயக்கமாக இல்லாமல் சில குறிப்பிட்ட மாற்றங்களை மட்டும் அரசியலில் நிகழ்த்த வேண்டும் என்று நினைக்கும் பொழுது இது ஏற்படுகிறது. இந்த இரண்டுமே ஒரே சமயத்தில் நடந்து வந்தால் பிரச்சனை இல்லை. பெரியாரும் தொடர்ந்து குறிப்பிட்ட கோரிக்கைகளை முன்வைத்துக்கொண்டே தான் இருந்தார். வகுப்புரிமை வேண்டும், பெண் கல்வி வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்த அதே நேரத்தில் அவரது இறுதி இலக்கான சாதி ஒழிப்பையும் பேசிக்கொண்டே இருந்தார்.

ஆனால் நாம் பெண்ணிய வரலாற்றில் என்ன செய்துவிட்டிருக் கிறோம்? 1970கள், 1980களில் பேசப்பட்ட பரந்துபட்ட பெண்ணியச் சொல்லாடல்களைப் பேசிக்கொண்டே இருக்கிறோம், பின் குறிப்பிட்ட கோரிக்கைகளுக்குள் போகின்றோம். அப்படிப் போகும் பொழுது பொதுவான சொல்லாடல்களை எந்த அளவிற்குத் தொடர்ந்து வளர்க்கிறோம்? வளர்க்கவில்லை என்பது தான். மேலும், நாம் பேசிய விஷயங்களையே பொதுவெளியில் முழுமையாகக் கொண்டு வரவில்லை. நாம் உருவாக்கிய விஷயங் களையும் முழுமையாகத் தக்கவைத்துக்கொள்ளவில்லை. அவை நம் கைவிட்டுப் போய் அரசாங்கத்தால் பயன்படுத்தப்படும் பொழுதோ அல்லது தனியார் நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் பொழுதோ, முதலாளித்துவத்தால் பயன்படுத்தப்படும் பொழுதோ, நாம் எதுவுமே செய்யவில்லை. இந்தச் சொற்களுக்கான போராட்டத்தை நாம் நடத்தவில்லை. அதே நேரத்தின் நமது கோரிக்கைகளைக் குறிப்பிட்டவையாக மாற்றிக்கொண்டு விட்டோம். ஆனால் ஒட்டுமொத்த பெண்ணிய அரசியல் பார்வைக்கும் குறிப்பிட்ட

அகில இந்திய அளவில் இருந்த பல மக்கள் இயக்கங்களின் நீட்சியாகவோ, அல்லது அந்த இயக்கங்களில் கிடைத்த படிப்பினைகளை உள்வாங்கிக் கொண்டு அதற்கு ஒரு பெண்ணிய அர்த்தம் கொடுத்தோ, எப்படியோ புது விதமான ஒரு பெண்ணியம் 1970 80களில் உருவாகிறது. அந்தப் பெண்ணிய சூழலில் மீண்டும் நிறைய சொற்கள் உருவாக்கப்படுகின்றன. இன்று நாம் சர்வ சாதாரணமாகப் பயன்படுத்தக்கூடிய 'பெண்கள் மீதான வன்முறை' போன்ற சொற்றொடர்கள் அப்பொழுது எழுந்தவைதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய லட்சியங்களுக்கும் இயங்கியல் ரீதியான உறவைத் தொடர்ந்து நாம் பேணியிருக்க வேண்டும். ஒரு dialectical உறவை நாம் வைத்துக் கொண்டிருந்திருக்க வேண்டும். அதை நாம் செய்யவில்லை. இதனால் தான் நமக்குச் சிக்கல்.

வரலாற்றை எப்படி நாம் இன்றைய சூழலுக்குப் பொருத்திப் பார்க்கலாம்? இன்றைக்குள்ள உரிமை அரசியலை எடுத்துக்கொள்வோம். அரசையும் சட்டத்தையும் நோக்கியே தன்னுடைய பாதையை இந்த அரசியல் வகுத்துக் கொண்டுள்ளது. ஆனால், இப்பாதையின் வரம்புகளையும் நாம் இனங்காண வேண்டும். உதாரணம், மீனா கோபால், தனது கட்டுரையில் கூறியிருப்பது போல், ஒருபாலுறவாளர்கள் தங்களுக்குத் திருமண உரிமை வேண்டும் என்று கேட்கும் பொழுது நாம் அதை எப்படிப் பார்க்கப் போகிறோம்? அவர்களுக்கு மறுக்கப்பட்ட விஷயம் ஒன்றை அவர்கள் கேட்கிறார்கள் என்று பார்க்கப் போகிறோமா? அல்லது ஏதோ ஒரு முறைமைக்குள் அவர்கள் வர விரும்புகிறார்கள் என்று பார்க்கப் போகிறோமா? இப்படிப்பட்ட கேள்விகளை நாம் எழுப்பும் பொழுது உரிமை அரசியல் என்பதற்கான சற்று விரிவான தளத்தை நம்மால் உருவாக்க முடியும்.

என்னைப் பொறுத்த வரை அடையாள அரசியல் என்பது இன்னமும் சிக்கலானது. ஒரு அடையாளத்தை எல்லா காலத்திற்கும் தேவையான ஒன்றாக நாம் வரையறுக்க வேண்டியிருக்கிறது. அதைத் தற்காலிகமான ஒரு தேவையாகப் பார்க்கவே முடியாது. ஆனால், அடையாளம் என்பது ஒரு தனிப்பட்ட அலகாக எனக்கு மட்டுமே உரிய ஒன்றாக பார்க்கும் பொழுது அது என்னை ஒருவிதத்தில் அது சிறைப்படுத்திவிடுகிறது. அடையாளம் என்பதை ஒரு விரிந்த தளத்ததில் வைத்துப் பார்க்க முடியுமானால்; ஒரு பரந்த தோழமையுடன் இணைத்துப் பார்க்க வேண்டுமானால் முதலில் நான் என்ன என்பது நமக்குத் தெரியவேண்டும், ஆனால், இது தொடக்க முனைதானே தவிர, நாம் அடைய நினையும் இலக்காக இருக்க முடியாது. சுயமரியாதை இயக்கத்தில் இதை மிக அழகாகச் விளக்கினார்கள். நீ சத்திரியனாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறாய், ஆனால் உனக்கு மேல் இருக்கும் பார்ப்பான் உன்னை மனிதனாகவே நினைப்பதில்லையே. அப்பொழுது உனக்கு எதற்கு சத்திரியத் தன்மை? நீ தோழனாக இருந்துவிட்டுப் போயேன், என்று பெரியார் கேட்கிறார். அதை அவர் அங்கீகரிக்கிறார். நீ கோவிலுக்குள் போக வேண்டும் என்கிறாய், சரி போ. ஆனல் அங்குப் போய்க் கடவுளை வழிபடுவதால் உன் பிரச்சனை தீர்ந்துவிடுமா? என்று கேட்கிறார்.

மிக சாதுர்யமாக இரண்டு நிலைப்பாடுகளிலும் ஒரே நேரத்தில் முன்வைக்கின்ற அரசியல் கற்பனையோ அறிவோ நமக்கு இன்றைக்கு இல்லை. அடையாளம் என்ற ஒன்றை அங்கீகரிக்கும் அதே வேளையில் பல அடையாளங்களையும் இணைக்கும் தோழமையை சுயமரியாதை இயக்கம் கொண்டிருந்தது. இந்த வரலாற்றை நாம் மீண்டும் யோசித்துப் பார்க்க விரும்பினோமானால், இந்த விஷயங்களில் நாம் பெறும் தெளிவைப் பொறுத்துத் தான் பழைய வரலாற்றுச் சொற்களைப் பயன்படுத்த முடியும். இதை இப்படித்தான் நான் புரிந்துகொள்கிறேன்.

என்னைப் பொறுத்த வரை அடையாள அரசியல் என்பது இன்னமும் சிக்கலானது. ஒரு அடையாளத்தை எல்லா காலத்திற்கும் தேவையான ஒன்றாக நாம் வரையறுக்க வேண்டியிருக்கிறது. அதைத் தற்காலிகமான ஒரு தேவையாகப் பார்க்கவே முடியாது. ஆனால், அடையாளம் என்பது ஒரு தனிப்பட்ட அலகாக எனக்கு மட்டுமே உரிய ஒன்றாக பார்க்கும் பொழுது அது என்னை ஒருவிதத்தில் அது சிறைப்படுத்தி விடுகிறது. அடையாளம் என்பதை ஒரு விரிந்த தளத்ததில் வைத்துப் பார்க்க முடியுமானால்; ஒரு பரந்த தோழமை யுடன் இணைத்துப் பார்க்க வேண்டுமானால் முதலில் நான் என்ன என்பது நமக்குத் தெரியவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மை/ பெண்தன்மை
கவலை
வெட்கம்
கோழைத்தனம்
அடிமை புத்தி
கண் அடிமை
வாய் அடிமை
உள்ளம் அடிமை
கால் அடிமை
அடிமை மிருகம்
பிள்ளை பெறும் இயந்திரம்
தாய்ப்பணி
பிள்ளைபெறும் தொல்லை

ஆண்மை/ஆண்தன்மை
பெண்களை அடக்கி ஆளும் ஆண்மை
மூர்க்கத்தனம்
மிருகத்தனம்
அகங்காரம்
அக்கிரமம்
மிருகசிகாமணிகள்
துன்மார்க்க பிறவிகள்
சுயநலம் (மிக்கவர்கள்)
நயவஞ்சகம் (மிக்கவர்கள்)
மோசம் செய்பவர்கள்
(ஆண்களின் வேசைத்தனம்)

ஒடுங்க வைப்பது
அடங்கி நடக்க செய்வது
கீழ்ப்பணிய வைப்பது
இம்சிப்பது
அதிகாரம் பண்ணுவது
வதை செய்வது
பலாத்காரப் படுத்துவது

கற்பு
இயற்கை கற்பு
அடிமை கற்பு
நிர்பந்த கற்பு
சுயேச்சை கற்பு
உண்மை கற்பு
உறுதிப்பாடு
கற்பாபிமானம்
விபச்சாரன்/விபச்சாரி

மணம்/ஒப்பந்தம்
துணைநல ஒப்பந்தம்
வாழ்க்கை ஒப்பந்தம்
ஒப்பந்த ஏற்பாடு
சீர்த்திருத்த மணம்
மரியாதை மணம்
முழு சுய-மரியாதை கல்யாணம்
புதிய முறை கல்யாணம்
பொறுப்புள்ள மணம்
பொருந்திய மணம்
ரிஜிஸ்டர் கல்யாணம்
காதல் மணம்
சுதந்திர காதல் மணம்
கலப்பு மண
விதவை மணம்
சிநேக இன்பம்

கல்யாண விடுதலை
கல்யாண ஒப்பந்த விலக்கு
விவாக விலக்கு
நிர்பந்த கல்யாண விலக்கு
இளமண கல்யாண விலக்கு

இச்சொற்களைத் தொகுத்தவர்கள் : வ. கீதா மற்றும் சாலை செல்வம். வ.கீதா அவர்களின் உரையாடலில் உள்ள பொருண்மையின் தொடர்ச்சியாக இப்பட்டியல் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை ஆக்கங்கள்

மாற்றுப் பாலியல் கலை ஆக்கங்கள்

அனைத்து சமூக இயக்கங்கள் போல மாற்று பாலியல்பு சார்ந்த உரிமைக்கான போராட்டத்திலும் கலை வெளிப்பாடுகள் முக்கிய மானவையாக அமைகின்றன. அதிலும் தமது உணர்வுகளை வெளி படுத்த மொழி இல்லாத சூழலில் இக்கலைசார் வெளிப்பாடுகள் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. மேலும் தம்மேல் திணிக்கப்படும் அடையாளப் பெயர்கள் மற்றும் சமூகத்தில் தமக்கென ஓர் இடம் உருவாக்கும் நோக்கத்துடன் தாமே வேறு வழியின்றி தேர்ந்தெடுக்கும் அடையாளப்பெயர்கள் , அப்பெயர் களுடன் கூடி வரும் அடையாளக் குழுக்கள், இவையனைத்தும் பற்றி தம்மிடையேயும் பிற சமூகத்தாரிடையேயும் காணப்படும் இறுக்க மான, பொதுவான வர்ணனைகளுக்குள் இக்கலை வெளிப்பாடுகள் அடங்குவதில்லை. அவைகளைத் தாண்டி ஒவ்வொருவரின் தினசரி வாழ்க்கையின் உண்மைகள், அதனூடே அமையும் இன்ப-துன்பங்கள், இச்சைகள் ஆகியவை இவ்வெளிப்பாட்டில் வெளிக் கொணர வாய்ப்புண்டு. ஏதோ ஒருசில பாலினம் மற்றும் பாலியல்பு கொண்டோர் மட்டுமே இத்தகைய அனுபவங்கள் பற்றி பேசவும் யோசிக்கவும் தேவை உள்ளது என்னும் தவறான கருத்தை உடைத்து, இக்கேள்விகள் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் கேட்கப்பட வேண்டியவை என்றும் அதுவே இக்கருத்துருவாக்கங்களின் நோக்கம் என்பதையும் வெளிப்படுத்த இக்கலை வடிவங்கள் உதவுகின்றன.

இக்கலை வெளிப்பாடுகளின் வலிமை இன்றைய தனி மனித வாழ்க்கை மற்றும் சமூக இயக்கங்களுக்கு மட்டுமல்லாமல் வரலாற்றின் ஒரு முக்கிய அங்கமாகவும் விளங்குகின்றன. அதேபோல, இன்று பாலியல்பு பற்றிய கருத்துருவாக்கத்தில் இத்தகைய வெளிப்பாடுகளை சேர்த்துப் படித்தல், நமக்குப் பல முக்கிய கோட்பாடுகளை உணரவும் புரிந்து கொள்ளவும் உதவும். கடந்த சில ஆண்டுகளின் வரலாறானாலும் சரி அதற்கு முந்தைய வரலாறானாலும் சரி, அவற்றை இவ்வெளிப்பாடுகளின்றி காணுதல் முழுநிறைவற்ற தாகவே அமையும்.

பாலியல்பு சார் கருத்துருவாக்கமும் அதுபோன்ற மற்ற பெண்ணிய கோட்பாடுகளும் எப்போதும் கருத்துருவாக்க வரையறைகளை மாற்றியமைப்பதில் ஈடுபட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக இக்கருத்துருவாக்கதில் கலைவெளிப்பாடு போன்றவையைக் கொண்டுவருவது ஓர் அங்கமாகும். உணர்ச்சி, அரசியல், அனுபவம் ஆகியவை ஒன்றுடன் ஒன்றினைந்தவை என்பதும் அவைகளை வெளிபடுத்தும் மொழிகள் சொற்களின் ஊடாக மட்டும் அமைவதில்லை என்பதனையும் தெள்ளத் தெளிவாக கூறுவதற்கு கலையும் ஒரு வழியாக அமைகின்றது.

இவ்வனைத்துக் காரணங்களால் மாற்றுவெளியின் இச் சிறப்பிதழில் ஒரு சில கலை வடிவங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படம்

வான்மேகம்

■ ப்ரீதம். கே சக்கிரவர்த்தி

தண்ணீருக்கும், மழைக்கும் திரையியலைப் பொருத்தவரை உலக அளவில் சில அர்த்தங்கள் உண்டு. சுத்திகரிப்பு, மறுபிறப்பு, பெண்மை, இவ்விரண்டையும் கற்பனையுடன் பயன்படுத்திய திரைபடங்களில் சட்டென நினைவுக்கு வருபவை: சிங்கிங் இன் த ரெயின் [1952], காட் ஒன் தெ ஹாட் டின் ரூஃப் [1958], ஸ்ட்ரே டாக் [1949], 7 சமுராய் [1954], பதேர் பான்சாலி [1955], மதர் இந்தியா [1957], ஷஷான்க் ரிடெம்ஷன் [1994], ரோட் டு பர்டிஷன் [2002]. எனக்கு மிகவும் பிடித்தது ராஷொமான் [1950] - பளீர் என்ற வெளிச்சமும், இடைவிடாத மழையும் மாறி மாறி விளையாடி, உண்மை, பெண் உடல், காதல், வன்புணர்ச்சி, இச்சை, நம்பிக்கை, என்று பல விஷயங்களை ஆராயும் திரைப்படம்.

காதலை வெளிப்படுத்த, வெளியிட முடியாத உண்மையைக் கூற, கிராமத்தைச் சூறையாட, கோடையின் வெக்கையை வெளிப்படுத்த, அடிப்பட்ட குடும்பத்தை மேலும் காயப்படுத்த, பழி வாங்க, விடுதலையைத் தேட அடுக்கி கொண்டே போகலாம்.

காதல் என்று சொல்லும் பொழுது எல்லையில்லா மகிழ்ச்சியை மட்டும் நான் இங்கு குறிப்பிடவில்லை. காஸபிளான்காவில் [1942] ஆழமான உறவின் முடிவையும் சேஸிங் ஏமியில் [1997] இயலா காதலை வெளிப்படுத்தவும் கூட இயன்றுள்ளது.

ஏனோ இந்திய சினிமாவிற்கு மட்டும் கற்பனை பற்றாகுறை வந்து விடுகிறது இந்த விஷயத்தில். இராமநாராயணன் தனது நாயகியுடன், நளினியுடன் தொடங்கி வைத்த பாணியில் இன்றும் கதாநாயகியை, வெள்ளை புடவை, ரவிக்கையில், உள்ளே கறுப்பு பிரா பட்டை பளிச்சென்று தெரிய, மழையிலோ, நீர்வீழ்ச்சியிலோ ஆடவைக்க மட்டுமே விருப்பம் காட்டுகிறது இத்துறை. இந்தக் கண்டுபிடிப்பை ஒரேயடியாக இராமநாரயணுக்கு மட்டுமே ஒப்புவிப்பது தவறு; அவர் இந்த முறையை அதிகமாகப் பயன்படுத்தியவர், அவ்வளவே.

ஆராதனா [1969] காலகட்டத்தில் மழைக்கு இன்னமும் ஒரு நூதன பயன் ஆரம்பித்தது. இதற்கு நான்கு வருடங்கள் முன்பு திரைக்கு வந்து உலக அளவில் அனைவரின் மனதையும் கொள்ளை கொண்ட பாடல் ஜ எம் 16 கோயிங் ஆன் 17. அதன் பல இந்திய பதிவுகளின் முதல் பதிவு தான் ரூப்பு தெரா மஸ்தானா என்ற மெட்டு. ஏதோ ஒரு காரணத்திற்காகக் காட்டிற்கு போகும் இளம் காதலர்கள் மழையில் மாட்டி கொள்கிறார்கள். வேறு வழியில்லாமல் காட்டு பங்களாவில் அன்று இரவைக் கழிக்கிறார்கள். தெப்பமாக நனைந்து இருக்கும் நாயகி, குளிரினால் நடுங்குகிறாள். [மாறுதலுக்கு, நாயகன்

ப்ரீதம் சக்கிரவர்த்தி கடந்த இருபது ஆண்டுகளாக நாடகத் துறையிலும் திரைக்கதை, மொழிபெயர்ப்பு, ஆவணப்படங்கள் ஆகியவற்றின் ஆக்கத்திலும் பங்களித்து வருகிறார். தற்பொழுது ஹைதராபாதில் உள்ள ராமா நாயுடு திரைப்படக் கல்லூரியில் நாடகவியல் மற்றும் திரைப்பட வரலாற்றுத் துறையில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் வைத்துக் கொள்ளலாம், தவறில்லை.] வேறு வழி தெரியாத காதலன், இருவரின் ஆடைகளையும் களைந்து விட்டு, அவளை அணைத்து கொள்கிறான். Cut to: SONG. அடுத்த காட்சியில், நாயகி வாந்தி எடுப்பாள். கர்ப்பம்!

உங்களுக்கு ஒரு போட்டி. இதே காட்சியை பார்த்த ஐந்து திரைபடங்களின் பெயர்களைச் சொல்லுங்கள். அவை எந்த இந்திய மொழி படமாக இருந்தாலும் பரவாயில்லை.

பூவா தலையாவில் [1969] தொடங்கி, புன்னகை மன்னன் [1986] வரையில் கே. பாலசந்தர் புதிய உறவில் இருக்கும் நாயகியைக் காட்டவே அருவியையோ, மழையோ பயன்படுத்தி உள்ளார். உதாரணம்: வான் மேகம். மணி ரத்தினத்திற்கோ, இவை இரண்டும் தனது கன்னி கழியாத நாயகியை அறிமுகப்படுத்தவே தேவை பட்டது. இதயத்தை திருடாதேவில் [1989] வரும் ஆத்தாடி அம்மாடி. அஞ்சலி [1990] தொடக்க காட்சி மட்டுமே இதற்கு விதிவிலக்கு. உதாரணம்: அதில் மழை இனி வரபோகும் ரகசிய வாழ்விற்கு ஒரு அறிகுறியாகும்.

மழையையும் நீரையும் ஒரு கதாபாத்திரமாகவே பயன்படுத்திய படமாக எனக்கு நினைவிற்கு ஒரே திரைப்படம் சில நேரங்களில் சில மனிதர்கள் [1975]. புயல் அடிக்கும் ஒரு மாலை வேளை, பஸ்ஸிற்காகக் காத்துக் கொண்டு இருக்கும் கங்கா என்ற ஒரு இளம் கல்லூரி மாணவியை தனது காரில் ஏற்றி கொள்கிறான் ஒரு இளைஞன். காருக்குள் இருவருக்கும் உடலுறவு ஏற்படுகிறது. முதலில் இணங்கும் கங்கா, பிறகு தான் கற்பழிக்க பட்டதாக அதை புரிந்து கொள்கிறாள். நேரம் கடந்து வீட்டிற்கு வரும் கங்கா நடந்ததை தனது விதவை அம்மாவிடம் கூறுகிறாள். அதிர்ந்து போகும் தாய் அவளைத் தரதரவென்று இழுத்து சென்று கிணற்றடியில் அமர செய்து, குடம்குடமாகத் தண்ணீரை அவள் தலையில் கொட்டி, "நீ சுத்தமாயிட்டே டீ, சுத்தமாயிட்டே" என்று கதறுகிறாள். திரைப்படம் தொடங்கி பத்து நிமிடத்திற்குள் நீருக்கு இரண்டு பயன்பாடுகள்: ஒன்று கங்காவை அசுத்த படுத்த, மற்றொன்று, அவளை சுத்தப்படுத்த. ஜெயகாந்தனின் படைப்பில், பீம்சிங்கின் இயக்கத்தில் வெளிவந்த இந்த திரைப்படம் முப்பத்தைந்து வருடங்கள் கடந்தும் அழியாமல் இருப்பதற்கு இந்தக் கற்பனாசக்தியே காரணம்.

பெண் உடலுடன் சம்மந்தப்படாத வேறு எந்தப் பயன்பாடும் இந்திய திரைப்படம் பொறுத்த வரையில் சண்டை காட்சிகள் மட்டும் தான். இது ரத்த வெறியை கோடிட்டு காட்ட உதவியுள்ளதே தவிர வேறு எதற்கும் பயன்படவில்லை.

மழைநீரை சேமியுங்கள் என்று ஊர் முழுக்க போஸ்டர் அடித்து ஒட்டிவிட்டு, இப்படி நீரை வீண் அடிக்கலாமா?

வாருங்கள் நாம் அனைவருமாகச் சேர்ந்து யோசித்து, திரைப்பட துறைக்கு மழையின் மாற்று பயன்பாடுகளுக்கு யுக்திகள் சொல்வோம். காரணம் 99% இந்திய திரைப்படங்கள் ஆண் மைய்யப்பட்டவை தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை
1

அவள்

■ லிவிங் ஸ்மைல் வித்யா

கண்ணீரின் உப்புச்சுவைக்கும்
மூச்சடைத்து உலகங்கள் ஸ்தம்பித்த
ஒற்றை முத்தம்
அவளுக்கானது.

குறிகளின் வானம்
வீழ்ந்த எங்களின்
பிரத்யேக இரவில்
நீலத்தாரகைகளை
விதைத்தது
காமம்.
உடலைத்திறக்கையில்
உருகி பாய்ந்தோடிய
உதிரநதி
வானமெங்கும் நனைத்தது.
வெளிச்சத்தில் தெரியாத
அந்த நிலாத்துண்டை
உடல்களில் பொருத்திக்கொண்டு
இருளின் அந்திம
நொடிகளில் விலகினோம்
பழகிய அவரவர் கூட்டிற்கு...

இந்த அதிகாலையின்
என் படுக்கை விரிப்பில்
சிதறிக்கிடக்கின்றன
சிரிப்பொலிகள்

இரவில் உன்
உடலின் வெளியேறும்
ஒளி என்னவென
கிளர்ந்து
கேட்கிறான்
இவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை
2

■ லிவிங் ஸ்மைல் வித்யா

அப்போது நான்
முழுக்கை சட்டையும், கால் சராயும்
அணிவது வழக்கம்

அப்போது நான்
மாதம் ஒருமுறையென
சீராக முடிதிருத்தி வந்தேன்

அப்போது நான்
ஆண்களுடன்..,
பள்ளியில் தான் படித்தேன்

இருந்தாலும் அவர்கள் கிண்டல் செய்தார்கள்
"நான் ஆணில்லை" என



இப்போது நான்
புடவை கட்டி,
ஒத்தசடை பின்னி,
பூ முடிந்து,
பாந்தமாக வலைய வந்தாலும்

அவர்கள் கண்டுபிடித்துவிட்டார்களாம்
"நான் பெண்ணில்லை"யென்று.

அஃறிணைகள்
அது, இது என்ற
சுட்டுப் பெயர்களால் அறியப்படுபவை
அவற்றின் குரல்கள்
மனித சப்தங்களுக்கு பொருளற்றவை
சிலதோ செய்திகளில் அடிபடும்.
நல்லது ஆனால்,
இதற்காக வாக்கு சாவடிகளில் அனுமதிப்பது
நகைப்பிற்குரியது
அவற்றின் காதற் பண்புகள்
காயடிக்கத்தக்கவை
நல்ல பொழுது போக்கிற்கும் உதவினாலும்
ரேசன் ஒதுக்குவதற்கோ
இது போதுமான காரணமில்லையே
அஃறிணைகளின் பொருள்
அவை மனிதர்கள் இல்லை என்பது மட்டுமே
கையிருந்தால் என்ன?
காலிருந்தால் என்ன?
மேலும்
ஆறு அறிவு இருந்தால் தான் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை
3

■ பிரேமா ரேவதி



கடக்க முடியாத
மதில்கள் நிற்கின்றன
இரவின் எல்லைகளில்
துயரின் ஆழ்கருமை
நீர்நிற ஓவியக்கரைசலாய்
படிந்து கிடக்கிறது
ஓவியச் சட்டகத்தின் வெளியே.
நுழைவாயிலிலும்
புழைக்கடை வேலிப்படலிலும்
நிலவொளியின் புழுதியாய்
சூரியனின் செதில்களாய்
உறுத்திக்கொண்டிருக்கிறது
உன் முகம்
வெளியேறுதல் சாத்தியமற்ற
நினைவுச்சிக்கில்
கடந்து போகின்றன இரவுகள்
உன் வலது முலையின் மேல்
விழும் நட்சத்திர ஒளியின்
பிரதிபலிப்பில்
உறக்கமற்று மூடிய விழிகளுக்குள்
வெறிபிடித்து அலைந்துகொண்டிருக்கிறது
விடியலுக்கான ஒரு கனவு.

படைப்பாளிகள் பற்றிய குறிப்பு

■ **ப்ரேம ரேவதி** தமிழ் சினிமா உலகத்தில் செயல்படுகிறார். பல்வேறு சமூக இயக்கங்களில் பணிபுரிபவர். பல ஆவணப் படங்களும் எடுத்துள்ளார். பல ஆண்டுகள் பத்திரிகைத் துறையில் பணிபுரிந்துள்ளார். அவ்வப்போது கவிதையும் எழுதி வருகிறார். நாகப்பட்டினத்தில் 'வானவில்' என்னும் பள்ளியை நடத்தி வருகிறார்.

■ **லிவிங் ஸ்மைல் வித்யா** எழுத்து, ஓவியம், நாடகம் என்னும் பல தளங்களில் பணி புரிந்து வருகிறார். 'நான் சரவணன், வித்யா' என்னும் தமது வாழ்க்கை பற்றிய புத்தகத்தின் மூலம் அரவாணி சமூகத்தைப் பற்றி தமிழ்ச் சூழலில், உருவாகி வரும் புரிதலில் ஒரு பங்கு வகித்துள்ளார். இங்கு இடம்பெறும் ஓவியங்களும் அட்டைப்பட ஓவியமும் இவரால் வரையப்பட்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வரலாறு

■ ரேவதி

பெங்களூரில் 'சங்கமா' அமைப்புடன் பல வருடங்களாக அரவானிகளின் உரிமைகள் மற்றும் பாலியல் சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபட்டு வருபவர் ரேவதி. அவர்களின் 'The Truth about my Life' என்ற பென்குயின் நிறுவனம் வெளியிட்டிருக்கும் நூல், வ. கீதா அவர்களால் தமிழிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டது. இந்நூலை 'அடையாளம்' பதிப்பகம் வெளியிட உள்ளது. இந்நூலிலிருந்து ஒரு பகுதியை இங்கு வெளியிட்டுள்ளோம்.

டெல்லியை விட பாம்பே எனக்கு வித்தியாசமாக இருந்தது. அங்கு வசிக்கும் மக்கள், கலாச்சாரம், சமுத்திரம், மின்சார ரயில் இப்படி எல்லாமே புதுமையாக இருந்தது.என் குருவோட அம்மா வீடு மும்பையில் காட்குப்பர் என்ற பகுதியில் உள்ளது. அவர்களின் பரிவார் மிகப் பெரியது. அங்குள்ள நானிதான் எல்லோருக்கும் பெரியவர். அவர் பரிவாரில் அவர்களுக்கு சேலா, நாத்தி, சடக்நாத்தி (மகள், பேத்தி, கொள்ளுப்பேத்தி)என 500க்கும் மேற்பட்டோர் இருக்கின்றனர். சிலர் தமிழ்நாட்டில், சிலர் டெல்லியில், சிலர் பம்பாயில் வேறு வேறு இடங்களில் ஏன் சிங்கப்பூரில் கூட இருக்கின்றனர். நானி இருக்கும் வீடு டெல்லியில் என் குரு வீடுபோல வறுமையான வாடகை வீடு கிடையாது. இங்கு சொந்த வீடு. வசதியான வீடு கூட.

இங்குள்ள நானிக்குச் சொந்தமாக காமாட்டிபுரத்தில் பாலியல் தொழில் செய்யும் வீடும் உள்ளது. அங்கு அவர் சேலா நடத்திக் கொண்டிருந்தார். வீட்டிலும் நானி சேலாக்கள், சில நாத்தி சேலாக்கள் வீட்டு வேலைகள் செய்துகொண்டும் கடைகேட்கச் செல்லவும் இருந்தனர். இங்க துணி துவைக்கவோ பாத்ரூம் செல்லவோ வெளியில் போக வேண்டியது இல்லை.எல்லா வசதிகளும் வீட்டிலேயே இருக்கின்றன. மூத்தவர் நானியைக் கண்டால் எல்லோருக்கும் பயம், பக்தி, மரியாதை இருக்கும். நானி வெளியில் சென்றுவிட்டால் எல்லோரும் ஃபிரியாகப் பேசுவார்கள். டிவி பார்ப்பார்கள். நானி வருகின்றார் என்றால் எல்லோரும் அமைதியாக இருப்பார்கள். அதற்காக நானி கொடுமைக்காரி என்று நினைக்க வேண்டாம். அவர்களும் டிவி பார்க்கச் சொல்வார். ஆடச் சொல்வார். பாடச் சொல்வார். எப்படி நம்முடைய வீடுகளில் பெரியவர்களுக்கு மரியாதை கொடுப்போமோ அதைப் போலதான் இங்கும்.

காமாட்டிபுரம், பான்டுப், சோனாப்பூர், முல்லன், கோலிவடா, மாதுங்கா, மைகீம், பைகளா இப்படி எல்லா இடங்களிலும் இஜடாக்கள் வசிக்கின்றனர். தொழில் என்று பார்த்தால் டெல்லியைப் போல கடை கேட்பது, பதாய்க்குப் போவது. டெல்லியை விட வித்தியாசமாகப் பாலியல் தொழில் செய்பவர் களும், பாலியல் தொழில் நடக்கும் வீடுகளும் இங்கு உள்ளது. பொதுவா இங்கு பதாய்க்குப் போகின்றவர்கள் பாலியல் தொழில் செய்ய மாட்டார்கள். இஜடாக் களின் உறவுமுறைகள் என்று பார்த்தால் அம்மா, மகள், பேத்தி, கொள்ளுப்பேத்தி, பால்மகள் என உறவுமுறைகள் உள்ளன. ஒரு இஜடாவை மற்றொரு இஜடா சேலாவாக ஆக்கிக்கொள்ள மூத்த இஜடாக்களின் முன்னிலையில் ஜமாத்(மீட்டிங்) கூட்டி, அங்கு இவருடைய சேலா இவர் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கீகரிக்கப்படுகின்றது. இந்த சேலா முறை எந்த ஒரு சட்டத்தின் முறைப்படியும் கிடையாது. இஜடாக்களின் சட்டம், திட்டம், கலாச்சாரம் எல்லாம் அவர்களுக்குள் மட்டும்தான். ஜமாத் என்பது இதுபோன்ற நல்லது கெட்டது எனப்பேசி முடிவு செய்யும் இடமாகவும் செயல்படுகின்றது.சமுதாயத்தால் புறக்கணிக்கப் பட்டு சட்டத்தில் இடம் இல்லாமல் உரிமைகள் கிடைக்காத இஜடாக் களின் வாழ்க்கை கேள்விக்குறி ஆகும்போது நான் இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்வதுதான் இந்த இஜடாக்களின் கலாச்சாரம். இங்கு சாதி மதம் என்ற வேற்றுமை கிடையாது. எந்த ஒரு மதமோ, ஏழையோ, பணக்காரனோ யாராக இருந்தாலும் இஜடாக்கள் இருக்கிறார்கள்.

கீழ்சாதி,மேல்சாதி என்ற வித்தியாசம் இஜடாக்களில் இல்லை. இஜடாங்கனு ஒரே சாதிதான். ஆனால் இஜடாக்களில் ஏழு வீடுகள் உள்ளன. ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு. நான் முன்கூட்டியே கூறியதைப்போல ஏழு வீடுகளும் ஒவ்வொரு வீட்டை யும் சவுக்கன் வீடு என்று கூறுவார்கள். ஒரு வீட்டில் இருந்து மற்றொரு வீட்டிற்குக் குருவை மாற்றிக் கொள்ளும் பழக்கமும் இஜடாக்களில் உள்ளது. மும்பையில் ஏழு வீட்டிற்கும் ஒவ்வொரு தலைவியைத் தேர்ந்தெடுத்து இருக்கின்றனர். அவர்கள் நாயக் என்று கூறப் படுகிறார்கள். நாயக் மற்றும் நாயக் பரிவார்கள் அதிகமாக பதாய்க்குச் செல்வார்கள். ஒரு நாயக்கின் பரிவாரில் அக்கா, தங்கை, மகள்,பேத்தி இப்படி அவரவர்களுக்கும் பரிவார்கள் உள்ளனர். தனித் தனியாகவும் வசிக்கின்றனர்.ஏதாவது விசேஷங்கள், ஜமாத் என்றால் எல்லோரும் ஒன்றாகக் கூடிக்கொள்வார்கள். இப்படி இன்னும் பல விஷயங்களை மும்பைக்கு வந்த பிறகு நான் பார்த்துப் பேசி பழகித் தெரிந்து கொண்டேன்.கட்டுப்பாடு, ஒழுக்கம், உரிமைகள் இவற்றை பேணிக் காக்கத்தான் இப்படிப்பட்ட இஜடா கலாச்சாரம் அமைந்துள்ளது எனப் புரிந்துகொண்டேன்.

ஒரு வீட்டில் இருந்து மற்றொரு வீட்டிற்குக் குருவை மாற்றிக் கொள்ளும் பழக்கமும் இஜடாக்களில் உள்ளது. மும்பையில் ஏழு வீட்டிற்கும் ஒவ்வொரு தலைவியைத் தேர்ந்தெடுத்து இருக்கின்றனர். அவர்கள் நாயக் என்று கூறப் படுகிறார்கள். நாயக் மற்றும் நாயக் பரிவார்கள் அதிகமாக பதாய்க்குச் செல்வார்கள். ஒரு நாயக்கின் பரிவாரில் அக்கா, தங்கை, மகள்,பேத்தி இப்படி அவரவர்களுக்கும் பரிவார்கள் உள்ளனர். தனித் தனியாகவும் வசிக்கின்றனர்.ஏதாவது விசேஷங்கள், ஜமாத் என்றால் எல்லோரும் ஒன்றாகக் கூடிக்கொள்வார்கள்.

வாரம் முழுதும் மும்பையில் கடை கேட்கச் செல்வேன். திங்கள் விடி மற்றும் சர்ச்கேட், செவ்வாய் பாந்திரா, புதன் மான்கூர், வியாழன் சன்டாஸ்ரோட், வெள்ளி மச்சித்பந்தர், சனி சைன்கோலிவடா, ஞாயிறு செம்பூர். இப்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பகுதியில் உள்ள கடைகளில் கடைகேட்கச் செல்வேன். ஆரம்பத்தில் என்னை கடை கேட்க இஜடாக்கள் கூட்டிச் சென்றனர். ஒரு மாதத்திற்குப் பிறகு நான் தனியாகவே சென்று கடைகேட்டு வருவேன். டெல்லியில் உள்ள என் குரு வந்து என்னை அழைத்துச் செல்வார் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அவரிடமிருந்து ஒரு செய்தியும் வரவில்லை. நான் மும்பைக்கு வந்து இரண்டு மாதங்கள் ஆகியும் அங்கிருந்து ஒரு கடிதமோ, போன் தொடர்போ வரவில்லை. மும்பை வீட்டில் இருக்கும் என் நானி அவர்களின் சேலா பெயரில் என்னை சேலாவாக விருப்பமா என்று கேட்டார்கள். அத்துடன் எனக்கு சீக்கிரமா ஆப்ரேஷன் செய்து விடுவதாகவும் கூறினார்கள். எனக்குப் பெரியவர்கள் பேச்சுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். மேலும் டெல்லி குருவிடம் இருந்து ஒரு சேதியும் வரவில்லை. என்ன செய்வது எனத் தயங்கினேன். பதிலுக்கு நீ டெல்லி குரு பெயரில் சேலா ஆகியிருந்தாலும் என் சேலா முறையில் சேலா ஆகியிருந்தாலும் நீ இருவருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேலாதான். அதுவும் நீ ஊரில் அவள் பெயரில் சேலா ஆகி உள்ளாய். அந்த முறை வேறு. மும்பை முறை வேறு. அதனால் மும்பை முறைப்படி என் சேலா பெயரில் நீ சேலா ஆகலாம். தப்பு இல்லை. இஜடாக்களில் தமிழ் நாட்டுக்கு ஒரு குரு இருக்கலாம். மும்பையில் ஒரு குரு இருக்கலாம் என்று நானி கூறினார். நானும் சரி என்று ஒப்புக் கொண்டேன்.

தமிழ்நாட்டுக் குரு சேலா உறவு முறை தமிழ்நாட்டுக்கு மட்டும் தான் செல்லும். மும்பை குரு சேலா உறவு முறை தமிழ்நாட்டில் செல்லாது. மும்பையில் சேலா ஆனவர்கள் மும்பை சேலாக்கள். டெல்லியில் சேலா ஆனவர்கள் டெல்லி சேலாக்கள். அதுபோல் ஒவ்வொரு ஸ்டேட்டிலும் வட இந்தியாவில் தனித்தனி வீடுகளும் அந்தந்த வீடுகளில் அவரவர் பரிவார்களும் இருக்கின்றனர். கர்நாடகாவில் மும்பையின் ஏழு வீட்டு இஜடாக்களும் வசிக்கின்றனர். இதில் தமிழ்நாட்டிற்கு மட்டும் தனிச்சிறப்பு. அங்கு ஒரு குரு இருக்கலாம். அதே போல் தமிழ்நாட்டை விட்டு வேறு ஒரு குருவும் இருக்கலாம்.

காமாட்டிபுரத்தில் வசிக்கும் மும்பை குரு பெயரில் சேலா ஆக்குவதற்கு ஏழு வீடுகளில் உள்ள நாயக்குகள் இருக்கும் இடமான பைக்களா கூட்டிச் சென்றனர். நான் சேலா ஆகப்போகும் வீட்டின் நாயக் வீட்டுக்குச் சென்று என் குரு பெயரில் என்னை சேலா செய்வதாகக் கூறினர். அங்கு மற்ற வீட்டு நாயக்குகளும் அழைக் கப்பட்டு சட்டாய் (பாய்) விரித்து அதன்மேல் உட்கார்ந்து ஜமாத் கூட்டி இன்னார் வீட்டில் இன்னார் பரிவாரில் இன்னார் சேலாவுக்கு ரேவதியை சேலா செய்வதாக எல்லோரும் கேட்கும்படிக் கூறினர். அதற்கு எல்லோரும் கைதட்டினர். என்னைப் பெரியவர்களுக்கு பாவ்படுத்திச் சொல்லச் சொன்னார்கள். நானும் எல்லாருக்கும் பாவ்படுத்தி என்று கூறினேன். பிறகு என்னை என் குரு காட்குப்பர் அழைத்து வந்துவிட்டார்.

ஜமாத்தில் சேலா ஆகும்போது என்னை இதற்கு முன் எந்த வீட்டில் சேலா ஆகி இருந்தாய், எத்தனை வீட்டில், இல்லை இதுதான் முதல் தடவையாக சேலா ஆகின்றாயா என்று கேட்டார்கள். தமிழ்நாட்டில் ஒரு ஜமாத்தில் சேலா ஆகியிருக்கேன் என்று கூற, தமிழ்நாட்டு ஜமாத் இங்கு செல்லாது பேட்டா. மும்பை, டெல்லி, ஐதராபாத் இப்படி எங்கியாவது சேலா ஆகியிருக்கியா என்று கேட்டார்கள். இல்லை என்றேன். அப்படி என்றால் கோரி மூரத்தான் என்றனர். முதல் முதல் ஒரு குருவுக்கு சேலா ஆகுபவள் என்று பொருள். சேலா செய்யும் முறைக்கு ரீத்போடுதல் என்று கூறுகின்றனர். ரீத் போட்ட பிறகு எனக்குத் துணிமணிகளைக் கொடுத்து அதை வைத்துக்கொள்ள பெட்டி படுக்கையைக் கொடுத்து எங்கு வைத்துக்கொள்ள வேண்டும் என்ற இடத்தையும் கொடுத்து சில அறிவுரைகளைக் கூறினார்கள்.

ஜமாத்தில் சேலா ஆகும்போது என்னை இதற்கு முன் எந்த வீட்டில் சேலா ஆகி இருந்தாய், எத்தனை வீட்டில், இல்லை இதுதான் முதல் தடவையாக சேலா ஆகின்றாயா என்று கேட்டார்கள். தமிழ்நாட்டில் ஒரு ஜமாத்தில் சேலா ஆகியிருக்கேன் என்று கூற, தமிழ்நாட்டு ஜமாத் இங்கு செல்லாது பேட்டா. மும்பை, டெல்லி, ஐதராபாத் இப்படி எங்கியாவது சேலா ஆகியிருக்கியா என்று கேட்டார்கள். இல்லை என்றேன். அப்படி என்றால் கோரி மூரத்தான் என்றனர். முதல் முதல் ஒரு குருவுக்கு சேலா ஆகுபவள் என்று பொருள்.சேலா செய்யும் முறைக்கு ரீத்போடுதல் என்று கூறுகின்றனர்.

படுதாதி - ஆயாவின் குரு. எனக்கு அம்மாச்சி

தாதா குரு - பாட்டியின் குரு. எனக்கு ஆயா

நானா குரு - குருவின் குரு. எனக்குப் பாட்டி

குரு - அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலா குரு - என்னுடைய குருவின் சகோதரிகள்

குருபாய் - என்னுடைய சகோதரிகள்

படா குருபாய் - பெரிய சகோதரி

சோட்டா குருபாய்- சிறிய சகோதரி

சேலா- மகள்

நாத்திசேலா-கொள்ளுப்பேத்தி

சந்திசேலா- கொள்ளுப்பேத்தி

சடக் நாத்தி- கொள்ளுப்பேத்தியின் மகள்

இதுபோன்ற உறவு முறைகளைச் சொல்லிக் கொடுத்து இதில் பெரியவர்கள் சொல்லும் வேலைகளைச் செய்ய வேண்டும், மரியாதை கொடுக்க வேண்டும், பெரியவர்கள் எதிரில் வந்தால் பாவ்படுத்திச் சொல்லவேண்டும், அவர்களின் மீது நாம் கட்டி இருக்கும் துணி படக்கூடாது, சொம்பில் தண்ணீர் கொடுத்தாலும் மரியாதையுடன் கொடுக்க வேண்டும், மூக்குத்தி,தோடு, கால் கொலுசு, வளையல் இல்லாமல் இருக்கக் கூடாது.தலைமுடியை வெட்டக் கூடாது, முகத்தில் முடி முளைத்தால் ஷேவிங் செய்யக்கூடாது, அதற்கென்று ஜிமிட்டா(பிளக்கர்) வைத்து பிடுங்கிக் கொள்ளவேண்டும்.மேலும் கடைகேட்டுச் சம்பாதிக்கும் பணத்தில் குருவுக்கும் நானிக்கும் நம் வசதிபோல் பணம் கொடுக்க வேண்டும்.எல்லாம் கொடுத்தாலும் சரி, அவர்களே நமக்குத் தேவையானதை வாங்கிக் கொடுத்து என்ன செய்ய வேண்டுமோ அதையும் செய்து வைப்பார்கள்.

நான் என்னுடைய குரு இருக்கும் இடத்தில் வசிக்கவில்லை. நானி வீட்டில் இருந்துகொண்டு கடைகேட்டு அதில் வரும் வருமானத்தை என் நானியிடமே கொடுத்தேன்.

இரவில் நானியின் கால்களைப் பிடித்துவிட்டுதான் தூங்குவேன். என் நானி படுத்திருக்கும் கட்டில் அருகிலேயே பாயை விரித்துத் தூங்குவேன். ஒரு சமயம் அப்படி என் நானிக்குக் கால் பிடித்துக் கொண்டிருக்கையில் 'ஏ பேட்டா, தமிழ்நாட்ல பந்தி வச்சுகிட்டு இருந்தியா'(பந்தி என்றால் புருஷன், பார்ட்னர்) என்று கேட்டார். 'இல்லைங்க நானி' என்று கூறினேன். 'குடிக்கிற பழக்கம் இருக்கா' என்று கேட்டார். 'இல்லைங்க நானி' என்று சொன்னேன். 'பேட்டா சில பொட்டைங்களோட சேர்ந்து குடிக்கக் கிடிக்கக் கத்துக்காதே. தப்பு. அதெல்லாம் கத்துகிட்டே, புருஷன் வச்சுகிட்டே நானி உன்னோட மண்டைய ஒடிச்சப்புடுவேன்' என்று கூறினார். 'நானி சொல்றமாதிரி கேட்டு நல்ல புள்ளையா நடந்துகிட்டா உனக்கு நிர்வாணம் பண்ணிவிடுவேன்' என்று கூறினார். (நிர்வாணம் என்றால் ஆப்ரேஷன் மூலம் ஆண் உறுப்பை அகற்றிக் கொள்வது)

'நிர்வாணம் ஆனபிறகு நீ உன்னோட குருகிட்டஇருந்தாலும் இருக்கலாம். இல்லாட்டி நானிகூடவே இருக்கலாம். ஊருக்குப் போகணும் என்றால் அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். உன்னுடைய வீட்டில் உன்னை இஜடாவாக ஒப்புக்கொள்வார்களா' என்றும் கேட்டார். நான் என் குடும்பத்தின் விஷயங்களைக் கால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துவிட்டுக்கொண்டே சொன்னேன். அதைக்கேட்ட என் நானி 'இப்ப எல்லாம் ஊருக்குப் போகிறேன் என்ற நினைப்பே வரக்கூடாது. போனால் முடி வெட்டி விடுவார்கள். பொட்டை களுக்கு முடி வெட்டிவிட்டால் கேவலம். அதனால் போக வேண்டாம். அவர்களே தேடி வந்தால் நானி பேசிக் கொள்கிறேன்' என்று கூறினார். இப்படி என் நானி, என்னுடைய உறவு முறைகள் எல்லோரும் அன்பாகப் பேசுவதும் அறிவுரை சொல்வதும் அவற்றைக்கேட்டுக் கொண்டு என் வேலைகளைச் செய்து கொண்டு ஒரு ஆறுமாதங்கள் ஓடின.

என்னுடைய குருபாய் சேலாங்க ரெண்டுபேரு என்னை மாதிரி கடகேட்டுக்கிட்டு வீட்டு வேலை செஞ்சுகிட்டு எனக்கு முன்னாடியே ஒரு வருஷமா இருக்காங்க. அவுங்கள நிர்வாணத்துக்கு அனுப்ப குல தெய்வமான போத்ராஜி மாத்தா(சேவல் மீது அமர்ந்து காட்சிக் கொடுக்கும் மாத்தா)போட்டோவுக்கு பூஜைபோட்டு அவர்களை அனுப்ப ஏற்பாடுகள் நடந்து கொண்டு இருந்தன. அன்று காலை 8 மணி இருக்கும். நான் வீட்டுவேலைகளைச் செய்து கொண்டிருக்கும்போது நானி என்னைக் கூப்பிட்டு, 'பேட்டா நீ இன்னிக்குக் கடகேட்கப் போகவேண்டாம். இரண்டு செட் புடவை, பாவாடைகளை எடுத்து வைத்துக்கொள்' என்று கூறினார். நானியிடம் எங்கு அனுப்புகிறீர்கள் என்று கேட்க முடியாமல் நான் எடுத்து வைத்துக்கொண்டு யோசித்தேன். ஒருவேளை பொட்டைங்க நிர்வாணத்துக்குப் போகின்றார்களே அவர் களைப் பார்த்துக் கொள்ள நம்மைக் கூட அனுப்புவார்களோ என்னவோ என்று யோசித்தேன். கொஞ்சநேரம் கழித்து மீண்டும் என்னை அழைத்து 'நீ தாயம்மா நிர்வாணத்துக்குப் போறியா, டாக்டர் நிர்வாணத்துக்குப் போறியா?' என்று கேட்டார். (தாயம்மா நிர்வாணம் என்றால் இஜடாக் களே இஜடாக்களுக்குச் செய்யும் நிர்வாணம், டாக்டர் நிர்வாணம் என்றால் டாக்டர்கள் மருத்துவமனையில் செய்யும் ஆப்ரேஷன்) எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரே சந்தோஷம். என்னுடைய மனதில் அப்படியே துள்ளிக் குதிக்கவேண்டும்போல் ஒரு ஆர்வம். ஆனால் நானி கேட்கிறார் சடனாகப் பதில் கூறவேண்டும், தாமதித்தால் என்னை அனுப்புவாரோ மாட்டாரோ என்று'உங்க இஷ்டங்க நானி, நீங்க எங்க போகச் சொல்றீங்களோ அங்கே போகின்றேன்' என்று கூறினேன். என்னுடைய மனதில் தாயம்மா நிர்வாணத்திற்குப் போக சற்று பயம் தான். இருந்தாலும் தாயம்மா நிர்வாணம் செய்துகொண்டவர்களுக்குத் தனி மரியாதை தான். எது எப்படி ஆனால் என்ன? நான் பெண்ணாக மாறவேண்டும் என்ற ஆவல்தான் அப்போது இருந்தது.என்னுடைய பெண்மைக்கு இந்த ஆண் உறுப்பு போய்விட்டால் போதும், நானும் மற்ற பெண்களைப்போல சுதந்திரமாக இருக்கலாம் என்ற நினைப்பு எனக்கு. 'உன்னால தாயம்மா நிர்வாணம் செய்து கொண்டால் தாக்குப் பிடிக்க முடியாது. அதனால் நீ டாக்டர் நிர்வாணத்திற்குப் போ' என்று கூறினார்.

பாவாடைகளை எடுத்து வைத்துக்கொள்' என்று கூறினார். நானியிடம் எங்கு அனுப்புகிறீர்கள் என்று கேட்க முடியாமல் நான் எடுத்து வைத்துக் கொண்டு யோசித்தேன். ஒருவேளை பொட்டைங்க நிர்வாணத்துக்குப் போகின்றார்களே அவர் களைப் பார்த்துக் கொள்ள நம்மைக் கூட அனுப்புவார்களோ என்னவோ என்று யோசித்தேன். கொஞ்சநேரம் கழித்து மீண்டும் என்னை அழைத்து 'நீ தாயம்மா நிர்வாணத்துக்குப் போறியா, டாக்டர் நிர்வாணத்துக்குப் போறியா?' என்று கேட்டார்.

❖❖❖

நான் ஆம்புள உடையில இருக்கின்றபோது பெண்கள் உடை போட்டுக் கணும்னு தோன்றியது. பெண்ணாக வாழ வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பெண்களைப்போல் உடை அணிந்தபிறகு என்னை நான் ஆம்புளையாதான் பார்க்க முடிஞ்சுது. ஆம்புள உடம்புக்குள்ள இருக்கின்ற என்னோட பெண்மைக்கு இன்று விடுதலை கிடைக்கப் போக்கின்றது. அதுவும் இவ்வளவு சீக்கிரமாக என்று நினைக்கையில் சொல்ல முடியாத சந்தோஷம். என்னோட குருபாய் சேலா ஒருத்திக்கு நிர்வாணம் செய்து கொள்ள எங்கள் இரண்டுபேரையும் அனுப்ப ஏற்பாடுகள் செய்தனர். எங்க இரண்டுபேருக்கும் அந்த மருத்துவமனை தெரியாது. எங்களோட துணைக்குக்கூட யாரையும் அனுப்பவில்லை. எங்கள் கையில் இருவருக்கும் ரயில் டிக்கட்டும் பணமும் கூடவே ஏழாயிரம் ரூபாய் ஆப்ரேஷனுக்கும் என்று கூறி தமிழ்நாட்டில் உள்ள திண்டுக்கல்லுக்கு அனுப்பி வைத்தனர்.

காலை எட்டு மணி இருக்கும். நாங்க இரண்டு பேரும் மருத்துவ மனைக்கு வந்துசேர்ந்தோம். அப்போது அந்த ஆஸ்பத்திரி சிறிய வீடு போலத்தான் இருந்தது. அங்கு வேறு ஆண்கள் பெண்கள் என்று படுக்கைகளில் சேர்க்கப்பட்டவர்களையும் அவர்களுக்குத் துணையாக இருப்பவர்களையும் பார்த்தோம். இங்க எல்லா விதமான நோய்களுக்கும் வைத்தியம் பார்க்கின்றனர் எனப் புரிந்தது. சிறிய-தொரு ஓட்டு வீடு அந்த ஆஸ்பத்திரியில் ஒரு பக்கம் பூட்டி இருந்தது. அங்குதான் நிர்வாணம் செய்வார்கள் என்று தெரிந்து கொண்டோம்.

மணி காலை பதினொன்றுக்கு டாக்டர் வந்தார். நாங்கள் இருவரும் டாக்டரைப் பார்த்தோம். யாருக்கு நிர்வாணம் என்று கேட்டார். இருவருக்கும் என்று கூறினோம். உங்களுடன் வேறு யாரும் வர வில்லையா என்று கேட்டார். இல்லை என்று கூறினோம். ஒருவருக்கு ஆப்ரேஷன் செய்ய 2500 ரூபாய்; மேலும் ஊசி மாத்திரை நீங்களே வாங்கிக்கொள்ள வேண்டும் என்றார். *(1986 ஆம் வருடம் அப்போது)* உங்களுக்கு ஊசி மாத்திரை, சாப்பாடு வாங்கிக் கொடுக்க ஒரு ஆயா இருக்கிறார். அவருக்குப் பணம் கொடுத்தால் அவர் உங்களைப் பார்த்துக் கொள்வார். உங்கள் இருவருக்கும் ஐயாயிரம் ரூபாய் கட்டிவிட்டு ஒரு பேப்பரில் கையெழுத்துப் போடுங்கள் என்று கூறினார். மறுநாள் காலையில் யாருக்கு முதலில் ஆப்ரேஷன் செய்து கொள்வது என யோசிக்கையில் என்னுடைய குருபாய் சேலா, 'அம்மா அம்மா, நீங்க பெரியவங்க. நான் முன்னாடி ஆப்ரேஷன் செய்து கொண்டால் என்னை நீங்கள் கவனித்துக் கொள்வீர்கள். நீங்கள் முதலில் நிர்வாணம் செய்து கொண்டால் என்னைக் கவனிக்க யாரும் இல்லை. அதனால் நான் முதலில் செய்து கொள்கிறேன்' என்றாள். மும்பையில் என் நானியோ 'நீதான் பெரியவள். அதனால் உனக்குதான் முதலில் நிர்வாணம் செய்ய வேண்டும். நீயே முதலில் செய்து கொள்' என்று கூறியிருந்தாள். இங்கு இவளோ நான் முதலில் செய்து கொள்கிறேன் என்கிறாளே என்ன செய்வது. பாவம் வயதில் இருவரும் ஒரே வயதாக இருந்தாலும் உறவு முறையில் எனக்கு சேலா ஆகிறாள். வாய்விட்டுக் கேட்கிறாள். ஆகவே அவளே முதலில் செய்து கொள்ளட்டும் என்று சொல்லிவிட்டேன்.

இரவு ஏழு மணிக்கு என் குருபாய் சேலாவுக்கு ஆப்ரேஷன் செய்யும் பகுதியில் ஷேவிங் செய்து விட்டனர். அவனுக்கு ஐம்பது ரூபாய் கொடுக்கவேண்டும். பிறகு எனிமா கொடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதுநேரம் கழித்து அவள் அவ்வப்போது பாத்ரூம் சென்று சென்று வந்தாள்.எனிமா கொடுத்த பிறகு எதுவும் சாப்பிடக்கூடாது எனக் கூறினர்.மும்பையில் இருந்து புறப்படும்முன் எங்களுக்கு எங்கள் குல தெய்வம் போத்ராஜி மாத்தாவுக்கு தேங்காய் உடைத்து, ஊதுபத்தி பற்ற வைத்து, கற்பூரம் காட்டி எங்களை விழுந்து வணங்கச் சொல்லி அத்துடன் ஒரு மஞ்சள் துணியில் ஒண்ணேகால் பணம் வைத்துக் கையில் கட்டிவிட்டனர். கூடவே ஒரு முழு தேங்காய் ஒரு எலுமிச்சம் பழம் கொடுத்து இதை உங்களுடனே வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினர். இந்த நிர்வாணத் திற்குச் செல்பவர்களுக்குக் காத்து கருப்பு அண்டாமல் மாத்தா நம்முடன் இருப்பாள் என்றனர்.

இரவு முழுதும் எங்கள் இருவருக்கும் ஆஸ்பத்திரியில் தூக்கமே வரவில்லை. நாங்கள் எடுத்து வந்த போத்ராஜி போட்டோ ஒன்று சிறியதை ஆஸ்பத்திரி சுவற்றில் மாட்டிவிட்டு அதையே பார்த்துக் கொண்டு 'மாத்தா நீதான் எங்களுக்குத் துணை' என மனதால் வேண்டிக்கொண்டு இருந்தோம்.என்னுடன் வந்த என் குருபாய் சேலா 'அம்மா அம்மா நாளை நடக்க இருக்கும் ஆப்ரேஷனில் எனக்கு ஏதாவது ஆகிவிட்டால் நீதான் என்னை எங்கே சேர்க்க வேண்டுமோ அங்கே சேர்க்கவேண்டும். மேலும் ஆப்ரேஷன் செய்யும்போது என்னுடனே இருக்கவும்' என்று கூறினாள். 'ஆகட்டும் பேட்டா, நான் கூடவே இருப்பேன். உனக்கு ஒன்றும் ஆகாது. நாம் வணங்கும்அந்த மாத்தா நம்முடன் துணையாக இருப்பாள். நல்லவிதமாக உனக்கு ஆப்ரேஷன் ஆகிவிடும். உன்னை நான் பார்த்துக் கொண்டாலும் மறுநாள் எனக்கு நடக்கும் ஆப்ரேஷன் போது யார் என்னுடன் இருப்பார்கள்? யாரும் இல்லையே' என்று கூறி சற்று நேரம் மவுனமாக இருந்துவிட்டு யோசித்தேன். ஏன் நம்முடன் நானி யாரையும் அனுப்பவில்லை? இருவரும் ஆப்ரேஷன் செய்து கொள்வதால் யாராவது கூட இருந்தால் எவ்வளவு உதவியாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டு என் பெற்றோர்களையும் நினைத்துக்கொண்டு கண்ணீர் விட்டேன்.சிறிய ஆப்ரேஷனா இது? உயிர் நிலையையே எடுத்துவிட்டு நாம் எப்படி உயிரோடு இருக்கப்போகிறோம். உயிர் நிலையைக் கையால் இறுக்கிப் பிடித்தால் உயிர்போகும் அளவில் வலிக்கிறது. அதை எடுத்தால் எப்படி வலிக்கும் என்று நினைத்தபோது பயம் அதிகமாகிவிட்டது. கடவுள் பெண்ணாகப் படைத்து இருந்தால் நமக்கு இதுபோன்ற நிலை வருமா? இந்த ஆப்ரேஷன் மூலம் நான் இறந்துபோய்விட்டால் இனி நான் என் குடும்பத்தாரைப் பார்க்க முடியாது. கடைசியாக ஒரு முறையாவது அம்மா அப்பாவைப் பார்த்து விட்டு வந்திருந்தால் நிம்மதியாக இருந்திருக்கும். இப்போதுகூட தமிழ்நாட்டுக்குதான் வந்திருக்கோம். இப்படியே போய் அம்மா அப்பாவைப் பார்க்கவும் முடியாது. எல்லாம் கடவுள் விட்ட வழி. இறந்தாலும் சரி, உயிரோடு இருந்தாலும் சரி நான் முழு பெண்ணாகவே சாகவும் நினைக்கிறேன். வாழவும் நினைக்கிறேன். இப்படி என்னுள் பல எண்ணங்கள் பல யோசனைகள் மனதுக்குள் இருந்துகொண்டு தூக்கம் வராமல் இருந்தது. இரவும் ஓடியது.

மறுநாள் காலை எட்டு மணி இருக்கும். 50 வயது பெண் ஒருவர் எங்களிடம் வந்து 'உங்களப் பாத்துக்கொள்ள ஆயா வேண்டும் என்று

இருவரும் ஆப்ரேஷன் செய்து கொள்வதால் யாராவது கூட இருந்தால் எவ்வளவு உதவியாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டு என் பெற்றோர்களையும் நினைத்துக்கொண்டு கண்ணீர் விட்டேன்.சிறிய ஆப்ரேஷனா இது? உயிர் நிலையையே எடுத்துவிட்டு நாம் எப்படி உயிரோடு இருக்கப்போகிறோம். உயிர் நிலையைக் கையால் இறுக்கிப் பிடித்தால் உயிர்போகும் அளவில் வலிக்கிறது. அதை எடுத்தால் எப்படி வலிக்கும் என்று நினைத்தபோது பயம் அதிகமாகிவிட்டது. கடவுள் பெண்ணாகப் படைத்து இருந்தால் நமக்கு இதுபோன்ற நிலை வருமா? இந்த ஆப்ரேஷன் மூலம் நான் இறந்துபோய்விட்டால் இனி நான் என் குடும்பத்தாரைப் பார்க்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார்கள். யாருக்கு உடம்பு சரியில்ல, யாரைப் பார்த்துக் கொள்ள வேண்டும்?' என்று கேட்டார். எங்கள் இருவருக்கும்தான் என்றோம். 'என்ன உடம்புக்கு?' என்றுகேட்டாள். நாளை எனக்கும் இன்று இவளுக்கும் ஆப்ரேஷன் செய்யப்போகிறார்கள். இருவரும் ஆப்ரேஷன் செய்து கொள்வதால் எங்களுக்குச் சாப்பாடு, மாத்திரைகள் வாங்கிக் கொடுக்க ஆள் தேவைப்பட்டது. அதனால் உங்கள அனுப்பி உள்ளனர் போல என்று கூறினோம். பதிலுக்கு 'ஓ.. சரி சரி! எனக்குத் தெரிந்து விட்டது என்ன ஆப்ரேஷன் என்று. ஒரு வாரம் முன்பு கூட உங்களைப் போல இரண்டு பேருக்கு நான்தான் சமையல் செய்து கொண்டு வந்து கொடுத்தேன். அதைப்போலவே உங்களுக்கும் மதிய உணவும் இரவு உணவும் கொண்டு வந்து கொடுக்கிறேன். காலையில் வந்து என்ன வேண்டுமோ அதை வாங்கிக் கொடுக்கிறேன். ஏழு நாளைக்கு இருக்கும் உங்களுக்கு நான் இதைச் செய்வதால் 500 ரூபாய் கொடுக்க வேண்டும்' என்று கூறினார். சரி என்று கூறி முதலிலேயே 500 ரூபாய் அவரிடம் கொடுத்து விட்டோம்.

காலை 11 மணிக்கு என்னுடைய குருபாய் சேலாவை ஆப்ரேஷன் தியேட்டருக்கு அழைத்துச் சென்றனர். போகும்போது குரு என்னைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறி முகம் வாடச் சென்றாள். எனக்கும் பயம் அதிகமானது. ஆப்ரேஷன் நல்லபடியா ஆகணும் அவளுக்கு. அப்படி ஆனாதான் நானும் ஆப்ரேஷன் செய்து கொள்வேன் என்று மனதில் நினைத்துக் கொண்டு அவளுடன் சென்றேன். ஆப்ரேஷன் தியேட்டர் உள்ளே என்னை அனுமதிக்க வில்லை. வெளியிலேயே இருக்கச் சொல்லிவிட்டு அவளை மட்டும் உள்ளே கூட்டிச் சென்று விட்டனர்.

வெளியில் உட்கார்ந்து இருக்கும் எனக்கு நெஞ்சு படபடனு துடிக் கின்றது. உள்ளே என்ன நடந்து கொண்டு இருக்கும், எப்படி நடந்து கொண்டிருக்கும் என்று நினைத்துக் கொள்கிறேன். இரண்டரை மணி நேரம் கழித்து என்னை ஆப்ரேஷன் தியேட்டருக்குள் அழைத்துச் சென்றனர். இரண்டு கால்களையும் அகட்டின நிலையில் உயிர் நிலையில் ஒரு நீளமான டியூப் வைத்து ரெத்தம் துடைத்த பஞ்சுகளையும், சுற்றி நின்ற டாக்டர், நர்ஸ், கத்தி, கத்திரிகளையும் பார்ததவுடனே எனக்குத் தலைசுத்தல் வந்து கண்ணு சொருகிப்போய் விழுந்துவிட்டேன். என்னைத் தட்டி எழுப்பி 'ஒன்னும் இல்லை. இங்க பார் உன்னுடன் வந்தவள் எப்படி இருக்கிறாள்' என்று டாக்டர் கூறினார். கண்விழித்து சுயநிலை திரும்பி டாக்டரைப் பார்த்தேன். 'பயப்படவேண்டாம். நாளை உனக்கு இப்படித்தான் செய்யப் போகின்றோம். உன்னால் பார்க்க முடியாது அல்லவா? அதனால் தான் பார்க்கக் கூப்பிட்டேன். பார், உன்னுடன் வந்தவளுக்கு ஆப்ரேஷன் முடிந்துவிட்டது' என்று கூற, என்னுடைய குருபாய் சேலாவும் 'அம்மா அம்மா, பயப்பட வேண்டாம். இங்க என்னப் பாருங்க. எனக்கு ஆப்ரேஷன் முடிஞ்சு நான் நல்லா இருக்கேன்' என்று அவளுடைய குரல் கேட்டு எழுந்து அவளைப் பார்த்தேன். என்னைப் பார்த்து சிரிக்கின்றாள். 'என்னம்மா இப்புடிப் பயப்படுறீங்க. ஆப்ரேஷன் செய்து கொண்ட நானே சிரிச்சுட்டு நல்லா இருக்கேன். நீங்க ஏன் இப்படி பயப்படுறீங்க? எனக்கு வலி எதுவும் தெரியவில்லை' என்று நன்றாக என்னுடன் பேசியதைக்

இரண்டு கால்களையும் அகட்டின நிலையில் உயிர் நிலையில் ஒரு நீளமான டியூப் வைத்து ரெத்தம் துடைத்த பஞ்சுகளையும், சுற்றி நின்ற டாக்டர், நர்ஸ், கத்தி, கத்திரிகளையும் பார்ததவுடனே எனக்குத் தலைசுத்தல் வந்து கண்ணு சொருகிப்போய் விழுந்துவிட்டேன். என்னைத் தட்டி எழுப்பி 'ஒன்னும் இல்லை. இங்க பார் உன்னுடன் வந்தவள் எப்படி இருக்கிறாள்' என்று டாக்டர் கூறினார். கண்விழித்து சுயநிலை திரும்பி டாக்டரைப் பார்த்தேன். 'பயப்படவேண்டாம். நாளை உனக்கு இப்படித்தான் செய்யப் போகின்றோம். உன்னால் பார்க்க முடியாது அல்லவா? அதனால்தான் பார்க்கக் கூப்பிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு வியப் படைந்தேன். என்னடா இது, ஆண் உறுப்பை பூராவும் எடுத்து விட்டார்கள். இவள் என்னடான்னா சிரிக்கிறாள், வலி இல்லே என்று கூறுகிறாள் எப்படி என்று நினைத்துக் கொண்டிருக்கையில், 'சரி சரி, நீங்க வெளியில இருங்க. இவங்களக் கொஞ்ச நேரம் கழிச்சு பெட்ல போடுவோம். அப்ப அவுங்களோட பேசலாம் என்று கூறி என்னை வெளியில் அனுப்பி விட்டுக் கதவைச் சாத்தினாள் நர்ஸ்.

இரும்புக் கட்டில் அதன்மேல் பிளாஸ்டிக் விரிக்கப்பட்டு அதன்மேல் என் குருபாய் சேலாவைக் கொண்டுவந்து போட்டார்கள். ஒரு அரை மணிநேரம் என்னுடன் சிரித்துப் பேசிய அவள் அதன் பிறகு எரிகிறது, வலிக்கிறது என்று கத்த ஆரம்பித்தாள். அவள் கத்துவதைப் பார்த்து எனக்குப் பயம் அதிகரித்துவிட்டது. இவ்வளவு நேரம் நன்றாக இருந்தவள் இப்போது கத்துகின்றாளே என்ன செய்வது எனத் தெரியாமல் அவளுக்கு சமாதானம் கூறினேன். கொஞ்சம் பொறுத்துக்கோ, சரியாப் போயிடும் என்று கூறினேன். 'அம்மா எனக்கு எரிச்சல் தாங்க முடியல. என் உயிர் போய்விடும் போல இருக்கிறது. வலி தெரியாமல் இருக்க ஏதாவது ஊசி போடச் சொல்லுங்க'னு கதறி அழுதா. நான் டாக்டர் அறைக்குச் சென்றேன். டாக்டர் போய்விட்டதாகக் கூறினர். நான் நர்ஸிடம் சொன்னேன். 'அது அப்படித்தான் கொஞ்ச நேரத்துக்கு வலிக்கும். பிறகு சரியாகிவிடும். ஊசி எதுவும் இப்போது போடக் கூடாது' என்று கூறிவிட்டார். திரும்பி அவளிடம் வந்தபோது கதறி அழுதுகொண்டு தான் இருந்தாள். எங்களைப் பார்க்க வந்த ஆயா பால் இல்லாத டீ போட்டு வந்து கொடுத்தார். அதை அவளுக்குக் குடிக்கக் கொடுத்தேன். அவளுடைய வலியையும் எரிச்சலையும் நான் அனுபவிப்பது போலிருந்தது. ஒரு இரண்டு மணி நேரம் கதறி அழுதவள் பிறகு மயக்க நிலையில் தூங்கிவிட்டாள். அன்று இரவெல்லாம் தூங்கிக் கொண்டு தான் இருந்தாள். எனக்கு மதியம் இரண்டு மணி அளவில் சேவிங் செய்து விட்டு எனிமா கொடுத்து நாளை காலை ஒன்பது மணிக்கு ஆப்ரேஷன், எதுவும் சாப்பிட வேண்டாம் என்று கூறினர். மதியம் எனிமா கொடுத்த பிறகு மாலை வரை பாத்ரூம் சென்று வந்தேன். பால் இல்லாத பிளாக் டீ குடித்தவள் வலிக்கிறது எரிகிறது என்று கத்தியவள் தூங்குகிறாள். நாளை நமக்கும் இப்படித்தான் எரியுமோ வலிக்குமோ என்று நினைத்துக்கொண்டு இரவு முழுவதும் இவள் தூங்குகிறாளா, உயிர் இருக்கிறதா இல்லையா என்று அவளையே பார்த்துக் கொண்டு தூங்காமலேயே இரவைக் கழித்தேன்.

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு என்னை ஆப்ரேஷன் தியேட்டருக்கு அழைத்துச் சென்றனர். போகும் முன் என் குருபாய் சேலாவிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்றால் அவள் இன்னும் தூங்கிக் கொண்டுதான் இருந்தாள். யாரிடமும் நான் சொல்லிக் கொள்ளவோ எனக்கு தைரியம் சொல்லவோ யாரும் இல்லை. ஆப்ரேஷன் தியேட்டரில் டாக்டர், ஒரு நர்ஸ், கம்பவுண்டர் மூன்று பேர் மட்டும்தான் இருந்தனர். முதலில் என் துணிகள் எல்லாவற்றையும் கழட்டச் சொல்லி உள் பாவாடையை மட்டும் மார்பகம் வரை தூக்கிக் கட்டிக் கொள்ளச் சொன்னார்கள். ஆப்ரேஷன் செய்வதற்கு வசதியாக நான் படுத்துக் கொள்ள டேபிள் ஒன்றின் மீது

இவ்வளவு நேரம் நன்றாக இருந்தவள் இப்போது கத்துகின்றாளே என்ன செய்வது எனத் தெரியாமல் அவளுக்கு சமாதானம் கூறினேன். கொஞ்சம் பொறுத்துக்கோ, சரியாப் போயிடும் என்று கூறினேன். 'அம்மா எனக்கு எரிச்சல் தாங்க முடியல. என் உயிர் போய்விடும் போல இருக்கிறது. வலி தெரியாமல் இருக்க ஏதாவது ஊசி போடச் சொல்லுங்க'னு கதறி அழுதா. நான் டாக்டர் அறைக்குச் சென்றேன். டாக்டர் போய்விட்டதாகக் கூறினர். நான் நர்ஸிடம் சொன்னேன். 'அது அப்படித்தான் கொஞ்ச நேரத்துக்கு வலிக்கும். பிறகு சரியாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கார வைத்து தலை காலைகளை முட்டும் அளவில் வளையச் சொன்னார்கள். அப்போது டாக்டர் 'உனக்கு முதுகு எலும்பில் ஒரு ஊசி போடப்போகிறோம். இந்த ஊசி போட்டுக் கொண்டால் ஆப்ரேஷன் செய்வது உனக்குத் தெரியாது' என்று கூறினார். முதுகுப்புறம் டாக்டருக்கு ஏதோ நரம்போ சதையோ கிடைக்காமல் அதிகநேரம் முதுகில் ஊசிபோட முடியாமல் ஏதோ செய்தார். எனக்குப் பயம் அதிகமாகிவிட்டது. ஒரு வேளை இந்த ஊசி சரியாகப் போடாவிட்டால் ஆப்ரேஷன் செய்யும்போது வலிக்குமே என்று சந்தேகம் வந்துவிட்டது. ஊசியைப் போட்டுவிட்டு சடனாக என்னை நீட்டி படுக்க வைத்து இரண்டு கால்களையும் அகட்டி வைத்தார் டாக்டர். என்னை ஒன்று இரண்டு என்று எண்ணச் சொன்னார். பத்து வரை எண்ணினேன். ஒரு சுத்தியலை எடுத்து என் காலில் தட்டி வலிக்கிறதா என்றுகேட்டார். இல்லை என்றேன். அதன் பிறகு 'உனக்கு ஆப்ரேஷன் செய்யப்போகிறோம்; உங்கள் மாத்தாவை நினைத்துக் கொள்' என்று டாக்டர் கூற, எனக்கு எங்கு கத்தியை வைக்கும்போது வலிக்குமோ என்ற அச்சத்தில் 'டாக்டர் வலிக்காதே' என்று கேட்க, 'வலிக்காதும்மா. உனக்கு வலி தெரியாமல் இருக்கத்தான் ஊசி போட்டுள்ளோம்' என்றார். 'ஊசி போட்டபின் எனக்கு மயக்கம் எதுவும் வரவில்லை. சுயநினைவுடன்தான் இருக்கிறேன். எல்லாரையும் பார்க்க முடிகின்றது.எல்லா சத்தமும் கேட்கின்றது' என்று டாக்டரிடம் சொன்னேன். 'இது மயக்க ஊசி இல்லை. உன்னுடைய இடுப்புக்குக் கீழே மரத்துப்போய்விடும். இடுப்புக்குமேல் சுயநினைவு இருக்கும்' என்றார் டாக்டர். 'பாத்துங்க டாக்டர், எனக்கு பயமா இருக்குது. வலிக்கப்போகுது' என்றேன். 'இப்போது வலிக்குதா' என்றார். இல்லை என்றேன். 'நாங்கள் ஆப்ரேஷன் செய்துகொண்டுதான் இருக்கிறோம்' என்றார். நர்ஸ் என் கண்களில் துணியைப்போட்டு மூடிப் பிடித்தவளாக மாத்தா மாத்தா என்று சொல்லு என்றார். நானும் மாத்தா மாத்தா என்று கூறிக்கொண்டிருந்தேன். ஒரு அரைமணி நேரம் கழித்து டாக்டர் என்னுடன் பேசிக்கொண்டே ஆப்ரேஷன் செய்தார். என்னால் பார்க்க முடியாவிட்டாலும் கத்தி, கத்திரிகளின் சத்தம் கேட்டது. 'என்னம்மா ரேவதி என்று பெயர் வைத்துக்கொண்டாயே, நீ பிராமின்னா' என்று கேட்டார். 'இல்லை டாக்டர். நாங்கள் கவுண்டர்' என்று கூறினேன். 'உனக்குப் பெண்களைப்போல கீழே ஒன்னுக்குப்போற மாதிரி வைக்கவா இல்லை மேலே வைக்கவா?' என்று கேட்டார். 'நான் பெண்ணாகத்தான் வாழவேண்டும் என்று நினைத்து ஆப்ரேஷனும் செய்துகொள்ள வந்துள்ளேன். எனக்குப் பெண்கள்போலத்தான் வேண்டும். எனக்குப் பெண்கள் எப்படி ஒன்னுக்குப்போவார்கள் என்று தெரியாது. ஆனால் நான் பெண்களைப் போலத்தான் வாழ வேண்டும் என்று விரும்புகிறேன்' என்றேன். இரண்டு மணிநேரம் ஆனபிறகு என் முதுகைத் தலையுடன் சற்று உயர்த்திப் பிடித்துக்கொண்டு ஒரு கிண்ணி யில் கிடந்த துண்டு சதைகளைக் காட்டி 'இதுதான் உன்னுடைய உறுப்பு; பார் வெட்டி எடுத்து உன்னைப் பெண்ணாக மாற்றிவிட்டோம்' என்று கூறினார்.

ஒரு குழந்தையைத் தூக்கிக்கொண்டு போவதைப்போல் என்னைக் கம்பவுண்டர் தூக்கிச் சென்று என் குருபாய் சேலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில் உள்ள படுக்கையில் என்னைப் படுக்க வைத்தார். ஆப்ரேஷன் செய்த இடத்தில் டியூப் மூலம் ஒன்னுக்குச் செல்ல கவர் ஒன்றும் 'பெட்'டில் கட்டி விட்டுச் சென்றுவிட்டனர். என்னுடைய குருபாய் சேலா இன்னும் தூங்கிக் கொண்டுதான் இருந்தாள். என் அருகில் யாரும் இல்லை. (ஒரு ஹாலில் ஒதுக்குப்புறமாக இருந்த இரண்டு படுக்கைகளில்தான் நாங்கள் இருந்தோம். மறைப்புக்குப் பலகையாலான தடுப்பு ஒன்று வைக்கப் பட்டிருந்தது. கட்டிலில் படுக்கை ஏதும் இல்லை. அப்போது எங்களைக் கையில்தான் தூக்கிவந்து கட்டிலில் போட்டனர். வசதிகள் எதுவும் இல்லை. இப்போது எப்படியோ தெரியவில்லை.)

நான் பெண்ணாக மாறிவிட்டேன் என்ற சந்தோஷம் ஒருபுறம் இருந்தாலும் கொஞ்ச நேரம் கழித்து வலிக்குமோ என்ற பயம் மற்றொரு புறம். இப்படி மனதில் படபடவெனத் துடித்தது இதயம். ஒரு மணி நேரம் கழித்து எரிச்சலும் வலியும் அதிகமாகத் தொடங்கின. ஆரம்பத்தில் எரிச்சலைத் தாக்குப்பிடித்தேன். வலி அதிகம் ஆக ஆக என்னால் தாக்குப் பிடிக்கமுடியவில்லை. 'ஐயோ என்னால் தாங்க முடியலையே! எரிகிறதே; வலி தெரியாமல் இருக்க ஏதாவது ஊசி போடுங்களேன்' என்று கத்த ஆரம்பித்தேன். 'யாரும் இல்லையா? டாக்டர், நர்ஸ் தயவுசெய்து இங்க வாங்க. எனக்கு வலி தாங்க முடியலை. உயிர் போய்விடும்போல இருக்கின்றதே. யாராவது வாங்க' என்று கதறிக் கதறி அழத் தொடங்கிவிட்டேன். நர்ஸ் நிதானமாக என் அருகில் வந்து, 'ஏன் இப்படிக் கத்தி கூச்சல் போடுகிறாய்? அக்கம் பக்கத்துல இருக்கிறவங்களுக்குத் தெரியணுமா உனக்கு என்ன ஆப்ரேஷன் என்று? சும்மா வலியைப் பொறுத்துகிட்டு இரு. அது அப்படித்தான் கொஞ்ச நேரம் வலிக்கும்' என்று என்னைத் திட்ட ஆரம்பித்தாள். பக்கத்து பெட்டில் தடுப்புப் பலகைக்கு மறுபுறம் இருந்து ஒரு வயதான அம்மா ஓடிவந்து இந்தப் பொண்ணுக்கு என்ன ஆச்சு? இப்படிக் கத்திக் கொண்டு இருக்கிறாள்' என்று நர்சிடம் கேட்டாள். பதிலுக்கு 'வயிற்று வலி. ஆப்ரேஷன் செய்துள்ளோம். அதுதான் வலிக்கிறது' என்றாள். நான் புரிந்துகொண்டேன். இதுபோல ஆப்ரேஷன் செய்வது யாருக்கும் தெரியாதுபோல என்று நினைத்துக் கொண்டேன். எங்களுக்குச் சாப்பாடு கொண்டுவந்து கொடுக்கும் ஆயா அப்போது வந்து பால் இல்லாத டீ போட்டுக் கொண்டு வந்து கொடுத்தார். இன்னும் இருக்கிறது. அவ்வப் போது குடி. இதோ, பக்கத்தில் வைக்கிறேன்' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். இந்த ஆப்ரேஷன் செய்து கொண்ட இஜடாக்கள் நாற்பது நாட்களுக்குப் பால், பழம் எதுவும் சாப்பிடக்கூடாது என்பது ஒரு சாத்திரம். நாற்பதாம் நாளன்று குலதெய்வம் மாத்தாவுக்குப் பூஜை செய்து பால்குடம் ஏந்தி ஆற்றிலோ குளத்திலோ ஊற்றிவந்த பிறகுதான் பால் பழம் வகைகளைச் சாப்பிட வேண்டும் என்று மூத்த இஜடாக்கள் சொல்லி அனுப்பியிருந்தனர். மேலும் பிளாக் டீ அதிகமாகக் குடிக்க வேண்டும். அப்போதுதான் ஒன்னுக்கு ஃபிரீயாக வரும் என்று கூறினார்கள். ஒன்னுக்குப் போகும் டியூப்பை மூன்றாவது நாள்தான் எடுக்க வேண்டும். அதுவரை எதுவும் சாப்பிட வேண்டாம் என்று கூறினர். என்னுடைய வலிக்கு ஆதரவாக அந்தப் பக்கத்து பெட்டில் அட்மிட் ஆகியிருந்த பெரியவரின் மனைவி யான அந்த அம்மாதான்

இந்த ஆப்ரேஷன் செய்துகொண்ட இஜடாக்கள் நாற்பது நாட்களுக்குப் பால், பழம் எதுவும் சாப்பிடக்கூடாது என்பது ஒரு சாத்திரம். நாற்பதாம் நாளன்று குலதெய்வம் மாத்தாவுக்குப் பூஜை செய்து பால்குடம் ஏந்தி ஆற்றிலோ குளத்திலோ ஊற்றிவந்த பிறகுதான் பால் பழம் வகைகளைச் சாப்பிட வேண்டும் என்று மூத்த இஜடாக்கள் சொல்லி அனுப்பியிருந்தனர். மேலும் பிளாக் டீ அதிகமாகக் குடிக்க வேண்டும். அப்போதுதான் ஒன்னுக்கு ஃபிரீயாக வரும் என்று கூறினார்கள். ஒன்னுக்குப் போகும் டியூப்பை மூன்றாவது நாள்தான் எடுக்க வேண்டும். அதுவரை எதுவும் சாப்பிட வேண்டாம் என்று கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதல் கூறி அவ்வப்போது டீயை எடுத்து எனக்குக் குடிக்க வைப்பார். புண்ணியவதி யாரோ எனக்குத் தெரியாது. ஆனால் இதுபோன்ற ஆறுதலும் சேவையும் என் குலதெய்வமான மாத்தாவைப் பார்ப்பது போல இருந்தது. ஒரு இரண்டு மணிநேரம் புழுவாகத் துடித்த நான் நெஞ்சு அடைப்பதுபோல உணர்வு. அப்படியே வாந்தி. குடித்த டீ எல்லாம் வெளியில் வந்துவிட்டது. அந்தச் சமயம் என் உயிர் என்னை விட்டுப் பிரிகிறது என்றுதான் நினைத்தேன். அந்த வாந்தி வந்த பிறகுதான் எரிச்சலும் நெஞ்சு படபடப்பும் குறைந்து உயிர் போய் உயிர் வந்தது போல இருந்தது. என்னுடைய வாந்தியை யார் துடைத்தார்கள் என்று தெரியாமல் மயக்கமாகத் தூங்கிவிட்டேன்.

மறுநாள் காலையும் தூங்கி அன்று மாலை ஏழு மணி அளவில்தான் கண்விழித்துப் பார்த்தேன். என்னோட குருபாய் சேலா கட்டிலில் உட்கார்ந்தவாறு சாப்பாடு கொண்டு வந்து கொடுக்கும் ஆயாவுடன் பேசிக்கொண்ட ரசம் சாப்பாடு சாப்பிட்டுக் கொண் டிருந்தாள்.கண் விழித்துப் பார்க்கையில் என்னைப் பார்த்து 'எப்படிம்மா இருக்கு?' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் என் சேலா.

ஆயாவும் எனக்கு டீ எடுத்துக்கொடுத்து 'குடிம்மா' என்றார். என் சேலா ஆயாவைப் பார்த்து 'எங்களுக்கு பிளாக் டீதான் கொடுக்க வேண்டும் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டாள். 'ஏன் சாமி, எம்புட்டு புள்ளைங்களுக்கு இந்த ஆஸ்பத்திரியில என்னோட கையால சோறு பொங்கிப்போட்டு இருக்கேன். இதுகூட தெரியாதா?' என்று சொன்னார்.

ஆப்ரேஷன் செய்த மூன்றாவது நாள் ஒன்னுக்குப் போகும் டியூபை எடுத்துவிட்டபிறகு பாத்ரூம்போய்தான் ஒன்னுக்குப் போக வேண்டும். அப்போது ஜாக்கட் புடவை கட்டிக்கொண்டுதான் போக வேண்டும். அப்போது நைட்டி கூட இல்லை. எங்களுக்கு நடக்க முடியாமல் காலை அகட்டி அகட்டிப் புடவை பாவாடை ஆப்ரேஷன் இடத்தில் படாமல் இரண்டு கைகளாலும் தூக்கிப் பிடித்தவாறுதான் போக வேண்டும். ஒன்னுக்கு ஃபிரியாக போகாவிட்டால் முக்கினால் போதும் வலி தாங்க முடியாது. சில சமயம் ரத்தம் கூட வந்துவிடும். அந்த நிலைமையை இப்போது நினைத்தாலும் உடம்பு நடுங்குகிறது. பாத்ரூம்கூட கட்டியாக சரியாக வராமல் கஷ்டப்படுவேன்.முக்கினால் போதும், நரம்புகள் இழுத்துப் பிடித்துக் கொண்டு தையல் பிரிந்துபோகும் அளவில் வலிக்கும். என்னுடைய சேலாவுக்கு தையல் பிரிக்கும்போது ஏழாவது நாள். எனக்கு அன்று ஆறாவது நாளே தையல் பிரித்தனர். காரணம் எங்களிடம் பணம் 500 ரூபாய்தான் இருந்தது. அதனால் மும்பைக்குப் போகலாம் என்று முடிவு செய்து, தையல் பிரித்த அன்றே இருவரும் ஊருக்குப் போகிறோம் என்று டாக்டரிடம் கூறினோம். தையல் பிரிக்கும்போது வலிக்குமா என்று டாக்டரிடம் கேட்டோம். இலேசாக வலிக்கும் என்றார். அதேபோல் முழு தையலும் பிரிக்காமல் கொஞ்சம் மட்டும் பிரித்துவிட்டு மீதி உள்ளது தானே கொட்டிவிடும் என்று டாக்டர் கூறினார். பிரிக்கும்போது கூட சுரீர் என்று வலி இருந்தது. பெண்ணாக மாறவேண்டுமானால்

ஆப்ரேஷன் செய்த மூன்றாவது நாள் ஒன்னுக்குப் போகும் டியூபை எடுத்துவிட்டபிறகு பாத்ரூம்போய்தான் ஒன்னுக்குப் போக வேண்டும். அப்போது ஜாக்கட் புடவை கட்டிக்கொண்டுதான் போக வேண்டும். அப்போது நைட்டி கூட இல்லை. எங்களுக்கு நடக்க முடியாமல் காலை அகட்டி அகட்டிப் புடவை பாவாடை ஆப்ரேஷன் இடத்தில் படாமல் இரண்டு கைகளாலும் தூக்கிப் பிடித்தவாறுதான் போக வேண்டும். ஒன்னுக்கு ஃபிரியாக போகாவிட்டால் முக்கினால் போதும் வலி தாங்க முடியாது. சில சமயம் ரத்தம் கூட வந்துவிடும். அந்த நிலைமையை இப்போது நினைத்தாலும் உடம்பு நடுங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையெல்லாம் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டு மாத்தா மாத்தா என்று கண்ணை இறுக்கி மூடிப் பல்லைக் கடித்துக் கொண்டேன்.

கையில் இருந்தது 500 ரூபாய். நாங்கள் ஊருக்குப் போகிறோம் என்றதும் கம்பவுண்டர், நர்ஸ், ஆஸ்பத்திரியில் வேலை செய்பவர்கள் எல்லாரும் தலை சொறிந்தவாறு வந்து நின்றனர். மற்ற நேரங்களில் கூப்பிட்டாலும் கத்தினாலும் வரமாட்டார்கள். ஆப்ரேஷன் செய்து கொள்ள வரும்போது முதன் முதலாக நடக்கும் கவனிப்பு ஆப்ரேஷன் ஆனபிறகு இல்லை. இப்போது மும்பை போகிறோம் என்றவுடன் நாங்கள் ஏதாவது பணம் தருவோம் என்று வந்து நின்று கொண்டார்கள். இருவரும் தலைக்கு 50 ரூபாய் கொடுத்துவிட்டு மீதியுள்ள 400 ரூபாயுடன் ஆஸ்பத்திரியில் இருந்து ஆட்டோ பிடித்து ரயில்வே ஸ்டேஷன் வந்தோம். திண்டுக்கல் ரயில்வே ஸ்டேஷனில் உள்ள ஆட்டோகாரரர்கள், அங்குள்ள ஜனங்கள் எங்கள் இருவரையும் பார்த்து ஏதோ சொல்லிச் சிரித்தார்கள். கிண்டல் செய்தார்கள். அவர்களிடம் சண்டை போட எங்களுக்குத் தெம்பு இல்லை. எங்களுடைய வலி, நடக்க முடியாத சூழ்நிலை, சரியான உணவு இல்லாமல் சத்து இல்லாத உடம்பு. என்ன செய்வது? ஒன்றுமட்டும் காதில் கேட்டது. எங்களுக்கு ஆப்ரேஷன் ஆகியுள்ளதை அறிந்துகொண்டு அதைப்பற்றிதான் ஒரு சிலர் கிண்டல் செய்கின்றனர் என்று புரிந்தது. அன்று மாலை வரவேண்டிய ரயில் லேட்டாகத்தான் வந்தது. கூட்டம் அதிகமாக இருந்ததால் எங்களால் ரயிலில் ஏற முடியவில்லை. கொஞ்ச நேரத்தில் ரயில் புறப்பட்டுப் போய்விட்டது. அதனால் திரும்பி அங்கிருந்து ஆட்டோ பிடித்து பஸ் ஸ்டாண்ட் வந்து சென்னை பஸ் ஏறினோம்.

❖❖❖

சென்னை பஸ்சில் கூட எங்களுக்கு முன்சீட் கிடைக்கவில்லை. பின்னால் கடைசி சீட்டில்தான் அமர்ந்தோம். நாங்கள் இரண்டு உள்பாவாடை கட்டிக்கொண்டு ஆப்ரேஷன் இடத்தில் பஞ்சு வைத்து அது கீழே விழாமல் இருக்க துணியால் கோவணம் கட்டி பத்திரமாகத் தான் சென்றோம். பஸ்சில் பீன்சீட் என்பதால் பஸ் தூக்கிப் போடும்போது ஆப்ரேஷன் செய்த இடத்தில் குத்தலும் கொடச்சலும் அதிகமாக இருந்தது. சில சமயங்களில் முன் சீட்டின் கம்பியைப் பிடித்துக்கொண்டு காலை பஸ் தரையில் ஊன்றிக் கொண்டு சீட்டில் படாமல் எங்களைத் தூக்கியவாறு வரவேண்டிய சூழ்நிலை ஆனது. கால் கைகள் வலித்து உட்கார்ந்தால் போதும், பஸ் தூக்கிப் போடும் போது ஆப்ரேஷன் செய்த இடத்தில் அடிபடும் போது பயங்கரமா வலிக்கும். வாய்க்குள்ளேயே மாத்தா மாத்தா என்று முணகிக்கொண்டு ஒரு வழியாக சென்னை வந்து சென்ட்ரல் ரயில் நிலையத்தை அடைந்தோம்.

காலை 9. 30 மணி இருக்கும். அப்போது மும்பை ரயில் மாலை நான்கு மணிக்குதான் என்றனர். அது வரை என்ன செய்வது என்று தெரியாமல் பயணிகள் தங்கும் அறையில் இருக்கலாம் என்றால் ரிசர்வேஷன் டிக்கட் இருப்பவர்கள் மட்டும்தான் அங்கு தங்க முடியும் என்று தெரிந்து கொண்டோம். அதனால் ஜனங்கள் நிறைய

பின்னால் கடைசி சீட்டில்தான் அமர்ந்தோம். நாங்கள் இரண்டு உள்பாவாடை கட்டிக்கொண்டு ஆப்ரேஷன் இடத்தில் பஞ்சு வைத்து அது கீழே விழாமல் இருக்க துணியால் கோவணம் கட்டி பத்திரமாகத் தான் சென்றோம். பஸ்சில் பீன்சீட் என்பதால் பஸ் தூக்கிப் போடும்போது ஆப்ரேஷன் செய்த இடத்தில் குத்தலும் கொடச்சலும் அதிகமாக இருந்தது. சில சமயங்களில் முன் சீட்டின் கம்பியைப் பிடித்துக்கொண்டு காலை பஸ் தரையில் ஊன்றிக் கொண்டு சீட்டில் படாமல் எங்களைத் தூக்கியவாறு வரவேண்டிய சூழ்நிலை ஆனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கார்ந்து கொண்டிருந்த பொது இடத்தில் சென்று நாங்களும் உட்கார்ந்து கொண்டோம். எங்களால் அதிக நேரம் உட்கார முடியவில்லை. படுக்கலாம் என்றால் அங்கு படுக்க முடியவில்லை. சுவர் ஓரம் கிடைத்தால் கூட கால் நீட்டி உட்காரலாம் என்று பார்த்தால் சுவர் பக்கம் பூராவும் கடைகள் ஆபீசுகள் தான் இருக்கின்றன. பெரிய ஹால். அதில் நடுப்புறம் உட்காந்து இருந்த எங்களைப் போன்றவர்கள் வருகின்றவர்கள் என எல்லோரும் எங்களை வித்தியாசமாகப் பார்த்த வண்ணம் சென்றனர். டீயோ டிபனோ வாங்கிக் கொடுக்கக் கூட யாரும் இல்லை. பஸ்சில் வந்த அலுப்பு எங்களால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாத நிலை. பற்றாக்குறைக்கு ஜனங்களின் பார்வை. இவற்றையெல்லாம் நினைக்கும்போது ஏன்தான் ஆப்ரேஷன் செய்துகொண்டோமோ என்று தோன்றியது. கடவுளே, எங்களுக்கு நீதான் துணை. எங்களை எப்படியாவது மும்பை கொண்டு சேர்த்து விடுனு சாமியை வேண்டிக் கொண்டு பசி தாங்க முடியாமல் என் குருபாய் சேலா மெதுவாக எழுந்து சென்று இட்லி வாங்கி வந்தாள். அதை இருவரும் சாப்பிட்டோம். சற்று நேரத்தில் எனக்கு பாத்ரூம் வந்தது. நானும் மெதுவாக எழுந்து காலை அகட்டி நடந்தால் கேவல மாகப் பார்ப்பார்களே, அதுவும் ஆப்ரேஷன் ஆகியுள்ளது தெரிந்து ரயிலில் போகவிடாவிட்டால் என்ன செய்வது என்ற பயத்தில் வலியைத் தாங்கி கொண்டு மனதை உறுதிப்படுத்திக் கொண்டு பெண்கள் பாத் ரூமுக்குள் சென்றேன். அங்கு இருந்த ஒரு பெண் போலீஸ் என்னைப் பார்த்து, 'நீ ஆப்ரேஷன் செய்துகொண்டு வந்திருப்பது தெரிகின்றது. ஏன் மத்த ஆம்புளைங்க மாதிரி ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு வேலை வெட்டிப் பார்த்துக்கொண்டு நல்ல ஆம்புளையா லட்சணமா இருக்கக் கூடாதா?' என்று கேட்டாள். என்னோட கஷ்டம் அவளுக்கு எங்க புரியப்போவுது. ஈசியா சொல்லிட்டாங்க. அவளுக்குப் புரிய வைக்க எனக்குத் தெம்பு இல்லை. புரிய வைக்கிற நிலைமையிலும் நான் இல்லை என்று நினைத்துக்கொண்டு மறுபேச்சு எதுவும் பேசாமல் பாத்ரூம் உள்ளே சென்று கதவை மூடிக் கொண்டேன். புடவை, பாவாடையைத் தூக்கிச் சுருட்டிக் கொண்டு கட்டி இருந்த பஞ்சை எடுத்துப் பார்த்தால் பஞ்சு பூராவும் ரத்தம் நிறைந்து உள்ளது. ஆப்ரேஷன் செய்த இடத்தில் தையல் போடப் பட்ட இடம் தசை விலகி ரத்த ஈரம் பட்டுக் கொண்டு இருந்தது. என்ன செய்யறது, சுடுதண்ணி இருந்தாலாவது சுத்தம் செய்து வேறு பஞ்சை வைத்துக் கட்டிக் கொள்ளலாம் என்று நினைத்தேன். சுடுதண்ணியும் இல்லை. அதனால் ரத்தம் உள்ள பஞ்சை எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு பாத்ரூம் சென்ற பிறகு ஆப்ரேஷன் செய்த இடத்தில் தண்ணீர் படாதவாறு கழுவிக் கொண்டு, நான் கொண்டு வந்திருந்த பஞ்சைக் கொஞ்சம் எடுத்து புண்மேல் துடைத்து போரிங் பவுடரைப் புண்மீது கொட்டி மீண்டும் புதிய பஞ்சை வைத்துப் பழையபடி கோமணமாகக் கட்டிக் கொண்டேன். இவை எல்லாம் செய்து முடிப்பதற்குள் தலை சுற்றலே வந்துவிட்டது.

குருபாய் சேலாவுக்கு என்னைப் போல் ரத்தம் கசியவில்லை என்று கூறினாள். மேலும் தையல் போட்ட சதைகள் கூட விழவில்லை. அவளுக்கு வலி மற்றும் உடல் தளர்ச்சி, மயக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித்தான் அவள் கூறினாள். ஒருவழியாக இருவரும் காலைக் கடன்களை முடித்துவிட்டு அந்தப் பெரிய ஹாலில் படுக்க முடியாமல் எவ்வளவு நேரம் உட்கார்ந்தே இருப்பது என்று இருவரும் மும்பை ரயில் வரும் பிளாட்பார்ம் சென்று அங்கு பெண்கள் பெட்டி எங்கு வந்து நிற்குமோ அங்கு சென்று ஓர் ஓரமாக எங்களின் கைகளையே தலைக்கு வைத்துக்கொண்டு படுத்துக் கொண்டோம். எங்களிடம் டிக்கட் வாங்க அவ்வளவு பணம் இல்லை. டிக்கட் இல்லாமல்தான் போகவேண்டும். கையில் இருந்த பணம் செலவாகிவிட்டது. யாராவது டிக்கட் கேட்டால் என்ன செய்வது? ஏன் நானி நமக்கு இன்னும் அதிகப் பணம் கொடுத்து அனுப்பி இருக்கக் கூடாது? டிக்கட் இல்லாமல் சீட்டில் கூட அமரமுடியாது. செக் செய்பவர் வந்து கேட்டால் சீட்டை விட்டு இறக்குவது இல்லாமல் ரயிலை விட்டே இறக்கிவிடுவார் என்ற பயம் இருந்தது. நேரம் ஆக ஆக பிளாட்பாரத்தில் கூட்டமும் அதிகம் ஆனது. நாங்கள் உஷாராக ரெடியாக இருந்தோம். ரயில் வந்ததும் எப்படியாவது சீட் பிடிக்கணும்னு காத்திருந்தோம். அந்தச் சமயத்துல மும்பைக்குப் போறதுக்காக நான்கு இஜடாக்கள் வந்தனர். அவர்கள் எங்களைப் போல் ஆப்ரேஷன் செய்து கொண்டு வந்தவர்கள் அல்ல. எப்போதோ ஆப்ரேஷன் செய்தவர்கள். அவர்கள் எங்களைப் பார்த்தவுடனே பொட்டைங்கடி என்று சொல்லிக் கொண்டு எங்களிடம் வந்து எங்களைப் பற்றி விசாரித்தனர். 'எந்த ஊருக்குப் போறீங்கடி, யாரு வீட்டுக்குப் போறிங்க, யாரு சேலா நீங்க?' என்று கேட்டனர். நிர்வாணம் ஆயிட்டு வந்திருக்கோம். மும்பை போகவேண்டும். அங்கு என் நானி குரு பெயரைச் சொல்லி அவர் வீட்டு சேலா நாத்திங்க நாங்கனு சொன்னோம். டிக்கட் எடுக்கக் கூட பணம் இல்லாததைச் சொன்னோம். எங்களுடைய கஷ்டங்களை அவர்களிடம் பரிமாறிக் கொண்ட பிறகு கொஞ்சம் பயம் போய் மனதிற்கு ஆறுதலாக இருந்தது. எங்கள் இருவருக்கும் டிக்கட் எடுக்காமலேயே அவர்களுடன் ரயில் வந்த பிறகு அந்த நான்கு இஜடாக்களின் உதவியுடன் சீட் பிடித்து உட்கார்ந்து கொண்டோம். அந்த நான்கு பேரும் சென்னையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மும்பையில் கடைகேட்டுக் கொண்டு கேவண்டி என்ற இடத்தில் வசிக்கின்றனர். இப்போது அவர்கள் ஊருக்கு வந்து விட்டுத் திரும்பி மும்பை செல்கின்றனர். எங்களுக்குச் சாப்பாடு கொடுத்து, அவர்களின் மடியில் படுக்க வைத்துக்கொண்டு மனதிற்கு ஆறுதலாகப் பேசிக்கொண்டு சென்றோம்.

ரயில் கொஞ்ச தூரம் சென்று கொண்டிருக்கையில் டிக்கட் செக்கிங் செய்பவர் வந்தார். அந்த நான்கு பேருக்கு மட்டும்தான் டிக்கட் இருந்தது. எங்களுக்கு இல்லை. அதனால் அந்த நான்குபேரும் அவரிடம், 'ஐயா நாங்க பொட்டைங்க. வயித்துப் பொழப்புக்கு மும்பை போகிறோம். கடைகடையாய்ப் பிச்சை எடுத்துதான் பிழைக்க வேண்டும். இவங்க இருவருக்கும் வயிற்றில் கட்டி இருந்து ஆப்ரேஷன் ஆகியுள்ளது. பெருந்தன்மையோடு எங்களுக்கு உதவி செய்யுங்கள்' என்று கேட்டனர். அதற்கு அவர், 'நான் உங்களை டிக்கட் இல்லாமல் விட்டாலும் ஆந்திராவில் விடமாட்டார்கள். என்ன செய்யப் போறீங்கனு' கேட்டு விட்டுச் சென்றுவிட்டார். மவராஜன் புள்ள குட்டியோட நல்லா இருக்கணும்னு எங்கள்ல ஒருத்தி அவரை வாழ்த்தினாள்.

ரயில் கொஞ்ச தூரம் சென்று கொண்டிருக்கையில் டிக்கட் செக்கிங் செய்பவர் வந்தார். அந்த நான்கு பேருக்கு மட்டும்தான் டிக்கட் இருந்தது. எங்களுக்கு இல்லை. அதனால் அந்த நான்குபேரும் அவரிடம், 'ஐயா நாங்க பொட்டைங்க. வயித்துப் பொழப்புக்கு மும்பை போகிறோம். கடைகடையாய்ப் பிச்சை எடுத்துதான் பிழைக்க வேண்டும். இவங்க இருவருக்கும் வயிற்றில் கட்டி இருந்து ஆப்ரேஷன் ஆகியுள்ளது. பெருந்தன்மையோடு எங்களுக்கு உதவி செய்யுங்கள்' என்று கேட்டனர்.

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொட்டைங்களுக்கு நிர்வாணம்னா மறு ஜென்மம் மாதிரி. நிர்வாணம் செஞ்சுகிட்டாதான் மரியாதை. நாம் முழு பெண்ணா வாழணுமுனா நிர்வாணம் பண்ணிகிட்ட பிறகுதான் அது நிஜம் ஆகுது. பொம்பளையா ஆகணும்னா அவ்வளவு ஈசியா? கஷ்டப் பட்டுதான் ஆகணும். நீங்க தாயம்மா நிர்வாணம் செய்துகொண் டிருந்தால் என்ன சொல்வீர்களோ? இந்த டாக்டர் நிர்வாணத்துக்கே உங்களுக்கு இவ்வளவு கஷ்டம்னா நான் என்னத்தச் சொல்ல? பயப்படவேண்டாம். எல்லாம் நல்லபடியா புண்ணுங்க ஆறனபிறகு நீங்க சந்தோஷமா இருப்பீங்க. இப்ப நாங்க உங்களோட வந்து சேந்துகிட்டதால உங்கள நாங்க கூட்டிக்கிட்டு உங்க நானி வீட்ல விட்டுட்டுதான் போவோம்' என்று கூறினார். கடவுள் புண்ணியத்துல எங்கள யாரும் ரயிலை விட்டு இறக்கி விடல. எப்படியோ எவ்வளவு வலி இருந்தாலும் இஜடாக்கள் நாலுபேரு எங்களுடன் இருந்தது வலி தெரியாம இருந்தது. எவ்வளவுதான் இருந்தாலும் யாருன்னுத் தெரியாட்டிகூட இஜடாங்கனு தெரிஞ்சா அவுங்களோட கஷ்ட நஷ்டம், உணர்வுகள், வலி எல்லாம் இஜடாக் களுக்கு மட்டும்தான் தெரியும். அறிமுகம் இல்லாத ஒரு இஜடாவுக்கு இன்னொரு இஜடாதான் உதவி செய்யறாங்க. எல்லா விதத்திலும் ஆறுதல்னு பார்த்தா அது இஜடாக்களுக்கு இஜடாக்கள் மட்டும்தான். ஒரு வகையான காக்கா கூட்டம் மாதிரி.

8

மும்பை தாதர் நிலையம், சென்னை சென்ட்ரல் நிலையம், ரயில் பயணம் இவற்றில் எல்லாம் நான் கண்ட காட்சிகள் என் மனதைப் பெரிதும் வேதனைக்கும் துக்கத்திற்கும் ஆளாக்கின. ஆண் பெண் முதற்கொண்டு என்னையும் என்னுடன் வந்தவர்களையும் பார்த்து சிரிப்பதும், கேலி செய்வதும், பயப்படுவதுமாக இருந்தனர். அன்றாட வாழ்க்கை வாழ்வதே இஜடாக்களுக்குப் பெரும் பாடாகத்தான் இருக்கும் போல தோன்றியது. இந்த உலகத்தில் ஆணாகவோ பெண்ணாகவோ இருப்பவர்கள் குடும்பத்துடன் இருக்கும்போதும் வெளியில் வரும் போதும் அவர்களைப் பார்ப்பவர்கள் இப்படியா கேலியும் கிண்டலும் செய்கிறார்கள்? கால் ஊனமான ஒருவரைப் பார்த்தால் கூட, கண் தெரியாத ஒருவரைப் பார்த்தால் கூட ஐயோ பாவம் என்று உதவி செய்கின்றனர்.குடும்பத்தில் உள்ளவர்களுக்கு சிறிது உடல் நிலை சரியில்லை என்றால் கூட குடும்பத்தில் உள்ளவர்களும் வெளியில் பார்ப்பவர்களும் எப்படி ஒத்துழைப்புக் கொடுக்கின்றனர். இப்போது எங்கள் நிலை மனிதனைப் பார்ப்பதுபோல் கூட இல்லை. தாதர் ரயில் நிலையத்தில் இறங்கி டாக்சி பிடிக்க பல படிக்கட்டுகள் ஏறி பாலத்தைக் கடந்தபோது எனக்கு ஆப்ரேஷன் செய்த வலியை விட எங்களைப் பொதுமக்கள் பார்க்கும் விதம் பெரும் வலியாக இருந்தது. இந்த வலிகள் நானே தேடிக்கொண்டதா என்ற கேள்வியும் என்னுள் எழுந்தது. நான் நொண்டியோ, முடவனோ, குருடனோ எப்படியிருந்தாலும் ஒரு ஆணாகவோ பெண்ணாகவோ இருந்திருக்கக் கூடாதா? என்னை ஏன் இந்தக் கடவுள் இப்படிப்பட்ட உணர்வுகளைக் கொடுத்து இந்த மக்கள் முன் சித்திரவதை செய்ய வேண்டும்? ஆப்ரேஷன் செய்து கொண்ட நாங்கள் இருவரும் சென்னையில் இஜடாக்களைச் சந்திக்கா

இந்த உலகத்தில் ஆணாகவோ பெண்ணாகவோ இருப்பவர்கள் குடும்பத்துடன் இருக்கும்போதும் வெளியில் வரும் போதும் அவர்களைப் பார்ப்பவர்கள் இப்படியா கேலியும் கிண்டலும் செய்கிறார்கள்? கால் ஊனமான ஒருவரைப் பார்த்தால் கூட, கண் தெரியாத ஒருவரைப் பார்த்தால் கூட ஐயோ பாவம் என்று உதவி செய்கின்றனர்குடும்பத்தில் உள்ளவர்களுக்கு சிறிது உடல் நிலை சரியில்லை என்றால் கூட குடும்பத்தில் உள்ளவர்களும் வெளியில் பார்ப்பவர்களும் எப்படி ஒத்துழைப்புக் கொடுக்கின்றனர். இப்போது எங்கள் நிலை மனிதனைப் பார்ப்பதுபோல் கூட இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டால் எங்களுடன் அவர்கள் வராமல் இருந்திருந்தால் நாங்கள் உயிரோடு வந்துசேர்ந்திருப்போமா என்ற நம்பிக்கை எங்களிடம் இல்லை.

காட்குப்பரில் நானி வீட்டுக்குச் சென்றவுடன் எங்கள் இருவருக்கும் தேங்காயில் சூடம் ஏற்றிச் சுத்தி உடைத்துவிட்டு ஆரத்தி எடுத்து உள்ளே வரச் சொன்னார்கள். 'வாங்கடி பொம்பளைங்களா' எனறு கூறியவாறு என் நானி வந்தார். என் காலா குரு எங்களுக்காக குளிக்க சுடு தண்ணீர் போட்டுக்கொண்டிருந்தார். வீட்டில் உள்ள அனைவரும் நலம் விசாரித்தனர். எங்களை வீடு வரை கூட்டிவந்து விட்ட இஜடாக்களுக்கும் நல்ல மரியாதை செய்து அவர்கள் வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். நானியிடமும் காலா குருவிடமும் ஆஸ்பத்திரி முதல் கொண்டு இங்கு வந்து சேர்ந்ததுவரை எல்லாவற்றையும் கூறினோம். 'சும்மாவா பேட்டா பொம்பளையாகணும்னா' என்ற பதில் வந்தது. 'இதுக்கே இப்படினா தாயம்மா நிர்வாணம் போய் இருந்தா இன்னும் என்ன அவதி பட்டிருக்கணும் தெரியுமா?' என்றும் கூறினார். காலா குரு எங்களை ஒவ்வொருவராக உடம்புடன் குளிக்க வைத்து எங்கள் ஆப்ரேஷன் இடத்தில் சோப்பு போட்டுக் கழுவித் துடைத்து போரிங் பவுடர் போட்டுவிட்டு நன்றாக ஆப்ரேஷன் செய்து இருக்கின்றனர் என்று கூறினார்.

தாயம்மா நிர்வாணம், டாக்டர் நிர்வாணம் எதுவாக இருந்தாலும் சில விஷயங்களைக் கடைப்பிடிக்கவேண்டும். சில உணவுகளைச் சாப்பிடக் கூடாது. நிர்வாணம் செய்துகொண்ட நாள் முதல் நாற்பது நாட்களுக்கு இவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆப்ரேஷன் செய்த இடத்தை இரண்டு கால்களாலும் இடுக்கிக் கொண்டோ, இரண்டு கால்களையும் சேத்து வைத்தோ படுக்கக் கூடாது. காலை அகட்டி வைத்துதான் தூங்கவேண்டும். காரணம் ஒன்னுக்கு வரும் துவாரம் புண்ணாக இருப்பதால் ஒட்டி மூடிக்கொண்டுவிடும். மேலும் துவாரம் புண்ணாக இருப்பதால் நன்றாக ஒன்னுக்குப் போக பால் இல்லாத டீ அடிக்கடி குடிக்க வேண்டும். முகத்தைக் கண்ணாடியில் பார்க்கக் கூடாது. ஆண்களைப் பார்க்கக் கூடாது. தலையில் சீப்பு போட்டு சீவக் கூடாது. பெரிய இஜடாக்களுக்கு பாவ்படுத்திச் சொல்லக் கூடாது. மேலும் உணவு வகையில் எந்த ஒரு பழங்களையும் சாப்பிடக்கூடாது. பால் குடிக்கக் கூடாது. அதிகமாக பாவற்காய், சப்பாத்தி சாப்பிடவேண்டும். ஆட்டுக்கால் சூப், தலைக்கறி இப்படிச் சத்தான உணவைச் சமைத்துக் கொடுப்பார்கள். எங்களால் சப்பாத்தியும் பாகற்காயும் சாப்பிடவே முடியாது. நானி நாங்கள் சாப்பிடும் வரை குச்சியை வைத்துக்கொண்டு மிரட்டி மிரட்டி சாப்பிட வைப்பார்.

பனிரெண்டாம் நாள், இருபதாம் நாள் தலைக்குத் தண்ணீர் ஊற்ற அக்கம் பக்கம் உள்ள இஜடாக்களை அழைப்பார்கள். மேலும் வீட்டில் உள்ள பெரியவங்களும் எங்களுக்குச் சமமாக இருப்பவர் களும் கூட உடம்பு முழுக்க மஞ்சள் பூசி, ஆரத்தி எடுத்துச் சர்க்கரையை வாயில் போட்டுக் காசு சுத்திப்போட்டு தண்ணீர் ஊற்றி விடுவார்கள். எங்களைப் பார்க்க வருபவர்களும் கோதுமை, சர்க்கரை, நெய், டீத்தூள் என வாங்கி வருவதும் இஜடாக்களின்

பனிரெண்டாம் நாள், இருபதாம் நாள் தலைக்குத் தண்ணீர் ஊற்ற அக்கம் பக்கம் உள்ள இஜடாக்களை அழைப்பார்கள். மேலும் வீட்டில் உள்ள பெரியவங்களும் எங்களுக்குச் சமமாக இருப்பவர்களும் கூட உடம்பு முழுக்க மஞ்சள் பூசி, ஆரத்தி எடுத்துச் சர்க்கரையை வாயில் போட்டுக் காசு சுத்திப்போட்டு தண்ணீர் ஊற்றி விடுவார்கள். எங்களைப் பார்க்க வருபவர்களும் கோதுமை, சர்க்கரை, நெய், டீத்தூள் என வாங்கி வருவதும் இஜடாக்களின் வழக்கமாக இருக்கும். பால் இல்லாத டீயில் நெய் போட்டுக் குடித்தால் உடம்பு சத்தாகவும் தெம்பாகவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமாக இருக்கும். பால் இல்லாத டீயில் நெய் போட்டுக் குடித்தால் உடம்பு சத்தாகவும் தெம்பாகவும் இருக்கும். எங்களுக்கு இருபது நாள் கழித்து தண்ணீர் ஊற்றும்போது புண் ஆறி ஒரு சிறிய பொட்டுபோலதான் புண் காயம் இருந்தது.

சுடுதண்ணீரில் கழுவும் முன் நிர்வாணம் செய்துகொண்ட இடத்தில் மருந்து ஊற்றி அந்த மருந்து பொங்கிக் கொண்டு அழுக்குகளை எடுத்துக் கொண்டு வந்தபிறகு பஞ்சால் துடைத்துத் தண்ணீர் ஊற்றி சோப்புப் போட்டுக் கழுவிவிட்டுக் காட்டன் துணியால் அழுத்தி ஈரம் இல்லாமல் துடைத்து போரிங் பவுடர் போட்டுவிடுவார்கள். தினமும் பக்கத்தில் உள்ள டாக்டரிடம் பெனிசிலின் ஊசியும் 15 நாட்களுக்குப் போட்டு விட்டனர். என்னுடைய காலாகுருதான் எங்கள் இருவருக்கும் இது போன்ற சேவைகளைச் செய்வார். அவர் எங்கிருந்தாலும் 100 வருடம் நன்றாக இருக்கவேண்டும். எங்களை சிறியவர் என்று பாராமல் ரத்தக் கறை படிந்த துணிகளையும் துவைத்துப் போடுவார்.

புண் நன்றாக ஆறியபிறகு எங்களையும் வீட்டுக்குள்ளேயே வேலை செய்யச் சொன்னார்கள். நாற்பதாம் நாள் கிட்ட வரவர எங்கள் முகங்களும் கை கால்களும் மெதுவாகப் பெண்களைப் போல் ஆகத் தொடங்கின. நாற்பதாவது நாள் எங்களுக்கு ஹல்திமேந்தி (மருதாணி விழா)வைத்து மாத்தாவுக்குப் பூஜை போட்டு எங்களுக்கு சடங்கு நடத்தப்படும். அதன் பிறகு நாங்கள் எல்லோரையும் போல வெளியில் செல்லலாம். அதுவரை முகத்தைக் கூட கண்ணாடியில் பார்க்க முடியாமல், வெளியில் செல்ல முடியாமல் வீட்டுக்குள்ளே அடைபட்டுக் கிடந்து நாற்பது நாள் எப்போது முடியும் என்று நாட்களை எண்ணிக் கொண்டிருந்தோம். வயசுக்கு வந்த பெண்கள் எப்படி வீடுகளில் இருப்பார்களோ, அவர்களுக்கு எப்படிச் சடங்குகள் நடத்துவார்களோ அதைப்போல இஜடா சமுதயாத்திலும் நிர்வாணம் செய்து கொண்டவர்களுக்கும் தீட்டு கழிக்க நாற்பதாவது நாள் சடங்கு செய்வது வழக்கம்.

நாற்பதாவது நாள். என்னுடைய நானியின் வீடு பாண்டுப்பில் என் குருபாய் இருந்துகொண்டு கவனித்து வந்தாள். அது பெண்களையும் இஜடாக்களையும் கொண்டு பாலியல் தொழில் செய்து வரும் விடுதி. என் நானிக்கு மட்டும் அல்லாமல் இன்னும் எத்தனையோ இஜடாக் களின் பாலியல் தொழில் செய்யும் விடுதி அங்கு உள்ளது. அரசு அங்கீகாரம் வழங்கப்பட்டது எனக் கூறப் படுகிறது. இருக்கலாம். இல்லையென்றால் வெளிப்படையாகப் பாலியல் தொழில் செய்ய முடியுமா? ஒரு ஐந்து ஏக்கர் சுற்றளவு கொண்ட இடத்தில் பல பேரால் நடத்தப்பட்டு வந்தது. அங்குதான் எங்கள் இருவருக்கும் சடங்கு செய்ய ஏற்பாடு செய்திருந்தனர்.

சமையல் தடபுடலாகத் தயாராகிக் கொண்டிருந்தது. வண்ண வண்ண புடவை அணிந்துகொண்டு மூத்தவர் முதல் சிறியவர் வரை இஜடாக்களும் பாலியல் தொழில் செய்யும் பெண்களும் எங்கள் சடங்கில் கலந்து கொள்ள வந்திருந்தனர். எங்களை ஒரு தனி அறையில் உட்கார வைத்து இருந்தனர். வெளியில் என்ன நடக்கிறது என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால் நிறைய பேர் ஆடிப்பாடிக் கொண்டு சந்தோஷமாக இருப்பது தெரிந்தது. எங்களைப் பார்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலபேர் வந்தனர். 'யாருக்கடி சடங்கு? எங்கடி பொம்பளைங்க?' என்று நக்கலாகவும் கிண்டல் செய்து கொண்டும் எங்களைப் பார்க்க வந்தனர். வந்தவர்கள் எல்லோரும் சாப்பிட்டுவிட்டு எங்களுக்கும் சாப்பாடு கொடுத்துவிட்டனர். இரவு சுமார் இரண்டு மணி இருக்கும். எங்கள் இருவரையும் பாவாடை மட்டும் மார்புக்கு மேல் தூக்கிக் கட்டிக் கொண்டு உட்கார வைத்து வந்தவர்கள் எல்லோரும் மருதாணி, மஞ்சள் பூசி விட்டு ஒருபுறமும், குலத் தெய்வமான மாத்தாவுக்கு அலங்கார வேலைகள் மற்றொரு புறமும் சிறப்பாக நடந்துகொண்டிருந்தன.

நிர்வாணம் செய்துகொண்டவர்களின் குருதான் ஜோக் கொடுக்க வேண்டும். ஜோக் என்பது பச்சைக் கலரில் புடவை, ஜாக்கட், பாவாடை மேலும் மூக்குத்தி, கால் கொலுசு, மெட்டி ஆகியவைதாம் நிர்வாணம் செய்து கொண்டவர்களுக்கு நாற்பதாவது நாளில் குரு கொடுக்கும் ஜோக். இந்த ஜோக் அணிந்து கொண்டு மாத்தா முன் வைத்துள்ள பால் குடத்தைத் தலையில் சுமந்து கொண்டு பக்கத்தில் உள்ள ஆற்றிலோ, குளத்திலோ, கடலிலோ இப்படி தண்ணீர் இருக்கும் இடம் சென்று அந்தப் பாலை ஊற்றிவிட்டு அங்கிருந்து தலையில் தண்ணீருடன் குடத்தைச் சுமந்து வந்து மாத்தா படத்தைப் பார்க்க வேண்டும். அதுவரை முகத்தை மூடிக் கொண்டு கூட்டிச் செல்வார்கள்.

எங்கள் இருவருக்கும் இஜடா தோழிகள் குளித்த பிறகு தலை வாரி பூ வைத்து குரு கொடுத்த ஜோக்கை அணிய வைத்து முந்தானையால் முக்காடு போட்டு மாத்தா போட்டோ முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள். சாம்பிராணி வாசம், கற்பூர வாசம் மணந்தது. அதனுடன் மாத்தாவுக்குப் பாட்டு பாடி தேங்காய் உடைத்து பூஜைகள் செய்தனர். ஜெய் ஜெய் சந்தோஷி மாத்தா ஜெய் ஜெய் என்ற பாட்டை இஜடாக்கள் அனைவரும் பாடி பூஜைகள் செய்து எங்கள் இருவருக்கும் கழுத்தில் மாலை அணிவித்து மடியில் தேங்காய் வெற்றிலை பாக்கு வைத்துக் கட்டிவிட்டு மாத்தா எங்கள் மீது இறங்குவதற்கு மாத்தா மாத்தா என்று சொல்லச் சொன்னார்கள். அந்தச் சாம்பிராணி வாசம், இஜடாக்களின் கைதட்டல், மாத்தா மாத்தா என்று அழைக்கும் சத்தம் அதிகாலை நான்கு மணி இருக்கும் என் உடம்பைப் புல்லரிக்க வைத்து, தலை யையும் உடம்பையும் ஆட்ட வைத்தது.

அந்த நேரத்துக்காகக் காத்திருந்த இஜடாக்கள் மாத்தா மாத்தா என்று இன்னும் ஜோராக சத்தம் போட்டுக் கொண்டே என் தலைமீது பால்குடத்தைத் தூக்கி வைத்துப் பின்பக்கமாகத் துணைக்கு இரண்டு-பேர் பால்குடத்தைப் பிடித்துக் கொண்டனர். அதேபோல் என்னுடன் நிர்வாணம் செய்துகொண்ட என் குருபாய் சேலாவுக்கும் பால் குடத்தைத் தூக்கிவைத்து இருவரையும் பக்கத்தில் உள்ள கிணற்றுக்கு அழைத்துச் சென்று கிணற்றைப் பார்க்காமல் தலையில் இருந்த படியே குடத்தைப் பிடித்துக்கொண்டு அந்தப் பாலை கிணற்றில் கொட்டச் செய்தனர். பிறகு கிணற்றில் உள்ள நீரை இறைத்துக் குடத்தில் ஊற்றி இன்னும் இரண்டு முறை தண்ணீரைக் கிணற்றில் ஊற்ற வைத்து பிறகு குடம் நிறைய தண்ணீர் சுமந்தபடி மாத்தா போட்டோ முன் இறக்கி வைத்துவிட்டு எங்கள் முகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைத்திருந்த துணியை விலக்கி மாத்தா போட்டோவில் அந்த மாத்தா முகத்தைப் பார்த்து 'என்னை எடுத்துக்கிட்டு உன்னைக் கொடு' என்று சொல்லச் சொன்னார்கள். சடங்கு நடந்து முதன் முதலில் மாத்தா போட்டோவைப் பார்த்தபோது ஜெகஜோதியாக இருந்தது. மாத்தாவின் முகம் தகதகவென மின்னியது. பார்க்கும் எனக்கு அம்மா மாத்தா என் உருவத்தை எடுத்துக் கொண்டு உன் உருவத்தைக் கொடு என்று கூறும்போது என கண்களில் கண்ணீர் வடிய அந்த மாத்தாவையே பார்த்துக் கொண்டிருந்தேன். அதன் பிறகு தோப்புக்கரணம் போட்டு என் முகத்தைக் கண்ணாடியில் பார்க்கச் சொல்லி கண்ணாடியைக் காட்டினர். அந்தக் கண்ணாடியில் என் முகமும் மாத்தா முகமும் சேர்ந்து தெரியும் வகையில் காட்டினார்கள். அந்த ஜோக்கும் மாத்தா அலங்காரத்திற்கும் என் முகத்தை நானே அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. நாற்பது நாள் முகத்தைப் பார்க்காமல் இருந்தது நிர்வாணம் ஆனபிறகு என் முகத்தில் மாற்றம் உள்ளது எனக்குத் தெரிந்தது. இப்போதுதான் பூத்த பூபோல என் முகம் எனக்குத் தெரிந்தது. அந்த ஆண் உருவம் மாறி முழு பெண்ணுக் குண்டான உருவம் எனக்குத் தெரிந்தது. மனதில் பெரும் மகிழ்ச்சி எனக்கு. 'சரி சரி இஜடாக்களை விருப்பப்பட்டதை எடுத்துச் சாப்பிடச் சொல்லுங்க' என்று ஒருவர் கூற எங்கள் இருவரையும் விருப்பப்பட்ட பொருள் ஏதாவது முதன் முதலில் எடுத்துச் சாப்பிடுங்கள் என்று கூறினர். மாத்தாவுக்குப் படைக்கப்பட்ட ஒன்பது பழவகைகள், போண்டா, பஜ்ஜி, இனிப்பு, தேங்காய் உடைக்கப்பட்டு பூஜைகள் நடந்து முடிக்கப் பட்ட நிலையில் மாத்தா போட்டோவின் இருபுறமும் ரவையால் செய்யப்பட்ட கேசரி இருந்தது. அதன் மீது ஓம் என்று எழுதப்பட்டு இருந்தது. நாங்கள் முழித்தோம் எதை முதலில் எடுத்துச் சாபிடுவதென்று. நாங்கள் எதை முதலில் எடுப்போம் என்று ஆவலுடன் காத்திருக்கும் இஜடாக்கள். எதை முதலில் எடுப்பது என்று நான் யோசனை செய்து கொண்டு அந்த ரவையில் செய்த கேசரியை சிறிது புட்டு வாயில் போட்டுக்கொண்டேன். 'நல்லது எடுத்திருக்கா சீசா சீசா' என்று இஜடாக்கள் ஆரவாரம் செய்தார்கள். என்னுடன் இருந்தவளும் ஆப்பிள் பழம் எடுக்க அவளுக்கும் நல்லது சீசா சீசா என்று ஆரவாரம் செய்துகொண்டு அவரவர் கை வைத்து தேவையானதைத் தேடித் தேடி எடுத்துச் சாப்பிட்டனர்.

நாங்க எதை எடுத்து முதலில் சாப்பிடுகிறோமோ அதற்கேற்ப நம் வாழ்க்கை எப்படி என்று தெரிந்துவிடும் என்பது இஜடாக்களின் நம்பிக்கை. இனிப்பு, பழங்கள் எடுத்தால் இனிப்பான வாழ்க்கை அமையும். ஆனால் முதலில் எதைச் சாப்பிட வேண்டும் என்பதைச் சொல்லித் தரமாட்டார்கள். எனக்கும் தெரியாது. இதற்கு முன் யாருக்காவது சடங்கு இதுபோல் நடந்து இருந்து நான் சென்றிருந்தால் எனக்கும் தெரிந்திருக்கும். எனக்கு அதுபோல வாய்ப்பு கிடைக்கவில்லை. முதன் முதலில் என் சடங்கைதான் எப்படிச் செய்கிறார்கள் என்று பார்க்கிறேன்.

சடங்கு முடிந்து எல்லோருக்கும் பாவ்படுத்திச் சொல்லச் சொன்னார்கள். நாங்களும் பெரியவர்களின் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினோம். எங்களை ஆசீர்வாதம் செய்தவர்கள் சிலர் கூறும்போது 'நல்லா இரு பேட்டா. குருவோட பெயர் எடுக்கணும்,

நாங்க எதை எடுத்து முதலில் சாப்பிடுகிறோமோ அதற்கேற்ப நம் வாழ்க்கை எப்படி என்று தெரிந்துவிடும் என்பது இஜடாக்களின் நம்பிக்கை. இனிப்பு, பழங்கள் எடுத்தால் இனிப்பான வாழ்க்கை அமையும். ஆனால் முதலில் எதைச் சாப்பிட வேண்டும் என்பதைச் சொல்லித் தரமாட்டார்கள். எனக்கும் தெரியாது. இதற்கு முன் யாருக்காவது சடங்கு இதுபோல் நடந்து இருந்து நான் சென்றிருந்தால் எனக்கும் தெரிந்திருக்கும். எனக்கு அதுபோல வாய்ப்பு கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிப்போய் வேற வீட்ல சேலா ஆயிடப்போற, குருவோட பேச்சக் கேட்டு கஷ்டமோ நஷ்டமோ அனுசரித்து நல்ல பெயர் எடுக்கணும். புருஷன் கிருஷன் வச்சுகிட்டு வாழ்க்கையை வீண்பண்ணிக்காதே, குருவோட பரிவாரு நாளை உன்னோட பரிவாரு, நல்லா இருக்கணும் அதுபோல நடந்துக்கோ, நிர்வாணம் ஆயிட்டோம், பொம்பளையா ஆயிட்டோம்னு சண்ட சாடி வந்தா துணியைத் தூக்கிக் காட்டாதே பேட்டா, நிர்வாணம் ஆயிட்டே இனி இஜடா சமுதாயக் கலாச்சாரத்தை பயபக்தியோட கடைப்பிடிச்சு நடந்துக்கோ, பொம்பளையா ஆயிட்டே, பொம்பளைக் கணக்கா நடந்துக்கோ, முடிய வெட்டறது, பேண்ட் சர்ட் போடறது, சொல்லிக்காம ஊருக்கு ஓடிப்போறது இதெல்லாம் இருக்கக் கூடாது- இப்படி ஒவ்வொருவரும் புத்திமதிகளைக் கூறினர். மருதாணி விழா முடிஞ்சு அங்கு இருக்கின்ற அனைவருக்கும் பாவ்படுத்தி, நன்றி கூறிவிட்டு நானும் அவளும் என் குருவோடு டாக்சி பிடித்து அந்த மருதாணி விழா ஜோக்கோடு காட்குப்பர் வீட்டுக்கு நானியைப் பார்த்து பாவ்படுத்திச் சொல்ல வந்தோம்.

பான்டுப்பில் உள்ள பாலியல் தொழில் செய்யும் பெண்களில் மூத்தவர்கள் எங்களைப் பிஞ்சு என்று கூப்பிடுவார்கள். பிஞ்சு என்றால் இளையவள், சிறியவள் என்று பொருள். நாங்களும் பதிலுக்கு அவர் களைப் பாவ்படுத்தி என்றுகூறுவோம். சிறிய பெண்கள் சிலர் அம்மா என்று அழைப்பார்கள். இவர்களும் இஜடா கலாச்சார முறையைக் கடைப்பிடித்து நடக்கின்றனர் என்று அப்போதுதான் தெரிந்தது. என் நானி வீட்டிலேயே கடைகேட்கச் செல்வதால் இதுபோன்ற பல விஷயங்கள் எனக்குத் தெரியாம லேயே இருந்தது. மேலும் இஜடாக் களில் பாலியல் தொழில் செய்யும் விடுதிகள் பான்டுப், சோனாப்பூர், பயளப்பள்ளி, காமாட்டிபுரம் இப்படிப் பல இடங்களில் உள்ளன. எல்லா இஜடாக்களுக்கும் பாலியல் விடுதி இல்லை. ஒரு சிலருக்கு மட்டும்தான். என்னுடைய நானி வீட்டில் சடங்கு செய்தால் வசதியாக இருக்காது.மேலும் அங்கு நிறைய பேர் இருக்கின்றனர். வசதியாக இடம் இருக்கின்றது என்பதால் பாடுப்பில் சடங்கு நடத்தினர். என் நானி சடங்கில் கலந்துகொள்ளவில்லை. இந்தச் சடங்கு நாளில் பான்டுப்பில் பல விஷயங்கள் தெரிந்துகொண்டேன்.

காட்குப்பர் வீட்டிற்கு வந்தவுடன் வாங்கடி பொம்பளைங்களா என்று என் நானி எங்களைக் கூப்பிட நாங்களும் ஓடிப்போய் நானி காலில் விழுந்து 'பாவ்படுத்தி நானி' என்றேன். அவள் பாவ்படுத்தி தாதி என்றாள். ஜிய்யோ பேட்டா, நல்லா இருங்க என்று நானி வாழ்த்தினார். அதன் பிறகு நானி,'பேட்டா, நீங்க இப்ப முன்னமாதிரி இல்ல. நிர்வாணம் ஆயிட்டீங்க. அதனால நம்மகிட்டதான் குஞ்சு கொட்ட இல்லையேனு பொட்டைங்க சண்டையில, கடைகேட்கும்போது ரோட்டுல, கடக்காரங்க காசு கொடுக்காட்டி துணி தூக்கிக் காட்டக் கூடாது. கர்வம் பிடிக்கக் கூடாது. நாம் பொம்பளையா வாழணும்னுதான் நிர்வாணம் பண்ணிக்கிறோம். அத வெளியில காட்டி அசிங்கப்படுறதுக்கு இல்லே. அதனால பாத்து நடந்துக்குங்க். இந்த குரு கொடுத்த ஜோக்கு பச்சகலர் புடவை பாவாடை ஜாக்கட் இனிமேல போட வேண்டாம். இன்னிக்கு ஒரு நாளைக்கு போட்டிருந்துட்டு இதக்

பான்டுப்பில் உள்ள பாலியல் தொழில் செய்யும் பெண்களில் மூத்தவர்கள் எங்களைப் பிஞ்சு என்று கூப்பிடுவார்கள். பிஞ்சு என்றால் இளையவள், சிறியவள் என்று பொருள். நாங்களும் பதிலுக்கு அவர் களைப் பாவ்படுத்தி என்றுகூறுவோம். சிறிய பெண்கள் சிலர் அம்மா என்று அழைப்பார்கள். இவர்களும் இஜடா கலாச்சார முறையைக் கடைப்பிடித்து நடக்கின்றனர் என்று அப்போதுதான் தெரிந்தது. என் நானி வீட்டிலேயே கடைகேட்கச் செல்வதால் இதுபோன்ற பல விஷயங்கள் எனக்குத் தெரியாமலேயே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாணம் செய்துகொள்வதற்கு முன் ஏதோ ஒரு அச்சம் பயம் இருந்தது. குளிக்கும்போது, வெளியில் செல்லும்போது ஏதோ ஒரு உறுத்தல் இருந்தது. என்னை நான் முழு பெண்ணாகப் பார்க்க முடியவில்லை. ஆனால் இப்போது அந்த அச்சம்,பயம், உறுத்தல் என்னிடம் இல்லை. நான் ஒரு முழு பெண் என்ற அங்கீகாரம் எனக்குள் நானே கொடுத்துக் கொண்டது சந்தோஷமாக இருந்தது. கடை கேட்கும் போது கூட கடைக்காரர்கள் என்னைப் பார்த்து 'க்யா சிக்னி ஹோகயா'(என்ன ரொம்ப அழகாயிட்டே) என்று கூறுவார்கள்.நான் தலியாகக் கடை கேட்கப் போவதால் ஒரு சில கடைகளில் என்னைப் பார்த்து என்னவேண்டும் என்று கேட்பார்கள்.

கழற்றி அக்குவா பொட்டைங்களுக்குக் கொடுத்துடுங்க. நானி உங்களுக்கு மறு ஜோக் கொடுக்கிறேன். அத போட்டுக்குங்கனு வேற புடவை கொடுத்தார் நானி. எங்களோட சடங்கு ஜோக் புடவையை வாங்கிக்க ரெடியா அக்குவா பொட்டைங்க புக் பண்ணிட்டாங்க. அந்த அக்குவா இஜடாங்க ஜோக் புடவையைக் கட்டிக்கிட்டா அவுங்களும் சீக்கிரமா மாத்தா உக்காந்து நிர்வாணத்துக்குப் போகலாம்னு நம்பிக்கை வைக்கிறாங்க. அக்குவா இஜடாக்கள் நிர்வாணம் செய்து கொள்ளாதவர்கள். நான் கொடுத்த ஜோக்கை வாங்கிக் கொண்டவள் என்னோட சிறிய குருபாய். அவள் என் குரு நடத்தும் காமாட்டிபுரம் பயளகள்ளியில் உள்ள விடுதியில் இருந்தாள். என்னுடன் நிர்வாணம் செய்து கொண்டவளின் ஜோக் அவளுடைய குருபாய்க்குக் கொடுத்தாள். அவள் அவளோட குரு வீட்டில் பான்டுப்பூரில் இருந்தாள்.

'காசு பணம் இருந்தாலும் நிர்வாணத்திற்குப் போகலாம் என்று நினைத்தாலும் அதற்கெல்லாம் நேரம் காலம் வந்தால்தான் ஆகும். நேரம் காலம் வராவிட்டால் நாம் நிர்வாணம் செய்துகொள்ள போனாலும் ஏதாவது தடைபட்டுவிடும். அந்த மாத்தா நம்மீது உட்கார வேண்டும். அப்போதுதான் நமக்கு நிர்வாணம் ஆகும். இப்போ பார் உனக்கு இங்க வந்து ஆறுமாதம்தான் ஆகிறது. அதற்குள் நீ பொம்பளையா ஆயிட்ட. நாங்க எல்லாம் மூன்று வருஷம் ஆகியும் கூட நிர்வாணம் போக முடியல. உங்க நானி எங்கள அனுப்பல. உன்னோட நிர்வாணம் செஞ்சுகிட்டவளுக்கு இரண்டு வருஷம் ஆச்சு. அதன் பிறகுதான் இப்போது உன்னோட நிர்வாணம் ஆனாள். அதுபோல எப்ப நமக்கு நிர்வாணம் ஆகணும்னு மாத்தா கையில்தான் உள்ளது. உனக்கு மாத்தா உட்காந்துட்டதால நீ சிக்கிரமா நிர்வாணம் ஆகி பொம்பளயா ஆயிட்ட' என்று என் காலா குரு கூறும்போது அவரிடம் நம்பிக்கையும் பக்தியும் எவ்வளவு உள்ளது என்று புரிந்துகொண்டேன்.

என்னைப் பொறுத்தவரை அது நம்முடைய நம்பிக்கையாக இருந்தாலும் கூட நான் செய்யும் வேலைகள், என்னுடைய கடமைகள், மரியாதை, இப்படி என்னோட நடவடிக்கை நானிக்குப் பிடித்து இருந்தன. அதனால் ஆறு மாதத்தில் நிர்வாணம் செய்துகொள்ள அவர் விரும்பி இருப்பார் என்றுகூட நினைத்தேன்.

என்னுடன் நிர்வாணம் செய்துகொண்டவளை அவள் குரு இருக்கும் பான்டுப்பூருக்கு நானி போகச் சொல்லிவிட்டார். என்னை நானி வீட்டிலேயே பழையபடி கடைகேட்கவும் வீட்டு வேலை செய்யவும் இருக்க வைத்துக்கொண்டார்.

❖❖❖

நிர்வாணம் செய்துகொள்வதற்கு முன் ஏதோ ஒரு அச்சம் பயம் இருந்தது. குளிக்கும்போது, வெளியில் செல்லும்போது ஏதோ ஒரு உறுத்தல் இருந்தது. என்னை நான் முழு பெண்ணாகப் பார்க்க முடியவில்லை. ஆனால் இப்போது அந்த அச்சம்,பயம், உறுத்தல் என்னிடம் இல்லை. நான் ஒரு முழு பெண் என்ற அங்கீகாரம் எனக்குள் நானே கொடுத்துக் கொண்டது சந்தோஷமாக இருந்தது. கடை கேட்கும் போது கூட கடைக்காரர்கள் என்னைப் பார்த்து 'க்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்னி ஹோரகயா'(என்ன ரொம்ப அழகாயிட்டே) என்று கூறுவார்கள். நான் தனியாகக் கடை கேட்கப் போவதால் ஒரு சில கடைகளில் என்னைப் பார்த்து என்னவேண்டும் என்று கேட்பார்கள். நான் கையைத் தட்டி கை நீட்டினால்தான் நான் இஜடா என்று தெரிந்து கொள்வார்கள். தெரிந்த கடைக்காரர்கள் என்னுடைய மாற்றங்களைப் பார்த்து வியப்படைந்து ஆசைப்படுவார்கள். காசு கொடுக்கும்போது கையைப் பிடிப்பார்கள். கடைகளில் தனியாகக் கடைக்காரர் இருந்தால் என்னை அழைத்து உட்கார வைத்து சிறிதுநேரம் பேசிக் கொண்டு ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்று கொடுத்து அனுப்புவார்கள். நானும் தைரியமாக இப்போது அவர்களிடம் பேசவோ, பக்கத்தில் உட்காரவோ முடிந்தது. ஆனால் நிர்வாணம் செய்து கொள்ளாத போது பயம் இருந்தது. மழைக்காலம் வந்தாலும் வெயில் அடித்தாலும் தினமும் கடைகேட்கப் போக வேண்டும். மழைக் காலத்தில் தினமும் விடாமல் மாதம் முழுவதும் புயல் அடிக்கத்தான் செய்யும். அப்பொழுதுகூட மழையில் நனைந்து கொண்டு கடைகேட்பேன். அதுவும் ஒரு சந்தோஷம்தான். ரயிலில் பயணம் செய்யும்போது கூட கூட்டமாக இருந்தாலும் பெண்கள் பக்கத்தில் தைரியமாக நிற்க முடிந்தது. இஜடாக்கள் பெரும்பாலும் மின்சார ரயிலில் ஓரமாக உட்கார்ந்து பயணம் செய்வார்கள். சீட்டில் உட்காரமாட்டார்கள். மேலும் மின்சார ரயிலில் பயணம் செய்ய டிக்கட் கூட வாங்கமாட்டோம். எங்களிடம் கேட்கவும் மாட்டார்கள். வேலைக்குச் செல்பவர்கள் ஆண் பெண் எப்படிப் போகின் றார்களோ அதைப்போல நானும் என் வேலைகளைச் செய்ய (கடைகேட்க) போவேன்.

என்னோட நானி என்மீது நல்ல அபிப்ராயமும் நம்பிக்கையும் வைத்திருந்தார். அவரை மீறி நான் எந்தத் தப்பும் செய்ய முடியாது. நல்ல பழக்க வழக்கங்களை அவரிடம் இருந்து கற்றுக்கொண்டேன். வீட்டில் உள்ள என்னோட காலா குருக்களுடன் நன்றாக சமைக்கவும் கற்றுக்கொண்டேன். வெள்ளிக்கிழமை நாள்களில் முல்லன் சென்று அங்குள்ள காய்கறி மார்க்கட்டில் காய்கறிகளைக் கடைகேட்டுக் கொண்டு வருவேன். மாலையில்தான் காய்கறி கடைக்குச் செல்ல வேண்டும். சாக்குப் பையைப் பிடித்துக்கொண்டு பிளாட்பார்ம், கடை என வைத்துக்கொண்டு காய்கறி விற்பவர்களிடம் சென்று கைதட்டினால் ஒரு காய், ஒரு தக்காளி என்று அந்தச் சாக்குப் பையில் வாங்கிப் போட்டுக்கொண்டு சாக்குப்பை நிறைந்தால் அதைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு காட்குப்பர் வீட்டிற்கு வருவேன். கொண்டுவந்த காய்கறிகளைத் தனித்தனியாகப் பிரித்துக் கவரில்போட்டு பிரிஜ்ஜில் வைப்பேன். இந்தக் காய்கறி கேட்கும் கடைக்கு வாரம் ஒருமுறை வெள்ளிக்கிழமைதான் போவேன்.

காய் கடைகளில் என்னைப்போல் வேறு இஜடாக்களும் காய்கறி கடைகேட்க வருவார்கள். இல்லை என்று சொல்லாமல் அவர்களுக் கும் காய்கறிகளைக் கொடுப்பார்கள். ஒரு சில இஜடாக்கள் வலுக்கட்டாயமாக இன்ன காய்தான் வேண்டும் என்று கேட்பார்கள். அது அதிக விலையாக இருந்தால் கொடுக்க மாட்டார்கள். கை வைத்துக் காயைத் தூக்கிக்கொண்டு சண்டை போடும் இஜடாக்களும் உண்டு. நானோ கடைக்காரர்களின் கஷ்டம் தெரிந்து அவர்கள்

என்னோட நானி என்மீது நல்ல அபிப்ராயமும் நம்பிக்கையும் வைத்திருந்தார். அவரை மீறி நான் எந்தத் தப்பும் செய்ய முடியாது. நல்ல பழக்க வழக்கங்களை அவரிடம் இருந்து கற்றுக்கொண்டேன். வீட்டில் உள்ள என்னோட காலா குருக்களுடன் நன்றாக சமைக்கவும் கற்றுக்கொண்டேன். வெள்ளிக்கிழமை நாள்களில் முல்லன் சென்று அங்குள்ள காய்கறி மார்க்கட்டில் காய்கறிகளைக் கடைகேட்டுக் கொண்டு வருவேன். மாலையில்தான் காய்கறி கடைக்குச் செல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கும் காய் கறிகளையே வாங்குவேன். எனக்குத் தேவைப் பட்டால் அவர்களிடம் நைசாகப்பேசி கடைக்கு நல்ல வியாபாரம் ஆகும் என்று அசீர்வாதம் கொடுத்துக் கேட்பேன். கொடுக்க முடியாது, அதிகவிலை, வேண்டு மானால் இந்தா இரண்டு ரூபாய் கொடுக்கிறேன் என்பார்கள். சில காய் கடைக்காரர்கள் கெட்டுப் போனதையும் சொத்தையாக உள்ளதையும் கொடுப் பார்கள். அதையும் வாங்கிக்கொள்வேன். வீட்டில் காய்கறிகளைக் கொட்டிப் பிரிக்கும்போது காலா குருக்கள் சில சமயம் என்னைத் திட்டுவார்கள் நல்ல காய்கறிகளை வாங்கக் கூடாதா என்று. அவர்களுக் கென்ன சொல்லிவிட்டார்கள் சுலபமாக. என்னுடைய கஷ்டமும் கடைக்காரர்களின் கஷ்டமும் எங்கே புரியப் போகின்றது என மனதில் நினைத்துக் கொள்வேன்.

காய்கறிக்காகக் கடைகேட்கும்போதும், காசுக்காக் கடைகேட்கும் போதும் கடைகளிலும் வீதிகளிலும் எனக்குப் பிடித்த சில ஆண்களைப் பார்த்தால் என் மனதில் சபலம் ஏற்படும். அவர்களுடன் அன்பாகப் பேசவும் பழகவும் காதலிக்கவும் ஆசையாக இருக்கும். ஆனால் அது மனதில் மட்டும்தான். வெளியில் சொல்ல முடியாது. காரணம் நான் ஒரு இஜடா. அதுவும் கைநீட்டி கடை கடையாய் பிச்சை எடுப்பவளுக்கு இதுபோல ஆசையா என்று நினைப்பார்கள். காசு கொடுக்கும் மாலிக் (முதலாளி) நமக்குத் தெய்வம் போல. நம்மைக் கூட தெய்வமாகத்தான் மாலிக்குகள் நினைக்கின்றனர். யாரோ ஒரு சில கடைக்காரர்கள் என் அழகைக் கண்டு என் மீது ஆசைப்படுவதுபோல எல்லோரும் ஆசைப்படுவது இல்லை. எனக்கும் கூட என் அம்மாவைப்போல, என் அக்காவைப் போல இந்த ஊர் உலகத்தைப்போல ஒருவனுடன் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற ஆசை இருக்கின்றது. ஆசை இருந்தாலும் இஜடாவாகிய என்னை யார் திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்துவார்கள் என்ற கேள்விகளும் என்னுள்ளேயே இருந்துவரும்.

ஒரு சில இஜடாக்கள் தங்களுக்குக் கணவன் இருக்கிறான் என்று கூறுவதும் உண்டு. எப்படி என்று பார்த்தால் திருமணம் இல்லை. உனக்குப் பிடித்து இருக்கு எனக்குப் பிடித்து இருக்கு என்று இருவரும் ஒரு வீட்டில் தனியாக இருக்கவும் செய்வார்கள். அப்படி எனக்குக் கணவன் கிடைத்தாலும் நான் தனி வீடு எடுத்துச் செல்ல என் நானியோ குருவோ அனுமதிக்க மாட்டார்கள். எனக்கு நல்லது கெட்டது எல்லாம் பார்த்துக்கொள்ளும் நானியை விட்டுச் செல்லவும் முடியாது. ஒரு சிலர் நானியையும் குருவையும் பிரிந்தோ, அல்லது தனியாக இருந்து கொண்டோ தங்கள் இஷ்டப்படி இருக்கின்றனர். ஆனால் நான் அப்படி இல்லை. கூட்டுக் குடும்பத்தோடு இருக்கிறேன். ஆம்புளை வாடையே பார்க்க முடியாத சம்சாரி வீட்டில் இருக்கிறேன். பாலியல் தொழில் செய்யும் வீடுகளுக்கு என்னை அனுப்ப நானிக்கு மனம் இல்லை. மேலும் பாலியல் தொழில் செய்வது எனக்கும் அப்போது பிடிக்க வில்லை. எனக்கு நிர்வாணம் செய்யும்வரை நான் செக்ஸ்க்கு இடம் கொடுக்காமல் இருந்தேன். கடைகேட்கும்போதும் வெளியில் செல்லும் போதும் மனதில் ஆசை இருந்தாலும் முதலில் நான் பெண்ணாக மாறவேண்டும் என்ற ஆசையைத்தான் கொண் டிருந்தேன்.

ஒரு சில இஜடாக்கள் தங்களுக்குக் கணவன் இருக்கிறான் என்று கூறுவதும் உண்டு. எப்படி என்று பார்த்தால் திருமணம் இல்லை. உனக்குப் பிடித்து இருக்கு எனக்குப் பிடித்து இருக்கு என்று இருவரும் ஒரு வீட்டில் தனியாக இருக்கவும் செய்வார்கள். அப்படி எனக்குக் கணவன் கிடைத்தாலும் நான் தனி வீடு எடுத்துச் செல்ல என் நானியோ குருவோ அனுமதிக்க மாட்டார்கள். எனக்கு நல்லது கெட்டது எல்லாம் பார்த்துக்கொள்ளும் நானியை விட்டுச் செல்லவும் முடியாது. ஒரு சிலர் நானியையும் குருவையும் பிரிந்தோ, அல்லது தனியாக இருந்து கொண்டோ தங்கள் இஷ்டப்படி இருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைகேட்கும்போது வேறு வேறு வீடுகளின் இஜடாக்களைச் சந்திப்பேன். அவர்களில் சிலர் கணவனால் அனுபவித்த கொடுமை களைக் கதைகளைக் கேட்டும் இருக்கிறேன். முகத்தில் பிளேடு போட்டவர்களும், மருந்து குடித்து உயிருக்காகப் போராடிய வர்களும் தீக்குளித்து வெந்து இன்றும் உயிருடன் இருப்பவர் களையும் நேரில் பார்த்துப் பேசி இருக்கிறேன். இஜடாக்களுக்குக் கணவனால் இது போன்ற கொடுமைகளா என்று நினைப்பேன். சிலர் கணவனோடு நன்றாக இருப்பதையும் கேட்டு இருக்கிறேன். இதனால் காதல் திருமணம் என்ற பேச்சுக்கே இடம் கொடுக்காமல் இருந்தேன். நாம் திருமணம் செய்துகொண்டால் குழந்தை பெற்றுக் கொள்ள முடியாது. இந்த உலகமும் ஒத்துக்காது. எத்தனையோ பேர் திருமணத்தால் இன்று அடிவாங்கி உதை வாங்கிப் பொருள்களை இழந்து பணத்தை இழந்து கஷ்டமான நிலையில் கூட இருக்கின்றனர்.

சகுந்தலா (பெயர் மாற்றப்பட்டுள்ளது)என்னுடைய தோழி. வெள்ளிக்கிழமை மஸ்ஜித்பந்தர் கடைகேட்கும்போது பழக்கம் ஆனவள். மஸ்ஜித்பந்தர் கடைகேட்கும்முன் முதல் முதலில் எல்லோரும் ஒரு டீக்கடையில் உட்கார்ந்து டீ குடித்துவிட்டு அவன் கடையிலேயே போனி பண்ணிவிட்டுதான் அடுத்த கடைகளுக்கு கடைகேட்கப் போவார்கள். அப்போது சகுந்தலாவும் என்னைப் போல தனியாகத்தான் கடைகேட்க வருவாள். அவள் என்னோட பரிவாரைச் சேர்ந்தவள் இல்லை. எனக்கு குருபாய் முறை ஆனாலும் சகுந்தலா சவுக்கன் வீட்டு இஜடா. நாங்கள் இருவரும் நல்ல தோழிகளாகப் பழகினோம். சகுந்தலா மும்பை வந்து ஐந்து வருடங்கள் அப்போது. அவளுடைய குருவுக்கு நான்கு வருடங்கள் கடைகேட்டு கடைகேட்டுப் பணம் கொடுத்தும் கூட அவளுக்கு நிர்வாணம் செய்யவில்லை. இன்று அனுப்புகிறேன் நாளை அனுப்புகிறேன் என்று காலத்தைக் கடத்தி வந்ததனால் சகுந்தலா குருவிடம் சண்டைபோட்டுக் கொண்டு தனியாக வீடு பிடித்துக் கடைகேட்ட பணத்தைச் சேர்த்து வைத்து நிர்வாணம் செய்து கொண்டாள். நிர்வாணம் செய்துகொண்டபின் சகுந்தலாவின் குரு மருதாணி விழா நடத்தியுள்ளார். அது ஒரு குருவோட கடமையும் ஆகும். அவளோட குரு, 'நீ தனியாகப் போய் இருந்தாலும் எனக்கு மாதம் ஒரு முறை கேட்கும் பணத்தைக் கொடுக்க வேண்டும்' என்று கூறியுள்ளார். ஆனால் சகுந்தலா அதை மறுத்துள்ளாள். 'குரு கேட்கும் பணத்தைக் கொடுக்க முடியாது. என்னால் முடிந்ததை சேலா என்ற முறைக்குக் கொடுக்கிறேன். இதற்கு முன் நான்கு வருடங்கள் உங்களுக்கு எல்லாப் பணமும் கொடுத்தேன். இனி அதுபோல இருக்க முடியாது. நானும் என் அம்மா அப்பா வீட்டுக்குப் போகணும். அவர்களையும் பார்க்கணும். என்னையும் நான் பார்த்துக் கொள்ள வேண்டும். நாலு பணம் சேத்து எனக்காகவும் என் செலவுக்காகவும் வைத்துக்கொள்ள வேண்டும். இஜடாக்களின் நல்லது கெட்டதில் கலந்து கொள்ளும் போது கையிலோ கழுத்திலோ என் வசதிக்கு நகை செய்யணும். அதனால் நான் நீங்கள் கேட்கும் பணத்தைக் கொடுக்க முடியாது. குரு என்று நான் உங்களைத் தேடி வரும்போது என் கையில் உள்ளதைக் கொடுப்பேன்' என்று கூறிவிட்டாள்.

இதற்கு முன் நான்கு வருடங்கள் உங்களுக்கு எல்லாப் பணமும் கொடுத்தேன். இனி அதுபோல இருக்க முடியாது. நானும் என் அம்மா அப்பா வீட்டுக்குப் போகணும். அவர்களையும் பார்க்கணும். என்னையும் நான் பார்த்துக் கொள்ள வேண்டும். நாலு பணம் சேத்து எனக்காகவும் என் செலவுக்காகவும் வைத்துக்கொள்ள வேண்டும். இஜடாக்களின் நல்லது கெட்டதில் கலந்து கொள்ளும் போது கையிலோ கழுத்திலோ என் வசதிக்கு நகை செய்யணும். அதனால் நான் நீங்கள் கேட்கும் பணத்தைக் கொடுக்க முடியாது. குரு என்று நான் உங்களைத் தேடி வரும்போது என் கையில் உள்ளதைக் கொடுப்பேன்' என்று கூறிவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளோட குரு, 'என்ன பேட்டா, நீ என்கிட்ட வரும்போது எப்படி இருந்தேனு கொஞ்சம் நினைத்துப் பார். கிராப்புத் தலையோட புடவை கட்ட தெரியாம பைருப்பியா வந்தியே இப்போ மாசோக்கா பொம்பளையா ஆயிட்ட திமிரா உனக்கு? (பைருப்பி- ஆண்களைப் போல; மாசோக்- நல்ல நிலைமை, பெண்போல)உனக்குக் காது குத்தி இருக்கேன், மூக்கு குத்தி இருக்கேன், இஜடாக்களுக்குள்ளே நல்லது எது, கெட்டது எது என்று கத்துக் கொடுத்திருக்கேன். ஒன்னுமே தெரியம வந்த நீ இன்னிக்கு இவ்வளவு தூரம் வந்து எனக்கு சரிக்குச் சரியா பதில் கொடுக்கிறாயே என்று கூறி முடியைச் சுழற்றி உதைத்து அடித்துள்ளார். குருவோட ஆத்திரம் தீர்ந்தபிறகு சகுந்தலா அவளோட வீட்டுக்குப் போய் விட்டாள். குரு சொல்லிக் கொண்டிருக்கிறாராம் அவள் எங்கயோ இருக்கட்டும். எனக்குத் தேவை பணம் என்று. சகுந்தலாவும் மாதம் ஒரு முறை குரு இருக்கும் இடம் சென்று குரு கேட்ட பணத்தைக் கொடுக்க முடியாவிட்டாலும் அவளுக்குத் தகுந்த வசதியில் பணம் கொடுத்துவிட்டு குரு திட்டின திட்டை வாங்கிக் கொண்டு வருவது வாடிக்கையாக இருந்தது.

சகுந்தலா குடி இருக்கும் பகுதியில் அந்த ஏரியா ரவுடி ஒருவன் சகுந்தலா போகும்போதும் வரும்போதும் ஆசை வார்த்தைகளைக் கூறுவதும் காதலிப்பதாகவும் சொல்லியிருக்கிறான். சகுந்தலாவுக்கு அவன் ரவுடி என்பது தெரியாது. ஒரு நாள் சகுந்தலாவைச் சந்தித்து உன்னை நான் காதலிக்கிறேன் என்று கூறி அவன் கையில் சிகரட்டால் சூடுபோட்டுக் கொண்டான். சகுந்தலாவும் அவனை விரும்பி உள்ளாள். இருவரின் காதல் அந்த ஏரியாவுக்கே தெரிய வந்தது. சகுந்தலாவை ஏமாற்றி ஏமாற்றிப் பணத்தை வாங்கிக் கொண்டு கிளப்பில் சூதாடுவதும் அடிதடி என்று செல்வதும் வாடிக்கையாக இருந்தது. சகுந்தலாவும் வேறு வழி இல்லாமல் அவன் கேட்கும்போதெல்லாம் பணத்தைக் கொடுத்துக் கொண்டே யிருந்தாள். சில சமயத்தில் இவனுக்கு ஏன் பணம் கொடுக்க வேண்டும்? இவன் உழைத்து வந்து நமக்குக் கொடுத்தால் என்ன என்று நினைத்து ஒரு வாரம் கடைகேட்கப் போகாமல் உடல்நிலை சரியில்லை என்று படுத்துக்கொண்டாள். ஏன் கடை கேட்கப் போகவில்லை சகுந்தலாவை அடித்திருக்கிறான். இனி என்னுடன் இருக்கவேண்டாம். நாம் இருவரும் பிரிந்துவிடலாம் என்று சகுந்தலா கூறியிருக்கிறாள். அவனோ,'என்னடி பிரிந்து போவதா? என்னை விட்டுட்டு வேற ஒருத்தன வச்சுக்கிலாமுனு நினைக்கின்-றாயா? உன் அழகுதான்டி உன்னை இப்படிப் பேச வைக்குது. இந்த மும்பையில் எந்த மூலையில் இருந்தாலும் உன்னை விடமாட்டேன். உன் முகத்தில் ஆசிட் ஊற்றிவிடுவேன்' என்று மிரட்டுகிறானாம். சகுந்தலா இப்போது குருவுக்கும் பணம் கொடுக்க வேண்டும். இவனுக்கும் பணம் கொடுக்க வேண்டும். நம்ம உழைப்பு, நம்ம இஷ்டம். ஏன் இவுங்க இப்படி என்னை உபயோகப்படுத்து கின்றனர். இவனை விட்டுச் சென்றுவிடலாம் என்றாலும் பயம். இவனைப் பற்றி குருவிடம் சொல்லி அங்கேயே தங்கிவிடலாம் என்றாலும் பயம். ஏன்தான் இஜடாவாக ஆனோம்னு நினைக்கிறேன் என்றாள். சகுந்தலா பார்ப்பதற்குப் பெண்களைப் போலவே இருப்பாள். அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பாக இருந்தாலும் அவளுடைய கண்கள் முட்டை முட்டையாக பார்க்கும் பார்வையே அவள் என்ன நினைக்கிறாள் என்று சொல்லிவிட முடியும். அழகு இருந்தாலும் ஆபத்துதான் போல. சகுந்தலா கடைகேட்கும் போது கடைக்காரர் களைக் கண்களால், புருவத்தால் மயக்கி அவளுடைய பாவனைகள் மூலம் சிரித்தே கடைகேட்பாள். அவள் முகத்தைப் பார்த்தபோது எனக்கே பொறாமையாக இருக்கும். அப்படி ஒரு புன்னகை. அந்தப் புன்னகை முகத்தில்;ஆனால் மனதில் எவ்வளவு வேதனைகள்! இப்படித்தானே ஒவ்வொரு இஜடாவும் மனதில் ஒவ்வொரு வேதனையையும் கஷ்டங்களையும் சுமந்துகொண்டு வாழ்கின்றனர் என்று நினைத்துக் கொள்வேன்.

சகுந்தலாவிடம் பேசிக்கொண்டிருக்கும் போது அவள் மும்பையை விட்டு அவளுடைய சொந்த ஊருக்கே அம்மா அப்பா ஒப்புக்கொண்டால் போவதாகக் கூறினாள். அவளுடைய அம்மா அப்பா கதையை மற்றொரு நாள் கூறுவதாகச் சொன்னாள்.மீண்டும் நான் அவளைச் சந்திக்க முடியவில்லை. என்ன ஆயிற்று, ஊருக்கே போய்விட்டாளா என்று தெரியவில்லை. நான் சகுந்தலாவோடு பேசுவது கூட என் வீட்டு இஜடாக்களுக்குப் பிடிக்காது. என் நானியிடம் கூறிவிடுவார்கள். என் நானியும் என்னைக் கண்டிப்பாள். 'நீ கடைகேட்கப் போனோமா வந்தோமானு இருக்கணும். உனக்குப் பேச வேண்டும் பழக வேண்டும் என்றால் நம் வீட்டு இஜடாக்களுடன் பேசு. பழகு. சவுக்கன் வீட்டு இஜடாக்களோடு உனக்கு என்ன பேச்சு? அவளே குருவை மதிக்கத் தெரியாதவள். தனியாக ஒரு வீடு எடுத்துக்கொண்டு ரவுடியைச் சேர்த்துக் கொண்டு வாழ்பவள். அவளிடம் உனக்கு என்ன பேச்சு? அவள் வீட்டில் சேலா ஆகப்போறியா என்ன?' என்றுஎன்னைத் திட்டினார். சவுகன் வீட்டு இஜடாக்களுடன் பேசினால் அவர்கள் என் புத்தியைக் கெடுத்து அவர்கள் வீட்டில் வேறு ஒரு குரு பெயரில் சேலா செய்து விடுவார்கள் என்று நினைப்பார்கள். ஒரு குரு பிடிக்கவில்லை என்றால் தனியாக இருக்க குருவின் ஒப்புதல் வேண்டும். தனியாக இருந்தாலும் சகுந்தலாவுக்கு வந்ததுபோல வேறுவேறு தொந்தரவுகள் வரும்.எந்த வீட்டில் வேண்டுமானாலும் ஓடிப்போய் சேலா ஆகலாம். ஆனால் நானி அல்லது குருவின் வீடுகளில்தான் இருக்கவேண்டும். அவர்கள் சொல்படிதான் கேட்கவேண்டும்.இது இஜடாக்களின் சட்ட திட்டங் களுக்கு உட்பட்டது. இதை மீறினால் கஷ்டம் நமக்குத்தான். ஒரு சில விஷயங்களில் இஜடாக்களின் சட்ட திட்டங்கள் நல்லதாகவே ஆகின்றன. குரு, நானி, மூத்தவர் ஆகியோருக்குள்ள சுதந்திரம் இளையவர்களுக்கும் இருக்க வேண்டும் என்கிறார்கள். அதே குருவும் நானியும் இளையவர் களாய் இருக்கும்போது அவர்களும் சட்ட திட்டங் களுக்கும், அவர்களின் குரு, நானிகளுக்கு மதிப்பு' மரியாதை கொடுத்தும், அவர்களின் பேச்சைக் கேட்டும்தான் நடந்துகொண்டனர். என்னைப் போன்றவர் களும் குரு நானி ஆகும்போது முழு சுதந்திரம் கிடைக்கும் என்று புரிந்து கொண்டேன்.

குரு, நானி, மூத்தவர் ஆகியோருக்குள்ள சுதந்திரம் இளையவர்களுக்கும் இருக்க வேண்டும் என்கிறார்கள். அதே குருவும் நானியும் இளையவர் களாய் இருக்கும்போது அவர்களும் சட்ட திட்டங் களுக்கும், அவர்களின் குரு, நானிகளுக்கு மதிப்பு' மரியாதை கொடுத்தும், அவர்களின் பேச்சைக் கேட்டும்தான் நடந்துகொண்டனர். என்னைப் போன்றவர்களும் குரு நானி ஆகும்போது முழு சுதந்திரம் கிடைக்கும் என்று புரிந்து கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியல் சார் சொற்களஞ்சியம்

வெங்கடேசன் சக்ரபாணி, அஷோக் ராவ் கவி, எல். ராம்கி ராமகிருஷ்ணன், ராஜன் குப்தா, க்லேயிர் ராபோபோர்ட், சாய் சுபஸ்ரீ ராகவன் ஆகியோர் எழுதிய HIV Prevention among Men who have Sex with Men (MSM) in India: Review of Current Scenario and Recommendations. Background paper prepared by Solidarity and Action Against The HIV Infection In India (SAATHII) working group on 'HIV prevention and care among Indian GLBT/Sexuality Minority communities', Revised Draft, April 2002. என்ற கட்டுரையைத் தழுவித் தமிழாக்கம் செய்யப்பட்டது.

இதனை தமிழாக்கம் செய்தவர்: அனிருத் வாசுதேவன்

கடந்த பல வருடங்களாக "மாற்று பாலியல்" (alternate sexuality) என்பது குறித்த விவாதங்கள் நிகழ்ந்து வருகின்றன. "மாற்று" என்று சொல்லும் பொழுது பல கேள்விகள் எழுகின்றன. உதாரணத்திற்கு, எதற்கு மாற்றாக? "இயல்புப்" பாலியல் ஒன்றிருப்பதாகவும் அதற்கு "மாற்றாக" option-ஆக ஒன்று இருப்பதாக அர்த்தமா? Option என்றால் தேர்வு செய்துகொள்ள முடியுமா? - போன்ற கேள்விகள் எழுகின்றன. ஆனால் மாற்றுப் பாலியல் என்று நாம் இப்பொழுது கூறுவது ஏற்றுக்கொள்ளப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட, உண்மைகள் வழங்கப்பட்ட ஆண்-பெண் பாலியல் உறவுகள் அல்லாதவை என்ற பொருளில் அடங்கும். பல்வேறு காரணங்களுக்காக, இது பின்வரும் பாலியல் மற்றும் பாலின அடையாளங்களாகப் புரிந்து கொள்ளப்படுகிறது: இரு ஆண்கள் (homosexuality) அல்லது இரு பெண்களுக்கு (lesbian)இடையிலான பாலியல் விழைவு, இச்சை, காதல், காமம், உறவு; இரு பாலினத்தவரிடமும் ஈர்ப்பும், விழைவும், காதலும், உறவும் கொள்ளக்கூடிய நிலை (bisexuality); பிறப்பாலான பாலடையாளத்தை கடக்கும் நிலை (transgender/ transsexual): அதாவது பிறப்பால் ஆணாக இருந்து பின் பெண் அடையாளம் ஏற்போர் (அரவானிகள்/ திருநங்கைகள்), பிறப்பால் பெண்ணாக இருந்து பின் ஆண் பாலடையாளம் ஏற்போர்.

பொதுவாக சமூக அங்கீகாரம் பெறாத பாலியல் நிலைகள் என்பதாலும், இப்பொழுது தான் இவை குறித்த புரிதல்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன என்பதாலும் இவற்றைப் பற்றிய விளக்கங்கள் அவசியமாகின்றன. மேலும், இந்தப் பாலியல் மற்றும் பாலியல் வெளிப்பாடுகள் மற்றும் அடையாளங்களை இலக்காக்கும் அவதூறுச் சொற்கள் நம் சமூகத்தில் வழங்குவதால், இவை குறித்த ஆழ்ந்த புரிதல் ஏற்படுவதற்கு முன் சரியான பெயர்களையும் சொற்களையும் வித்தியாசங்களையும் அறிந்துகொள்வது அவசியம்.

அது தவிர, பொதுவாக பால், பாலியல், பாலினம், அடையாளம், வெளிப்பாடு ஆகியவை குறித்த தெளிவும் இன்றளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரும் விளக்கங்கள் மற்றும் வேறுபாடுகளை அறிந்திருத்தலும் அவசியம்.

பாலியல் சொற்களஞ்சியம்

அக்வா கோத்தி - பெண் உடையிலோ அல்லது ஆண் உடையிலோ இருக்கும் கோத்தி நபர்கள். இவர்கள் தமது ஆணுறுப்பை இது வரை நீக்கம் செய்யாதவர்களாகவோ பால் மாற்று அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் எண்ணம் இல்லாத வர்களாகவோ இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுணர்வு இல்லாதவர்கள்/ asexuals - எவரிடத்தும் பாலியல் ரீதியான ஈர்ப்பு இல்லாதவர்களும் உண்டு

பைரூபி, பைரூபியா - வட இந்தியாவில் சில ஆண்கள் பெண்களின் உடை அணிந்து அரவானிகள்/ ஹிஜ்ரா சமூகத்தினர் போல தோற்றமளிப்பர். இவர்கள் பொதுவிடங்களில் கைத்தட்டி பணம் சம்பாதிப்பதும் உண்டு. இவர்கள் அநாகரீகமாக நடந்து கொண்டு தங்களுடைய சமூகத்தின் பெயரைக் குலைப்பதாக ஹிஜ்ரா சமூகத்தினர் கருதுகின்றனர்.

இருபாலீர்ப்பு கொண்டவர்கள்: ஆண் பெண் என்ற இரு பாலினத்தவரிடமும் குறிப்பிடத்தக்க பாலீர்ப்பு கொண்டவர்கள்.

Double Decker / டி டி : இவர்கள் உடலுறவின் பொழுது தனது ஆணுறுப்பை மற்றவரது ஆசனவாயில் புகுத்துபவராகவும், மற்றவரது ஆணுறுப்பைத் தனது ஆசனவாயில் பெறுபவராகவும் இருப்பர். இவர்கள் பெண்களோடு உடலுறவு கொள்பவராகவும் இருக்கலாம். இவர்கள் செலுத்துவது/ பெறுவது என்ற இரு செயல்பாட்டிலும் ஈடுபடுவதால் கோத்திகள் இவர்களை Double Decker என்று அழைக்கின்றன்ர்.

யூனக்/ அலி: ஹிஜ்ரா/ அரவானி சமூகத்திற்கு எதிரான அவதூறுச் சொல்லாய் இது அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. முன் காலங் களில், சுய விருப்பமின்றி பலவந்தமாகவும் தண்டனையாகவும் ஆணுறுப்பு நீக்கப்படும் ஆண்களைக் குறிக்க இச்சொல் பயன் படுத்தப்பட்டது. உதாரணம்: அரசாட்சி காலங்களில் அந்தப் புரங்களில் காவல் பணிபுரிவதற்கென பல ஆண்கள் பிறப்புறுப்பு நீக்கம் செய்யப்பட்டனர்.

பெண்மை: இது உறுதியான வரையறை இல்லாத ஒரு சொல். இது உடல் ரீதியாக பெண்ணாக இருக்கும் ஒரு நபரின் சுய வெளிப்பாட்டையும் நடந்துகொள்ளும் விதத்தையும் செயல்களை யும் உடைகளையும் பேசும் விதத்தையும் குறிக்கின்றது. ஆனால் எந்த பாலினத்தவரும் தன்னை பெண்மை உடையவர்களாக அடையாளப் படுத்திக் கொள்ளலாம்.

ஒருபாலீர்ப்பு அல்லது ஓர்பாலின ஈர்ப்பு கொண்ட ஆண்கள்/Gay men - ஆண்களிடமே குறிப்பிடத்தக்க பாலீர்ப்பு கொண்ட ஆண்கள். இத்தகைய ஒருவர், ஒருபாலீர்ப்பு கொண்ட ஆண்கள் சமூகத்தின் அங்கத்தினராய்த் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளலாம். அப்படி இல்லாது எந்த சமூகத்தினரையும் சேராது தன்னுடைய தனி மனித அடையாளமாகவும் இதைக் கொண்டிருக்கலாம். ஆண்களிடம் மட்டுமே பாலீர்ப்பு கொண்டிருந்தாலும் இவர்களுள் சிலர் பல காரணங்களுக்காகப் பெண்களுடனும் உடலுறவு கொள்பவர்களாக இருக்கலாம்.

பாலினம் (gender): தனி நபராகவோ, சமூகத்திலோ, சட்ட ரீதியாகவோ ஒருவருக்குள்ள ஆண் அல்லது பெண் அடையாளம். ஆண்மை பெண்மை போன்ற வித்தியாசங்களைக் குறிக்கும் சொற்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலின செயல்பாடு: ஆணாகவோ பெண்ணாகவோ ஒருவர் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற சமூக, பண்பாட்டு எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. இந்தச் சூழலில் ஒருவர் எவ்வளவு ஆண்மையுடனும் பெண்மையுடனும் நடந்துகொள்கிறார் என்ற செயல்பாடுகளை இது குறிக்கின்றது. ஆண்களும் பெண்களும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், எந்தெந்தப் பணிகளைச் செய்ய வேண்டும், எவ்வாறு தோற்றமளிக்க வேண்டும் என்று பல எதிர்பார்ப்புகள் உண்டு.

பாலின வெளிப்பாடு: பொதுச் சமூகத்தில் ஒருவர் தன்னுடைய பாலினத்தை எவ்வாறு வெளிப்படுத்துகிறார் என்பது குறித்தது. தன்னுடைய நடை உடை பேச்சு மற்றும் இதர செயல்பாடுகள் மூலம் சமூகத்தில் ஆண்மை என்றும் பெண்மை என்றும் கூறப்படும் தன்மைகளை ஒருவர் வெளிபடுத்தும் விதம்.

பாலின மாறுபாடு: தன்னுடைய பிறப்பால் அடையாளத்திற்கு உரியது என்று சமூகத்தால் வரையறுக்கப்பட்ட பாலின வெளிப்பாடு அல்லாது எதிர் பாலினத்திற்கு உரிய வெளிப்பாடுகளைக் கொண் டிருப்பது. உதாரணத்திற்கு, பெண்மையை மிகையாக வெளிப் படுத்தும் ஆண்கள், ஆண்மை அதிகமாக வெளிப்படும் பெண்கள்.

பாலின அடையாளம்: ஒருவர் உள்ளூரத் தன்னை ஆணாகவோ பெண்ணாகவோ உணர்வது. இந்த உள்ளுணர்வு ஒருவரது பிறப்புறுப் பிற்கும் அதனால் வரையறுக்கப்பட்ட பாலின எதிர்பார்ப்புகளையும் சார்ந்து இருக்க வேண்டும் என்பது இல்லை. ஒருவர் பிறப்பால் ஆணாக இருந்து தன் மனரீதியாகத் தன்னை பெண்ணாக அடையாளப்படுத்திக் கொள்ளலாம்.

எதிர்பாலீர்ப்பு: ஆண்-பெண் பாலீர்ப்பு. தன்னுடைய பாலடை யாளத்திற்கு எதிரான பாலடையாளம் கொண்டவர்கள் மீதான பாலியல் ஈர்ப்பு.

ஹிஜ்ரா/ அரவானி/ திருநங்கை: இவர்கள் உடல் ரீதியாக ஆண்களாகப் பிறப்பவர்கள். எனினும் மனரீதியாகத் தங்களைப் பெண்களாகவே உணர்பவர்கள். பின் தங்களது வாழ்வில் ஒரு சமயத்தில் அந்த ஆண் பாலடையாளத்தை நிராகரித்து பெண் ணாகவோ, அல்லது மூன்றாம் பாலினமாகவோ தங்களை அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். ஹிஜ்ரா என்ற சொல் வட இந்தியாவில் பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் அரவானி மற்றும் திருநங்கை என்ற பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒருபாலீர்ப்பு மீதான காழ்ப்புணர்ச்சி (Homophobia): ஒருபாலீர்ப்பு கொண்டவர்கள் மீதான ஒருவித வெறுப்பும் பயமும். இது சமூகத்தில் ஒதுக்குதலாகவும், வன்முறையாகவும், காழ்ப்புணர்ச்சியாகவும் வெளிப்படுகிறது.

ஒருபாலீர்ப்பு கொண்டவர் (Homosexual) - தன்னுடையதே ஆன பாலினத்தவர் மீது ஈர்ப்பு கொண்டவர்கள். இவர்கள் ஆண்களா கவோ அல்லது பெண்களாகவோ இருக்கலாம். ஒருபாலீர்ப்பு கொண்ட ஆண்களைப் பெரும்பாலும் "கே" (gay) என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபாலீர்ப்பு கொண்ட பெண்களை "லெஸ்பியன்" (lesbian) என்றும் அழைப்பதுண்டு. உண்மையான விழைவுகளைக் குறிக்காமல் இச்சொல் மருத்துவ ரீதியான விளக்கத்தை மட்டும் தர முயல்வதாக மாற்றுப் பாலியல் கொண்டவர்கள் இதனை நிராகரிப்பதும் உண்டு.

இடை நிலை பாலடையாளம் (Intersexed Persons): உயிரியல்/ பிறப்புறுப்பு ரீதியாக ஆண் பெண் என்ற இரு தன்மைகளையும் பிறப்பிலிருந்தே கொண்டவர்கள்.

கொழும்பு இளை ஞானகு... நகராட்சி மன்... வாசிப்பகம்.

கோத்தி: வெளிப்படையாக பெண்மை உடையவர்களாகவும் மற்றும்/ அல்லது மற்றொரு ஆணுடனான உடலுறவில் தனது ஆசனவாயிலோ வாயிலோ மற்றவரது ஆணுறுப்பைப் பெறுபவராகவும் உள்ள ஆண்கள். கோத்திகள் பல்வேறு நிலைகளில் பெண்மை தன்மை கொண்டவர்களாக இருக்கிறார்கள். சமயங்களில் பெண்களின் ஆடை அணிகலங்களை அணிவதும் உண்டு.

லெஸ்பியன்/ லெஸ்பியன் பெண்: பெண்கள் மீதே குறிப்பிடத் தக்க பாலீர்ப்பையும் காதலையும் கொண்ட பெண்.

LesBiGay: Lesbian, Bisexual, Gay மக்களைக் குறிப்பதற்கான சுருக்கம்.

LGBT சமூகத்தினர்: ஒருபாலீர்ப்பு கொண்ட ஆண்களும் பெண்களும் (Lesbians and gay men), இருபாலீர்ப்பு கொண்ட ஆண்களும் பெண்களும் (bisexual women and men), எதிர்பாலடையாளம் ஏற்கும் ஆண்களும் பெண்களும் (Transgender men and women) ஆகியோரது கூட்டுச் சமூகங்களைக் குறிக்கிறது. தங்களுடைய பாலீர்ப்புகளும், பாலின வெளிப்பாடுகளும் அடையாளங்களும் வேறுபட்டு இருப்பினும், இவை காரணமாக தாங்கள் அனைவரும் ஒதுக்கப்படுவதையும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுவதையும் இந்தச் சமூகத்தினர் ஒன்று கூடி எதிர்த்துப் போராடுகின்றனர். தங்கள் பாலியல் காரணமாக சிறுபான்மைப் படுத்தப்படும் சமூகத்தினர்.

ஆண்மை: பெண்மை என்ற சொல்லைப் போலவே இதுவும் உறுதியான பொருளும் வரையறையும் இல்லாத ஒன்று. உடல் ரீதியாக ஆணாக இருப்பவர் ஒருவரின் சுய வெளிப்பாட்டையும் நடந்துகொள்ளும் விதத்தையும் செயல்களையும், உடைகளையும், பேசும் விதத்தையும் குறிக்கின்றது. ஆனால் எந்த பாலினத்தவரும் தன்னை ஆண்மை உடையவர்களாக அடையாளப்படுத்திக் கொள்ளலாம்.

சமூகத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப ஆண்மை குறித்த பலவித நிலைப்பாடுகளும் எதிர்பார்ப்புகளும் இருப்பதால் "ஆண்மைகள்" என்ற பன்மைச் சொல்லும் பயன்படுத்தப்படுகிறது.

ஆண் (Male) - உடல்/ உயிரியல் ரீதியாக ஆணாக இருப்பது. ஒருவரது பிறப்புறுப்பின் தன்மையைக் கொண்டு நிர்ணயிக்கப்படும் ஒன்று.

ஆங்கிலத்தில் Male என்ற சொல்லுக்கும் Man என்ற சொல்லுக் கும் முக்கியமான வேறுபாடுகள் அறியப்படுகின்றன. தமிழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரண்டு சொற்களுக்குமே "ஆண்" என்ற சொல் பயன்படுத்தப் படுவதால் இந்த வேறுபாடுகள் வெளிப்படாமல் போவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

விளக்கம்: Male என்பது ஒருவரது பிறப்புறுப்பு, உடல், உயிரியல் சார்ந்த அடையாளம். ஒருவரது பால் நிலையைக் *(Sex)* குறிக்கின்றது. ஆனால் Man என்ற சொல் ஒருவரது பாலின வெளிப்பாட்டை *(Gender)* குறிக்கின்றது. உடல் ரீதியாக ஆணாக *(male)* இருக்கும் ஒருவர் தனது பாலின வெளிப்பாடுகளிலோ உள்மனதின் புரிதலிலோ ஆணாக *(Man)* இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. இந்த வேறுபாடு Female/ Women என்ற சொற்களின் பயன்பாடுகளுக்கும் பொருந்தும். இவற்றிற்குத் தமிழில் "பெண்" என்ற ஒற்றைச் சொல்லையே பயன்படுத்துகிறோம்.

ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்கள் (Males who have Sex with Males): உயிரியல்/ உடல் ரீதியாக ஆணாக இருக்கும் ஒருவர் உடல்/ உயிரியல் ரீதியாக ஆணாக இருப்பவர்களிடம் உடலுறவு கொள்வது. Male என்ற உடல்கூறு குறித்த சொல் பயன்படுத்துவதால் இச்சொல் பிறப்பால் ஆணாக இருந்த திருநங்கைகளையும் குறிப்பதாக இன்று வழங்குகிறது.

Men who have Sex with Men என்ற சொற்றொடரில் "ஆண்" என்பது உடல் ரீதியான அடையாளத்தைக் குறிக்காமல் தன்னை ஆண் என்று அடையாளப்படுத்திக் கொள்ளும் எவரையும் குறிக்கும். இந்நிலையில் இது தம்மைத் திருநங்கைகளாக சுய அடையாளப் படுத்திக் கொள்ளும் நபர்களைக் குறிக்காது. மேலும் இது ஒருவருடைய உடலுறவுச் செயல்பாட்டை மட்டும் குறிக்கிறது. ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்கள் தம்மை ஒருபாலீர்ப்புள்ளவராகவோ, இருபாலீர்ப்பு உள்ளவராகவோ, அல்லது எதிர்பாலீர்ப்பு உள்ளவராகவோ இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. எச் ஐ வி/ எய்ட்ஸ் மற்றும் இதர பால்வினை நோய்களின் தடுப்புப் பணியில் ஈடுபடும் பொழுது பாலியல் அடையாளத்திற்கும் பழக்க வழக்கத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகளை அறிவது அவசியம்.

MSM சமூகம்/ மக்கள்: Gay, bisexual *(ஒருபாலீர்ப்பு, இருபாலீர்ப்பு)* என்று தம்மை சுய அடையாளப்படுத்திக் கொள்ளாமல் ஆனால் ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்கள். இத்தகையோர் ஒரு சமூகமாக இணையாது இருக்கும் பொழுதும் இவர்களுக்குள்ள பாலியல் செயல்பாட்டின் ஒற்றுமை காரணமாக சமூகம் *(community)* என்றழைக்கப்படுகின்றனர்.

நிர்வாண் கோத்தி: தங்களது ஆணுறுப்பின் விதைகளையும் ஆண்குறியையும் தன்னிச்சையயாகவே நீக்கம் செய்து பெண் உடை அணியும் கோத்திகள் நிர்வாண் கோத்திகள் என்றழைக்கப் படுகிறார்கள்.

பந்தி: கோத்திகளும் ஹிஜ்ரா மற்றும் அரவானிகளும் பயன் படுத்தும் ஒரு சொல். நிறைந்த ஆண்மை தன்மையுள்ளவர்களாகத் தாங்கள் கருதும் ஆண்களையும் உடலுறவில் ஆண்குறியை உட்செலுத்தும் ஆண்களையும் இப்பெயரால் குறிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய ஆண்கள் பெண்களுடனும் உடலுறவு கொள்பவராக இருக்கிறார்கள். தங்களுடைய நெடு நாள் ஆண் துணைகளையும் "பந்தி" என்ற பொதுப்பெயரிலேயே கோத்திகளும் அரவானிகளும் குறிக்கின்றனர்

Queer /க்யர்: ஆண்-பெண் உறவு தான் நியதி என்ற நிலைப்பாட்டைக் கேள்விக்குள்ளாக்கும் எவரும். இவர்கள் ஒருபாலீர்ப்பு கொண்டவர்களாகவோ, இருபாலீர்ப்பு கொண்டவர் களாகவோ, பால் மாற்றம் விரும்பி ஏற்பவர்களாகவோ இருக்கலாம். இந்தச் சொல் முதலில் ஒருபாலீர்ப்பு கொண்டவர்களை வெறுத்து ஒதுக்குபவர்களால் ஒரு அவதூறுச் சொல்லாகப் பயன்படுத்தப் பட்டது. ஆனால் இந்த மொழிப் பயன்பாட்டை மாற்றி அவமானச் சொற்களாய்த் திரும்பப் பெறும் அரசியல் செயல்பாட்டின் காரணமாக "க்வீயர்" (Queer) என்ற இச்சொல் சுய அடையாளமாகப் பயன்படுத்தப்படுகிறது. சில சமயங்களில் எதிர்பாலீர்ப்புள்ள வர்களும் (heterosexuals) ஆண்-பெண் உறவு நியதியைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதன் அடையாளமாகத் தங்களை "க்வீயர்" என்று அடையாளப்படுத்திக்கொள்வதுண்டு.

பால் (Sex): (1) ஆண், பெண், இடை பால் நிலை என்று மரபணு, உயிரியல், மற்றும் உடல் ரீதியான பிரிவினைக்கென மருத்துவத் துறையில் பயன்படுத்தப்படுவது; (2) ஆண், பெண், இடைப்பட்ட பால் நிலை என்று ஒருவரது உடல் ரீதியான அடையாளம். (3) மற்றவர்களுடன் தனது ஈர்ப்பை வெளிப்படுத்தவோ உடலின்பம் பகிர்ந்து கொள்வதற்காவகவோ மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள்.

பாலியல்பு: இச்சொல் பல கூறுகளை உள்ளடக்கியிருக்கிறது. மனிதர்களின் பாலியல் என்பது தனி நபர்களின் பாலியல் குறித்த அறிவு, நம்பிக்கைகள், கருத்துக்கள், மதிப்பீடுகள், பழக்க வழக்கங்கள் ஆகிய அனைத்தையும் குறிக்கும். உடல் மற்றும் உயிரியல்-வேதியியல் காரணிகளும், சுய அடையாளம், வெளிப்பாடு, உணர்வுகள், எண்ணங்கள் உறவுகள் ஆகியவையும் இதனுள் அடங்கும். ஒருவருடைய பாலியல் சார்ந்த வெளிப்பாடு பல விஷயங்களைச் சார்ந்திருக்கிறது. ஒருவரது ஆன்மீகம், மத நம்பிக்கைகள், பண்பாடு குறித்த கேள்விகள், நீதி பற்றிய புரிதல்கள் ஆகியவை அவரது பாலியல் வெளிப்பாட்டின் மீது குறிப்பிட்டத் தாக்கத்தை ஏற்படுத்தும்.

பாலியல் அடையாளம்: இதன் முதல் நிலை பாலுணர்வு கொண்ட ஒருவராகத் தன்னை அறிவது. ஒருவருடைய பாலியல் வெளிப்பாடும் பாலின அடையாளமும் கூட இதில் அடங்கும். ஒருவருடைய பாலியல் அடையாளம் வெளியிலிருந்து வழங்கப் படவோ நிர்ணயிக்கப்படவோ கூடாது என்று அவருடைய சுயத்தின் வெளிப்பாடாய், சுய அறிவித்தல் மூலம் அறியப்பட வேண்டும் என்று பலர் நம்புகின்றனர்.

பாலியல் சிறுபான்மையினர்/ பாலியல் சிறுபான்மையினர் சமூகம்: ஒருபாலீர்ப்பு கொண்டவர்கள், இருபாலீர்ப்பு கொண்ட வர்கள், பால் மாற்றம் விரும்பி ஏற்பவர்கள் ஆகியோரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கிறது. பெரும்பான்மை ஆண்-பெண் ஈர்ப்புடையவர்கள் இருக்கும் சமூகத்தில் பாலியல் ரீதியாக சிறுபான்மையாக இருப்பவர்கள்.

பாலியல் நிலைப்பாடு: ஒருவருடைய மன ரீதியான ஈர்ப்புகள், உடல் சார்ந்த விழைவுகள், காதல் போன்றவை. இவை அதே பாலினத்தவரிடமோ, எதிர் பாலினத்தவரிடமோ, இரு பாலினத்தவரிடமோ இருக்கலாம்.

- எதிர்பாலீர்ப்பு: தன் பாலடையாளத்திற்கு எதிர் பாலடையாளத்தில் இருப்பவர்களுடனான ஈர்ப்பு, காதல், காமம் (ஆண்-பெண், பெண்-ஆண் உறவுகள்)
- இருபாலீர்ப்பு: இரு பாலினத்தவருடனுமான ஈர்ப்பு, காதல், காமம் ஆகியவை
- ஒருபாலீர்ப்பு: அதே பாலடையாளத்தில் இருப்பவர்களுடனான ஈர்ப்பு, காதல், காமம் ஆகியவை (ஆண்-ஆண், பெண்-பெண் உறவுகள்)

1890-ற்கு முன்னர் "எதிர்பாலீர்ப்பு" என்ற சொல்லோ, "ஒருபாலீர்ப்பு" என்ற சொல்லோ வழக்கத்தில் இல்லை.

பாலினம் கடப்பவர்கள் (Transgender(ed) persons): சமூகத்தில் வழக்கமாக ஏற்றுக்கொள்ளப்படும் பாலின நியதிகளைத் தாண்டுபவர்கள். ஆண்/ பெண் என்ற குறுகிய ஈரிணை அமைப்பிலிருந்து தம்மை விலக்கி வழக்கத்திற்கு மாறான பாலின வெளிப்பாட்டினைக் கொண்டவர்கள். இவர்கள் அவ்வப்பொழுதோ அல்லது எப்பொழுதும் எதிர் பாலினத்தவரின் நடை, உடை, பழக்க வழக்கங்களை ஏற்றுச் செயல்படுபவர்களாக இருக்கிறார்கள். எனினும் இவர்கள் பால் மாற்று சிகிச்சை செய்வதற்கு முந்தைய நிலையிலோ, செய்து கொண்டவர்களாகவோ, செய்துகொள்ளும் எண்ணம் இல்லாதவர்களாகவோ இருக்கலாம்.

Transsexual: இவர்களுடைய பாலின அடையாளம் முழுமையாக எதிர் பாலினத்தவருடையதாக இருக்கிறது. இவர்கள் ஆண்களாக இருந்து பெண் பாலடையாளத்திற்கு மாறுபவர்களாகவும் ஆண் பாலடையாளம் ஏற்கும் பெண்களாகவும் இருக்கலாம். இவர்கள் பால் மாற்று சிகிச்சை செய்வதற்கு முந்தைய நிலையிலோ, செய்து கொண்டவர்களாகவோ, செய்துகொள்ளும் எண்ணம் இல்லாதவர்களாகவோ இருக்கலாம்.

Transvestite - ட்ரான்ஸ்வெஸ்டைட் - பாலியல் கிளர்ச்சிக்காகவும், திருப்திக்காகவும் எதிர் பாலினத்தவரின் ஆடைகளை அணிபவர்கள். இவர்கள் வழக்கமாக பெண்களுடைய ஆடைகளை விரும்பி அணியும் ஆண்களாக இருக்கின்றனர். இவர்கள் Crossdressers என்றும் அழைக்கப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய தண்டனைச் சட்டம் - பிரிவு 377

■ அனிருத்தன் வாசுதேவன்

எவரொருவர் தன்னிச்சையாக ஆண், பெண் அல்லது விலங்குடன் இயற்கைக்கு மாறான புணர்ச்சியில் ஈடுபடுகிறாரோ, அவருக்கு வாழ் நாள் முழுதிற்குமான சிறை தண்டனை அல்லது பத்தாண்டு சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

இந்தச் சட்டம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் லார்ட் மெக்காலேவினால் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் படி ஒரு ஆணோ அல்லது பெண்ணோ, தன்னிச்சையாகக் கூட, அதே பாலினத்தைச் சேர்ந்த நபருடன் உடலுறவு கொள்ளும் பொழுது குற்றவாளியாகிறார். இதற்கு அதிகபட்ச தண்டனையாக வாழ்நாள் முழுவதிற்குமான சிறை தண்டனை விதிக்கப்படலாம். கடந்த பல ஆண்டுகளில் இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் தண்டனை விதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே. ஆனால் எண்ணற்ற சந்தர்ப்பங்களில் ஒருபாலீர்ப்பு கொண்ட ஆண்களையும் பெண்களையும் மிரட்டுவதற்கும் அச்சுறுத்துவதற்கும் இந்தச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட் டுள்ளது.

தனிமனித செயல்பாடுகளை தண்டனைக்குரிய குற்றமாக்கும் இந்தச் சட்டம் மனித உரிமை மீறல்களைச் செயல்முறைபடுத்து கிறது. இந்தச் சட்டப்பிரிவிற்கு எதிரான மனித உரிமை போராட்டம் 2001ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. நாஸ் அறக்கட்டளை (இந்தியா) என்கிற அமைப்பு தில்லியில் எச்.ஐ.வி/ எய்ட்ஸ் நோய் விழிப்புணர்வு, தடுப்பு மற்றும் பாதிக்கப்பட்டோர் பராமரிப்பு ஆகிய பணிகளைப் பல ஆண்டுகளாகச் செய்து வருகிறது. இப்பணியில் "ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்களை" அணுகி அவர்களுக்கு எச்.ஐ.வி/ எய்ட்ஸ் மற்றும் இதர பால்வினை நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுதுவது, நோய் தடுப்புமுறைகளை தெரிவிப்பது, தங்களைப் பரிசோதித்துக்கொள்ள ஊக்கமளிப்பது போன்றவை இவர்களது பணியில் அடங்கும். ஆனால் இப்பணியை நிறைவேற்றச் செல்லும் நாஸ் அறக்கட்டளை யின் outreach workers காவல் துறையினரின் துன்புறுத்துதல்களுக்கு ஆளாகினர். தண்டனைக்குரிய குற்றமொன்றை இவர்கள் தூண்டுவ தாகவும், ஆணுறை வழங்கி ஊக்குவிப்பதாகவும் கூறி காவல் துறையினர் இவர்களது முக்கியமான பணிக்குத் தடையாக இருந்தனர். இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 377,

PUBLIC LIBRARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபாலீர்ப்பையும் பாலியல் செயல்பாட்டையும் தண்டனைக்குரிய குற்றமாக இருப்பது ஒரு நிலையில் முக்கிய மனித உரிமைமீறலாக இருப்பதும் மருத்துவ, சுகாதாரப் பணிக்குத் தடையாக இருப்பதையும், ஒரு குறிப்பிட்ட பாலியல் விழைவும், செயல்பாடும் கொண்ட மக்களை அச்சுறுத்தி அவர்கள் மருத்துவ சேவை பெறுவதற்குத் தடையாக இருப்பதையும் கண்டு நாஸ் அறக்கட்டளை இதனை எதிர்த்து 2001 ஆம் ஆண்டு தில்லி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

பலமுறை வாதங்கள் கேட்கவும் ஒரு முறை வழக்கு நிராகரிக்கவும் பட்டது. எனினும் பொதுநலனைக் கருதித் தொடரப்பட்ட வழக்கு (Public Interest Litigation - PIL) என்பதாலும் பல்லாயிரக் கணக்கான நபர்களின் மனித உரிமை தொடர்பான வழக்கு என்பதாலும் அதனை உடனடியாக கவனிக்கும்படி உச்சநீதிமன்றம் 2006ல் தில்லி உயர்நீதிமன்றத்திடம் கூறியது. (2006 ஆம் ஆண்டிலும் எச்.ஐ.வி தடுப்புப் பணியில் ஈடுபட்டிருப்போர் மற்றும் ஒருபாலீர்ப்பு கொண்ட ஆண்கள் மீது காவல் துறையினரின் வன்முறை நிகழ்ந்தது என்பதும் அது அதிக அளவில் பேசப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது). இறுதியாக, 2009 ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் நாள் நீதிபதிகள் ஏ.பி. ஷா மற்றும் முரளீதர், நாஸ் அறக்கட்டளை மற்றும் இந்திய யூனியனுக்கு எதிரான வழக்கில் தீர்ப்பு வழங்கினர். இந்தத் தீர்ப்பின் சாரம் வருமாறு:

18 வயதிற்கு மேலான, தன்னிச்சையாக ஈடுபடுபவர்களது தனிமனித செயல்பாட்டைத் தண்டனைக்குரிய குற்றமாக்குவதால் இந்தச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்துகள் 21, 14 மற்றும் 15 ஆகியவற்றை மீறுகிறது. (Alternative Law Forum. Ed. The Right that Dares to Speak its Name: Naz Foundation Vs. Union of India and Others. August 2009, Bangalore. p.12)

ஷரத்துகள் 21, 14, 15 ஆகியவை முறையே மதிப்பு, சம உரிமை, மற்றும் சுதந்திரத்திற்கான உரிமைகளைக் குறிக்கின்றன: Right to dignity, equality and freedom respectively.

இந்தத் தீர்ப்பு ஒருபாலீர்ப்பு மற்றும் செயல்பாடுகளைக் குற்றமற்றவை என்று அறிவித்தது. இதனால் இனி இவர்களைச் சட்டத்தின் பேரில் துன்புறுத்துவதும் வன்முறைக்கு உள்ளாக்குவதும் கடினமாகிறது. இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 377 வருவதற்கு முன் ஆண்-பெண் உறவல்லாத மற்றவை ஒருவித அருவருப்புடனே பார்க்கப்பட்டன. எனினும் அது அத்தகைய அருவருப்பாக மட்டுமே இருப்பதற்கும் அது சட்ட வடிவம் பெற்று ஒரு சமூகத்தினரது அடிப்படை உரிமைகளை மீறும் விதத்தில் அமைவதற்கும் வேற்றுமைகள் பல. எனினும் இரண்டிற்கும் அடிப்படையாக அமைவது ஆண்-பெண் உறவல்லாத எதுவும் இயற்கைக்கு புறம்பானவை என்ற கருத்தியலே.

பிரிவு 377 போன்ற சட்டங்கள் விளைவிக்கும் பாகுபாடுகள் குறித்து தில்லி உயர்நீதிமன்றம் இவ்வாறு கூறுகிறது: "மக்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகுபடுத்தும் எதுவும் சமத்துவத்தைக் குலைக்கிறது. சமத்துவம் போற்றும் ஒன்றே மனிதர்களிடையே சுயமதிப்பை வளர்க்கும்." (Judgment, Naz Foundation India Vs Union of India and Others, Honourable Dr. Justice S. Muralidhar, 2 July 2009, para 131, page 104)

இந்த வழக்கிற்கு எதிர் வழக்கு தொடர்ந்திருந்த/ பதிலளித்த இந்திய அரசின் உள்துறை அமைச்சகம் மற்றும் பி.பி. சிங்கால் போன்ற தனிநபர்கள் ஒருபாலீர்ப்பைக் குற்றமற்றதாக்குவது சமூகத்தின் ஒழுக்க நிலையை சீர்குலைக்கும் என்றும் சட்டம் என்பது இத்தகைய அறம் (moral) சார்ந்த பார்வைக்கு அப்பாற்பட்டதன்று என்றும் கூறியிருந்தனர். இதுகுறித்து இவ்வழக்கின் தீர்ப்பு இவ்வாறு கூறுகிறது: "ஒரு சில நடவடிக்கைகள் குறித்த வெகுசன சமூகத்தின் அறம் சார்ந்த பார்வையும் மறுப்பும் ஷரத்து 21-ன் கீழ் வழங்கப்படும் அடிப்படை மனித உரிமையைத் தடை செய்வதற்கு தகுந்த காரணங்கள் ஆகமுடியாது... அரசியல் சட்டதிற்கென்று ஒரு அறம் உண்டு, அது காலம்தொட்டும் மனிதருக்கு மனிதர் மாறும் வெகுசன அறத்திலிருந்து மாறுபட்டது." (Judgment, Naz Foundation India Vs Union of India and Others, Honourable Dr. Justice S. Muralidhar, 2 July 2009, para 79, page 64). மேலும், "பெரும்பான்மை சமூகத்தின் கருத்தெனினும் அது அரசியல் சட்டத்தின் அறத்திற்கு முரணாக இருப்பின், ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல" (ibid., para 86, page 72) என்றும் இத்தீர்ப்பு கூறுகிறது.

இது ஒரு குறிப்பிட்ட மாநில உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பெனினும் இந்திய நீதித் துறையின் அமைப்பின்படி இது மற்ற நீதிமன்றங்களுக்கு முன்மாதிரியாகச் செயல்படும். மேலும் இத்தீர்ப்பு அரசிலமைப்புச் சட்டம் இந்தியக் குடிமக்களுக்கு வழங்கும் உரிமைகளைச் சார்ந்து வழங்கப்பட்டுள்ள ஒன்று. இந்திய அரசிலயமைப்புச் சட்டம் வழங்கும் உரிமைகள் மாநில எல்லைகளுக்கு அப்பாற்பட்டவை.

தில்லி உயர்நீதிமன்றத்தின் இத்தீர்ப்பை எதிர்த்து பல அமைப்புகளும் தனி நபர்களும் உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்துள்ளனர். ஒருபாலீர்ப்பும் செயல்பாடுகளும் இந்திய சமூகத்திற்குக் கேடு விளைவிக்கும் என்ற தங்களது கருத்தின் அடிப்படையில் இந்த எதிர் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும், இந்தியாவின் மற்ற உயர் நீதிமன்றங்கள் எவையும் இந்தத் தீர்ப்பினை மறுக்கும் வரையில் இது நாடு முழுவதிற்கும் பொருந்தும்.

சான்றுக் குறிப்புகள்

Judgment, Naz Foundation India Vs Union of India and Others, Honourable Dr. Justice S. Muralidhar, 2 July 2009

Alternative Law Forum. Ed. The Right that Dares to Speak its Name: Naz Foundation Vs. Union of India and Others, August 2009, Bangalore

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுப் பாலியல் இயக்கம் : நிகழ்வுகள் அட்டவணை

1860

ஆங்கிலேய அரசு தனது காலனிகளில் (இந்தியா உட்பட) ஓரினப்புணர்ச்சிக்கு எதிராக, குறிப்பாக ஆசனவாய் புணர்ச்சிக்கு (sodomy) எதிரான குற்றவியல் சட்டம் பிரிவு 377-ஐ அமுலுக்குக் கொண்டு வந்தது.

1941

உருது மொழி எழுத்தாளர் இஸ்மத் சுக்தாய் அவர்களின் "லிஹாஃப்" சிறுகதை பிரசுரமாகி மிகுந்த சர்ச்சைக்குள்ளானது. இரு பெண்களுக்கிடையிலான பாலியல் உறவைப் பற்றி இருந்ததால் மிகுந்த கண்டனத்திற்கு ஆளானது.

1978

கணித மேதை சகுந்தலா தேவி தன் திருமணம் மற்றும் கணவர் பற்றிய அனுபவங்களிலிருந்து "The World of Homosexuality" என்ற நூலை எழுதினார்

1986

இந்தியாவின் முதல் எச்.ஐ.வி தொற்று கண்டுபிடிக்கப்பட்டது

பிப்ரவரி - அசோக் ராவ் கவி தனது ஒருபாலீர்ப்பு பற்றி "சாவி" (Savvy) மாத இதழில் கூறியிருந்தார்.

ஏப்ரல் - போபாலில் ஹிஜ்ரா சமூகத்தினருக்காக மாநாடு நடைபெற்றது

1987 ஜனவரி

பெங்களூரில் "சிநேக சங்கம்" அமைப்பு தொடங்கப்பட்டது.

"த்ரிகோன்" என்பது அமெரிக்காவில் உள்ள மாற்றுப் பாலியல் கொண்ட தென்னாசிய நாடுகளைச் சேர்ந்த மக்களின் அமைப்பாகும். இந்தியாவில் "சொசய்டி" மாத இதழ் இந்த அமைப்பு குறித்த பத்தி ஒன்றை வெளியிட்டது.

ஜூலை - கனடாவில் டொரான்டோ நகரில் "குஷ்" அமைப்பு தொடங்கப்பட்டது

திசம்பர் - போப்பாலைச் சேர்ந்த பெண் காவல் அதிகாரிகள் லீலாவும் ஊர்மிலாவும் திருமணம் செய்து கொண்டனர். இதன் காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

1989

எச்.ஐ.வி தொற்று இருப்பதாகத் தெரிய வந்ததால் கோவாவைச் சேர்ந்த டாமினிக் டிசூசா என்பவர் கைது செய்யப்பட்டுத் தனி சிறையில் வைக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990

தில்லியில் ஒருபாலீர்ப்பு கொண்ட ஆண்களுக்காக "ரெட் ரோஸஸ்" குழுமத்தின் சந்திப்புகள் தொடங்கின.

ஏப்ரல் - லீலா சாவ்டா என்ற பெண்ணின் தந்தை அவரது துணைவரான தாருலதா என்பவருக்கு எதிராக ஐபிசி பிரிவு 377ன் கீழ் வழக்குப் பதிவு செய்தார்

ஜூன் - "பாம்பே தோஸ்த்" இதழ் வெளிவந்தது

செப்டம்பர் - குல்பர்காவில் "ஃப்ன்ாடம்" செய்தியிதழ் வெளிவந்தது

திசம்பர் - கொல்கத்தாவில் மாற்றுப் பாலியல் கொண்டோரின் சந்திப்புகளுக்காக "ஃபன் கிளப்" தொடங்கப்பட்டது

ஃபிர்தௌஸ் காங்கா என்பவர் தனது இருபாலீர்ப்பு மற்றும் மாற்று உடல் திறன் குறித்த "Trying to Grow" என்ற நூலை வெளியிட்டார். இது பின்னர் திரைப்படமாக்கப்பட்டது.

1991

திசம்பர் - கொல்கத்தாவில் "பிரவர்தக்" இதழ் வெளியிடப் பட்டது

ஜூலை - தில்லியில் "சகி" பெண்கள் அமைப்பு தொடங்கப் பட்டது

நவம்பர் - இந்தியாவில் ஒருபாலீர்ப்பு குறித்த முதல் குடிமக்கள் அறிக்கையான "Less Than Gay" "எய்ட்ஸ் பேத்பாவ் விரோதி ஆந்தோலன்" (எய்ட்ஸ் பாகுபாட்டை எதிர்க்கும் இயக்கம்) என்ற அமைப்பால் வெளியிடப்பட்டது

1992

ஜனவரி - இலங்கையில் "Companions on a Journey" அமைப்பு தொடங்கப்பட்டது

சமூக ஆர்வலர் சித்தார்த்தா கௌதம் புது தில்லியில் மரணமடைந்தார்

பிப்ரவரி - "ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்கள்" மத்தியில் எச்.ஐ.வி தடுப்புப் பணிக்காக "உடான்" அமைப்பு பம்பாயில் தொடங்கப்பட்டது

மே - எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்படவர்களின் உரிமைக்காகப் பணி செய்த டாமினிக் டிசூசா மரணமடைந்தார்

அரவிந்த் கால என்பவர் எழுதிய "The Unknown World of the Indian Homosexual" என்ற நூல் வெளிவந்தது

1993

ஜனவரி - "சித்தார்த கௌதமின் நண்பர்கள்" குழு அவரது நினைவில் தில்லியில் மாற்றுப் பாலியல் குறித்த திரையிடல் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது. சுமார் 400 பேர் பங்குகொண்டனர்.

ஆகஸ்ட் - கொல்கத்தாவில் "Counsel Club" தொடங்கப்பட்டது

செப்டம்பர் - புது தில்லில் "ஆரம்ப்" இதழ் வெளியிடப்பட்டது

திசம்பர் - "நாஸ்" மற்றும் "சகி" அமைப்புகள் இணைந்து புது தில்லியில் மாற்றுப் பாலியல் குறித்த கருத்தரங்கை ஒழுங்கு செய்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்ட்ஸ் தடுப்புப் பணிக்கென பெங்களூரில் "சம்ரக்ஷா" அமைப்பு தொடங்கப்பட்டது

1994

பிப்ரவரி - பெங்களூரில் Good As You (G.A.Y) குழுவின் சந்திப்புகள் தொடங்கின

ஏப்ரல் - இந்தியாவில் ஹம்சஃபர் அறக்கட்டளை பதிவு செய்யப்பட்டது

ஜூன் - தில்லி திஹார் சிறைச்சாலையில் ஆணுறை விநியோகிக்க அனுமதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து ABVA அமைப்பு ஐ.பி.சி. பிரிவு 377ஐ எதிர்த்து வழக்குப் பதிவு செய்தது.

திசம்பர் - நாஸ் மற்றும் ஹம்சஃபர் அமைப்புகள் இணைந்து பம்பாயில் ஒருபாலீர்ப்பு கொண்ட ஆண்களுக்கான கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கு செய்தன

1996

நாஸ் இந்தியா அறக்கட்டளை தனது தொலைபேசி உதவி சேவையைத் தொடங்கியது: பெண்களுக்கென "சங்கினி" சேவையும் ஆண்களுக்கென "ஹம்ராஸ்" சேவையும் இதில் அடங்கும்.

ஏப்ரல் - பீஹாரைச் சேர்ந்த காளி என்பவர் தேர்தலில் போட்டியிட்ட (Judicial Reforms Party) முதல் ஹிஜ்ரா ஆனார்.

ஜூன் - மும்பையில் "ஸ்த்னா சங்கம்" அமைப்பு பெண்களை நேசிக்கும் பெண்களுக்கான முதல் தேசிய அளவிலான ஒன்றுகூடலினை ஒழுங்கு செய்தது

அக்டோபர் - லக்னோ நகரில் தான் இந்தியாவிலேயே அதிகமான ஓரினச்சேர்க்கை நடப்பதாக Outlook இதழ் செய்திக் கட்டுரை வெளியிட்டது

ராஜ் ராவ் அவர்களின் கவிதைகளைத் தழுவிய "பாம்கே" என்ற திரைப்படத்தை ரியாத் வாடியா என்பவர் வெளியிட்டார்

கீதி தடானி அவர்களின் "சகியானி: பண்டைய மற்றும் நவீன இந்தியாவில் லெஸ்பியன் விழைவு" என்ற நூல் வெளியானது

தீபா மெஹ்தாவின் மிகுந்த சர்ச்சைக்குள்ளான திரைப்படமான Fire வெளிவந்தது.

1997

ஃ தர்பன் என்னும் இதழ் தில்லியில் வெளயிடப்பட்டது.

கல்கத்தாவின் மஹிலா சமன்வாய் சமிதி ஆண் பாலியல் தொழிலாளிகளைத் தமது இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளும் முடிவெடுத்தது.

ஆகச்த்: த்ரிகொன் பத்திரிக்கைகள் இந்தியச் சுங்க அலுவலரால் பறிமுதல் செய்யப்பட்டன.

செப்டம்பர்: பெங்களூரில் சப்ரங் என்னும் குழு தொடங்கப் பட்டது.

செப்டம்பர்: பெங்களூரில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக் கழகத்தில் ஒர்பாலினச் சேர்க்கை பற்றியக் கருத்தரங்கம் நடத்தப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்: ராஞ்சியில் நடந்த தேசியப் பெண்கள் மாநாட்டில் பெண்களை விரும்பும் பெண்களுக்கான தனி அரங்கு அமைக்கப்பட்டது.

திரைப்படங்கள்:

தமன்னா- பரேஷ் ராவல்.

தர்மியா- கல்பனா லாஜ்மி

புத்தகங்கள்:

Sex, Longing and Not Belonging- A Gay Muslim's Quest for Love and Meaning- பத்ருதீன் கான்.

கல்லூரி இணை நூலகம் மாநகராட்சி யாழ்ப்பாணம்

1998

நவம்பர்: 'ஃபயர்' திரைப்படம் வெளிவந்து அது ஓடிய திரையரங்குகள் சேதப்படுத்தப்பட்டன.

பிப்ரவரி: சங்க மித்ரா என்னும் இதழ் பெங்களூரில் கன்னடத்திலும் ஆங்கிலத்திலும் வெளிவந்தது.

ஏப்ரல்: ஸாரனி என்னும் குழு ' சங்கீதத்துடன் வெளியே வரல்' என்னும் நிகழ்ச்சியை நடத்திப் பாலியல்பு பற்றிய விஷயங்களை வெளிக்கொணர்ந்தது.

சென்னையில் ஒருபாலீர்ப்பு கொண்ட ஆண்களுக்கான பாலியல் சுகாதார சேவைக்காகச் "சகோதரன்" அமைப்பு தொடங்கப்பட்டது.

திரைப்படங்கள்:

பாம்பே பாய்ஸ்: கைசாத் குச்தாத்.

புத்தகங்கள்:

'on a muggy night in mumbai' - மஹேஷ் தத்தானீ.

Neither man nor woman: the hijras of india: செரீனா நந்தா.

1999

இலங்கையில் 'விமென்ச் சப்பொர்ட் க்ருப்' என்னும் குழு உருவாக்கப்பட்டது.

ஜனவரி: 'கெம்பையின் ஃபொர் லெஸ்பியன் ரைட்ஸ்' (கலெரி) என்னும் குழு ஃபயர் திரைப்படத்திற்கு எதிரான தாக்குதலை எதிர்க்க உருவானது.

பிப்ரவரி: ஒர் பாலினச் சேர்க்கை ஆண்கள், பெண்கள் மற்றும் இருபால் சேர்க்கையினரின் உரிமை பற்றிய விவரப்படிவத்தின் முதல் பதிப்பு ஹம்ஜின்சி அமைப்பினால் வெளியிடப்பட்டது.

பிப்ரவரி: தேசிய பாலியல்பு பற்றிய மாநாடு- ஹைதெராபாத்.

ஜுன்: கல்கத்தாவில் ஓர்பாலினச் சேர்க்கைப் பெண்களுக்கான சாஃபொ அமைப்பு தொடங்கப்பட்டது.

ஆகஸ்ட்: 'காமொஷ், எமெர்ஜென்சி ஜாரி ஹை' என்னும் புத்தகம் கலெரியால் வெளியிடப்பட்டது.

திரைப்படங்கள்:

சட்னி அண்ட் பாப்கார்ன்: நிஷா கனாத்ரா.

சம்மர் இன் மை வேஇன்ஸ்: நிஷித் சரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்கள்:

' facing the mirror' - அஷ்வினி சுக்தான்கர்.

' yaarana'- ஹொஷாங் மெர்ச்சண்ட்.

2000

மார்ச்சு: ஷப்னம் மௌசி என்னும் அரவானி மத்தியப் பிரதேசத்தில் தேர்தலில் வெற்றி பெறுகிறார்.

ஜனவரி: தில்லியில் முதல் முறையாக வெளிப்படையாக ஒர்பாலினச் சேர்க்கையர் பற்றியத் திரைப்படவிழா நடத்தப் படுகிறது.

பிப்ரவரி: சாதி அமைப்பு சென்னையில் துவங்கப்பட்டு எச்.ஐ.வி பற்றிய பணியில் ஈடுபடுகிறது.

மார்ச்சு: 172ஆவது சட்ட மசோதா இந்திய குற்றவியல் சட்டத்தின் 377 பிரிவை அகற்றுமாறு பரிந்துரை அளிக்கிறது.

ஜுன்: இலங்கையின் பத்திரிக்கையாளர்கள் குழு ஒர் பாலினச்சேர்க்கைப் பெண்களுடன் பாலியல் வன்முறையில் ஈடுபடுவது சரி என்று எழுதிய ஒரு பத்திரிக்கையின் செயலைப் பாராட்டியது.

நவம்பர்: இந்திய மனித உரிமை ஆணைக்குழுவும் பிரிவு 377ஐ மாற்றியமைக்குமாறு பரிந்துரைத்தது.

புத்தகங்கள்:

Same sex love in india- ரூத் வனிதா, சலீம் கித்வாய்.

2001

நேப்பாலில் ப்லூ டைமண்ட் சொசைட்டி என்னும் அமைப்பு துவங்கப்படுகிறது.

குஜராத்தியில் முதல் முறையாகப் பாலியல்பு பற்றிய 'லக்ஷ்யா' என்னும் இதழ் வெளிவந்தது.

ஜூலை: லக்னௌ நகரில் நாச் அமைப்பில் பணிபுரிபவர் பிரிவு 377இன் கீழ் கைது செய்யப்பட்டு, நாச் மற்றும் பரொசா ட்ரஸ்ட் அமைப்புகளின் அலுவலகங்கள் திடீர் சோதனை செய்யப்படுகின்றன.

டிசம்பர்: நாச் அமைப்பு பிரிவு 377ஐ மாற்றியமைக்க தில்லி உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்கிறது.

புத்தகங்கள்:

' queering india'- ரூத் வனிதா.

2002

ஆகஸ்ட்: ஹிஜ்ரா ஹப்பா விழா பெங்களூரில் நடைபெருகிறது.

மார்ச்: பெங்களூரில் உள்ள சங்கமா அமைப்பின் மீது போலீசார் தாக்குதல் நடத்தினர்.

செப்டம்பர்: கீதலக்ஷ்மி மற்றும் சுமதி என்னும் காதலர்கள் தமிழகத்தில் தற்கொலை செய்துகொண்டனர்.

அக்டோபர்: கேரளத்தில் ஒர்பாலினச் சேர்க்கைப் பெண்களுக்கான சஹயாத்ரிகா அமைப்பு தொடங்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்: ஃபாஷன் டிசைனர் வெண்டெல் ரொட்ரிகுயெஸ் தமது காதலர் ஜெரொமை கொஆவில் மணம் புரிகிறார்.

திரைப்படங்கள்:

'Flying with one wing'- அசோகா ஹந்தகம, இலங்கை.

'Mango souffle'- மஹேஷ் தத்தானீ.

'Gulabi aaina'- ஷ்ரிதர் ரங்காயன்

புத்தகங்கள்:

'The man who was a woman and other tales from Hindu lore'- தேவ்தத் பட்னாயக்.

2003

ஆகஸ்ட்: நேபாலில் 'ப்லூ டைமண்ட் சொஸைட்டி' முதல் முறையாக ப்ரைட் அணிவகுப்பு தொடங்கினர்.

அக்டோபர்: பம்பாயில் முதல் சர்வதேச பாலியல்பு பற்றிய திரை விழா நடந்தது.

ஜூன்: கல்கத்தாவில் 'வானவில் அணிவகுப்பு' என்று அழைக்கப்பட்ட ப்ரைட் அணிவகுப்பு நடைபெற்றது.

திசம்பர்: சென்னையில் மாற்றுப் பாலியல் கொண்ட மக்களின் குழுவான விறி தொடங்கப்பட்டது.

புத்தகங்கள்:

'The trouble with islam'- இர்ஷாத் மான்ஜி.

'the boyfriend' - ராஜா ராவ்

2004

ஜூன்: 'ஈக்குவல் க்ரௌண்ட்' என்னும் அமைப்பு இலங்கையில் தொடங்கப்படுகிறது.

ஜூலை: சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஒரு ரிட் மனு விஷயத்தில் பதிலளித்த நீதிபதிகள் அரவானிகளுக்குக் குடும்ப அட்டைகளும் மற்ற அடையாள அட்டைகளும் வழங்கப்பட வேண்டும் என்று அறிவித்தனர்.

ஆகஸ்ட்: 'கிர்ல்ஃப்ரெண்ட்' என்னும் ஓர் பாலினச் சேர்க்கைப் பெண்கள் பற்றிய திரைப்படத்தைக் காட்டிய திரைஅரங்குகள் மீது தாக்குதல்.

செப்டம்பர்: தில்லி உயர் நீதி மன்றம் நாஸ் வழக்கை ரத்து செய்கிறது. அதே ஆண்டு உச்ச நீதி மன்றத்தின் அழுத்தத்தால் மீண்டும் உயர் நீதி மன்றத்துக்குக் கொண்டுவரப்படுகிறது. 'வாய்சஸ் அகென்ஸ்ட் 377' என்னும் பல அமைப்புகள் கூடிய குழுவும் இவ்வழக்கில் பங்கெடுக்கத் தொடங்கியது.

திரைப்படங்கள்:

சன்சாரம்: லிஜி புல்லப்பல்லி, மலையாளம்.

'a touch of pink' - இயன் இக்பால் ரஷித்.

'yours emotionally'- ஷ்ரிதர் ரங்காயன்.

'happy hookers' - ஆஷிஷ் சௌனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்கள்:

'madras on rainy days' - சமீனா அலி.

'swimming in the monsoon sea'- ஷ்யாம் செல்வதுரை

'Babyji' - ஆபா தாரெஷ்வர்.

2005

ஜனவரி: ப்லூ டைமண்ட் சொசைடி வார இதழ் வெளியிட தொடங்கியது.

மார்ச்: ஓரினச்சேர்க்கை ஆளான ஒரு நீச்சல்ஆட்டக்காரர் மற்றும் எய்ட்ஸ் உள்ளவர் பற்றிய ஒரு கதை 'மை ப்ரதர் நிகில்' என்கிற படமாக எடுத்து வெளியிடப்பட்டது.

ஜூலை: இலங்கையில் முதல் ப்ரைட் ஊர்வலம் நடைபெற்றது.

திரைப்படங்கள்:

'மை ப்ரதர் நிகில்' - ஒனிர் சென்.

' ஷப்னம் மௌசி' - யொகெஷ் பரத்வாஜ்.

புத்தகங்கள்:

'Because I Have a voice' - அர்விந்த் நராயன் மற்றும் கௌதம் பான்.

'impossible desires: queer diasporas and south asian public cultures'- காயத்ரி கொபினாத்.

' love is rite: same sex marriage in India and the west' - ரூத் வனிதா.

2006

சென்னையில் மிகப்பெரிய அணிவகுப்பு ஒன்றை அரவானிகள் மேற்கொண்டனர். இதன் பின் தங்களது கோரிக்கைகளை அரசிடம் சமர்ப்பித்தனர்.

எழுத்தாளர் விக்ரம் செத் எழுதி பல முக்கிய நபர்களால் கையெழுத்திடப்பட்ட கடிதம் இந்திய அரசிற்கு அனுப்பப்பட்டது.

ஜனவரி: நான்கு ஓரினச்சேர்க்கை ஆண்கள் லக்னௌ நகரில் கைது செய்யப்படுகின்றனர்.

மார்ச்: ஓர்பாலினச் சேர்க்கை ஆண்கள் சமூக வளர்ச்சி மையம் சென்னையில் தொடங்கப்படுகிறது.

ஏப்ரல்: மாற்றுப்பாலின சமூகத்தார் மீதான வன்முறை பற்றித் தலாய் லாமா வருத்தம் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் சமூக நலத்துறையின்கீழ் அரவானி நலவாரியம் செயல்படத் தொடங்கியது.

2007-2008

பல நகரங்களில் ப்ரைட் ஊர்வலங்கள் நிகழத் தொடங்கின.

ஆவணப்படங்களும் பிரபல சினிமாப் படங்களும் ஓர்பாலினச் சேர்க்கையினரைக் கொண்டு எடுக்கப்பட்டன.

பெங்கலூரு, மும்பை, தில்லி, கல்கத்தா, சென்னை ஆகிய நகரங்களில் திரைப்பட விழாக்களும் கருத்தரங்குகளும் நிகழ்த்தப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வகை ஊடகங்களில் பாலியல்பு பற்றிய சர்ச்சைகள் சிறந்த முறையில் வெளிப்படத் தொடங்கின.

சென்னையில் ஜூன் மாதம் சக்தி மையம் தொடங்கப்பட்டது.

மே 2008இல் சென்னையில் ஓர்பாலினச் சேர்க்கை பெண்கள் இருவர் தற்கொலை செய்துகொண்டனர். பல ஆண்டுகளாக நடந்து வரும் இக்கொடூரம் குறித்து மாற்றுப் பாலியலாளர்கள் மற்றும் பெண்ணியலாளர்கள் இது குறித்துப் பொதுவெளியில் பேசினர்.

2009

மார்ச் மாதம் தமிழக அரசு அரவானிகளுக்குப் பால் மாற்று அறுவை சிகிச்சை இலவசமாகச் செய்யப்படும் என்று அறிவித்தது.

ஜூலை 2: தில்லி உயர் நீதி மன்றம் 18 வயதிற்கு மேற்பட்டோர் தனிப்பட்ட இடங்களில் ஓர்பாலின உடலுறவு வைத்துக்கொள்ளல் சட்டப்படி குற்றமன்று என்றும், இந்நாட்டின் ஒவ்வொரு குடிமகன்/குடிமகளுக்கும் ஒரே உரிமைகள் உண்டு என்றும் தீர்ப்பளித்தது.

இன்றும் இவ்வழக்கு உச்ச நீதி மன்றத்தில் தொடர்ந்து வருகிறது.

"பொதுவான ஒழுக்க நெறி விதிகள் என்பது. அரசியலமைப்புச் சட்ட ஒழுக்க நெறிகளினின்றும் வேறுபட்டது. இந்த நெறிகள் சூழ்நிலைகள் சார்ந்து மாறக்கூடியவை. நாட்டின் நலன் என்பது பற்றி முடிவு செய்ய ஆய்வுக்குள்ளாகும் ஒழுக்க நெறியானது அரசியலமைப்புச்சட்டத்தினுடையதாக இருக்க வேண்டுமே தவிர பொதுமக்கள் மத்தியில் பிரபலமாக இருக்கும் ஒருக்கா நெறி விதைகளாக இருக்க முடியாது." (பத்தி 79)

"ஒழுக்க நெறி சார்ந்த மனக் கொதிப்புகள் எவ்வளவு பரவலாக இருந்தாலும் தனிப்பட்ட நபர்களின் அடிப்படை உரிமைகளான சுயகௌரவம் மற்றும் தனிச் செயல்பாடுகள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தவோ தடை செய்யவோ அவை போதுமான அடிப்படைக் காரணமாக இருக்க முடியாது. எனவே பொது ஒழுக்க விதிகள், பெரும்பான்மை சமூகம் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டதாக இருந்தாலும், அரசியலமைப்புச் சட்டம் சார்ந்த ஒழுக்க நெறி விதிகள் தாம் கூடுதலாக மதிக்கபபட வேண்டும்." (பத்தி 86)

"தனிப்பட்ட குடிமகன் யாராக இருந்தாலும் அவரை மட்டுமே சார்ந்த தனிமைச் செயல்பாடுகளை பொது ஒழுக்க நெறிகளின் அடிப்படையில் சரிப்படுத்துவதற்காக அவரது வாழ்க்கையில் தலையிடுவதற்கான உரிமையை அரசியலமைப்புச் சட்டம் அரசாங்கத்திற்கு வசங்கவில்லை. 18 வயதிற்கு மேலான இரு தனி நபர்கள் பரஸ்பர ஒப்புதலோடு தனிப்பட்ட முறையில் ஈடுபடும் பாலுறவுகளில் கடுமையான தீங்கு ஏற்படுவதற்கான சரியான ஆதாரம் ஏதும் இல்லாத சமயத்தில் அரசாங்கம் தலையிட முடியாது. இவாறு செய்வது தன்னிச்சையானதும் காரண காரியங்களை மீறியதும் ஆகும். (பத்தி 92).

நாஸ் பவுண்டேஷனுக்கும் இந்திய யூனியனுக்கும் இடையிலான வழக்கில் ஜூலை 2, 2009 அன்று வெளியான தில்லி உயர் நீதிமன்றத் தீர்ப்பிலிருந்து: தமிழாக்கம்: டி. ஐ. ரவீந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கணம் மற்றும் இலக்கியங்களில் மாற்றுப் பாலியல் பதிவுகள்

■ கா. அய்யப்பன்

தமிழின் தொல்பழம் இலக்கண நூலான தொல்காப்பியம் மாற்றுப் பாலியல் தொடர்பான செய்திகளைப் பதிவு செய்துள்ளது. உயர்திணை/அஃறிணை என பகுக்கும் முறை தொடங்கி மனித சமூக வாழ்நிலைகளை தொல்காப்பியம் நன்கு விளக்குகிறது. உயர்திணையில் மக்கள் சுட்டும் தொல்காப்பியம் இன்னும் மக்களுள் ஆண்/பெண் என இரண்டை சொல்கிறது. மனித படைப்புகளுள் ஆண்/பெண் என்கிற நிலை மட்டும் இல்லாது ஆண்/பெண் உடலுறுப்புகள் குறைந்தும் மாறுபட்டும் இருப்பதை நாம் காண்கின்றோம். கண்/காது/வாய்/கால் முதலான உறுப்புகள் குறைவுற்ற மனிதர்களை மாற்றுத் திறனாளிகள் என்று சொல்கிறோம். இதனை தொல்காப்பியர் சுட்டவில்லை. உற்பத்தி முறை சார்ந்து, ஆணாகவோ பெண்ணாகவே பிறந்து, குடும்ப அமைப்பில் வாழ்கிற ஆனால், குழந்தைப் பேறு பெறுதலுக்கு ஒத்துழைக்காத ஆண், பெண்களைத் தொல்காப்பியர் வகைப்படுத்து கிறார்.

பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும் அந்தம்தமக்கு இலவே
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்

(தொ.சொல்.நூ. 4)

என்கிற நூற்பாவில் ஆண்பால்/பெண்பால் என வகைப்படுத்துவதில் உயர்திணையாக தோற்றத்தில் இருக்கின்ற பெண்மை திரிந்த/ஆண்மை திரிந்த மக்களை இன்ன பால் இட்டு வழங்குவது என்பதனை விளக்குகிறார். இதற்கு உரை வகுத்தோர் பின்வருமாறு எழுதியுள்ளனர்.

இளம்பூரணர்

பேடி வந்தான், பேடி வந்தாள், பேடியர் வந்தார் என உயர்திணைப்பால் மூன்றனையும் குறிப்பிடுகிறார்.

நச்சினார்க்கினியர்

ஆண்மை திரிந்த என்பதிடைநிலை. இதன் பொருள் ஆண்பாற் குரியவாளுந்தன்மை, முற்பிறப்பிற்றான் செய்த தீவினையால்

க. அய்யப்பன்
சென்னை
பல்கலைக்கழகத்
தமிழ் இலக்கியத்
துறையில் முனைவர்
பட்டத்திற்காக ஆய்வு
செய்து வருகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிடத் தில்லையான பெயர்ப் பொருள் என்க என்றது. நல்வினை செய்யாத பொருளென்றவாறு. இதற்குப் பெண்மை திரிதலும் உண்டேனும் ஆண்மை திரிதல் பெரும்பான்மை.

ஒருவன் உயர்திணையிடத்துப் பெண்பாற்குரிய அமைதித் தன்மையைக் கருதுதற்குக் காரணமான ஆண்பாற்குரிய வாளுந்தன்மை திரிந்த பெயர்ப்பொருளும் அலிஅன்று என்றற்கு பெண்மை சுட்டிய என்றார். பெண் அன்று என்றற்கு ஆண்மை திரிந்த என்றார்.

'அந்தம் தமக்கில' என்றதனான் நிரயப்பாலர், அலி, மகண்மா முதலியவற்றையும் இம்மூவிற்றின் என்பதனான் முடிக்க.

சேனாவரையர்

பேடி வந்தாள், பேடர் வந்தார், பேடியர் வந்தார் எனவும் அலிப்பெயரின் நீக்குதற்குப் பெண்மை சுட்டிய என்றும் மகடூஉப் பெயரின் நீக்குதற்கு ஆண்மை திரிந்த என்றும் கூறினார்.

தெய்வச் சிலையார்

ஆண்மை திரிந்த பெயராவது பேடி, அச்சந்தினாண்மையிற் றிந்தாரைப் பேடியென்ப வாகலான், ஈண்டு அப்பெயர் பெற்றது அலியென்று கொள்க. அலி மூவகைப்படும். ஆணுறுப்பிற் குறைவின்றி ஆண்டன்மை யிழந்ததூ உம், பெண் பிறப்பின் குறைவின்றிப் பெண் தன்மை யிழந்ததூஉம், பெண்பிறப்பிற் றோன்றிப் (பொருணாமத்திற்) பெண்ணுறுப்பின்றித் தாடிதோற்றி ஆண் போலத் திரிவதூஉமென. அவற்றுடம பிற் கூறியது ஈண்டு பேடி யெனப்பட்டது. என்று விளக்கம் கூறுகின்றார். அலி, பேடி என்கிற சொல் தொல்காப்பியரால் சொல்லப்படவில்லை. ஆண் தன்மையில் இருந்து பெண் தன்மைக்கு மாறுபடுபவர்களை அலி என்றும் பெண் தன்மையில் இருந்து ஆண் தன்மைக்கு மாறுபடு பவர்களைப் பேடி என்றும் உரையாசிரியர்கள் விளக்கம் தருகின்றனர்.

பேராசிரியர்

அணங்கென்பன : பேயும் பூதமும் பாம்பும் ஈறாகிய பதினெண்கணனும் நிரயப்பாலரும் பிறரும்... (தொ.பொ.மெய். நூ.8இன் உரை)

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை யறிசொற் காகிட னின்றே (சொல். நு. 12)

இளம்பூரணர் : ஆண்மையின் திரிந்து பெண்மை நோக்கி நின்ற பெயர்ப் பொருள் ஆண்மகனை அறிவிக்கும் ஈற்றெழுத்தினால் சொலற்பாட்டிற்கு ஏலாது என்றவாறு, ஒழிந்த இரண்டு பெயர்க்கும் ஒக்கும் என்பதாம்.

சேனவரையர் : உயர்திணை மருங்கிற் பால் பிரிந்திசைக்கும் (சொல்.4) என்று மேற்கூறப்பட்ட ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி ஆரூஉவறிசொல்லோடு புணர்தற்குப்பொருந்தும் இடனுடைத்தன்று என்றவாறு.

ஆண்மை திரிந்த பெயராவது பேடி, அச்சந்தினாண்மையிற் றிந்தாரைப் பேடியென்ப வாகலான், ஈண்டு அப்பெயர் பெற்றது அலியென்று கொள்க. அலி மூவகைப்படும். ஆணுறுப்பிற் குறைவின்றி ஆண்டன்மை யிழந்ததூ உம், பெண் பிறப்பின் குறைவின்றிப் பெண் தன்மை யிழந்ததூஉம், பெண்பிறப்பிற் றோன்றிப் (பொருணாமத்திற்) பெண்ணுறுப்பின்றித் தாடிதோற்றி ஆண் போலத் திரிவதூஉமென. அவற்றுடம பிற் கூறியது ஈண்டு பேடி யெனப்பட்டது.

PUBLIC LIBRARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்மையறிசொற் காகிடனின் றென்ற விலக்கு ஆண்மையறி சொல்லோடு புணர்தலெய்தி நின்ற பேடிக் கல்லதேலாமையின், அலிமேற் செல்லாதென்க.

தெய்வச்சிலையார் : 'உயர்நிலை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்' என்று ஓதப்பட்ட பேடி யென்னும் பெயர்க்கண் நிற்கும் சொல் ஆண்மையறிசொற்கு ஆகும். இடன் இலது (என்றவாறு). எனவே பெண்மையறிசொற்கு ஆகும் என்றவாறாம்.

நச்சினார்க்கினியர் : ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி - உயர் திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கு மென மேற்கூறிய ஆண்மை திரிந்த பெயர்ச்சொல், ஆண்மை யறிசொற் காகிடன் இன்று - ஆடூ உவறிசொல்லோடு பொருந்து மிடனுடைத் தன்றென்றவாறு.

கல்லாடனார் : உயர்திணை யிடத்துப் பெண்மையைக் கருதவேண்டி ஆண்மைத் தன்மை நீங்கிய பேடி என்னும் பெயராற் சொல்லப்படும் பொருண்மை ஆண்மகனை அறியும் சொல்லாற் சொல்லுதற்காம் இடன் இல்லை என்றவாறு. எனவே பெண்பாலானும் பன்மைப் பாலானும் சொல்லுக என்றவாறு.

நன்னூல்

பெண்மைவிட் டாணவா வுவபே டாண்பால்
ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால்
இருமையு மஃறிணை யன்னவுமாகும் (சொல். நூ. 7)

மயிலைநாதர்

பெண்ணியல்பினை நீங்கி ஆண்மையினை ஆசைப்படும் பொருள் ஆண் பாலனையவாம், ஆணியல்பினை நீங்கிப் பெண்மை யினை ஆசைப்படும்பொருள் பெண்பாலனையவாம். இருவரது தன்மையும் அஃறிணையைப் போலவுமாம். இவையும் மக்கட் கதியினவேனும் அத்தன்மை நிரம்பாமையின் இவ்வாறு முடிவு மென்க.

சங்கர நமச்சிவாயர் : பேடு, அழிதூஉ, அலி, மகண்மா என்பன ஒரு பொருட்கிளவி. அலி, மகண்மா என்பனவற்றை வேறு கூறுவாரும் உளர்.

அவிநயம் : அழிதூஉ வகையும் அவற்றின் பாலே.

இலக்கண விளக்கம்

தெய்வமும் மேபமா மவ்விது பகுதியு
மிவ்வென வறியுமந் தந்தமக் கிலவே
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும் (சொ. 7)

அகநானூறு (206 மருதம்)

வாயில் வேண்டிச் சென்ற விறலிக்குத்
தலைமகள் வாயில் மறுத்தது.
என்னெனப் படுங்கொல் தோழி நன்மகிழ்ப்
பேடிப் பெண்கொண் டாடுகை கடுப்ப

பெண்ணியல்பினை நீங்கி ஆண்மையினை ஆசைப்படும் பொருள் ஆண் பாலனையவாம், ஆணியல்பினை நீங்கிப் பெண்மை யினை ஆசைப்படும்பொருள் பெண்பாலனையவாம். இருவரது தன்மையும் அஃறிணையைப் போலவுமாம். இவையும் மக்கட் கதியினவேனும் அத்தன்மை நிரம்பாமையின் இவ்வாறு முடிவு மென்க.

சங்கர நமச்சிவாயர் : பேடு, அழிதூஉ, அலி, மகண்மா என்பன ஒரு பொருட்கிளவி. அலி, மகண்மா என்பனவற்றை வேறு கூறுவாரும் உளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகுவரப் பணைத்த திரிமருப் பெருமை
மயிர்க்கவின் கொண்ட மாத்தோல் இரும்புறம்
சிறுதொழில் மகாவுர் ஏறிச் சேனார்க்கே
துறுகல் மந்தியில் தோன்றும் ஊரன்
மாரி ஈங்கை மாத்தளி ரன்ன
அம்மா மேனி ஆயிழை மகளிர்
ஆரந் தாங்கிய அலர்முலை ஆகத்து
ஆராக் காதலொடு தாரிடைக் குழைய
முழவுமுகம் புல்ரா விழவுடை நகல்
வதுவை மேவல னாகலின் அதுபுலர்ந்து
அடுபோர் வேளிர் வீரை முன்துறை
நெடுவெள் ளுப்பின் நிரம்பாக் குப்பை
பெரும்பெயற்கு உருகி யாஅங்குத்
திருந்திழை நெகிழ்ந்தன தடமென்றோளே

- மதுரை மருதனிள நாகனார்

'பேடிப் பெண் தன் அழகைக் கொண்டாடினாற் போல' என்கிற தன்மையில் பேடி என்கிற சொல் இடம்பெற்றுள்ளது.

நாலடியார்

நுண்ணுணர்வு இன்மை வறுமை அஃதுடமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம் - எண்ணுங்காம்
பெண்ணவாய் ஆணிழ்ந்த பேடியும் பூணாளோ?
கண்ணவாத் தக்க கலம் (251)

(தலையின்பவியல் - அறிவின்மை)

பெண்ணுக்குரிய அணிகளைப் பேடி அணிந்தாள், அழகும் இன்பமும் உண்டாகாமை போல அறிவுடையார் பெற்றுப் பயனடைதற்குரிய செல்வத்தை, அறிவிலார் பெற்றால் பெருமையும் பயனும் உண்டாகா என்க.

பதுமனார் உரை : பெண்ணை அவாவி ஆண் இழந்தபேடி முற்பிறப்பின் கண்ணே பிறர் மனையாளை அவாவி இப்பிறப்பின் கண்ணே ஆண் தகைமையை இழந்த பேடி என்றும் கூத்தாடி என்றுமாம்.

சிலப்பதிகாரம் : காம னாடிய பேடி யாடலும் (கடலாடு காதை. 56)

அடியார்க்கு நல்லார் உரை : ஆண்மைத் தன்மையிற்றிந்த பெண்மைக் கோலத்தோடு காமன் ஆடிய பேடென்னுமாடலும், ஆண்மைத் தன்மையிற் திரிதலாவது விகாரமும் வீரியமும் நுகரும் பெற்றியும் பத்தியும் பிறவுமின்றாதல்; ஆண்மை திரிந்தவென்ப தனால் தாடியும் பெண்மைக் கோலத் தென்பதனால் முலை முதலிய பெண்ணுறுப்புப் பலவுமுடையது. ஆண்பே டென்று பெயர் பெறுமெனக் கொள்க; என்னை?

ஆண்மைத் தன்மையிற்றிந்த பெண்மைக் கோலத்தோடு காமன் ஆடிய பேடென்னுமாடலும், ஆண்மைத் தன்மையிற் திரிதலாவது விகாரமும் வீரியமும் நுகரும் பெற்றியும் பத்தியும் பிறவுமின்றாதல்; ஆண்மை திரிந்தவென்பதனால் தாடியும் பெண்மைக் கோலத் தென்பதனால் முலை முதலிய பெண்ணுறுப்புப் பலவுமுடையது. ஆண்பே டென்று பெயர் பெறுமெனக் கொள்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரியற் றாடி மருள்படு பூங்குழற்
பவளச் செவ்வாய்த் தவள வொண்ணாக
ஒள்ளரி நெடுங்கண் தவள வொண்ணாக
ஒள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் டோட்டுக்
கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதற்
காந்தளஞ் செங்கை யேந்திள வனமுலை
அகன்ற வல்கு லந்நுண் மருங்கம்
இகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து
வாணன் பேரூர் மறுகிடை நடந்து
நீணில மளந்தோன் மகன்முன் னாடிய
பேடிக் கோலத்துப் பேடுகாண் குறரும்

(மணி : 3 : 116 - 25) என்றாராகலின்

(1968 : 191, 192)

இலக்கணம்/இலக்கியங்களில் மூன்றாம்பால் இனம் குறித்தப் பதிவுகள் இருக்கின்றன. திரு நங்கைகள் என்று சொல்லப்படுகின்ற அவர்கள் அப்படி பிறப்பதற்கு கவனம் முந்தைய பிறவியில் செய்த வினையே என்கின்றனர். அழிதூஉ, மகண்மா, அலி, பேடி, பேடு, நிரயப்பாலர் என்கிற பெயர்களில் அழைக்கப்பட்டிருக்கின்றனர். இன்னும் நிகண்டுகள், பக்தி இலக்கியங்களிலும் திருநங்கைகள் பற்றியக் குறிப்புகள் தொகுக்கப்பட வேண்டும். கூத்தில் ஒரு வகையான பேடிக்கூத்து (பேடி போன்ற வேடம் இட்டு ஆடுவது) பரவலாக அறியப்பட்ட ஒரு நிகழ்த்து வடிவமாக இருந்திருக்கிறது. அலிக்கிரகம் என சனி, புதன் போன்ற கிரகங்களைச் சொல்கின்றனர். அலி நாள் என மிருகசீரிய சதய நட்சத்திரங்களைக் கூறுகின்ற நிலையும் காணப்படுகின்றது. அலிமரம் - வயிரம் இல்லாத மரம் இப்படிச் சொல்லப்படுகிறது. அலியெழுத்து என ஆய்த எழுத்தைக் குறிக்கின்றனர்.

இலக்கணம்/ இலக்கியங்களில் மூன்றாம்பால் இனம் குறித்தப் பதிவுகள் இருக்கின்றன. திரு நங்கைகள் என்று சொல்லப்படுகின்ற அவர்கள் அப்படி பிறப்பதற்கு கவனம் முந்தைய பிறவியில் செய்த வினையே என்கின்றனர். அழிதூஉ, மகண்மா, அலி, பேடி, பேடு, நிரயப்பாலர் என்கிற பெயர்களில் அழைக்கப்பட்டிருக்கின்றனர். இன்னும் நிகண்டுகள், பக்தி இலக்கியங்களிலும் திருநங்கைகள் பற்றியக் குறிப்புகள் தொகுக்கப்பட வேண்டும்.

மேலே தொகுக்கப்பட்டுள்ள செய்திகள் மூலம், தமிழ் இலக்கண இலக்கியப் பிரதிகளில் பாலினம் பற்றிய குறிப்புகளை அறிய முடிகிறது. ஆண், பெண் என்ற இருமை நிலை மட்டுமின்றி, அலி, பேடி என்ற பாலினப் பிரிவுகளை தொல்காப்பியத்திற்குப் பின்வந்த நூல்கள் பேசுகின்றன. தொல்காப்பியர் பாலின வேறுபாடுகளைக் காட்டியுள்ளார். ஆனால் அலி, பேடி போன்ற சொற்களுக்கு இணையாக ஆண்மை திரிந்த பெண்மை திரிந்த என்ற சொற்களைப் பயன்படுத்துகிறார். ஆனால், உரையாசிரியர்கள் காலத்தில் புதிதாக உருவாகும் சொற்களாக அலி, பேடி ஆகியவை உள்ளன. இச்சொற்களுக்கு, ஒருவகையான மதிப்பீடும் உருப்பெற்றதை உரையாசிரியர்கள் மூலம் அறிய முடிகிறது. தமிழ்ச் சமூக வரலாற்றில், இவ்வகையில் பாலின வேறுபாடுகள் பதிவாகி யுள்ளன. உரையாசிரியர்கள் பதிவு செய்யும் முறையும் இலக்கிப் பிரதிகள் பதிவு செய்யும் முறையும் வேறுபட்டிருப்பதைக் காண்கிறோம். இன்றைய வரலாற்றுப் பின்புலத்தோடு, பழைய சொற்பொருள் உரையாடல்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுப் பாலியல் : நூல்கள் மற்றும் குறும்படம்

■ ஜ. சிவக்குமார்

1. *நான் வித்யா*, லிவிங்ஸ்மைல் வித்யா, கிழக்கு பதிப்பகம், 2007

ஆண் உடலும் பெண் உணர்வும் கொண்ட, தனது சுயம் பற்றிய தேடல் கொண்ட ஒருவரின் சுயசரிதை இது. பட்டதாரியான வித்யா பிச்சையெடுப்பதற்கான காரணம் நிர்வாணம் செய்துகொண்டு தன்னடையாளத்தை மீட்டெடுப்பதற்கே. "நான் சரவணந்தான் இல்லையே தவிர மனிதப் பிறவிதான். பிசாசோ பூதமோ அல்ல" எனும் வித்யாவின் வார்த்தைகள் சமூகம் அவருக்குக் கொடுத்த வலிகளின் எதிர்வினையே. பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற ஒருவருக்கே இத்தனை வலிகளென்றால் கல்வி மறுக்கப்பட்டு வறுமையில் உழலும் அரவானிகளின் நிலையைக் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. அரவானியின் இரத்தமும் சதையுமான முதல் பதிவு இந்நூல்.

2. *அவன் - அது = அவள்*, யெஸ். பாலபாரதி, தோழமை வெளியீடு, ஜூலை 2008

அரவானிகள் குறித்த அக்கறையோடு கள ஆய்வினூடாக எழுதப்பட்டது இந்நாவல். அதேசமயம் அரவானிகளின் வலி இயல்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கூவாகம் திருவிழாவிற்கு தன்னந்தனியே வரும் கோபி வல்லுறவுக்கு ஆளாக்கப்படுவது, பெண்ணாய் உணரும் தன்னை ஆணாய் நடந்து கொள்ளச் சொல்லி குடும்பத்தின் வழியாக சமூகம் தன்னை கட்டாயப்படுத்துவது என அரவானிகளின் வலிகள் அழுத்தமாகவும் இயல்பாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. வட்டார வழக்கு, திருநங்கையருக்கென இருக்கும் பிரத்யேக மொழி, இந்தி எனப் பல்வேறு மொழிகளை இயல்பாகப் பயன்படுத்துகிறார். சில சொற்களுக்கு அடிக்குறிப்பில் விளக்கமும் தருகிறார்.

ஜ. சிவக்குமார், சென்னை பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறையின் முனைவர் பட்ட ஆய்வு மாணவர்.

3. *மூன்றாம் பாலின் முகம்*, பிரியா பாபு, சந்தியா பதிப்பகம், டிசம்பர் 2007

குறிப்பு : இப்பட்டியல் முழுமையானதன்று.

அரவானியாக மாற விரும்பும் ரமேஷ் என்ற இளைஞனுக்கும் அவன் மீது கொண்ட பாசத்தால் அதனைத் தடுக்க முயலும் தாய்க்கும் இடையிலான உணர்வுபூர்வமான போராட்டத்தை இந்நாவல் சித்திரிக்கிறது. குடும்பமும் சமூகமும் எதிர்த்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பிள்ளையி னுடைய உணர்வைப் புரிந்துகொண்டு அவன் அரவானியாக மாறுவதற்கு அந்தத் தாய் உதவுகிறாள். மறுபுறம் அரவானிகளின் அனைத்து துன்பங்களுக்கும் மூலகாரணமாக அவர்களைப் புரிந்துகொள்ளாத சமூகமும் குடும்பமுமே இருக்கிறது என்பதை இந்நாவல் அழுத்தமாகப் பதிவு செய்கிறது. சமூகத்தால் புறக்கணிக்கப்படுபவர்கள் தாங்களே ஒரு குழுமமாக வாழ்கின்றனர். இதேபோல் நிர்வாணம் செய்துகொள்ளல், கூவாகம் திருவிழா, பெண்ணுடை அணிவதிலும் பெண்ணாகப் பார்க்கப்படுவதிலும் உள்ள மகிழ்ச்சி முதலானவற்றை அரவானிகள் குறித்த எழுத்துக்கள் அனைத்தும் பதிவு செய்கின்றன.

4. *உணர்வும் உருவமும்*, ரேவதி, அடையாளம், சங்கமா

பத்துக்கும் மேற்பட்ட அரவானிகளைப் பேட்டி கண்டு அதனைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார் ரேவதி. அரவானிகளின் வலிகள், உணர்வுகள், சமூகம் புறக்கணிப்பதால் படும் பாடுகள், நிர்வாணம் செய்து கொள்ளுதலின் உயிர் வலி, காதல் கலியாணம் குறித்த ஏக்கங்கள் முதலானவற்றை இத்தொகுப்பின்வழி உணரமுடிகிறது. தன்னால் விளங்கிக் கொள்ள முடியாத அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றைக் கொடுமைப்படுத்தி புறக்கணிப்பது நம் சமூகத்திற்கு இயல்பானது. இத்தொகுப்பை வாசிப்பவர்கள் அரவானிகளை இழிவாகவோ ஏளனமாகவோ கருதமாட்டார்கள் என்பதே இத்தொகுப்பின் வெற்றி. இத் தொகுப்பின் உரையாடல் மொழி வேறுபட்ட வாசிப்பனுவத்தைத் தரும். இந்நூலில் புழங்கும் சில குழூஉக் குறிகளுக்கான அர்த்தமும் பொதுத் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளன.

5. *அரவானிகள் சமூக வரைவியல்*, பிரியாபாபு, தென்திசை பதிப்பகம், அக்டோபர் 2007

ஓர் அரவானியால் தன் சமூக வரைவியல் குறித்து எழுதப்பட்ட முதல் நூல் இது. 'பொதுவெளிச் சமூகத்தில் உள்ள அனைத்து இனங்களிலும் ஆணாய்ப் பிறந்து பெண் உணர்வைப் பெற்று, உணர்வுகள் மாற்றத்தால் பெண்ணாய் போகிறவர்கள் ஒன்றுகூடி உருவாக்கிய சமூகம் என்றே இந்தச் சமூகம் அடையாளம் காணப் படுகிறது' என அரவானிகளைப் பிரியாபாபு அடையாளப் படுத்துகிறார். அரவானிகள் தங்களுக்கென்று பழக்கத்தில் பயன்படுத்தும் பொதுமொழி, அம்மொழியின் வேர்கள், அரவானி களுக்குள் உள்ள சமூக உறவுமுறைகள், அதற்கான வரலாற்றுக் காரணங்கள், அவர்களுக்கானச் சடங்குகள் என அரவானிகளின் வாழ்வியலைப் பதிவு செய்யும் ஆவணமாக இந்நூல் அமைகிறது.

6. *அரவானிகள் : உடலியல் உளவியல் வாழ்வியல்*, மகாராசன், சந்தியா பதிப்பகம் 2007

அரவானிகளாலும் பிற சமூக செயல்பாட்டாளர்களாலும் அரவானிகள் குறித்து எழுதப்பட்ட எழுத்துக்களின் தொகுப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்அமைந்துள்ளது. இந்தச் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டு கீழ்மைப்படுத்தப்படும் அரவானிகள், பெண்ணைப் போலவும், ஆணைப் போலவும் இயல்பான மனிதர்கள்தான் எனும் புரிதலை இத்தொகுப்பு உருவாக்குகிறது.

7. *தமிழ் இலக்கியத்தில் அரவானிகள்*, வெ. முனிஷ், ஜெயம் பதிப்பகம், மதுரை, 2008

தமிழ் இலக்கியத்தில் அரவானிகள் பற்றி எங்கெல்லாம் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்று தேடித் தொகுத்த ஆய்வேட்டி னுடைய புத்தக வடிவம். இலக்கணங்களில் அரவானிகள், மரபிலக்கியங்களில் அரவானிகள், காப்பியங்களில் அரவானிகள், நாட்டுப்புறவியலில் அரவானிகள், இக்கால இலக்கியத்தில் அரவானிகள் ஆகிய ஐந்து இயல்களாக இவ்வாய்வு பகுக்கப்பட்டுள்ளது. இந்நூல் எதற்கெடுத்தாலும் பாரம்பரியம் பேசும் சமூகத்தில் அரவானிகளின் இருப்பு பற்றிய புரிதலை ஏற்படுத்த இலக்கியத் தரவுகளை ஆதாரமாகக் கொண்டுள்ளது.

8. *எதிரொலிக்கும் கரவொலிகள் : அரவானிகளும் மனிதர்களே*, அ.மங்கை, பாரதி புத்தகாலயம், செப்டம்பர் 2005

32 பக்கங்களே உள்ள 5 ரூபாய் மதிப்புள்ளது இக்குறுநூல். ஆனால் அரவானி என்ற தன்னிலை, அரவாணியாகும் பாதை... அரவானிகள் குறித்த கட்டுக்கதைகள் வாழ்நிலை, தொன்மங் களும் சடங்குகளும், ஊடகத்தில் அரவானிகள், அரவானிகள் மீதான வன்முறை அரவானிகளின் போராட்டங்கள், அரவானிகளின் அடிப்படைக் கோரிக்கைகள், அரவானிகள் அமைப்புகள் ஆகியவை குறித்து கூர்மையாக விவாதிக்கப்பட் டுள்ளது.

குறும்படம்

அஃறிணை, இயக்குநர் - இளங்கோ, தயாரிப்பாளர் - கீதா

'கண்ணியமாய் வாழப் போராடிக் கொண்டிருக்கும் இரு திருநங்கைகளின் உண்மைக் கதை' என்கிற அறிமுகமே பார்வை யாளருக்கு சில அவதானங்களை ஏற்படுத்தி விடுகிறது. லிவிங்ஸ்மைல் வித்யா, பல்கலைக்கழக மாணவரான கிளாடி ஆகியோர்தான் அந்த இருவர். டாக்டர் ஷாலினியும் ஒரு கதாபாத்திர மாக இடம்பெற்று கிரேக்க வரலாற்றிலிருந்து திருநங்கைகளின் இருப்பு எவ்வாறு இருந்துள்ளது என்பதைக் குறிப்பிடுகிறார். மேலும் மரபணு மாற்றங்களாலேயே திருநங்கைகள் உருவாக்கப்படுகின்றனரே தவிர, அவர்களின் விகார எண்ணங்களால் அல்ல என்பதையும் தெளிவுபடுத்தி யுள்ளார். இரு திருநங்கைகளின் வாழ்க்கையில் நடந்த உண்மைச் சம்பவங்களை அவர்களின் வார்த்தைகளின் மூலமாகவும் சித்திரிப்புகள் மூலமாகவும் இளங்கோவன் நேர்த்தியாகக் காட்சிபடுத்தியுள்ளார். காட்சிப் படிமங்கள் கதாபாத்திரங்களின் உணர்வுக்கேற்பவும் இயல்பாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுவெளி இதழ் நன்கொடையாளர்கள்

பா. மதுகேசுவரன்	ரூ. 10000
கல்பனா சேக்கிழார்	ரூ. 10000
ம. விஜயபாஸ்கர்	ரூ. 10000
மூ. கருணாநிதி	ரூ. 10000
பா. ரவிக்குமார்	ரூ. 10000
சி. நல்லதம்பி	ரூ. 10000
அ. மங்கை	ரூ. 10000
சுந்தர் கணேஷ்	ரூ. 10000
ப. கல்பனா	ரூ. 10000
லொ. ஆ. உமாமகேஸ்வரி	ரூ. 10000
கே. எஸ். சுப்பிரமணியன்	ரூ. 10000
ஜெ. ஆர் லட்சுமி	ரூ. 10000
பு. ஜார்ஜ்	ரூ. 10000
ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்	ரூ. 10000
எ. சுப்பராயலு	ரூ. 7000
பத்மாவதி விவேகானந்தன்	ரூ. 5000
பால்கி	ரூ. 3000
ச. கௌ. கவிதா	ரூ. 2500
அருணாரத்தினம்	ரூ. 2500
கி. காவேரி	ரூ. 2000
ஐ. சிவக்குமார்	ரூ. 2000
சூசை. ஆம்ஸ்ட்ராங்	ரூ. 2000
இரெ. மிதிலா	ரூ. 1000

பரிசல்/மாற்று நூல் வரிசைகள்

மாற்று வரிசை (ஒருங்கிணைப்பு : வீ. அரசு)

1. **கிறிக்கி (கூத்து)**
   கோ. பழனி
2. **தொல்காப்பியம் - பன்முக வாசிப்பு**
   பா. இளமாறன்
3. **சிலப்பதிகாரம்-பன்முக வாசிப்பு**
   கா. அய்யப்பன்
4. **திருக்குறள் : பன்முக வாசிப்பு**
   வெ. பிரகாஷ்
5. **சித்திரமாடம்**
   பாரதிபுத்திரன்
6. **ஒளியின் வெளி**
   செ.ரவீந்திரன்
7. **சிறார் கல்வி**
   வ. கீதா
8. **மொழிபெயர்ப்பு அரசியல்**
   அ. மங்கை
9. **தமிழகச் சமயங்கள்**
   அ. சதீஷ்
10. **பக்தி இலக்கியம்**
    கு. அழகரசன்
11. **தமிழில் பாரதம்**
    இரா. சீனிவாசன்
12. **அச்சுப் பண்பாடு**
    வீ. அரசு
13. **தமிழ் சினிமா**
    சுந்தர்காளி
14. **தமிழகத் தொல்லியல் வரலாறு**
    ஆ. பத்மாவதி
15. **தமிழ்க் கல்வெட்டுகளில் பெண்**
    ப. குணசுந்தரி

பெண் படைப்பாளர்கள் ஆக்க வரிசை

1. **பெயல் மணக்கும்பொழுது**
   - ஈழப்பெண் கவிஞர்கள் கவிதைகள்
   தொகுப்பு: அ.மங்கை
2. **பாலை நண்டுகள்** - இலங்கைப் பெண் எழுத்தாளிகளின் சிறுகதைகள்
   தொகுப்பு: மௌ. சித்திரலேகா
3. **முடிவில்லாத உரையாடல்**
   - பெண் நாடகங்கள் பன்னிரெண்டு
   தொகுப்பு: இ. நந்தமிழ்நங்கை

சென்னைப் பல்கலைக்கழக இலக்கியத் துறையின் கருத்தரங்கக் கட்டுரைகள்

1. **குறிஞ்சி** - சங்க இலக்கியம் குறித்த கட்டுரைகள்
   தொகுப்பு: பா. ஜெய்கணேஷ், ம. மகாலட்சுமி, சு. மகேஸ்வரி
2. **பாலை**- தமிழ் ஊடகங்கள்
   - இருபதாம் நூற்றாண்டு
   தொகுப்பு: கு.சுதாகர், அ.சதீஷ், மா.பூங்குமரி
3. **வெட்சி** - தமிழகத் தலித் ஆக்கங்கள்
   தொகுப்பு: ச. பாரதி, சி.முத்துக்கந்தன், அ.கார்வண்ணன், பி.பொன்னுசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

தலையங்கம்

பாலியல்பின் அரசியல் 5
அ. பொன்னி, அனிருத்தன் வாசுதேவன்

கட்டுரை

பாலியல்பு, திருமணம், குடும்பம் 11
மீனா கோபால்

உடல், பால்மை, பால் ஈர்ப்பு / வேட்கை: 26
அளிக்கைமை சார் குறியீடுகள்
அ. மங்கை

உடல், வன்முறை, உரிமை 31
அனிருத்தன் வாசுதேவன்

விடுதலைப் பாதை 36
கௌதம்பான்

"க்வியர்" பெண்களும் இந்தியச் சட்டமும் 40
பிரியா தங்கராஜா, அ. பொன்னி

அரவானி/ திருநங்கை சமூகத்தினரின் அரசியலும்
தமிழக அரசின் திட்டங்களும் 47
அனிருத்தன் வாசுதேவன்

தமிழகத்தில் ஓரினச் சேர்க்கைப் பெண்கள் 52
அ. பொன்னி

On The Figure of the Prostitute in the works 55
*Kiran Keshavamurthy

உரையாடல்

கதை சொல்லல் எனும் உறவாடல் 64
மாயா சர்மா

மொழி, பாலினம் மற்றும் பாலியல்பு 68
வ. கீதா

கலை ஆக்கங்கள்

திரைப்படம் - கவிதைகள் - தன்வரலாறு 89

ஆவணம்

பாலியல் சார் சொற்களஞ்சியம் 122

இந்திய தண்டனைச் சட்டம் - பிரிவு 377 129
அனிருத்தன் வாசுதேவன்

மாற்றுப் பாலியல் இயக்கம் 132

தமிழ் இலக்கணம் மற்றும் இலக்கியங்களில்
மாற்றுப் பாலியல் பதிவுகள் 140
கா. அய்யப்பன்

மாற்றுப் பாலியல் : நூல்கள் மற்றும் குறும்படம் 145
ஜ. சிவக்குமார்

ISSN 0976-1667

மாற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org